# கோயிற்களஞ்சியம்

# செங்கை - எம். ஜி. ஆர். மாவட்ட காஞ்சிபுரம் கோயில்கள்



(ஏகாம்பரநாதர் திருக்கோயில் கோபுரம்)

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# கோயிற்களஞ்சியம்
## செங்கை - எம். ஜி. ஆர். மாவட்ட
## காஞ்சிபுரம் கோயில்கள்

சிறப்பாசிரியர்
கோ. மு. முத்துசாமி பிள்ளை, இ.ஆ.ப. (ஓய்வு)

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி - டிசம்பர் 1994

| | | |
|---|---|---|
| துறை | : | களஞ்சிய மையம் |
| நூல் | : | கோயிற்களஞ்சியம்<br>செங்கை - எம். ஜி. ஆர். மாவட்ட<br>காஞ்சிபுரம் கோயில்கள் |
| சிறப்பாசிரியர் | : | கோ. மு. முத்துசாமி பிள்ளை |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 1994 |
| விலை | : | உரு. 70-00 |
| அச்சு | : | ஸ்ரீ திரிபுரசுந்தரி அச்சகம்<br>திருவான்மியூர், சென்னை - 41. |

## கோயிற்களஞ்சிய செங்கை - எம். ஜி. ஆர். மாவட்ட காஞ்சிபுரம் கோயில்கள் தொகுதிகளை அச்சியிடுவதற்கு உதவிய நன்கொடை அளித்த பேருளாளர்கள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | தருமை மகாசன்னிதானம்<br>திருஞான சம்பந்தர் பராமசாரியார் அவர்கள்<br>தருமபுரம், மயிலாடுதுறை. | 5,000-00 |
| 2. | காசிவாசி கயிலைப்புனிதர்<br>திருப்பனந்தாள் தம்பிரான் சுவாமிகள்<br>திருப்பனந்தாள் கும்பகோணம் வட்டம் | 5,000-00 |
| 3 | காஞ்சிபுரம் ராமாகேப்<br>உரிமையாளர் கோபாலகிருஷ்ணன் | 4,000-00 |
| 4. | திருவான்மியூர் என்பீல்டு<br>இயக்குநர் திரு. விஸ்வநாதன் (அமரர்) அவர்கள்<br>திருமதி விஸ்வநாதன் அவர்கள்<br>சிவசுந்தரி அவின்யூ, திருவான்மியூர், சென்னை-41. | 2,500-00 |
| 5. | சென்னை நிறுவனர் திரு. வீரபத்திரன் அவர்கள்<br>திரு. திருநாவுக்கரசு அவர்களுடைய புதல்வன்<br>C/o. திரு. R. சுப்பிரமணியம் அவர்கள்<br>தலைமைப் பொறியாளர், மின்சார வாரியம்<br>4, ராதாகிருஷ்ண நகர், முதன்மைச்சாலை, சென்னை-41. | 2,002-00 |
| 6. | திரு. S. சங்கர் S/o. சுப்பிரமணியன் | 250-00 |
| 7. | கைலாய பரம்பரை மகா சன்னிதானம்<br>திருவாடுதுறை கும்பகோணம் வட்டம். | 2,000-00 |
| 8. | திரு. சுப்பையா கவுண்டர்<br>ஓய்வு பெற்ற மாவட்ட அலுவலர்<br>ஏ. ஜி. அண்ணா நகர், சென்னை-40. | 1,000-00 |
| 9. | கையிலை புனிதர் இராமநாதன் அவர்கள்<br>உரிமையாளர் நடராஜன் ஜுவல்லரி சிதம்பரம் | 2,000-00 |
| 10. | திரு. கோபால்சாமி முதலியார்<br>முன்னாள் கிராம கிரையூன் அதிகாரி, ஆஸ்பத்திரி ரோடு,<br>வால்பாறை, கோவை மாவட்டம். | 1,000-00 |
| 11. | கையிலாய பரம்பரை ஞானப்பிரகாச சாமிகள்<br>ஆதீன சன்னிதானம் காஞ்சிபுரம் | 500-00 |
| 12. | டாக்டர் A. தேவசேனாதிபதி<br>முன்னாள் தத்துவமைய இயக்குநர்<br>சென்னைப் பல்கலைக் கழகம்.<br>7, பண்டாரத் தெரு, புரசைவாக்கம். | 200-00 |

ஔவை நடராசன்
துணை வேந்தர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் – 5.

## அணிந்துரை

கோயிற்களஞ்சிய பணியை ஊதியம் பெறாமல் முறையாக பயணப்படி பெறாமல் செங்கற்பட்டு மாவட்ட கோயில்களின் களஞ்சிய தொகுதியும் சென்னை மாநகர்க் கோயில்களின் களஞ்சியத் தொகுதியையும் அச்சிட்டு வெளியிட முன்வந்துள்ள முன்னாள் மாவட்ட ஆட்சியாளராகவும் இன்னாள் கோயில் களஞ்சிய சிறப்பாசிரியராகவும் உள்ள வித்வான் கோ. மு. முத்துசாமி பிள்ளை இ. ஆ. ப. (ஓய்வு) அவர்கள் செய்து கொடுத்த பணி மிகவும் பாராட்டுகிறேன், கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்கள் இலக்கண கல்விகற்றவர் பல கோயிற் நூலையும் சைவபுண்ணிய கண்கள் தமிழ் உரைநடை வரலாறும் என்றுமுறைகளும் என்னும் இருநூல்களை திறம்பட இயற்றி வெளியிட்டவர் இந்நூல்களை பொது நூலை ஏற்றுக்கொண்டு வெளியிட்டுள்ளது. கோயிற்களஞ்சிய தொகுதி வெளியிட தமிழ்ப்பல்கலைக்கழகத்தில பணவசதி இல்லாததால் நன்கொடை பெற்று இந்நூலை வெளியிட்டுள்ளார். இவருக்கு செல்வாக்கும் நேர்மையும் இருந்ததால் தான் இவ்வளவு நன்கொடைகளை இவருக்கு அனுப்பியிருக்க மாட்டார்கள்.

காஞ்சிபுரம் ராமா கேப் திரு. கோபாலகிருஷ்ணன் தவிர மற்றவர்களுக்கு கடிதம் எழுதியே நன்கொடைகளை பெற்று இருக்கிறார். இது அவரது பெருமைகளை காட்டுகிறது.

காஞ்சிபுரம் கோயில்களின் காமாட்சியம்மன், ஏகாம்பரநாதர் கோயில், வரதராசர், குமரகோட்டம் முதலிய பெரும் கோயில்களின் களஞ்சியத்தை இவரே எழுதியுள்ளார். ஏகாம்பர கோயிலின் கிழக்கு நுழைவாசல் வழியாகத்தான் விசயநகர மன்னர் காலம் வரையில் கோயில் வழிபாடு பெற்று இயற்றியதாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய பெரியார்கள் வழிபாடு செய்து இருக்கிறார்கள்.

தெற்கு கோபுரவாசல் விசயநகர் மன்னர் காலத்தில் கட்டப்பட்டது என நுட்பமாக எழுதியிருக்கிறார். இப்பொழுது பூட்டி வைக்கப்பட்டுள்ள கிழக்கு வாயிலையும் திறந்து வைக்குமாறு அவர் ஆலோசனை கூறியிருக்கிறார். அதை கோயிலார் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவ்வாறு செய்தால் மட்டும் ஏகாம்பர கோயில் கிழக்கு புறத்தில் வசிக்கும் மக்களுக்கு அருள்புரிய இயலும்.

ஏகாம்பர நாதர் கோயில் சோழ மன்னர் முதல் கரிகால வளத்தான் பொன் வேய்ந்தான் பல காரணங்கள் காட்டி எழுதியுள்ளார். இக்கோயிற்களஞ்சிய தொகுதிக்கு மதிப்பு பெரியதாக உள்ளது. ஆதலால் யாவரும் இதனைப் படித்து பார்த்து இறைவன் திருவருள்பெறுமாறு வேண்டுகிறேன். இதுபோன்று வரதராசர் கோயிலின் பெருமைகளை வெளிப்பட மிகவும் சிறப்பாக எழுதியுள்ளார். இந்நூலாசிரியர் தொடர்ந்து பணியாற்றி உதவுமாறு இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

# பதிப்புரை

தமிழகத்தில் ஏறத்தாழ முப்பத்தைந்தாயிரம் திருக்கோயில்கள் உள்ளன. என்பது கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் பெரும்பான்மை இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. எஞ்சிய வற்றில் பல தனிப்பட்டவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்படுகின்றன. எஞ்சியவற்றில் மிகச் சில இன்னாருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகின்றன என்பது தெளிவாக தெரியவில்லை.

தமிழக கோயில்களை அயல் நாட்டவர்கள் பெரிதும் மதிக்கின்றார்கள். அன்மைக் காலத்தில் சென்ஸஸ் துறையினர் இங்குள்ள முக்கிய கோயில்களைப் பற்றி பதிமூன்று தொகுதிகள் ஆங்கிலத்தில் அச்சிட்டு வெளியிட்டார்கள். அவற்றில்சென்னை மாநகர் கோயில்களும் செங்கற்பட்டு மாவட்ட கோயில்களும் இடம் பெற்றுள்ளது. ஒரு தொகுதி மேலே குறிப்பிடப்பட்ட 13 தொகுதிகளும் விற்பனை ஆகிவிட்டன.

செங்கற்பட்டு மாவட்ட கோயில்களும் சென்னை மாநகர் கோயில்களும் அடங்கிய நூல் தமிழ்ப்பல்கலைக்கழகம் அச்சிட்டு வெளியிட முன்வந்தது இதனை அரசினர் ஒப்புக்கொண்டனர். இந்து சமய அறநிலையத் துறை ஆணையரும் அரசினரும் ஏற்றுக்கொண்டார்கள். கோயில் அலுவலர்கள் கோயில் அலுவலர்கள் கோயில் களஞ்சிய தொகுதி சிறப்பாசிரியருக்கு விபரங்கள் அளிக்க வேண்டுமென அரசினர் ஆணை பிறப்பித்தார்கள். இந்த ஆணையை செயலாற்ற ஆணையாளருக்கு அரசினர் அறிவுரை வழங்கினார்கள். ஆனால் கோயில் அலுவலர்கள் இதனை முழு ஆதரவோடு செய்து கொடுக்க முன்வரவில்லை. கோயில் களஞ்சியத்தை எழுதி முடிக்க ஆசிரியராக எனக்குள்ள தகுதிகளைமுன்னிட்டு 12-3-1985 ஆம் நாளில் காஞ்சிபுரம் தந்துவ மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் தலைமையில் கூடியகூட்டத்தில் யான் ரூ. 2,500 மாத ஊதியம் பெற்று சிறப்பாசிரியர் பணிபுரிய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஏற்கனவே 34 ஆண்டுகள் அரசுப்பணி புரிந்து மாவட்ட ஆட்சியராக ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் யான் தமிழில் வித்வான் தேர்வு பெற்றிருந்ததால் சைவப்பணி, தமிழ் பணி முதலியவை செய்திருந்ததாலும யான் இப்பதவில் நியமனம் பெற்றேன் இனிமேல் ஊதியம் பெற்ற எந்தப் பணி செய்ய இயலாது என்றும் தெரிவித்தேன்.

பின்னர் இப்பணி செய்ய தகுதி வாய்ந்தவன் யாருமில்லை என்றும், இதற்காக ஊதியம் பெறாமல் காஞ்சிபுரத்தில் வாரத்திற்கு மூன்றுநாள் தங்கி, கௌரவமுறையில் பணிபுரிய வேண்டுமென அக்கூட்டத்தில் என்னை வற்புறுத்தினார்கள். இக்கூட்டத்திற்கு இந்துசமய அறநிலைய அரசுச் செயலாளர், திரு. ஆர். சண்முக சிகாமணியும், இந்துசமய அறநிலையத்துறை துணை ஆணையாளர் திரு. சுவாமிநாதனும் வந்திருந்து இவ்வாறு வற்புறுத்தியதின் பேரில் யான் இப்பதவியை ஏற்க வேண்டிய நிலைஏற்படது. ஆனால் கோயில் அலுவலர்கள் தங்கள் கோயில்களின் விபரங்களை முற்றிலுமாக தரவில்லை.

இந்நிலையில் யானே என் பணியாளர்களில் ஒருவருடன் அக்கோயிலுக்குச் சென்று விவரங்களை திரட்டி செங்கற்பட்டு மாவட்ட கோயிற்களஞ்சியத்தையும், சென்னை மாநகர கோயில்களையும், மற்ற மாவட்டங்களையும் கோயிற்களஞ்சியங்களை அச்சிட எழுதிதருமாறு பல்கலை துணைவேந்தர் திரு சுப்ரமணியம் தெரிவித்தார்கள்.

யான் அவ்வண்ணமே செய்து முடித்து 15-5-1987 ஆம் நாளில் அக்கோயிற் களஞ்சிய தொகுதிகளை டாக்டர் வி. ஐ. சுப்ரமணியம் அவர்களுக்கு பின்னர் தமிழ் துணைவேந்தராக பதவியேற்ற டாக்டர் சா. அகஸ்தியலிங்கம் அவர்களிடம் 15-5-87 ஆம் நாளில் தெரிவித்தேன். காஞ்சிபுரத்திற்கு சென்று திரும்புவதற்கான பயணப்படி மட்டுமே பெற்றேன் காஞ்சிபுரத்திற்கு அப்பால் உள்ள கோயில்களுக்கும் சென்றுவர பயணப்படி பெறவில்லை. காஞ்சிபுரத்தில் உள்ள பெரியகோயில்களாகிய ஏகாம்பரநாதர் கோயில், வரதராஜர் கோயில் குமரகோட்டம் சுப்ரமணிய சுவாமி, காமாட்சி அம்மன் கோயிலில் பாடல்பெற்ற ஓணகாந்தன், கட்சிநெறி காரைக்காடு முதலிய பெரிய கோயில்களின் விவரங்களை காஞ்சிபுரம் திட்ட அலுவலர் திரு. சௌந்திர பாண்டியனும், டாக்டர் கௌத்துரானும் திரட்டினார்கள். இக்கோயிலின் விவரங்களை சேர்த்து கொடுக்குமாறு செங்கற்பட்டுமாவட்ட கோயில் அலுவலர் சரிபார்த்து அவர்களிடமிருந்து ஒப்புதலைப் பெற்றேன்.

மற்ற ஊர்களில் அலுவலர்கூட்டம் நடத்தி கோயிற்களஞ்சியங்களைத் தொடுத்தேன். அவ்வகையில் தொடுக்கப்பட்ட வடஆற்காடு மாவட்ட கோயில்களின் தொகுதி 1, 2 மற்றும் கோயில் அறிமுகம் ஆகியவை தமிழ்ப் பல்கலைகழக துணை வேந்தர் டாக்டர் சி. பாலசுப்ரமணியம் அவர்களின் ஆட்சிக் காலத்தில் டாக்டர் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களால் வெளியிடப்பட்டன. இதன் பின்னர் தமிழ்ப் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் ஔவை நடராசன். இனி கோயில்களஞ்சிய நூல்களை அச்சிட தமிழ் பல்கலைக் கழகத்தில் பணவசதி இல்லையெனவும், இதற்காக யான் கோயிற்களஞ்சிய சிறப்பாசிரியர் என்ற முறையில் நன்கொடை வசூலித்து, அச்சிட்டு வெளியிடவேண்டுமென விரும்பினார்கள். இந்த அறிவுரைகேற்ப, முதலில் காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்களின் களஞ்சிய தொகுதியினை அச்சிட்டு வெளியிட நன்கொடைகள் பெற வேண்டுமென துணை வேந்தர் அவர்கள் விரும்பினார்கள். முதலில் எனக்கு முன்னமேயே நன்கு தெரிய வந்த பேரன்பர் காஞ்சிபுரம ராமகேப் உரிமையாளர், முன்னாள் இந்திய அரசின் முதன்மை பிரசாரராக இருந்தவர் திரு கோபாலகிருஷ்ணன் அவர்களை நேரில் கண்டு இது குறித்து அவரிடம் வேண்டுகோள் விடுத்ததலின் பேரில் ரூ. 4,000/- பணமாக நன்கொடை அளித்து இதற்காக சைவ ஆதினங்களையும், காஞ்சிபுரம் காமகோடி பீடம் சங்கராச்சாரியார் அவர்களையும் அனுகுமாறு வேண்டினார். 1987 ஆம் ஆண்டு மேமாதம் காமகோடி பீடம் சங்கராச்சாரியார் வாழ்த்துரை பெறக் காணசென்றபோது அவர்கள் என்னுடைய பணிகளைப் பாராட்டி விஜயேந்திர சுவாமிகள் கொண்டு பொன்னாடை போர்த்தி பாராட்டினார்கள்.

அவர்களது அறிவுரைக்கேற்ப சைவ ஆதினங்களையும், சங்கராச்சாரியார் காமகோடி பீடத்தின் தலைவருக்கும் கடிதங்கள் எழுதினேன். இவ்வகையில் பெறப்பட்ட நன்கொடைகள் பட்டியல் இத்தொகுதியின் முற்பதியில் நன்றியறிதலுடன் சேர்க்கப்பட்டுள்ளது. நன்கொடைகள் அளித்த பேரருளாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்திலுள்ள கோயில்களில் வழிபாடாற்ற அன்பர்கள் வந்துகொண்டே இருக்கின்றார்கள். ஒரு நாளில் நான்கு அல்லது ஐந்து கோயில்களுக்கு மட்டும் வந்து திரும்ப முடியும். இவ்வாறு திரும்பும் அன்பர்கள் கையில் காஞ்சிபுரம் கோயில்களின் தொகுதிகள் கைவசம் இருப்பின் அடுத்ததடவை வரும்போது முன்பு வழிபாடு ஆற்றாத கோயில்களுக்கு அடுத்த தடவை வரும்போது வழிபாடு ஆற்ற இயலும் மேலும், காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்களின் சிறப்புகளைபற்றி அவர்களால் அறிந்து கொள்ள இயலும் இவ்வகையில் இந்நூலை அன்பர்கள் ஆதரிக்குமாறு காஞ்சிபுரத்தில் உள்ள முக்கியமான கோயில்களின் அலுவலர்களும் இத்தொகுதிக்கு நல்ஆதரவினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வகையில் அறநிலைய ஆட்சித்துறை ஆணையார் அவர்களையும் வேண்டுகிறேன்.

கோ. மு. முத்துசாமி பிள்ளை

திருவான்மியூர்
20-12-1994

## பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அனேக தங்காவதம் (கச்சி) | 1 |
| 2. | அங்காள மரமேசுவரி கோயில் | 2 |
| 3. | அபிராமி ஈசுவரர் கோயில் | 3 |
| 4. | அமரேசுவரர் கோயில் | 4 |
| 5. | அரசு காத்தம்மன் கோயில் | 5 |
| 6. | அரிசாபபயம் தீர்த்தஈசுவரர் கோயில் | 6 |
| 7. | அய்யனார் கோயில் | 7 |
| 8. | அனந்த பத்மநாப ஈசுவரர் கோயில் | 7 |
| 9. | அஷ்டபுஜசுவாமி கோயில | 8 |
| 10. | ஆதிபீட காளிகாம்பாள் கோயில் | 12 |
| 11. | இரணியேசுவரர் கோயில் | 14 |
| 12. | இராம நாதேசுவரர் கோயில் | 15 |
| 13. | இலட்சுமணேசுவரர் கோயில் | 16 |
| 14. | இறவாதீசுவரர் கோயில் | 17 |
| 15 | இட்டசித்தீசுவரர் கோயில் | 18 |
| 16. | உருத்திர கோடீசுவரர் கோயில் | 19 |
| 17. | உலகளந்த பெருமாள் கோயில் | 20 |
| 18. | ஏகாம்பரநாதர் கோயில்(பெரிய காஞ்சிபுரம்) | 23 |
| 19. | ஏகாம்பர நாதர் கோயில் (புதுப்பாளையம்) | 49 |
| 20. | ஓணகாந்தன் தளி – சலந்தேசுவரம் | 49 |
| 21. | ஐராவதீசுவரர் கோயில் | 50 |
| 22. | கங்கணீசுவரர் கோயில் | 51 |
| 23. | கெங்காதீசுவரர் கோயில் | 52 |
| 24. | கங்கை கொண்டான் மண்டபம் | 53 |
| 25. | கச்சபேசர் கோயில் | 54 |
| 26. | திருக்கச்சிமாயானம் | 61 |
| 27. | கச்சியப்ப முனிவர் கோயில் | 62 |
| 28. | இடபேசுவரர் கோயிற் | 63 |
| 29. | மொட்டைக்கோபுரம் | 64 |
| 30. | கயிலாசநாதர் கோயில் | 64 |
| 31. | கருக்கினில் அமர்த்தாள் கோயில் | 74 |
| 32. | கருக்கினில் அமர்ந்தாள் கோயில் –2 | 76 |
| 33 | ஆதிவாரகப் பெருமாள் கோயில் | 77 |
| 34. | கற்றீசம் | 77 |
| 35. | கன்னிமார் கோயில் | 78 |
| 36. | காசி விசுவநாதர் கோயில் | 78 |
| 37. | காசிவிநாயகர் கோயில் | 80 |
| 38. | காமாட்சியம்மன் கோயில் | 80 |
| 39. | காமேசுவரர் கோயில் | 97 |
| 40. | சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில் | 9 |
| 41. | உலகளந்த பெருமாள் உட்கோயில் | 100 |
| 42. | காரகம் | 101 |
| 43. | கௌசிகேசுவரர் கோயில் | 102 |
| 44. | குமரகோட்டம் கோயில் | 103 |
| 45. | சங்குபாணி விநாயகர் கோயில் | 110 |
| 6. | சந்திரேசுவரர் கோயில் | 111 |
| 7. | சந்தை வெளியம்மன் கோயில் | 112 |

48. சப்தரிஷீசுவர் கோயில் 113
49. சலந்தரேசுவர் கோயில் 115
20. சவுனகேசுவரர் கோயில் 116
51. சித்திரகுப்தர் கோயில் 117
22. சித்தீசுவரர் கோயில் 118
53. சித்தீச் சரங்கள் 119
54. சிதம்பர விநாயகர் கோயில் 121
55. சீதேசுவரர் கோயில் 121
56. சுரகரேசுவரர் கோயில் 122
57. செல்வ விநாயகர் & சுப்பிர மணியசுவாமி கோயில் 124
58. செவ்வந்தீசுவரர் கோயில் 124
59. சோழீசுவரர் கோயில் 125
60. தக்கீசுவரர் கோயில் 126
61. தவளேசுவரர் கோயில் 127
62. தான்தோன்றீசர் கோயில் 128
63. திரிகாலஞானேசுவரர் கோயில் 130
64. திருநின்ற விநாயகர் கோயில் 131
65. தழுவக் குழந்தை விநாயகர் கோயில் 131
66. திருநெறிக்காரைக்காடு 132
67. திருமேற்றளீசர் கோயில் 137
68. திரௌபதையம்மன் கோயில் 143
69. தும்பை வனத்தம்மன் என்கிற பொன்னியம்மன் கோயில் 144
70. நகரேசுவரர் கோயில் 145
71. நிலாத் திங்கள் துண்டப் பெருமாள் 146
72. நீரகம் 147
73. பச்சையம்மன் கோயில் 148
74. பணாமுடீசுவரர் கோயில் 149
75. பத்திர காளியம்மன் கோயில் 151
79. பராசுரேசுவரர் கோயில் 152
77. பவள வண்ணர், பச்சை வண்ணர் கோயில்கள் 153
78. பாண்டவர் தூதப் பெருமாள் கோயில் 158
79. பிரம்மபுரீசுவரர் கோயில் 159
80. பிறவாதீசுவரர் கோயில் 161
81. புண்ணியக் கோடீசுவரர் கோயில் 162
82. பொய்த்தேர் விநாயகர் கோயில் 165
83. மகா ஆனந்த உருத்திரேசர் கோயில் 166
84. மகா ருத்ரேசுவரர் கோயில் 167
85. மகாலிங்கதானம் கோயில் 168
86. மணிகண்டீசுவரர் கோயில் 169
87. மதங்கேசுவரர் கோயில் 171
88. மல்லிகார்ச்சுனேசுவரர் கோயில் 172
89. மாண்டு கன்னீச்சுவரர் கோயில் 173
90. முக்தேசுவரர் கோயில் 174
91. முத்தாலம்மன் கோயில் 175
92. முக்தீசுவரர் கோயில் 175
93. முக்தீசர் கோயில் 176
94. வரதராஜ சுவாமி கோயில் 180
95. வன்னீசுவரர் கோயில் 200
96. வாணேசம் 201
97. வரதப் பிள்ளையார் கோயில் 202
98. வியாச சாந்தலீசுவரர் கோயில் 203
99. வீராட்டானேசுவர கோயில் 205
100. வீரபத்திரசாமி கோயில் 206
101. வேதாந்த தேசிகர் கோயில் 207
102. திருவேளுக்கை 208
103. வைகுண்ட பெருமாள் கோயில் 209

# காஞ்சியில் கவின்மிகு கோயில்கள்

நம் நாட்டிலுள்ள அயோத்தி, மதுரா, ஹரித்துவாரம், காசி அவந்தி, துவாரகை காஞ்சி ஆகியவை முத்திதரும் தலங்கள் இவற்றில் ஒன்றாகச் சிறந்து விளங்குவது காஞ்சிபுரம்.

காஞ்சியின் மேற்குப் பகுதி பெரிய காஞ்சி, சிவகாஞ்சி ஆகிய பெயர்களைக் கொண்டுள்ளது. இதன் கிழக்குப் பகுதி சின்ன காஞ்சி, விஷ்ணு காஞ்சி ஆகிய பெயர்களில் விளங்குகிறது. பெரிய காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோயில் இருப்பது காரணமாக அதற்குச் சிவகாஞ்சி என்னும் பெயரும், சின்ன காஞ்சியில் வரதராஜப் பெருமாள் கோயில் இருப்பது காரணமாக அதற்கு விஷ்ணு காஞ்சி என்னும் பெயரும் அமைந்தன.

சங்க காலத்தில் காஞ்சிபுரம் கச்சிப்பேடு என விளங்கி வந்தது. கச்சிப்பேட்டு நன்னாகனார் சங்க காலப்புலவர்களில் ஒருவர் ஆவார். மணிமேகலைக் காப்பியத்தின் கச்சி மாநகர் புக்ககாதை, சமணக்கணக்கர் தந்திரம் கேட்ட காதை முதலியவற்றுள் இந்நகரின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. சங்க காலத்திற்குப் பின்னரும் பல்லவ காலத்தில் இது சிறந்த தலைநகராக விளங்கிற்று. "கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர்" எனத் திருநாவுக்கரசு நாயனார் இந்நகரை புகழ்ந்துள்ளார்.

கி. பி. 190 ஆம் ஆண்டில் தொண்டை மண்டலத்தை ஆண்டதாகக் கருதப் பெறும் சோழன் கரிகால் பெருவளத்தான் காஞ்சியை ஆண்டதாக தெலுங்குச் சோழர்கள் பதிவுருக்கள் தெரிவிக்கின்றன. காஞ்சிபுரத்திற்கு இம்மன்னன் பொன் வேய்ந்ததாகத் திருஆலங்காட்டுச் செப்பேடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு இம்மன்னன் பொன் வேய்ந்தது ஆகமப்படி கட்டப்பட்ட ஒரு கோயிலுக்காகும். இது காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலாகும். இக்கோயிலுக்குக் கரிகாற்சோழன் புரிந்த பணியைப் பேரறிஞர் எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ. பி. எல், கூறுவது "கரிகாற் பெருவளத்தான் காலத்தில் காஞ்சிபுரம் மிகச் செம்மையாக்கப் பெற்று நான்கு இராஜ வீதிகளும் ஏற்பட்டன. இவை போன்ற அகன்ற மாடவீதிகள் வேறு எத்தலத்திலும் இல்லை. அரண் செய்யும் முறையில் இச்சோழனே நாற்புறத்திலும் உயர்ந்த பருத்த மதில்களை எழுப்பினான்" என்பதேயாகும்.

கி. பி. 642 ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்திர்கு வந்திருந்த சீனயாத்திரிகர் யுவான் சுவாங் காஞ்சியைப் பற்றிக் கீழ்க்காணுமாறு எழுதியுள்ளார்.

"நிலம் செழிப்பானது; நல்ல விளைவு தருவது; நாடு வெப்பமானது; மக்கள் அஞ்சா நெஞ்சினர்; உண்மைக்கு உறைவிடமானவர்; கற்றவர்களையும் உயர்ந்த கொள்கைகளையும் மதிப்பவர். நாட்டில் 1(C சங்கிராமங்கள் அல்லது பௌத்த மடங்கள் இருக்கின்றன. சைவ வைணவ சமணக் கோயில்கள் 80 இருக்கின்றன. திகம்பர சமணர் பலர் திராவிட நாட்டில் இருக்கின்றனர். பதினாயிரம் பௌத்தத் துறவிகள் இருக்கின்றார்கள், புத்தர் காஞ்சிக்கு வந்து பலரையும் பௌத்தராக்கியதாக இந்நாட்டில் கூறப்படுகிறது. அசோகன் திராவிட நாட்டில் பல தூபிகளை அமைத்தான். அவற்றுள் சில காஞ்சியைச் சுற்றிலும் பழுதுற்ற நிலையில் உள்ளன.

காஞ்சி ஆறு கல் (மைல்) சுற்றளவு உடையது. அது கடற்கரை நோக்கி இருபது கல் (மைல்) விரிந்துள்ள நரகம் இந்தக் கரையிலிருந்து கப்பல்கள் இலங்கைக்குப் போகின்றன.

நாலந்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த தரும பாலர் காஞ்சிப் பகுதியினர் என்று இங்குக் கூறுகிறார்கள்.

காஞ்சியில் காமாட்சி அம்மனுக்கு ஒரு தனிக் கோயில் இருக்கிறது. அங்கு இறைவன் திருவுருவம் இல்லை காமாட்சி அம்மனுக்கு அறம் வளர்த்த நாயகி என்றொரு பெயரும் உண்டு. 32 அறங்களையும் வளர்த்தாள் அம்பிகை என்பது கருத்து காஞ்சியிலுள்ள சிவன் கோயில்களில் அம்மன் கோயில்கள் இல்லை என்பதுகுறிப்பிட தக்கது.[1] அந்த நாளில் சிவன் கோயில்களில் அம்பிகை சந்நிதி அமைக்கப்பட வில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகக் காஞ்சிச் சிவன் கோயில்கள் விளங்குகின்றன. ஐய கள் காடவர்கோன் அரசாண்ட தலம் இதுவாகும். இத்தலத்தைத் தலை நகராகக் கொண்டு பல்லவ மன்னர் பலரும் ஆண்டிருக்கின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள், இழந்த இடக்கண் பெற்ற பதி திருக்குறிப்புத் தொண்ட நாயனார் பிறந்தருளிய தலம். சாக்கிய நாயனார் வீடுபேறடைந்த தலமும் இதுவாகும். திருவாசகத்தில் காஞ்சியை ஆறு இடங்களில் மாணிக்கவாசகர் குறிப்பிடுவார்.

வில்லி புத்தூர் ஆழ்வார், தல யாத்திரை வந்த பார்த்தன் காஞ்சிக்கு வந்ததைக் கூறுமிடத்து, காஞ்சிக் காமாட்சியை வாய்கொள்ளாமல் பாடி மகிழ்வார்.

கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் காஞ்சி நகரத்தில் பிறந்தவர்.

விஷ்ணு காஞ்சி எனப்படும் சின்ன காஞ்சிபுரத்தில் அத்திகிரி திருவெஃகா அட்டபுயகரம் திருத்தண்கா வேளுக்கை' என்னும் ஐந்துதிருப்பதிகள் இருக்கின்றன.பெரிய காஞ்சிபுரத்தில் 'ஊரகம்', 'நீரகம்', 'காரகம்', 'கார்வானம்' 'கள்வானுர்' பாடகம் 'நிலாத்திங்கள் துண்டம்', 'பவள வண்ணம்', பரமேசுர விண்ணகரம் ஆகிய ஒன்பது திருப்பதிகள் இருக்கின்றன.

காஞ்சியிலுள்ள பெருமாள் கோயில்களுள் பெரியது அத்திகிரி வரதராசப் பெருமாள் கோயில். இக்கோயில் சிறுகட்டு மலைமீது இருக்கின்றது.

காஞ்சி காமாட்சியம்மன் கோயிலுக்கும் ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கும் மையத்தில் குமரகோட்டம் அமைந்திருப்பது சோமாசுகந்த தத்துவத்தை விளக்குமாறு அமைந்துள்ளது. காஞ்சிபுரத்தில் மட்டுமே வழிபடதக்க கோயில்கள் மிகுதியாக உள்ளன. சிவஞான முனிவர் காஞ்சிபுரத்தைப் பற்றி ஒரு புராணம் (காஞ்சிப் புராணம்)பாடியுள்ளார்.

## காஞ்சிப் புராணம் குறிப்பிடும் காஞ்சிபுரத்தின் பன்னிரு பெயர்கள்

1. பிரளயசித்து 2. காமபீடம் 3. மும்மூர்த்திவாசம் 4. சிவபுரம் 5. விண்டுபுரம் 6. தபோமயம் 7. சகலசித்தி 8. கன்னிகாப்பு 9. துண்டீரபுரம் 10. சத்தியவிரதக்ஷேத்திரம் 11. பூலோக கயிலாயம் 12. பிரமபுரம்.

திருக்குறளுக்குப் பேருரை தந்த பரிமேலழகர்
வாழ்ந்தது காஞ்சியிலே

---

1. எனினும் ஒவ்வொரு கோயிலிலும் உற்சவமூர்த்தமாக அம்பிகை சந்நிதி ஒன்று ஒரு பெயர் தாங்கி இருக்கும் காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயிலில் ஏலவார் குழலி அம்மன் சந்நிதி இருக்கிறது.

பண்டைக்காலம் முதல் காஞ்சி கல்விக்குச் சிறந்த இருப்பிடமாக விளங்கியது. அருகிலுள்ள நாடுகளிலிருந்து அறிஞர்கள் காஞ்சிப் பல்கலைக் கழகத்தின் கல்வி முறையால் கவரப் பெற்றனர். பாரவி தண்டி முதலிய கவிகள் பல்லவர்களின் அவையை அலமத்தனர். அக்காலத்தில் புகழுடன் விளங்கிய நாலந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராக விளங்கிய தரும பாலரும் பேராசிரியர் தினகரரும் புத்த சமயத்தின் தத்துவ நூல்களை இயற்றிய போதி தர்மரும் காஞ்சியைச் சேர்ந்தவர்கள் காஞ்சிக்கு அருகிலுள்ள 'ஜீன காஞ்சி' (ஜைன காஞ்சி) என்னும் பகுதி தற்போது திருப்பருத்திக்குன்றம் என்று வழங்கும் பகுதி ஆகும். பண்டை நாளில் இது சமணர்களுக்குக் கோட்டையாக விளங்கியது. இங்குள்ள சமணகோயில் சிறப்பாக விளங்கி வருகிறது பிற்காலத்தில் கி.பி.14 ஆம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்த மல்லிசேனா வாமனகுரி போன்ற சமணப் பெருமக்கள் மக்களால் பாராட்டப் பெற்றார்கள்.

ஆதி சங்கரர் இங்குள்ள காமாட்சிஅம்மன் கோயிலில் ஸ்ரீசக்கரத்தைப் பிரதிட்டித்து அத்வைத சித்தாந்தத்தைப் பரப்புவதற்குக்காமகோடி திருமடத்தை நிறுவினார். வைணவத்திலும் காஞ்சி அழியாத சிறப்பைப் பெற்றுள்ளது. பொய்கை யாழ்வார் வாழ்ந்த பதி இது. திருமழிசையாழ்வார் இங்குச் சில காலம் வாழ்ந்தார் என்பதைக் இங்குள்ள "சொன்ன வண்ணம்" செய்த பெருமாள் (யதோத்காரி) கோயில் வரலாறு தெரிவிக்கிறது. ஸ்ரீ ராமானுஜர் இளமைக் காலத்தைக் காஞ்சியில் கழித்து அத்திகிரி அருளாளராகிய ஸ்ரீ வரதராஜப்பெருமாளின் பேரருளைப் பெற்றார் பூந்தமல்லியில் தோன்றிக் காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயிலில் அருள் வழிபாடாற்றி புகழ் பெற்றவர். 'திருகச்சி நம்பிகள்' ஆவார். வடகலை வேதாந்த தேசிகர் புகழோடு வாழ்ந்த பதி காஞ்சி ஆகும், காஞ்சியில் உள்ள வேதாந்த தேசிகர் கோயிலுக்கருகில் பரகாலன் என்னும் வைணவ மடம் அமைந்துள்ளது. சைவ ஆதீனங்களுள் மிகப்பழமையான ஆதீனமாகவும் மெய்கண்ட தேவர் சந்தானபீடமாகவும் விளங்கி வரும் தொண்டை மண்டல ஆதீனத் திருமடம் இங்கு அமைந்துள்ளது. காஞ்சியில் ஒரு பகுதியாக விளங்கும் பிள்ளையார் பாளையத்தில் மண்டபத் தெருவிற்குப் பக்கத்தில் திருவாடுதுறை ஆதீனத் கிளை மடம் இருக்கிறது.

காஞ்சி தொடக்கத்தில் பல்லவர்களின் தலைநகராகவும் சோழர்கள் ஆட்சிக்கு பின் தலையெடுத்த தெலுங்குச் சோழர்களின் தலைநகராகவும் விளங்கியது இக்காலங்களில் அரசுபுரிந்த மன்னர்கள் அவ்வப்போது காஞ்சிபுரம் திருக்கோயில்களுக்குப் பல்வேறு திருப்பணிகள் செய்து வந்துள்ளார்கள். பல்லவர்கள் தம் தலைநகரான காஞ்சியில் பெருங்கற்றளிகளை நிறுவி அழியாப் புகழ் பெற்றனர். காஞ்சிலுள்ள கைலாசநாதர் கோயிலும் வைகுந்தப் பெருமாள் கோயிலும் இன்றும் நிலைபெற்று உள்ளன. காஞ்சியில் குறிப்பிடத்தக்க கோயில்களுக்கு திருப்பணியும் பராமரிப்பும் காமகோடி மடம் செய்து வருகிறது. இங்குள்ள பல கோயில்களுக்கு பூசை, திருவிழா முதலியவற்றிற்காகத் திருப்பனந்தாள் தமபிரான் சுவாமிகள் திருமடம் தருமபுர ஆதீனம் திருவண்ணாமலை ஆதீனம் ஆகியன இவ்வகையில் உதவி அளிந்து வருகின்றன இங்குள்ள வேதாந்த நாராயண ஆசிரமம் மக்களுக்கு வேதாந்தம் போதிப்பதுடன் மக்களின் உடற்பிணி நீக்கும் நிலையமாகவும் விளங்கி வருகிறது.

பஞ்சாபிலுள்ள ரோஜ்பூர் படாமீர் ஃபக்ரின் பிரதம சீடராகிய ஹஜரத் ஹமீது அவுல்யா என்ற மகமதிய மதப்பெரியார் கூடக் காஞ்சிபுரத்தை மகமதிய வழிபாட்டுக்குரிய புனித பூமியாகக் கொண்டு ஒழுகி வந்தனர். எனவே காஞ்சிபுரம் பல்வேறு தெய்வ நெறிகளுக்கு நிலைக்களனாய் விளங்கிய பழம் பெரும் பகுதியாகும்.

விஜயநகர மன்னர்களின் ஆட்சி வீழ்ச்சி அடைந்த பின்னர் ஐதராபாத் நிசாம் உல்முல்க் ஆஸாப்ஜா என்பவரின் அதிகாரத்திற்குட்பட்ட நவாபின் ஆட்சியில் காஞ்சி அடங்கிற்று. பின்னர் ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கிடையே காஞ்சி கர்நாடகப் போர்க்களமாக உருவாயிற்று. 1752 ஆம் ஆண்டு கிளைவ் காஞ்சியைக் கைக்கொண்டார். 1780 ஆம் ஆண்டில் ஹைதர் அலியின் புதல்வர் திப்பு காஞ்சியைக் கைபற்றினார். 1781 ஆம் ஆண்டில் காஞ்சி ஆங்கிலேயர் வசமாயிற்று. கி. பி. 1799 ஆம் ஆண்டில் இப்பகுதியில் மாவட்ட ஆட்சியராக இருந்த ஆட்ஸன் (Hudson) என்பவர் ஏகாமபரநாதர் திருக்கோயிலின் வெளி மதில்களைப் பழுதுப் பார்த்துத் திருத்தி அமைத்தார். இவ்வகையில் அவரது நினைவாக "ஆடிசன் பேட்டை" எனக் காஞ்சிபுரத்தின் ஒரு பகுதிக்குப் பெயரிடப்பட்டது. அது இன்றும் வழக்கில் உள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகராக 1967 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

இத்தகைய சிறப்புகள் காரணமாக மலர்களில் முல்லையும் தேவமாதர்களுள் அரம்பையும் அறங்களில் இல்லறமும் போல் நகரங்களில் காஞ்சி தலைசிறந்து விளங்குகிறது எனக் காளிதாசர் குறிப்பிட்டுள்ளார்.

---

## காஞ்சியில் காமாட்சி அம்மை மேற்கொண்ட 32 அறங்கள்

1. ஐவகைவழிபாடு 2. வறியோர்க்கீதல் 3 துறந்தோர்க்கு மடம்அமைத்துத் கொடுத்தல் 4. தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தருதல் 5. சோலை அமைத்தல் 6. இரப்போர், குருடர், உடலுறுப்புக் குறைவு காரணமாகத் துன்புறுவோர் ஆகியோர்களைக் காப்பாற்றுதல் 7. கொடிய நோய்களைப் போக்குவதற்கு மருந்தளித்தல் 8. திக்கற்ற குழந்தைகளை வளர்த்தல் 9. சுண்ணாம்பு வழங்குதல் 10. பாக்கு வெற்றிலை அளித்தல் 11, தலைக்குப் பூசிக்கொள்ள எண்ணெய் வழங்குதல் 12. முழுகுவதற்கு அரைப்புப் பொடிகள் வழங்குதல் 13. படுக்கையளித்தல் 14. நிலம் வழங்குதல் 15. ஆவினங்களை வழங்குதல் 16. மகவு பெறுவித்தல் 17. திருமணம் செய்வித்து உதவுதல் 18. விளக்கு அமைத்தல் 19. தீராக் கடன்களைத் தீர்த்து வைத்தல் 20. சிவனடியார்க்கு வேண்டுவன அளித்தல் 21. உருத்திராக்கம் அளித்தல் 22. திருநீறு அளித்தல் 23. சிவ பூசைக்காகப் பொருட்கள் அளித்தல் 24. வேதங்கள் சிவாகமங்கள் சிவ புராணங்கள் ஆகியவற்றை ஓதுவித்தல் 25. சிவ உபதேசம் செய்தல் 26. அபயம் அளித்தல் 27. பிறர் துயர் நீக்கல் 28. விலை கொடுத்துயிர் காத்தல் 29. விலங்கினங்களுக்கு உணவளிந்தல் 30. ஆதுலசாலை அமைத்தல் 31. அறவை சாலை அமைத்தல் 32. அநாதைகளுக்குச் சோறு அளித்தல் ஆகியவை ஆகும்.

இவற்றைச் சிவஞான முனிவர் தாம் இயற்றிய காஞ்சிப் புராணத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வறங்களில் பலவற்றைப் பல் சமயத்தோர்களும், அரசினரும் இன்றும் புரிந்து வருவது வெளிப்படை.

காஞ்சிபுரம்

# அனேக தங்காவதம் (கச்சி)

அனேக தங்காவதம் என்னும் பெயரில் இரு தலங்கள், ஒன்று வடநாட்டிலும் மற்றது தென்னாட்டிலும் உள்ளன.

வடநாட்டு அனேகதங்காவதம் கடல் மட்டத்திற்கு மேல் 12000 அடி உயரத்தில் அலகநந்தா, மந்தாகினிஎன்னும் நதிகள் கூடுமிடமான, தேவப்பிராகைக்கு அருகில் கௌரிகுண்டம் என்னும் பெயர் தாங்கியுள்ள இடத்தில் அமைந்துள்ளது. உமாதேவியார் தவம் புரிந்த இடமாதலால் இப்பெயர் வழங்கிவருகிறது. சூரியனும் சந்திரனும் பூசை செய்த தலம் என்பர். இறைவன் பெயர் அருண்மனேசுவரர் என்பதாகும். அம்பிகை மனோன்மணியம்மை திருஞானசம்பந்தர் காளத்தியிலிருந்த போது இதன்மீது பாடல் அருளியுள்ளார். இப்பாடல்களின் பதிகம் இரண்டாம் திருமுறையிலுள்ளது. வடநாட்டு அனேகதங்காவதத்திலிருந்து பிரித்தறிந்து கொள்ளக் காஞ்சிபுரத்து அனேகதங்காவதம் கச்சி அனேகதங்காவதம் என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது.

காஞ்சிநகரின் வடமேற்கில் 2.4 கிலோமீட்டர் தொலைவில் புத்தேரித் தெருவின் அருகில் 10 சென்ட் நிலப்பரப்பில் வடக்கு நோக்கிய வாயிலும் கிழக்கு நோக்கிய சந்நிதியும் கொண்டு விளங்குகிறது.

இது அநேக பேசம் எனவும் குறிக்கப்படுகிறது. அநேக தங்காதவம் என்பது யானையைக் குறிக்கிறது. இங்குச் சிறப்பாக விநாயகர் வழிபட்டார். யானை முகத்தினராகிய விநாயகர் இங்குப் பூசை செய்தமையால் இத்தலத்திற்கு இப்பெயர் அமைந்தது என்பர்.

இத்தலத்தைப் பற்றிச் சுந்தரர் பாடிய பாடலில் இவ்விடம் யானையின் தோலை உரித்தவராகிய சிவபிரானுக்குரியது எனத் தெரிவிக்கப்படுகிறது. மத யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்துக் கொண்டதால் சிவபெருமான் கஜ (யானை) சம்மாரமூர்த்தி என்னும் மூர்த்தமாக வழிபடப்பெறுகிறார். இதன் அடிப்படையில் ''ஆனை உரித்தான்'' வயல் என்னும் பெயரில் பெரிய வயல்கள் இக்கோயிலுக்கு மேற்கேயுள்ளன.

இக்கோயிலின் வடக்கு வாயில் வழியாக உட்சென்று வலம் வரும்போது கிழக்குப் பிராகார மையத்தில் பலிபீடம், நந்திமண்டபத்துள் நந்திதேவர் சந்நிதி

ஆகியவற்றைக் காண்கிறோம். மகா மண்டபத்தில் நால்வர் திருவுருவங்களும் உள்வாயிலின் இருமருங்கும் துவாரபாலகர்கள், விநாயகர், முருகன் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. கருவறையில் கச்சி அனேகதங்காவத ஈசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். கருவறைப் புறக்கோட்டங்களில் முறையே விநாயகர், தென்முகக் கடவுள், திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் எழுந்தருளியுள்ளார்கள். வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் எழுந்தருளியுள்ளார்.

இக்கோயில், கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம், திறந்தவெளிச் சுற்றுப் பிராகாரம் ஆகிய அமைப்புகளைக் கொண்டதாகும். கருவறை மீது மூன்று / தள சதுர விமானம் ஒற்றைக் கலசத்துடனும் வடக்கு வாயிலின் மீது சிறு ஒருநிலைக் கோபுரமும் உள்ளன.

கோயிலுக்குக் கிழக்கே வெளியிடத்தில் தீர்த்தக்கிணறு இருக்கிறது. இக்கோயில் ஊருக்கு வெளியே தள்ளி ஆரவாரமற்ற இடத்தில் இருப்பதால் மக்கள் இக் கோயிலுக்கு மிகுதியான எண்ணிக்கையில் வருவதில்லை. இங்கு ஒருகாலப் பூசை குருக்களால் செய்யப்பட்டுவருகின்றது. அறங்காவலர் கட்டுப்பாட்டின்கீழ் நிருவாகம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அனைத்துச் சைவ விழாக்களும் எளிய முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம்

# அங்காளபரமேசுவரி கோயில்

இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் திருக்கச்சி நம்பி கோயில் தெருவில் வடக்கு நோக்கியவாறு 10 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் முன்மண்டபத்தில் வாயிலின் இருபுறமும் விநாயகரும் முருகனும் எழுந்தருளியுள்ளனர். மேற்கே சற்றுத் தொலைவில் பாவாடைராயன் கற்சிலை இருக்கின்றது. கருவறையில் அம்பிகை வீற்றிருக்கின்றாள்.

இங்குப் பூசாரி ஒருவர் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் திரளான மக்கள் வழிபாடு செய்கின்றனர். மாசி மாதம் மயான கொள்ளை விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

இக்கோயில் தனியார் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

காஞ்சிபுரம்

# அபிராமி ஈசுவரர் கோயில்

இத்திருக்கோயில் பெரிய காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் தெருவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

மாபலியைக் கொல்லத் திருமால் தாம் வாமனராகி மூன்றடி மண்பெற்று இரண்டடிகளால் மேல் கீழ் அளந்து மூன்றாவதாக மாபலி தலையில் அடி வைத்துப் பாதாளத்தில் அழுத்திய பாவம் தீரச் சிவலிங்கம் நிறுவி வழிபட்ட தலம் இதுவாகும் என்பர். இத்தலத்தின் தலவிருட்சமாக வில்வமரம் முன்பு இருந்தது எனவும் வாமனத்தீர்த்தம் என்ற தீர்த்தமும் முன்பு காணப்பட்டது எனவும் கூறுகிறார்கள். இப்போது தலவிருட்சமும் தீர்த்தமும் இல்லை.

இச்சிறிய கோயிலின் கிழக்கு நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்ததும் நந்திதேவர் சந்நிதி பலிபீடம், ஆகியவற்றைக் காண்கிறோம். பிராகாரத்தின் வட கிழக்கு மூலையில் வாயிலின் அருகே சூரியன் சந்நிதியும் வெளியே வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதியும் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதியும் வடமேறகு முனையில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. இச்சந்நிதிகள் இடிந்த நிலையில் காணப்படுகின்றன. உள் மண்டபம் பதினாறு தூண்களையுடையது. 12 தூண்கள் சதுரமாக எண்பட்டைகளுடன் காணப்படுகின்றன. 4 தூண்கள் வட்டமாக ருத்ரகாந்த வகையைச் சார்ந்தவை. உள் மண்டபத்தில் வடமேற்கு மூலையில் நாகேசுவரர் எழுந்தருளியுள்ளார். இம்மண்டபத்தின் சதுரத் தூண்களில் வழிபடும் பெண்கள், சிங்கம், முனிவர், ஆஞ்சநேயர் ஆகியோரின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. உள் மண்டபத்திற்கு அடுத்தாற்போல் உள்ளே தென்மேற்கில் சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானை ஆகியோர் சிற்பங்களும் வடமேற்கில் அபிராமி அம்மன் சிற்பமும் உள்ளன. கருவறையில் மூலவர் சிவலிங்க வடிவில் காட்சி அளிக்கிறார்.

இக்கோயிலின் இராசகோபுரம் சிறியது. இது மூன்று கலசங்களையும் ஒரு தளத்தையும் உடையது. சிகரத்தின் தெற்கிலும் வடக்கிலும் பிரபைகளில் தவமுனிவர் சிற்பங்கள் காணப்படுகின்றன. கிழக்கிலும் மேற்கிலும் சிகரங்களில் இரண்டு சிறிய நாசிகள் உள்ளன நான்கு கோபுரத் தாங்கிகள் உருவங்கள் கிழக்கிலும் மேற்கிலும் உள்ளன. கோட்டங்களில் தெற்கில் தட்சிணாமூர்த்தியும் மேற்கில் திருமாலும்

வடக்கில் பிரமதேவரும் எழுந்தருளியுள்ளனர். நந்தி கோபுரம் ஒரு தளத்தையும் ஒரு கலசத்தையும் உடையது. இக்கலசம் அழிந்துள்ளது. இதன் சிகரம் வட்டமானது. எட்டு நாசிகளும் 8 சிறிய பஞ்சரங்களும் சிகரத்திலுள்ளன. இடபதேவர் திருவுருவங்கள் மூலைகளில் காணப்படுகின்றன. மூலத்தான விமானம் வட்ட ரூத்ர வகையைச் சார்ந்தாகும் இது நான்கு பெரிய நாசிகளையும் நான்கு சிறிய நாசிகளையும்உடையது இவ்விமானக்கிரீவக்கோடத்தில் தெற்கே தட்சிணாமூர்த்தியும் மேற்கே திருமாலும் வடக்கே பிரமதேவரும் கிழக்கில் துர்க்கையும் காட்சி அளிக்கின்றனர். நான்கு மூலைகளிலும் இடப வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலில் நித்திய பூசை காலையில் நடைபெறுகிறது. சிவராத்திரி, திருவாதிரை, ஆருத்திரா, ஆடிக்கிருத்திகை, பொங்கல், தமிழ் ஆண்டுப் பிறப்பு, தீபாவளி, கார்த்திகை முதலிய நாள்களில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

இக்கோயில் நிர்வாகம் தனிப்பட்டவரிடம் இயங்கி வருகிறது.

### காஞ்சிபுரம்

# அமரேசுவரர் கோயில்

இக்கோயில் இராசவீதியின் மேல் சந்நிதியில் நிமந்தக்கார ஒத்தைவாடத் தெருவில் கிழக்கு நோக்கியவாறு 30 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

தேவர்களும் அசுரர்களும் தங்களுக்கிடையே போர்புரிந்து வெற்றி தோல்வி காணாதவாறு திகைத்தார்கள். தேவர்கள் வெற்றி கொள்ளுமாறு தேவியார் உதவினார். பிரமதேவர், இந்திரன், திருமால் முதலியோர்கள் தாம் தாம் வலியவர் எனப் பெருமை கொண்டார்கள். அப்போது சிவபெருமான் ஒரு துரும்பை நிறுவி இதனை எறிய வல்லவர் வென்றவர் என்றார். அவர்களுள் எவரும் அத்துரும்பை வீழ்த்த இயலவில்லை. அப்போது அவர்கள் அம்மையைத் துதித்தார்கள். அம்மையார் அவர்கள் முன்தோன்றி, "எப்பொருளின் கண்ணும் எவ்வகை ஆற்றலும் சிவபெருமான் ஆற்றலே ஆகும். ஆதலால் பிழை தீரக் காஞ்சியில் பூசை செய்க" என்றார். அவர்கள் அவ்வாறே இங்குப் பூசை ஆற்றிச் சிவபெருமானை வழிபட்டனர். இதுவே அமரேசமாகும்.

கிழக்கிலுள்ள கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்தால் பலிபீடம், நந்திதேவர் திருவுருவம் ஆகியவற்றைக் காணலாம். வெளிப்பிராகாரத்தின் தென்மேற்கில்

விநாயகர் சந்நிதியும் வடமேற்கில் சுப்பிரமணியர் சந்நிதியும் காண்கிறோம். கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருங்கள் உள்ளன. கருவறையில் 16 பட்டைகளுடன் இலிங்க வடிவில் அமரேசுவரர் எழுந்தருளியுள்ளார். கருவறைக்குப் பின்சுவரில் சோமாக்கந்தர் புடைப்புச் சிற்பமுள்ளது. இராவணன் மலையைப் பெயர்க்கும் காட்சியும், இறைவனின் நடனக்கோலமும் உள் மண்டபத்தில் காணப்படுகின்றன.

இக்கோயிலில் இருவேளைப் பூசை நடைபெறுகிறது. குருக்கள் பூசை செய்து வருகிறார். ஊர்ப் பொது நிருவாகத்தில் இக்கோயிலுள்ளது. இது பல்லவர் காலக் கலைக் கோயிலாகும். பின்னர் வந்தவர்கள் கலையருமை உணராது திருப்பணி என்னும் பெயரால் சிற்பங்களை மாற்றியுள்ளனர்.

பிரதோடம், சிவராத்திரி, பௌர்ணமி, திருவாதிரை போன்ற சிறப்பான நாள்களில் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன; இக்கோயில் தனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

### காஞ்சிபுரம்

# அரசு காத்தம்மன் கோயில்

காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர் கோயிலுக்குத் தெற்கில் $1\frac{1}{2}$ கிலோ மீட்டர்த் தொலைவில் அதன் சந்நிதித் தெருவில் இக்கோயில் இருக்கிறது. இது 18 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் உள்ளது.

காமாட்சியம்மையார் தவம் மேற்கொண்டபோது அவருக்குக் காப்புத் தெய்வங்களாக அரசுகாத்தம்மன், பச்சையம்மன், திரௌபதையம்மன், சந்தைவெளி அம்மன், கருக்கினில் அமர்ந்த அம்மன் ஆகியோர் இருந்தனர். இவர்களில் முதன்மையானவர் அரசுகாத்தம்மன். இந்த அம்மனிடம் அக்காலத்தில் காமாட்சி அம்மையார் தமது அரசை ஒப்புவித்தார். அதனை இந்த அம்மன் சரிவரப் பாதுகாத்து வந்தமையால், இவ்வம்மையாருக்கு அரசு காத்த அம்மன் என்னும் பெயர் வழங்கு வதாயிற்று என்பதாக மரபுவழிச் செய்தி கூறுகிறது. இக்கோயிலில் முதன்மையாக உள்ளது அரசுகாத்தம்மன் சந்நிதியாகும். இந்த அம்மன் திருவுருவம் 1 மீட்டர் உயரத்தில், ஒரு காதில் குண்டலமும், மற்றொரு காதில் தோடும் கொண்டு அரசு காத்து வந்ததைத் தெரிவிக்கிறது. அரசு காக்க இந்த அம்மன் அதிகாரம் பூண்டதை இவர் காதிலுள்ள குண்டலம் காட்டுகிறது. மற்றக் காதிலுள்ள தோடு

காமாட்சியம்மை சார்பில் அரசு காத்து வந்ததைக் குறிப்பதாக அமைகிறது. இங்கு அம்மனின் உற்சவத் திருமேனியும் உள்ளது. இந்தக்கோயிலுக்கு உட்பிராகாரம் உள்ளது.

கோயிலினுள் காலையிலும் மாலையிலும் பூசைகள் செய்விக்கப்படுகின்றன. இப்பூசை செய்வதற்கென நியமிக்கப்பட்ட பண்டாரம் ஒருவர் இப்பணியைச் செய்து வருகிறார். வைகாசி மாதம் ஐந்தாம் வெள்ளிக்கிழமையிலும், ஆடி மாதம் ஐந்தாம் வெள்ளிக்கிழமையிலும் அம்மன் உலா வருகிறார். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியின் போதும், நவராத்திரியிலும் திருவிழா நடத்தப் பெறுகிறது. இக்கோயிலில் வழிபடுவோர் எளிய மக்களே ஆவர்; மிக அடக்கமான முறையில் தங்கள் தங்கள் வசதிக்குக்கேற்ப வழிபாடுகள் செய்து வருகின்றனர். இக்கோயிலுக்கு நிலச் சொத்துகளோ நகைகளோ இல்லை. உள்ளூர்ப் பெருமக்களில் சிலர் இக்கோயிலைக் கவனித்து வருகின்றனர்.

### காஞ்சிபுரம்

## அரிசாப பயம் தீர்த்தஈசுவரர் கோயில்

காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெருவில், மேற்கில் தென்புறம் இக்கோயில் அமைந்துள்ளது. இப்போது இதன் வழியை ஒரு மரத்தொட்டி அடைத்துக் கொண்டுள்ளது.

அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் இடையே போர் நிகழ்ந்தது. தேவர்களுக்குத் துணையாகத் திருமால் முன்வந்தார். அசுரர்கள் புறங்கொடுத்தோடிப் பிருகுமுனிவர் மனைவி கியாதையைச்சரணடைந்தனர். அசுரர்களுக்கு இடங்கொடுத்தகியாதியைப் பெண் என்றும் பாராமல் திருமால் கொன்றார். இதற்காகப் பிருகுமுனிவர் திருமாலுக்குச் சாபமிட்டார். சுக்கிரனின் துணைகொண்டு பிருகுமுனிவர் இட்ட சாபம் பெற்றுத் திருமால் துன்பம் எய்தினார். தாம் செய்த பாவத்திலிருந்து மீள இங்குத் திருமால் வழிபாடாற்றினார் என்பர்.

இக்கோயில் வாயிலைச் சிறு கோபுரம் அணிசெய்கிறது. உட்புறம் பலிபீடம், நந்திதேவர் சந்நிதி ஆகியன உள்ளன. கிழக்கு நோக்கிய சிறுகருவறையில் அரிசாப பயம் தீர்த்த ஈசுவரர் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார்.

குருக்கள் ஒருவர் ஒருகாலப் பூசை செய்து வருகிறார். இக்கோயில் தனியார் நிருவாகத்தின் கீழ் உள்ளது.

பெரிய காஞ்சிபுரம்

## அய்யனார் கோயில்

இது பெரிய காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் கிருஷ்ணன் தெருவின் வடக்கே அதன் தொடர்ச்சியான அய்யனாரப்பன் கோயில் தெருவில் மேற்கு நோக்கியவாறு 5 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இது சாத்தன் எனப்படும் நகரக் காவல் தெய்வமாக விளங்கும் தேவதைக்குக் கட்டப்பட்ட கோயிலாகும். காஞ்சி நகரில் சாத்தன் கோயில்கள் பல இருந்தன. எஞ்சியிருப்பன காமாட்சியம்மன் கோயிலிலுள்ள சாத்தன்சந்நிதியும் இதுவுமேயாகும். சாத்தனை முன்னாளில் அய்யனார் என வழங்குதல் மரபாயிருந்தது. இம்முறையில் இக்கோயில் அய்யனார் கோயில் ஆனதென்பர்.

இக்கோயில் கருவறை உள்மண்டபம் மகாமண்டபம் முகமண்டபம் ஆகியவற்றைக் கொண்டதாகும். இது நல்ல கருங்கல் கட்டிடமாகும். கருவறையில் வீராசனத்தில்யோகக்கோலம் தரித்து வலக்கையில் செண்டேந்தி இடக்கை ஊன்றி முழங்காலின் மீது வைத்தவாறு அய்யனார் காட்சி அளிக்கிறார். தலையில் ஜடாமண்டலம் படர்ந்து வட்டமாக அமைந்துள்ளது. இரண்டு புறமும் பூரணை, புஷ்களை ஆகிய இரண்டு தேவியர் தங்கள்கரங்களில் மலர்ஏந்தியும் அமர்ந்தவாறும் காட்சியளிக்கிறார்கள்.

இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார். இக்கோயில் முதலியார் ஒருவரின் கட்டுப்பாட்டில் செயல்படுத்தப்படுகின்றது. திருமேற்றளிக் கோயில் நிர்வாகத்துடன் இது இணைந்து செயலாற்றப்படுகிறது.

ஆடிமாதம் திங்கட்கிழமை பெருந்திருவிழா நடைபெறுகின்றது. சனிக்கிழமை புதன்கிழமைகளில் திரளான மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர்.

காஞ்சிபுரம்

## அனந்த பத்மநாப ஈசுவரர் கோயில்

இக்கோயில் ஏகாம்பரேசுவரர் கோயில் முன்புறமுள்ள 16 கால் மண்டபத்தை ஒட்டிச் செல்லும் தெருவில் சங்கரசேவாசமிதி இயங்கிவரும் வீட்டின் பின்புறத்தில் 10 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

ஒருமுறை பார்வதியும் சிவபெருமானும் சொக்கட்டான் ஆடிக்கொண்டு இருந்தனர். அவர்களுக்கு நடுவராகத்திருமால் இருந்தார். போட்டியில்சிவபெருமான் வென்றார் எனத் திருமால் கூறினார். இதனால் கோபம் கொண்ட பார்வதி திருமாலை மலைப்பாம்பாகுமாறு சபித்தாள். பதுமநாபனாகிய திருமாலும் அவருடைய படுக்கையாகிய அனந்தனும் காஞ்சிபுரத்திற்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து பேறு பெற்றனர். இம்முறையில் இக்கோயில் அனந்த பத்மநாப ஈசுவரர் கோயில் என்னும் பெயர் பெற்றது என்பர்.

இக்கோயில் கருவறை, முன்மண்டபம் ஆகியவற்றைக்கொண்டதாகும். திறந்த வெளிச் சுற்றுப் பிராகாரம் உள்ளது. கருவறை வாயிலில் இருபுறமும் விநாயகரும் முருகனும் எழுந்தருளியுள்ளனர். இக்கோயில் முகப்பின் மேல்பகுதியில் அனந்தன் மீது துயிலும் பத்மநாபர் திருவுருவம் அமைந்துள்ளது. கருவறைமீது ஒற்றைக் கலசம் கொண்ட ஒருதள விமானம் இருக்கிறது.

இக்கோயிலில் ஒருகாலப் பூசை குருக்களால் செய்யப்படுகின்றது. அனைத்துச் சைவத் திருவிழாக்களும் கொண்டாடப்படுகின்றன. இக்கோயில் காஞ்சி காமகோடி சங்கரமடத்தின் ஆதரவில் செயல்படுத்தப்படுகின்றது.

காஞ்சிபுரம்

# அஷ்டபுஜசுவாமி கோயில்

சின்ன காஞ்சிபுரத்தில் திருக்கச்சி நம்பிகள் வீதியில் 2 ஏக்கர் நிலப்பரப்பளவில் மேற்கு நோக்கிய சந்நிதியாய் அமைந்திருப்பது அஷ்டபுஜசுவாமி திருக்கோயிலாகும்.

அஷ்டபுஜம் என்பது திருமாலின் எட்டுத் தோள்களைக் குறிக்கிறது. நாராயணனின்மங்களத்திருவுருவத்தை வழிபட எண்ணிய பிரமதேவர் காஞ்சியம்பதி எழுந்தருளி, பெருமாளை எண்ணி அசுவமேதயாகம் செய்தார். அப்போது சரசுவதியை அவர்தன்னுடன் அமர்த்திக் கொள்ளவில்லை. இக்காரணமாகச் சரசுவதி சீற்றம் கொண்டு யாகத்திற்கு இடையூறுகள் விளைவிக்குமாறு அசுரர்கள் பலரை ஏவ, அவர்கள் அனைவரையும் நாராயணன் அழித்தார். ஆத்திரமடைந்த சரசுவதி கொடிய சரபமொன்றை, ஏவ, பெருமாள் எட்டுத் திருக்கரங்களுடன் தோன்றி அதனை அழித்துப் பின்னர் எதிர்த்து வந்த காளியை அடக்கி அஷ்டபுஜசுவாமி வடிவில் அவ்வேள்வியைக் காத்தார். தான் தொடங்கிய வேள்வி நன்கு முடிவடைந்த

பின்னர்த்தனக்கு நேர்ந்த இடையூகளைக் களைத்தெறிந்தபெருமான்எண்கரத்துடன் அருள்புரியுமாறு பிரமன் வேண்ட நாராயணன் காஞ்சியில் அஷ்டபுஜனாக எழுந்தருளியுள்ளார்.

இக்கோயிலின் வெளிப்பிராகாத்தில் பேயாழ்வார் சந்நிதி, கருடாழ்வார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி, ஆஞ்சநேயர் சந்நிதி ஆகிய நான்கு சந்நிதிகள் உள்ளன. பிராகாரத்தின் வடகிழக்குக் கோடியில் மேற்கு நோக்கிய சந்நிதியாக இருப்பது பேயாழ்வார் சந்நிதியாகும். மூலவர் சந்நிதியை நோக்கியவாறு கோயிலுக்கு வெளியே கொடிமரத்திற்கு முன்புறம் மிகச்சிறிய சந்நிதியில் கருடாழ்வார் எழுந்தருளியுள்ளார். இதற்கருகிலேயே அமைந்திருக்கும் கோயிற்கிணற்றினை அடுத்துத்தனிச்சந்நிதியாக அமைந்துருப்பது கிழக்கு முகமாக அமைக்கப்பட்டிருக்கும் ஆண்டாள் சந்நிதியாகும். இதற்கு விமானம் ஒன்றுஇருப்பது குறிப்பிடத்தக்கது. ஆஞ்சநேயர் சந்நிதி அளவில் மிகச் சிறியது. `இது கோயில் வாயிலுக்கு மேற்குப் புறத்தில் தெற்கு நோக்கியவாறு அமைந்திருக்கின்றது. இந்த நான்கு . சந்நிதிகளிலும் உள்ள மூர்த்தங்கள் சிலைகள் ஆகும்.இக்கோயிலுக்குள் மூலவர் சந்நிதி, அதனருகில் உற்சவ மூர்த்திகளின் சந்நிதி, தாயார்சந்நிதி, பூவராகசுவாமி சந்நிதி ஆகிய சந்நிதிகள் உள்ளன.

கோயிலின் உட்புறத்தில் வலப்புறத்தில் அமைந்திருப்பது தாயார் சந்நிதியாகும் தாயாரின் திருநாமம் புஷ்பவல்லி. இச்சந்நிதியைச் சுற்றி வலம் வருவதற்குத் தகுந்தவாறு சிறிய பிராகாரம் அமைந்திருக்கிறது. இச்சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இத் திருக்கோயிலுக்கு வரும் அன்பர்கள் வெளிப்பிராகாரத்தை வலம் வரும்போதே தாயாரையும் வழிபடஇயலுமாறு இங்குக்கிழக்கு நோக்கியவாசல் ஒன்றும் உள்ளது. தாயார் சந்நிதி கருவறையுடனும் உள் மண்டபத்துடனும் இருக்கிறது. இங்குப் புஷ்பவல்லி தாயார் அமர்ந்த நிலையில் இருக்கிறார். இச்சந்நிதியின் மீது விமானம் அமைக்கப்பட்டிருக்கிறது. தாயார் சந்நிதி தெற்கே வடக்கு நோக்கியவாறு இருக்கும் தனிச்சந்நிதி பூவராகசாமி சந்நிதியாகும். இச்சந்நிதியில்வராகமூர்த்தியாகக் காட்சியளிக்கும்பெருமாள் தமது இடப்புறத்துத்தொடையில் பூதேவியை அணைத்துக் கொண்டு ஆதிசேடன் மீது அரிய திருவுருவம் கொண்டுள்ளார். மூலவர் சந்நிதியானது கோயிலின் முன்புற வாயிலுக்கு நேராக மேற்கு நோக்கியவாறு உள்ளது. இச்சந்நிதியில் மூலவர் தவிர மற்ற உற்சவ மூர்த்திகளும், ஆழ்வார்களும் உள்ளார்கள்.

மூலவர் அஷ்டபுஜப் பெருமாள் நின்ற கோலத்தில் எட்டுக் கரங்களுடன் காட்சியளிக்கிறார். சக்கரம், வில், சங்கு, கேடயம், சுதை, பானம், கமலம், கத்தி ஆகிய எட்டு ஆயுதங்களையும் தாங்கி நிற்கும் பெருமாளின் சிலை குறிப்பிடத்தக்க அழகு படைத்துள்ளது. மூலவர் சந்நிதிக்கருகில் முன்புறத்தில் அஷ்டபுஜ நரசிம்மர், சீதேவி, பூதேவி, ஆண்டாள், அஷ்டபுஜப்பெருமாள், கண்ணன், கருடன் மீது கஜேந்திரவரதர், சக்கரத்தாழ்வார் ஆகியோர் உற்சவ மூர்த்திகள் உள்ளார்கள். உற்சவருக்கு நான்கு புஜங்கள் உள்ளன. கதையும், வேலும் உண்டு.

இச்சந்நிதிகளுக்குள்ளேயே அன்பர்கள் வழிபடுவதற்கேற்றவாறு இடைவெளியுடன் கூடிய சுற்று உள்ளது. வலப்புறத்தில் உற்சவ மூர்த்திகளின் சந்நிதி உள்ளது. இதில் பன்னிரு ஆழ்வார்களும் உற்சவ மூர்த்திகளாக இருக்கின்றனர். இவர்கள் தவிர ஆளவந்தார், திருக்கச்சி நம்பிகள், இராமாநுசர், பிள்ளை லோகாச்சாரியார், மணவாளமாமுனிகள் ஆகிய ஆச்சாரியர்களின் திருவுலாத் திருவுருவங்கள் உள்ளன. மூலவர் சந்நிதியில் கருவறை மீது விமானம் உள்ளது. கோயிலுக்கு வெளியே 8 மீட்டர் ஆழம் கொண்ட பெரிய திருக்குளம் ஒன்று உள்ளது. இத்திருக்குளத்தின் கிழக்குக்கரையினையொட்டியே கோயிலுக்குள்ளே செல்வதற்கான வழி உள்ளது. இத்திருக்குளத்திற்குக் கஜேந்திர புஷ்கரணி என்பது பெயர். இக்குளத்தில் பத்தொன்பது படிக்கட்டுகள் சீராக அமைக்கப்பட்டுள்ளன. இத்திருக்குளத்தைக் கடந்துதான் கோயிலினுள் நுழைவது இயலும். ஆனால் தற்போது இக்குளத்தின் தண்ணீர் சிறிதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலில் ஒரே கோபுரம் மட்டும் உள்ளது. இராஜகோபுரம் என்ற பெயரில் வடக்கு நோக்கியவாறுள்ள இக்கோபுரம் வடக்குபுற மதில் சுவருடன் இணைந்து உள்ளது. இதுவே இக்கோயிலுக்குள்ளே புகுவதற்கேற்றவாறு அமைந்திருக்கும் நுழைவாயிலாகும். இது 20 மீட்டர் உயரம் கொண்டதாகும். மூன்று தளங்கள் கொண்டதாகவும், ஐந்து கலசங்களைச் சிகரத்தில் கொண்டதாகவும் அமைந்திருக்கிறது. இக்கோபுரத்தின் வாயிலின் அகலம் 3 மீட்டர், நீளம் 8 மீட்டர். இதன் வாயிலின் நிலை கல்லாலும் அதற்கு மேல் சுண்ணாம்பாலும், செங்கற்களாலும் கட்டப்பட்டதாகும்.

இக்கோபுரம் தவிர, மூலவர் சந்நிதி, தாயார் சந்நிதி, ஆண்டாள்சந்நிதி ஆகிய சந்நிதிகளுக்கு விமானங்கள் உள்ளன. இக்கோயிலில் ஒரே ஒரு பிராகாரம் மட்டுமே உள்ளது. இப்பிராகாரத்தைத்தவிர இக்கோயிலுக்குள் தாயார் சந்நிதியைச் சுற்றிப் பிராகாரம் உள்ளது. வெளிப்பிராகாரத்தில்தான் விழாக்காலங்களில் உற்சவ மூர்த்திகளின் திருவுலா நடைபெறுகிறது. இக்கோயிலில் மூன்று சிறிய மண்டபங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு பிராகாரத்திலேயே உள்ளன. பேயாழ்வார் சந்நிதிக்கு முன்புறம் 3மீட்டர்சதுரப்பரப்பில் நான்குகால்மண்டபம் உள்ளது. பல்லாண்டுகளுக்கு முன்பு விழாக்காலங்களில் இம்மண்டபத்தில் பெருமாளும் தாயாரும் கொலுவிருக்கச் செய்து சிறப்பு ஆராதனை நடத்தி வந்தார்கள் எனக் கூறுகின்றனர்.

கொடிமரத்திற்குத் தெற்கே புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் மண்டபம் 4 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்டது. இந்த மண்டபத்தில், கொடியேற்று நாளின் போது பெருமாள் எழுந்தருள்வார். இம்மண்டபத்திற்குச் சுக்கிரவார மண்டபம் என்ற மற்ற பெயரும் உண்டு. இந்த மண்டபங்களைத் தவிரக் கோயிலுக்குள் மூலவர் சந்நிதிக்கு முன்புறமுள்ள மகாமண்டபம் மிகப் பழமையானதாகும். இம்மண்டபத்தில் 17 தூண்கள் உள்ளன. இது தாயார் சந்நிதி முன்புறம் வரை பரந்த அளவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் இம்மண்டபத்தின் நீள அகலங்கள் ஒழுங்கற்று அமைந்துள்ளன. இருப்பினும் இது $18\frac{1}{2}$ மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும்

கொண்டது எனக் கூறலாம். பேயாழ்வார் சந்நிதிக்குத் தென்புறம் கிழக்கு மதிலுடன் இணைந்த நீண்ட பகுதி மடைப்பள்ளியாக உருவாக்கப்பட்டுள்ளது.

பழமையான இக்கோயிலின் நந்தவனம் முன்பு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இருப்பினும் ஆண்டாள் சந்நிதிக்கருகில் பூச்செடிகள் சில வளர்க்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான வைணவத் தலங்களைப் போலவே இத்திருத்தலத்திலும் பஞ்சராத்திர ஆகமமே இங்கு நடைபெறும் அனைத்துப் பூசைகளுக்கும் திருவிழாச்சடங்குகளுக்கும் அடிப்படையாக உள்ளது. இக்கோயிலில்காலை மாலை ஆகிய இருவேளைகளில் பூசைகள் நடத்தப்படுகின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இத்திருத்தலத்தில் பிரமோற்சவம் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. தற்போது அவ்விழா நடைபெறுவதில்லை, ஆயினும் சிறுசிறு திருவிழாக்கள் ஆண்டு முழுவதும் நடைபெற்று வருகின்றன. சித்திரை மாதத்தில் உரோகினி நட்சத்திரத்தில் பெருமாள் அவதாரத் திருவிழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. அப்பொழுது பெருமாள் உற்சவ மூர்த்தி புறப்பாடு கோயிலுக்கு வெளியில் வீதிகளில் நடைபெறுகிறது. இதே மாதத்தில் வராக ஜெயந்தி என்ற ஒரு நாள் திருவிழாவும், இராமநவமி என்னும் மற்றொரு திருவிழாவும் கொண்டாடப்படுகின்றன. அப்பொழுது மூர்த்திகளுக்குத் திருமஞ்சனங்கள் நடைபெறுகின்றன. ஆடி மாதத்தில் ஆண்டாளுக்கும் பெருமாளுக்கும் நடைபெறும் திருக்கல்யாண நிகழ்ச்சியும், புரட்டாசி மாதத்தில் தாயாருக்கு (புஷ்பவல்லி தாயார்) இலட்சார்ச்சனையும் கார்த்திகை தீபத்திருவிழாவும் பங்குனி மாதத்தில் புஷ்பவல்லி தாயாருக்கும் பெருமாளுக்கும் புஷ்பவல்லி தாயார் சந்நிதியில் நடைபெறும் திருக்கல்யாண நிகழ்ச்சியும் சிறப்பான திருவிழாக்களாகும். இவை தவிர மார்கழிமாதம் முழுமைக்கும் இக்கோயிலில் திருப்பாவையிலிருந்து பாடல்கள் ஒலிக்கும். மேலும் வைகுண்ட ஏகாதசி நாளில் சொர்க்க வாயில் திறக்கும் சிறப்பு இக்கோயிலுக்குண்டு. அவ்வாறு திறக்கப்படும்போது சுவாமி புறப்பாடு நடப்பது வழக்கம். இத்தகைய சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி திருவரங்கத்திலும் காஞ்சி அஷ்டபுஜப்பெருமாள் கோயிலில் மட்டுமே சிறப்பாக நடக்கும் திருவிழா எனக் கோயில் பட்டர் தெரிவிக்கிறார்,

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரால் இக்கோயிலுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களால் இக்கோயிலின் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வறங்காவலர் குழு ஒவ்வொரு தடவையும் மாறிமாறி தேர்ந்தெடுக்கப்படுகிறது.

பேயாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்விக்கப்பெற்ற பெருமையுடைத்தாயினும் நிதி நிலைமையில் பின்தங்கியகோயிலாக இது உள்ளது. சென்னைக்கருகில் பூந்தமல்லியையடுத்து அமைந்திருக்கும் திருமழிசை என்ற கிராமத்திலிருந்து முறையாக வரவேண்டிய வருமானம் இக்கோயிலுக்கு வருவதில்லை. இத்திருக்கோயிலைச் சுற்றி இங்கொன்றும் அங்கொன்றுமாக இக்கோயிலுக்குச் சொந்தமாக 10 மனைகள் உள்ளன. இவற்றிலிருந்து ஆண்டுக்கு 6000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது இத்திருக்கோயிலில் இருக்கும் நகைகளின்

மொத்த மதிப்பு 5,000 ரூபாய்என்று தெரிவிக்கிறார்கள். இவை தவிரபணமாக 40,000 ரூபாய் இக்கோயிலின் பெயரில் வங்கியில் இருக்கிறது. தற்போது இக்கோயிலுக்குரிய நிலையான அறக்கட்டளைகள் எவையுமில்லை. இதற்கு முன்பு பத்து ஏழைகளுக்கு நாள்தோறும் உணவு அளிப்பதற்கெனவே அப்பாசாமி அறக்கட்டளை என்ற ஓர் அறக்கட்டளை இருந்தது என்பர். ஆனால் சென்ற இரண்டு ஆண்டுகளாக இவ்வறச்செயல் நடத்தப்படுவதில்லை என்பது தெரிவிக்கப்படுகின்றது. வங்கியிலிருந்து வட்டியாக வரும் பணமும் வழிபடும் இறையன்பர்கள் தரும் காணிக்கைகளுமே, இக்கோயிலின் நாள் பூசைக்கும் ஆண்டு முழுமையும் நடக்கும் திருவிழாக்களுக்கும் அருச்சகர்களின் ஊதியத்திற்கும் பயன்படுகின்றன.

இக்கோயிலைப் பற்றிக் கூறும் நூல்கள் :-

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - பெரிய திருமொழி 2-8
2. பெரிய திருமடல் - 1-27
3. மூன்றாம் திருவந்தாதி (பேயாழ்வார் - 99)

காஞ்சிபுரம்

# ஆதிபீட காளிகாம்பாள் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் குமரகோட்டத்திற்கு வடக்கில் மதிற்சுவரையொட்டிக் கிழக்கு நோக்கியவாறு ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரத்தின் காவல் தெய்வமாம் காளியின் உறைவிடம் இதுவாகும். காஞ்சி சாக்த பீடத்தின் தலைமையிடமாகத் திகழ்கிறது கொடும் காளியாகத் திகழ்ந்த இக்காளியை ஆதிசங்கரர் சாந்தமாக்கினார் என்பர். சாக்த பீடங்கள் வளர்ந்த நிலையில் கிழக்கு நோக்கியவாறு அம்பிகை அமர்ந்துள்ளாள். இதே நிலையில் இக்கோயில் காளியும் கிழக்கு நோக்கியுள்ளாள்.

சர்வதீர்த்தம் இதன் தீர்த்தமாகும்.

வடக்கு வாயிலின் வழியாக உட்சென்று மீண்டும் கிழக்கு நுழைவாயில் வழியாக உட்பிராகாத்தினை அடைந்தால், எதிரில் மேடைமீதுவிநாயகப் பெருமான் திருவுருவம் காணலாம். மற்றும் ஒரு சிவலிங்கத்திலிருந்து சக்திவெளிப்படும் சிவசக்திலிங்கம், முருகன், வள்ளி தெய்வயானை ஆகியோரையும் காணலாம்

பிராகாரத்தை வலம் வரும் போது வடமேற்கு முனையில் எட்டுக்கரங்களுடன் ஒரு மீட்டர் உயரமுள்ள நிசும்பசூதனி என்கிற காளியும் வடகிழக்கில் சாமுண்டியும் அடுத்த முனையில் வீரலட்சுமியும் உள்ளனர். தெற்குவாயில் வழியாக உள்செல்லும் போது எதிர்ப்படுவது மகாமண்டபமாகும். இதன் வடக்கில் தெற்கு நோக்கியமாறு காளியம்பாள் உற்சவத்திருமேனி நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வடிவம் சீரிய அழகுவாய்ந்தது. இதன் இருபுறமும் சரசுவதி, இலட்சுமி ஆகியோர் இரு கரங்களுடன் உள்ளனர். விநாயகர், முருகன் ஆகியோர் உலாத்திருமேனிகளும இங்குள்ளன. இச்சந்நிதிக்குக் கிழக்கில் வயிரவரும் சூரியனும் உள்ளனர். இம்மகா மண்டபத்தின் மேற்கில் கருவறையுள்ளது. வாயிலின் இருமருங்கும் துவாரபாலகர் உள்ளனர். உள்வாயிலிலும் துவாரபாலகர் உள்ளனர். கருவறையில் 4 திருக்கரங் களுடன் ஆதிபீடகாளியம்மன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். இவள் முன் சிறு வட்ட வடிவில் கல்லாலான வளையமும் அதனுள் யந்திர அமைப்பும் உள்ளன.

மிகப்பெரிய அரசமரம் வடமேற்கு முனையிலுள்ளது. இதன் கீழ் விநாயகர் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

வடக்குவாயிலின் மீது 5 கலசங்களையும் 3 நிலைகளையும் கொண்ட கோபுரமும் உள்வாயிலின் மீது மூன்று நிலைகளையும் 5 கலசங்களையும் கொண்ட கோபுரமும் உள்ளன. கருவறை மீது 3 தளங்களையும் 5 கலசங்களையும் கொண்ட விமானமும் உற்சவர் சந்நிதி மீது 3 நிலைகளையும் 5 கலசங்களையும் கொண்ட விமானமும் உள்ளன.

கிழக்கு முற்றத்தில் 16 தூண்களையுடையதும் 10 மீட்டர் நீள அகலம் கொண்டதுமான அலங்கார மண்டபமும் தெற்குப் பிராகாரத்தில் தரிசனக் கொலு மண்டபமும் அபிடேக மண்டபமும் உள்ளன. கருவறை, உள்மண்டபம், முகப்பு மண்டபம் ஆகியவை கலையழகு வாய்ந்தவை.

கிழக்கு உள்வாயில் சுவரில் ஒட்டகங்களுடன் வணிகர் சிலர் அம்பிகையைவழி படுவதைக் குறிக்கும் சிற்பமுள்ளது. யவனதேசத்தவர் தம் செயல் நிறைவேற வேண்டிக் கொண்டவாறு ஒட்டகம் காணிக்கையாகச் செலுத்தியதை இது குறிக்கிற தென்பர்.

உற்சவர் அம்பிகை சிவபெருமானைப் போலத் தலையில் சடாமகுடம் தரித்துள் ளாள். அதில் நகுவெண்டலை, கொன்றை, கங்கை, சந்திரன் ஆகிய உருவங்கள் உள்ளன. வலக்காதில் தோடும் இடக்காதில் குழையும் உள்ளன. நெற்றியில் சிவப்புக்கல் பொருத்தப்பட்டுள்ளது. நிசும்பசூதனியும், சாமுண்டியும் வீரச்சுவை சொட்டும் சிற்பங்களாக உள்ளன.

குருக்கள் ஒருவர் 4 காலப் பூசைகள் செய்துவருகிறார். வெள்ளிக்கிழமை போன்ற நாள்களில் பெருந்திரளான மக்கள் வழிபடுகின்றனர். நவராத்திரி, ஆடி வெள்ளி, தை வெள்ளி ஆகிய நாள்களில் விழாக்கள் நடைபெறுகின்றன.

இக்கோயிலுக்கு ஏழு ஏக்கர்ப்புன்செய் நிலங்களும் பத்துக்கடைகளும் இரண்டு தோட்டங்களும் உள்ளன. இக்கோயிலில் அறங்காவலர் இருவர் நிருவாகம் செய்து வருகின்றனர். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ 58,000.

காஞ்சிபுரம்

# இரணியேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் சர்வதீர்த்தக் கரையின் மேற்குப்பகுதியில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

அசுரன் இரணியன், தனது குலகுருவாகிய சுக்கிரனை அழைத்து வணங்கி, யாவராலும் பெறுதற்கரிய செல்வத்தை நல்கும் அரசினைத் தான் பெறுதற்காக மேற் கொள்ளத்தக்க விரதத்தைக் குறிப்பிடுதல் வேண்டும் என்று வேண்டினான் சுக்கிரன். யாவர்க்கும் செல்வம், ஆண்மை, புகழ், வாழ்வு, இரக்கம், கல்வி, அழகு, இல்லறம், இனிய சொல்வன்மை முதலிய சிறப்பியல்புகள் சிவபூசையால் கிடைக்கத்தக்கன எனச் சிவபூசையின் பெருமைகளையும் விரித்துக் கூறினார்.

பிறகு இரணியன்தான் சிவபூசையை எந்த இடத்தில் எவ்வாறு செய்வதென வினவச் சுக்கிரன் காஞ்சியின் பெருமைகளையும் எடுத்துக்கூறி, அவ்விடத்தில் திருவைந்தெழுத்தோதி, மலராலாயினும் பச்சிலையிலாயினும் பூசைபுரிதல் வேண்டும் எனத் தெரிவித்தார். இரணியன் உடனே தன் தம்பியாகிய இரணியாட்சன், அவன் புதல்வன் அந்தகாசுரன், தன் மகன் பிரகலாதன், அவர்கள் வழிதோன்றிய மைந்தர்கள், தன் மனைவிமார்கள் முதலியவர்களோடும் காஞ்சிக்கு வந்து சேர்ந்தான். அவர்களெல்லாரும் தங்கள் தங்கள் பெயரால் சிவலிங்கங்கள் நிறுவிப் பூசித்தார்கள். இரணியன் முப்புராரிக் கோட்டத்திற்குக் கிழக்கில் தம் பெயரினால் ஓர் இலிங்கம் நிறுவிப் பூசைசெய்து, மனிதராலும், விலங்குகளாலும் மற்றெவராலும் பூமியிலும் ஆகாயத்திலும் ஆயுதங்களாலும் உலர்ந்த இடத்திலும் ஈரமான இடத் திலும் மற்றும் வீட்டிற்கு வெளியிலும் உள்ளிலும் பகலிலும் இரவிலும் சாவாத வரத்தையும் மூன்றுலகத்தையும் ஆளுதலையும் சிவபெருமான் திருவருளால் பெற்றான். அவன் சுற்றத்தினரும் தாம்தாம் எண்ணிய நலன்களை அடைந் தார்கள். அக்குலங்களோடு இரணியேசம் உத்தமமாக விளங்குகிறது என்பர்.

இக்கோயிலின் கருவறை கிழக்கு நோக்கியவாறுள்ளது. கருவறையில் பதினாறு பட்டைகளையுடைய இலிங்கம் சதுரமான ஆவுடையாரின் மீது அமைந்துள்ளது. உள்மண்டபத்தில் நந்தி தேவர் திருவுருவமும் பலிபீடமும் உள்ளன.

விமானத்தின் சிகரம் வட்டமானது. இரண்டு தளங்களையுடைய விமானத்தின் சிகரத்தின் மேல் ஒரு கலசமுள்ளது. கூடு – பஞ்சரம் – சாலை – பஞ்சரம் – கூடு என்ற அமைப்பில் இவ்விமானம் அமைந்துள்ளது.

முதல்தள சாலைக்கோட்டங்களிலும் தெற்கு முதல் கிழக்கு வரை முறையே தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், உமாமகேசுவரர் ஆகியோர் சிற்பங்கள் காணப்படுகின்றன. நான்கு முனைகளிலும் இடபங்களின் உருவங்கள் உள்ளன. விமானத்தில் அம்மன், வராகர் ஆகியோர் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் காலை ஒருவேளை மட்டும் பூசை நடைபெறுகிறது இக்கோயில் சங்கர பக்தஜன சபையினரால் நிருவகிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம்

# இராமநாதேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் முன்புறமுள்ள 16 கால் மண்டபத்தின் கிழக்கில் வடக்கு நோக்கியவாறு 10 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இராமர் இராவணனைக் கொன்ற பாவம் தீரக் காஞ்சியில் சிவலிங்கம் நிறுவிப் பூசை செய்த கோயில் இது எனத் தெரிய வருகிறது. இக்கோயில் கருவறை உள்மண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டது. கருவறையில் இராமரால் பூசை செய்யப் பெற்ற சிவலிங்கம் இராமநாதேசுவரர் எனும் பெயரில் விளங்குகிறது.

இக்கோயில் கட்டிடம் நல்ல வேலைப்பாடுடன் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கருவறை மீது 3 தள விமானம் ஒற்றைக் கலசத்துடன் சிறப்புற விளங்கி வருகிறது. இக்கோயிலில் பிராமணர் ஒருவர் இரண்டு காலப்பூசை செய்து வருகின்றார் கோயில் முழுவதும் நன்கு திருப்பணி செய்யப் பெற்றுள்ளதால் புதிய பொலிவுடன் விளங்குகின்றது. அனைத்துச் சைவ விழாக்களும் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன.

நிருதமண்டபத்தில் தெற்கில் கணபதியும், வடக்கில் சுப்பிரமணியர், வள்ளி தெய்வயானையுடனும் எழுந்தருளியுள்ளனர் நிருதமண்டபத்தின் வடகிழக்குமுனையில் காணப்படும் அறையுள் ஒரு சுரங்கம் உள்ளது. இது காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலுக்குச் செல்வதாகக் கூறுகின்றனர். இக்கோயிலில் மகாமண்டபத்தின் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் கல்வெட்டுகள் உள்ளன. காஞ்சி காமகோடி சங்கர மடத்தின் ஆதரவில் நிர்வாகம் செயல்படுத்தப்படுகின்றது.

காஞ்சிபுரம்

# இலட்சுமணேசுவரர் கோயில்

இலட்சுமணேசுவரர் கோயில் காஞ்சிபுரம் சர்வதீர்த்தக்கரையின் தெற்கில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இலக்குவன் இங்குச் சிவலிங்கம் நிறுவிப் பூசை செய்தமையால் இக்கோயில் இலட்சுமணேசுவரர் கோயில் என விளங்கி வருகிறது. இக்கோயிலில் நுழைவாயிலுக்கெதிரில் நந்தியின் திருவுருவம் சுவாமி சந்நிதியை நோக்கியவாறுள்ளது. கருவறையின் பதும வடிவிலான ஆவுடையார் மீது இலிங்கம் உள்ளது. கருவறைக்கு முன்புறத்தில் நந்தி உருவம் உள்ளது. கருவறை விமானம் எட்டுப்பட்டைகளையுடைய சிகரத்தையுடையது. சிகரத்தில் எட்டு நாசிகளும் ஒரு கலசமும் உள்ளன. முதற்கோட்டத்தின் தெற்கு முதல் வடக்கு முறையே தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், சிவன் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. நந்திதேவர் திருவுருவங்களும் தேவர்கள், முனிவர்கள், கன்னியர் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன.

நந்திகோபுரத்தின் சிகரம் வட்டமானது. நான்கு நாசிகளும் ஒரு கலசமும் இச்சிகரத்திலுள்ளன. தற்போது காஞ்சிபுரம் இராஜம் செட்டியார் பரம்பரைக்குச் சொந்தமாக இக்கோயில் இருந்து வருகிறது.

காஞ்சிபுரம்

# இறவாதீசுவரர் கோயில்

இக்கோயில் செங்கழுநீர் ஓடை வீதியையும் இருப்புப்பாதை வாயிலையும் இணைக்கும் கம்மாளத்தெருவில் மேற்குச் சிறகில் கிழக்கு நோக்கியவாறு 15 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இறப்பை அஞ்சி முனிவர்கள் சிலர் பிரமதேவரை நோக்கிப் பெருந்தவம் இயற்றினார்கள். அவர்கள் முன் பிரமதேவர் தோன்றி, ''இறப்பினால் வரும் துன்பத்தை நீக்க வேண்டுமெனில், சிவபெருமானைப் பூசிக்க வேண்டும்'' என அறிவுரை வழங்கினார். இவ்வறிவுரைக்கேற்ப முனிவர்கள் காஞ்சியில் சிவலிங்கம் நிறுவி வழிபாடாற்றினார்கள் இவ்வாறு வழிபடத் தொடங்கிய மார்க்கண்டேயர் முதலியோர்கள் தங்கள் வாழ் நாள்களையும் பெருக்கிக்கொள்ள இங்கு வழிபாடாற்றி னார்கள். இக்கோயிலின் கிழக்கு வாயில் வழியாக உள்ளேசெல்வோமெனில், கிழக்கிலுள்ள முற்றத்தில் பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் காணலாம். இந்நந்தி தேவர் சிவலிங்கத்தை நோக்கியிருக்க வேண்டும். ஆனால் இவர் தமது முகத்தை வடக்கு நோக்கிய நிலையில் திருப்பிக் கொண்டுள்ளார். பிராகாரத்தில் தென்மேற்கு முனையில் விநாயகர் சந்நிதியும் வடமேற்கு முனையில் முருகனின் சந்நிதியும் உள்ளன. முருகர் சந்நிதியில் அவர் தம் தேவியாருடன் உள்ளார். தெற்குப்புறமுள்ள முகமண்டபத்தைக் கடந்து உள்வாயிலின் வழியாக உள்ளேசெல்வோமெனில், மகாமண்டபத்தையடுத்துக் கருவறை உள்வாயிலின் இரு அமைந்துள்ள மேடையை அடைகிறோம். இங்கு விநாயகர் திருவுருவங்கள் இரண்டும் நாகர் உருவங்களும் சிவலிங்கமும் உள்ளன. உள்மண்டபச் சுவரில் தென்புறம் ஊர்த்துவதாண்டவரின் புடைப்புச் சிற்பம் உள்ளது. இத்தொகுதியில் எட்டுக்கரங்களையுடைய நடன சிவன், நந்திதேவர், நடமாடும் பூதங்கள், பார்வதி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. எதிரில் பத்துத் தலைகளுடன் கயிலாய மலையைப் பெயர்த்தெடுக்கும் இராவணன், அம்மலைமீது பரமசிவன், பார்வதி ஆகியோர் சுதைச்சிற்பங்கள் உள்ளன. முனிவர்கள், கின்னரர்கள் ஆகியோர் சிற்பங்கள்உள்ளன வாயில்படியில் இருமருங்கும் நெடிய துவாரபாலகர்கள் திருவுரு உள்ளன.

கருவறை உட்புறச்சுவரில் சோமாக்கந்த மூர்த்தியைக் காண்கிறோம். சிவன், உமை, கந்தன், ஆகியோர் உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றனர். சிவபெருமான். முடியின் மீது குடையும், சிவபெருமானை வணங்கும் வகையில்

பிரமதேவரும் திருமாலும் உள்ளனர். கருவறையின் உட்புறத்தே தென் வட புறங்களில் தேவியர் வடிவங்கள் சிதைக்கப்பட்டுப்பூசி மெழுகப்பட்டுள்ளன. கருவறையுள் சதுர வடிவ ஆவுடையாருடன் சிவலிங்கம் உள்ளது. கருவறை வெளிச்சுவர்களில் நான்கு பக்கங்களுள் ஒவ்வொரு பக்கத்திலும் இரு ஓரங்களில் துவாரபாலகர்களைக் காண்கிறோம். தென்புறத் துவார பாலகர்களுக்கிடையில் விநாயகர், குண்டோதரர்கள், தென்முகக்கடவுள், அவரிடம் உபதேசம் பெறுவோர் ஆகியோர் உள்ளார்கள். பின்புறச்சுவரில் தாண்டவ நிலை அண்ணாமலையார், அவர் திருவடியைத் தோண்டிக்காணும் வராகர், பிட்சாடணர், முனி பத்தினிகள் ஆகியோர்களின் சிற்பங்களைக் காண்கிறோம். வடபுறச்சுவரில் எட்டுக்கரங்களுடன் துர்க்கை ஒரு காலைக் கீழேயும் மற்றொரு காலை பாயும் சிங்கத்தின் மீதும் ஊன்றி நிற்கின்றாள். அடுத்துக் கங்காதரர் உமாதேவியோடும் கோடியில் பாம்பின் மீது நடனமாடும் சிற்பங்களும் வடிக்கப்பட்டுள்ளன. நடுவில் அடங்கி ஒடுங்கிக்கிடக்கும் சலந்தரன் உருவமும் சிவன் அமர்ந்த வடிவில் அவனை வெல்வது, சலந்தரன் முடிவு ஆகியவை அழகுறச்செதுக்கப்பட்டுள்ளன. தவிர, இத்தொகுதி வடிவங்களைச் சுற்றிலும் மகரத் தோரணங்கள், பாம்புகள் குறும்பூதங்கள், மான்கள் ஆகியவற்றின் சிற்பங்கள் உள்ளன. கருவறை மீதில் சதுர வடிவிலான 3 நிலை விமானம் உள்ளது. இதன் நான்கு முனைகளிலும் நந்திதேவர் திருவுருவங்கள் உள்ளன. விமானத்தின் அடிப்பகுதி கிரீவம், சிகரம் ஆகிய யாவும் சதுரமாக ஒரு கலசத்துடன் விளங்குகின்றது. பின்புறமுன் சிறுவாயிலின் மீது இரண்டு நிலைகளுடன் கூடிய கோபுரம் 5 கலசங்களுடன் அமைந்துள்ளது.

இங்குக் குருக்கள் ஒருவர் ஒரு வேளைப் பூசை செய்து வருகிறார். இதன் பாதுகாப்பு இந்தியத் தொல்பொருள் துறைப் பாதுகாப்புக்குழுவின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

காஞ்சிபுரம்

# இட்டசித்தீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தையொட்டிக் கச்சபேசுவரர் கோயிலுக்கு உள்ளே அதன் வடகிழக்கு முனையில் தெற்கு நோக்கிய வாயிலும் மேற்கு நோக்கிய கருவறையும் கொண்டு 20 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இதனைப் பற்றிக் காஞ்சிப் புராணம் கூறும் புராண வரலாறு :-

பிருகுமுனிவர் மரபில் வந்த ததீசி முனிவருக்கும் குபன் என்னும் அரசனுக்கும் இடையே நேரிட்ட வாக்குவாதம் காரணமாக மன்னன் முனிவரை வெட்டி வீழ்த்தினான். முனிவர் சுக்கிரனை நினைத்துத் தரையில் உருண்டார். சுக்கிரன் விரைந்து வந்து மந்திரம் ஓதித் ததீசி முனிவரை பிழைப்பித்தார். சுக்கிரன் அறிவுரையின் பேரில் ததீசி முனிவர் காஞ்சியை அடைந்து கச்சபேசுவரர் திருக்கோயிலிலுள்ள தீர்த்தத்தில் மூழ்கி அருகில் உள்ள இட்ட சித்தீசுவரர் கோயிலில் வழிபாடாற்றினார்.

கச்சபேசுவரர் கோயிலுக்குள் சென்று பெரிய குளத்தின் வடக்குக் கரையில் மேற்கு நோக்கி நடந்து பெரிய அரசமரத்தினையொட்டி அமைந்த தெற்கு வாயிலின் வழியாக உள்ளே சென்றால் இத்தலத்தை அடையலாம். திறந்த வெளிச் சுற்றுப் பிராகாராத்தில் மகாமண்டபமும் உள்மண்டபமும் கருவறை மேற்கில் பெரிய முற்றமும் ஆகியவை சிறப்பாக அமைந்துள்ளன. முற்றத்தின் நடுவில் பலிபீடமும் உள்ளது. சிறு மண்டபத்துள் நந்திதேவர் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத்துள் விநாயகரும் கருவறையுள் மேற்கு நோக்கியவாறு ₹ இட்ட சித்தீசுவரரும் எழுந்தருளியுள்ளார்கள்.

கோயிலின் முன்புறமுள்ள பெரிய குளத்தின் வடகரைக்கோயில் இட்ட சித்தீசுவரம் என்றழைக்கப்படுகின்றது. இக்கோயிலின் முகப்பின் மீது பெரிய வளைவுக்குள் இடபாரூடர் சிற்பமும் கருவறை விமானங்களின் மீது இடபம், கோபுரம் தாங்கிகள், விநாயகர், முருகன், தென்முகக்கடவுள் ஆகியோர் சுதைச் சிற்பங்களும் உள்ளன. இக்கோயிலில் கச்சபேசுவரத்தில் பூசை செய்யும் குருக்களே ஒரு காலப் பூசை நடத்தி வருகின்றார். கச்சபேசுவரர் கோயிலின் நிர்வாகத்தினரால் இக்கோயில் நிறைவாகச் செயல்படுத்தப்படுகின்றது.

காஞ்சிபுரம்

# உருத்திர கோடீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் புதுப்பாளையத்தில் கிழக்கு நோக்கியவாறு 10 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கோடி உருத்திரர்கள் சிவலிங்கம் நிறுவி வழிபட்ட இடம் இஃது ஆ ; ன் இறைவன் உருத்திரகோடீசுவரர் என்றழைக்கப் பெறுகின்றார்.

இக்கோயில், கருவறை, உள்மண்டபம், திறந்தவெளிச் சிறு சுற்றுப்பிராகாரம் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

கிழக்கு வாயிலின் வழியாக உள்ளே சென்றதும் சிறுமண்டபத்துள் வீற்றிருக்கும் நந்திதேவரையும் பலிபீடத்தையும் காண்கின்றோம். வலம் வரும் போது தென்மேற்கில் விநாயகர் சந்நிதியும் காணலாம்.

கருவறைக் கோமுகிக்கருகில் சண்டேசுவரர் எழுந்தருளியுள்ளார். கருவறையுள் பெரிய சிவலிங்க வடிவில் உருத்திர கோடீசுவரர் எழுந்தருளியுள்ளார்.

இக்கோயில் வாயிலின் மீது ஒருநிலையும் மூன்று கலசங்களும் கொண்ட சிறு கோபுரமும் நந்திமண்டபத்தின் மீது சிறுஒற்றைக்கலச விமானமும் அமைந்துள்ளன.

இக்கோயிலின் உள்மண்டபத்தில் ஒரு பீடமுள்ளது. இது யோகாசன பீடம் என்றழைக்கப்படுகின்றது. இதன் அடிப்பட்டைப் பகுதியில் சூரியன், சந்திரன், பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோர் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இது வட்டமான வடிவங்கொண்டது. முன்னாளில் இதில் அமர்ந்து பலர் யோகம் பயின்றனர் எனக் கூறப்படுகிறது.

இக்கோயிலில் குருக்கள் இரண்டு காலங்களில் பூசை செய்து வருகின்றார். மகா சிவராத்திரி, ஆடிக்கிருத்திகை, கார்த்திகை விளக்கீடு, கார்த்திகைத் திங்கள் கிழமைகள், திருவாதிரை ஆகிய நாள்களில் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. இக்கோயில் அமைந்துள்ள புதுப்பாளையம் தெரு வாரே இங்கு நிருவாகம் செய்து வருகின்றனர்.

இங்கு வியாச மண்டபமும் இருந்தது. அந்த மண்டபம் அழிந்துவிட்டதால், அங்கிருந்த சிவலிங்கம் ஓர் அரசமரத்தடியில் இருந்து வருகின்றது.

காஞ்சிபுரம்

# உலகளந்த பெருமாள் கோயில்

காஞ்சிபுரத்தில் இக்கோயில் காமாட்சியம்மன் கோயிலுக்குத் தென்கிழக்கில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 4 ஏக்கராகும்.

திருமால் மாவலி சக்கரவர்த்தியிடம் வாமனராக மூன்றடி நிலம் கோர, அம்மூவடி நிலம் தருவதாக மாவலி சக்கரவர்த்தி கூறியபோது, திருமால் விண்ணுற வளர்ந்து ஓரடியில் பூமியை அளந்தார், பிறகு தம் காலை உயர்த்தி வானுலகை ஓரடியில் அளந்தார், மூன்றாவது அடி வைக்க மாவலி சக்கரவர்த்தியிடம் இடம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
வ. எண்: 857
நாள்: 17/5/02
நூலகம்



கோரினார். மாவலி தம் தலையைக் கவிழ்த்துக் காட்டவே, திருமால் தம் திருவடியை அவர் தலைமீது ஊன்றி அவரைப் பாதாள உலகத்திற்கு அழுத்தினார். இவ்வாறு வாமனராக வந்தவர் வானுற ஓங்கி வளர்ந்த வடிவம் எடுத்து உலகை அளந்த நிலையில் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலே உலகளந்த பெருமாள் திருக்கோயிலாகும்.

மேற்கு நோக்கியமைந்துள்ள வாயிலுள் நுழைந்து பிராகாரத்தை வலம்வரும் வழியில் வடமேற்கு முனையில் அமைந்துள்ள மண்டபத்தை ஒட்டிய சந்நிதியில் ஆண்டாள், பன்னிரு ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். இதனையடுத்து நீரகம் என்னும் திவ்வியத் தேசப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். வலம்வந்து தென்பக்கப் பிராகாரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ள கார்வானம் என்னும் திவ்விய தேசப் பெருமானைத் தரிசிக்கின்றோம். அடுத்துக் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள சந்நிதியில் ஆர வல்லி எனப்படும் வேதவல்லி தாயாரை தரிசிக்கின்றோம். இங்குத் தாயார் நான்கு திருக்கரங்களுடன் மேல் திருக்கரங்களில் தாமரை மலர்களையும் கீழ்க்கரங்களில் அபய வரத முத்திரைகளையும் கொண்டு பதுமாசனமிட்டுத் தாமரை மலரில் வீற்றிருக்கின்றார்.

இவரையடுத்து மேற்குப் பிராகாரத்துள் சுவாமியை எதிர்நோக்கியவாறு பலிபீடம், கொடிமரம், ஆகியவையும் கருடர் சந்நிதியும் உள்ளன. இதனையடுத்து உள்ள உட்பிராகாரத்தினுள் வடக்கில் பின்னமாகிவிட்டதால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள திருவாசியுடன் கூடிய பார்த்தசாரதி, ஆஞ்சநேயர் ஆகியோர் சிலைகள் உள்ளன. இவற்றுள் பார்த்தசாரதி சிலை மிகவும் அழகியதாகும். இவர் 1 மீட்டர் உயர வடிவில் இரண்டு கைகளுடன் உள்ளார். இடக்கையை இடுப்பில் வைத்துள்ளார். அதில் சங்கு உள்ளது. வலக்கையை வரத முத்திரையில் பாதத்தைக் காட்டும் முறையில் வைத்துள்ளார். அழகிய கிரீடம் வாகுவளையம் ஆகியவை இவரது திருவுருவத்தை அழகு செய்கின்றன. இதன்பின் வலம்வந்து மேற்கு உள்வாயிலைக் கடந்து மகாமண்டபத்தை அடைகிறோம். இம்மண்டபத்தின் வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கிய ஓர் அறை உள்ளது. இதனுள் விரிந்த படத்துடன் கோலம்கொண்ட உடல் உடைய பாம்பின் 5 அடி உயரமும் அகலமும் கொண்ட புடைப்புச் சிற்பம் உள்ளது. இந்நாக வடிவை வணங்குவோர்க்குப் புத்திர தோடம், நாகதோடம், ஆகியவை நீங்கும்என்பது நம்பிக்கையாகும். உரகம் என்பது பாம்பாகும். ஆதலால் இச்சந்நிதி ஊரகம் என்னும் பெயரில் அமைந்துள்ளது. இதுவும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. இதனையடுத்துக் கருவறையில் ஏறத்தாழ 16 மீட்டர் உயரமும் 13 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் பெருமாள் புடைப்புச் சுதைச்சிற்பமாக எழுந்தருளியுள்ளார்; இரண்டு கைகளையும் இருபுறம் நீட்டியுள்ளார்; இடக்கை இடுப்புக்கு நேராக நீட்டியுள்ளார்; தலையில் கிரீடமும் மார்பில் அணிமணிகளும் இடையில் விசிறி மடிப்புபோல் அமைந்த ஆடையும் உள்ளன. இவ்வடிவத்திற்குத் துணிகள், நகைகள் அணிவிக்கப்படுவதில்லை; சாம்பிராணி தைலம் மேல் பூச்சாக இடப்படுகிறது. முன்னுள்ள மேடையில்

உலகளந்தார், சீதேவி, பூதேவி, உற்சவர், சக்கரத்தாழ்வார், கண்ணன், இலட்சுமி நரசிம்மர், நித்திய உற்சவர் ஆகிய திருமேனிகளும் ஆரவல்லி தாயார், ஆண்டாள் ஆகியோர் உற்சவர்களும் உள்ளார்கள். கோயிலுக்கு எதிரில் அழகியபடிக்கட்டு களுடன் கூடிய புஷ்கரணியுள்ளது. இது பயன்படுத்தப்படும் நிலையிலுள்ளது.

வாயிலின் மீது 3 நிலைகளையுடைய் கோபுரம் 5 கலசங்களைக் கொண்டு விளங்குகின்றது. சுவாமி சந்நிதி மீது நீளவாட்டில் ஒரே தளத்துடன் சாலஹார விமானம் அமைந்துள்ளது. தாயார் சந்நிதி மீது இரண்டு நிலைகளையுடைய விமானம் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு இரண்டு பிராகாரங்கள் உள்ளன. இது கிழமேலாக 100 மீட்டர் நீளமும் தென்வடலாக 80மீட்டர் அகலமும் கொண்டதாகும். வெளிப்பிராகாரம் திறந்தவெளியாக உள்ளது. இது முழுவதும் சிமெண்ட் பூசப்பட்டுள்ளது. உள்பிராகாரம் இரண்டு வரிசைத் தூண்களால் இடையில் தாங்கப் பட்டு அகன்று அமைந்துள்ளது. இதில் எந்தச் சந்நிதியும் இல்லை. இக்கோயிலின் வெளியே வாகனமேற்று மண்டபமும், வடமேற்கு முனையில் உற்சவ மண்டபமும், கருடன் சந்நிதிக்கு முன் முகமண்டபமும், பிராகார மண்டபமும், அர்த்த மண்டபமும், தாயார் சந்நிதி முன் மகாமண்டபமும், அர்த்தமண்டபமும் உள்ளன.

நாள்தோறும் இருவேளைகளில் பூசை நிகழ்கிறது. தென்கலை மரபில் பஞ்ச ராத்திர மரபுப்படி பூசை நிகழ்கிறது. மாதந்தோறும் திருவோணம், ஏகாதசி, பௌர்ணமி ஆகிய நாள்களில் விழா நடைபெறுகின்றது. ஆண்டு விழாக்களாக இராமநவமி, வைகுண்ட ஏகாதசி, அவதார தினமாகத் திருவோணம், ஆகிய நாள்களில் திருமஞ்சனமும் சிறப்புப் பூசைகளும் நடைபெறுகின்றன. பரம்பரை அருச்சகர் பூசை புரிகின்றார். வைணவப் பிராமணர் பரம்பரை அறங்காவலராக விளங்கி நிர்வாகம் செய்து வருகின்றார். கோயிலுக்குக் கருடன், ஆஞ்சநேயர், சூரிய பிரபை, அன்னம் ஆகிய வாகனங்கள் உள்ளன. நடுத்தர அளவுள்ள ஒரு திருத் தேரும் உள்ளது. உளகளந்த பெருமாள் வடிவங்களில் இது மிகவும் பெரியது. வழக்கமாக அமைக்கப்பெறும் சிற்பங்களிலிருந்து இதுமாறுபட்டுள்ளது. வழக்கமாக நான்கு கரங்களுடன் காட்டப்பெறும் வடிவம் இங்கு இரண்டே கைகளுடன் உள்ளது கவனிக்கத்தக்கது.

இக்கோயிலுக்கு நேரெதிரில் சிறிய ஆஞ்சநேயர் கோயில் உள்ளது. இங்கு இறைவனை நோக்கியவண்ணம் நான்கு கரங்களுடன் மேல் இரண்டு கரங்களில் சங்கு, சக்கரம் ஆகியவற்றை ஏந்தியும், கீழிரண்டு கைகளைக் கூப்பி வணங்கும் வடிவிலும் ஆஞ்சநேயர் உள்ளார். இக்கோயில் தரைமட்டத்திலிருந்து சிறிது தாழ்ந்து உள்ளது. ஏறத்தாழ 6 படிகள் இறங்கியே கோயில் பிராகாரத்தை அடைய முடிகிறது.

முதலாம் குலோத்துங்கச் சோழன் (1070-1120) தனது 40 ஆம் ஆட்சியாண்டில் தன் தேவியர் திரிபுவனமுடையாள், சோழகுலவல்லி ஆகியோருடன் இக்கோயிலில்

வழிபாடாற்றி நன்கொடைகள் அளித்தாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.[1]

இங்குக் கருவறைச்சுவரில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஊரகப் பெருமாள் என்று பெயர் பெற்றிருப்பதால் அந்நாளில் இக்கோயில் ஊரின் மையத்தில் அமைந்திருக்கவேண்டும் என்பது சிலர்கருத்தாகும். இக்கோயில் "ஊரகம் உலகளந்த ஆழ்வாருக்கு" எனக் கல்வெட்டுகள் இப்பெருமானைப் பேசும். ஆனால் பெரிய உருவுடைய பெருமாள் என்பதால் பேரகம் என்னும் பெயரும் வழங்கிவந்தது. திருமங்கை மன்னர் இதனை மங்களாசாசனம் செய்துள்ளார். இந்து சமய அற நிலையத்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூபாய் 43,000/- ஆகும்.

1. 22/1990 ; 18/1893

## காஞ்சிபுரம்

# ஏகாம்பரநாதர் கோயில்

கச்சியேகம்பர், கச்சியேகம்பநாதர், கச்சிஏகாம்பரநாதர், ஏகாம்பரநாதர் என்னும் பெயர்களில் விளங்கும் சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயில் ஏகாம்பர நாதர் திருக்கோயிலாகும்.

காஞ்சிபுரம் சென்னைக்குத் தென்மேற்கில் 75 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. நகராட்சிப் பகுதி 40 பிரிவு 33 நகர் அளவை 2796 எண் புலத்தில் 23 ஏக்கர், 12128 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ளது.

காஞ்சியின் மேற்குப் பகுதி பெரிய காஞ்சி, சிவகாஞ்சி ஆகிய பெயர்களைக் கொண்டுள்ளது. இதன் கிழக்குப் பகுதி சின்ன காஞ்சி, விஷ்ணு காஞ்சி ஆகிய பெயர்களில் விளங்குகிறது. பெரிய காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோயில் இருப்பது காரணமாக அதற்குச் சிவகாஞ்சி என்னும் பெயரும், சின்ன காஞ்சியில் வரதராசப் பெருமாள் கோயில் இருப்பது காரணமாக அதற்கு விஷ்ணு காஞ்சி என்னும் பெயரும் அமைந்தன. சங்க காலத்தில் காஞ்சிபுரம் கச்சிப்பேடு என விளங்கி வந்தது .கச்சிப் பேட்டு நன்னாகையார் சங்க காலப் புலவர்களில் ஒருவர் ஆவார். மணிமேகலைக் காப்பியத்தின் கச்சி மாநகர் புக்ககாதை, சமணக்கணக்கர் தந்திரம் கேட்ட காதை, முதலியவற்றுள் இந்நகரின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. சங்க காலத்திற்குப் பின்னரும் பல்லவர் காலத்தில் இது சிறந்த தலைநகராக விளங்கிற்று. "கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர்" எனத் திருநாவுக்கரசு நாயனார் இந்நகரைப் புகழ்ந்து உள்ளார்.[1]

1. சைவத் திருமுறை 4 – 13 – 7.

காஞ்சிபுரத்திற்குத் தனிச்சிறப்புகள் உள்ளன. முக்தி நகரங்கள் எனப் பாராட்டப்பெறும் அயோத்தி, மதுரா, துவாரகை, காஞ்சி, காசி, அவந்தி, மாயா ஆகிய ஏழனுள் காஞ்சி ஒன்றே தென்னாட்டில் உள்ளதாகும். இவற்றுள் அயோத்தி, மதுரா, துவாரகை ஆகிய இம்மூன்றும் வைணவத் தலங்கள்; காசி, அவந்தி, மாயா ஆகிய இம்மூன்றும் சிவத்தலங்கள். காஞ்சியில் மட்டுமே சிவத்தலங்களும், வைணவத் தலங்களும் பல ஆங்காங்கு உள்ளன.

''ஆம்ரம்'' என்பது மாமரம். ஏக + ஆம்ரம் என்னும் சொற்றொடர் ஏகாம்பரம் என ஆயிற்று. இதற்கு ஒற்றை மாமரம் என்பது பொருள் ஆகும். இச்சொற்றொடரே பின்னர் 'ஏகம்பம்' என்றும், 'கம்பம்' என்றும் மருவிற்று. சிவபெருமான் ஒற்றை மாமரத்தின் அடியில் பேரின்பச்சுடர் கொண்ட சிவலிங்கத் திருமேனியராகத் தம் பெருமாட்டியுடன் திகழ்ந்தார் இதன் காரணமாக அவருக்கு ஏகாம்பரநாதர் என்னும் பெயர் அமைந்தது. அப்பெருமாட்டி 'க' என்பதன் சொற்பொருளாகிய பிரமனையும 'அ' என்னும் சொற்பொருளாகிய திருமாலையும் 'ம' என்னும் சொற்பொருளாகிய உருத்திரனையும் தம் திருவிழிகளின்றும் தோற்றுவித்தார். ஆதலால், அவ்வம்மை யாருக்குக் காமக்கன்னி என்னும் பெயர் பொலிவுற்றது. 'காமாட்சி' என்னும் பெயருக்கு 'அன்பர்கள் விரும்புவனவற்றை அளிப்பவரும்' 'உயிர்களின் நன்மையைக் கருதி வசீகரத் தன்மையுடைய் விழிகளுடையவருமாக விளங்குபவர்' என்னும பொருள் அமைகிறது. அட்சி கண் என்பதனைக் குறிக்கும். (க + அ + ம + அட்சி - காமாட்சி)[1 அ]

கயிலை மலையில் முன்பு சிவபெருமான் வீற்றிருந்தபோது, ஒரு நாள் உமையம்மை அவருக்குப் பின்புறமாக எய்தி, அவருடைய கண்களைத் தம்முடைய இரு கைகளாலும் சிறிது நேரம் மறைக்க, அப்போது உயிர்கள் யாவும் இருள் சூழ்ந்த நிலையை அடைந்தன. இதன் விளைவாக அறங்கள் ஒழிந்தன. இவ்வகையில் பாவங்கள் பெருகிக் கருநிற வடிவு கொண்டு தேவியாரின் ஒளிமிக்க திருமேனியைக் கரிய நிறமாக்கின. இப்பாவங்கள், நீங்கிட அம்மையார் சிவபெருமான் ஆணைக்கிணங்கக் கயிலையிலிருந்து காஞ்சிக்கு வந்து அங்குக்கம்பை ஆற்றங்கரையில் திருவருளால் முளைத்தெழுந்திருந்த மணல் சிவலிங்கத்தைக் கண்டு அதனை வழிபட்டார். அப்போது, வெள்ளம் பெருக்கெடுத்தது அவ்வெள்ளப் பெருக்கு எங்கே தாம் வழிபடும் சிவலிங்கத்தை ஈர்த்துச் சென்று விடுமோ என அம்மையார் பேரச்சம் கொண்டு, நடுக்கம் எய்தி, அச்சிவலிங்கத்தை அணைத்துக் கொண்டார். அப்போது, சிவலிங்க வடிவினராகிய இறைவன் திருமேனி குழைந்து, தேவியாரின் வளைத்தழும்பும் முலைத்தழும்பும் தமது திருமேனியில் தோன்றுமாறு காட்சியளித்தார். இக்காட்சியை விளக்க முற்பட்ட பட்டினத்துப் பிள்ளையார், சிவபெருமான் ''தனமிட்டுத் தழுவத் தழும்புற்றவர்'' என ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.[1 ஆ]

---

1 அ காஞ்சிப் புராணம் - திருவேகம்பப்படலம்-23 சிவஞானமுனிவர்.

1 ஆ பதினொன்றாம் திருமுறை - திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி - 11.

இப்பாடல் பதினொன்றாம் சைவத்திருமுறையில் திருவேகம்பஉடையார் திருவந்தாதியில் உள்ளது. இவ்வகையில் ''தழுவக் குழைந்த நாதர்'' என்னும் பெயரையும் இவர் பெறுவாராயினர். அம்மையாரும் ஏலவார் குழலி என்னும் பெயரில் விளங்குவராயினர். அம்மையார் மனம் கமழும் கூந்தலை உடையவர் என்பதை இப்பெயர் குறிக்கிறது. இவ்விளக்கம் சிவஞானமுனிவர் இயற்றியுள்ள காஞ்சிப்புராணத்தில் விரிவாகக் காணலாம். 2) இந்திருக்கோயிலின் கருவறையில் எழுந்தருளியுள்ள மூல இலங்கம் மணல் இலிங்கமாகக் காட்சி அளிக்கிறது.

இது காரணமாக இது பிருதிவிதத்துவத்தலமாகக் கருதப்படுகிறது இந்த இலிங்கத்திற்கு வெள்ளிக்கவசம் இடப்பட்டிருக்கிறது இலிங்கத்தின் பின்புறம் சிவபெருமான் சோமாஸ்கந்த வடிவில் அபயகரத்துடன் எழுந்தருளியிருக்கிறார். இலிங்கத்திற்குப் புனுகுச்சட்டமே குறித்த காலங்களில் சாத்தப்படுகின்றது. வழிபடுவோர்கள், வழிபடுவதற்கு இயலுமாறு இக்கருவறையின் முன்பகுதி அளவில் சதுரப் பரப்பாக உள்ளது. இக்கருவறைக்கு வடக்கிலும், தெற்கிலும் உள்ள வழிகள் முதல் பிரகாரத்தை அடைகின்றன.

கருவறையில் நுழைவாயிலின் இடப்புறத்தில் திருக்குறிப்புத் தொண்டர், சாக்கிய நாயனார், ஐயடிகள் காடவர் கோன் ஆகிய நாயன்மார் மூவர் திருவுருவங்கள் மூலவரை நேர் நின்று வணங்கும் நிலையில் உள்ளன. இம்மூவரும் ஏகாம்பரநாதரை வழிபட்டு இங்கு முக்தி நிலை எய்தினார்கள் என்பதைப் பெரியபுராணம் எடுத்துக் காட்டுகின்றது. இச்சந்நிதிக்குச் சற்று அடுத்துப் பாலச்சந்திர விநாயகர் திருவுருவம், படிகலிங்கமூர்த்தி இலிங்கம், பிரளயம்காத்தநாதர் இலிங்கம், ஆகியவற்றைக் காணலாம். இங்கே கிழமேல் பிராகாரத்தின் தொடக்கத்திலிருந்து நால்வர் சந்நிதி, அகத்தீசுவரர் சிவலிங்கம், பாலவிநாயகர் திருவுருவம் ஆகியவற்றைக் காணலாம். இத்திருவுருவங்களைத் தொடர்ந்து அறுபத்துமூவர் திருவுருவங்கள் நிலைநாட்டப் பெற்றுள்ளன.

அறுபத்து மூவர் திருவுருவங்களுக்கு எதிர்ப்புறத்தில் பிரமதேவன் வழிபட்ட வெள்ளக்கம்பர் உள்ளார் 2.அ. இத்திருவுருவங்களைத் தொடர்ந்து மேற்குப் புறத்தின் தொடக்கத்தில் மெய்கண்டதேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய சைவ சமய சந்தான ஆசிரியர் நால்வர் திருவுருவங்கள் உள்ளன. அடுத்துக் காசி விசுவநாதர் இலிங்கமும், இதனைத் தொடர்ந்துள்ளவை சந்தான கணபதி, சௌபாக்கிய கணபதி, சக்தி கணபதி ஆகியோர் திருவுருங்களும் ஆகும். இவற்றை அடுத்துச் சிறிய வடிவில் 108 சிவலிங்கங்கள் உள்ளன. அடுத்து ஏகாந்த முருகர் ,108 சிவலிங்கங்களைக் கொண்ட ஒரே பெரிய சிவலிங்கம் ஆகியோர்களைகாணலாம். இப்பிராகாரத்தின் வடபுறத்தில்மார்க்கண்டேயர்இலிங்கம் மத்தளமாதேசுவரர் இலிங்கம் கள்ளக்கமபர் சிவலிங்கம் ஆகியவை உள்ளன.[2 ஆ]

---

2. காஞ்சிப் புராணம் – தழுவக் குழைந்த படலம் - 381.

2.அ. காஞ்சிப் புராணம் - தழுவக்குழைந்த படலம் - 294

மாயனாகிய திருமால் வழிபட்ட இலிங்கம் இதுவாகும். ஏகாம்பரநாதர் கோயிலில் மத்தளம் இயக்கும் பணி புரிய விரும்பிய திருமால் மத்தள மாதேசர் சிவலிங்க வடிவில் இங்கு இறைவனை வழிபட்டார். கள்ளக்கம்பரை மாயனாகிய திருமால் வழிபட்டுப் பேறு பெற்றார். 2. இ. அடுத்துப் பிட்சாடனர், வயிரவர் உட்பட அறுபத்து மூவர் திருவுலாத் திருவுருவங்கள் உள்ளன. சண்டேசுவர் கோயில் இப் பிராகாரத்தில் வடபுறத்துச் சுவரோடு இணைத்திருக்கிறது. இதே பிராகாரத்தின் கிழக்குப்பகுதியில் வலப்புறத்தில் நல்லகம்பர் மூர்த்திமுதலியோர்களின் திருவுருவங்கள் உள்ளன. நல்லகம்பரை உருத்திரன் வழிபட்டு நற்பேறு பெற்றார். 2. ஈ. அடுத்து நிலாத்துண்டப் பெருமாள் கோயில் உள்ளது.

ஏகாம்பரநாதர் சந்நிதிக்கு வலப் பக்கத்தில் மேற்கு நோக்கியவாறு அமைந்திருப்பது நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதியாகும். இச்சந்நிதியில் திருமால் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். திருமங்கையாழ்வாரால் மங்கள சாசனம் செய்யப் பெற்ற பெருமையுடையது இச்சந்நிதி. திருப்பாற்கடலைக் கடைந்த காலத்துத் தோன்றிய நஞ்சின் விளைவாக வெப்பமுற்ற பெருமாள் திருமேனி, சிவபெருமான் சடைமுடி மூன்றாம் பிறைச் சந்திரனின் தட்பத்தால் குளிர்ச்சியுற்றது என்பர். இதன் காரணமாக இப்பெருமானுக்கு நிலாத்துண்டப் பெருமாள் என்னும் பெயர் அமைவதாயிற்று என்பது மரபு வழிச் செய்தியாகும்.

கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் தென்புறத்தில் பிரளய சக்தி உள்ளது. பிரளய காலத்திலும் அழிவு ஏற்படாதவாறு பாதுகாத்திடும் தெய்வமாக இச்சக்தி கருதப்படுவதால், இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இதே பிராகாரத்தின் தென்மேற்குப் பகுதியில் பஞ்சமுக விநாயகர் சந்நிதி உள்ளது இதில் விநாயகப் பெருமான் ஐந்து திருமுகங்களுடன் எடுப்பாகக் காட்சியளிக்கிறார். இதே பிராகாரத்தின் வடமேற்குப் பகுதியில் 1008 இலிங்கங்கள் ஒரே திருமேனியில் காணலாம். இது மகாலிங்கம் என்னும் பெயரில் விளங்குகிறது. நாள்தோறும் இம்மகாலிங்க மூர்த்தத்திற்குப் பூசைகள் நிறைவேறிய பின்னரே மற்றச் சந்நிதிகளுக்குப் பூசைகள் நடைபெறுகின்றன. இராவணனை அழித்துப் பின்னர் இங்குவந்து 1008 இலிங்கங்கள் அடங்கிய இச்சிவலிங்கத்தை இராமர் வழிபட்டார் என்பது மரபு வழிச்செய்தி ஆகும். இராமர் இங்கு வழிபாடு ஆற்றினார் எனக் காஞ்சிப்புராணமும் கூறுகிறது.

2. பழுதுபார்க்கப்பட்டுத் தற்பொழுது தனியழகோடு விளங்கும் சந்நிதி சபாநாயகர் மண்டபம் என வழங்கப் பெறுகிறது. சுற்றி வலம் வந்து வழிபடுவதற்கேற்ப, இச்சந்நிதியில் உள்ளே சிறு பிராகாரம் ஒன்றும் உள்ளது. நடனம் புரியும் நிலையில் நடராசர் பெருமானும், அருகே சிவகாமி அம்மையும் வழிபடுவதற்குரிய மூர்த்தங்களாக விளங்குகிறார்கள்.

---

2.ஆ. காஞ்சிப் புராணம் – திருவேகம்பப்படலம் – 86, 87

2.இ. காஞ்சிப் புராணம் – திருவேகம்பப்படலம் – 87.

அம்பலவானர் சந்நிதியை வழிபட்டு அன்பர்கள் திரும்புகிற வழியில் தெற்கு நோக்கியவயிரவர்சந்நிதிஉள்ளது, மேலும்இப்பிராகாரத்தில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய இம்மூன்று பக்கங்களில் வரிசையாக 136சிவலிங்கங்கள் உள்ளன. இரண்டாம் பிராகாரத்தில் வடபுறத்து மேடையில் நவக்கிரகங்கள் சந்நிதி அடக்கமான பரப்பில் அமைந்துள்ளது. இது மற்றக் கோயில்களில் காணப்படும் வழக்கமான அமைப்புடன் காணப்படுகிறது.

மாவடிக்கந்தர் சந்நிதியின் மாவடிக்கு வடபுறத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வயானை ஆகியோருடன் மயில்மீதமர்ந்தவாறு அருள்புரியும் நிலையில் உள்ளார். இப்பெருமானுடைய அருள் துணைகொண்டு கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் இயற்றினார். ''காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் மலரடிபோற்றி'' என இப்பெருமானை அவர்கந்தபுராணத்தில் துதிக்கிறார்.[3] ஏலவார் குழலி அம்மையார் தனிச்சந்நிதி மாவடிக் கந்தர் சந்நிதிக்கடுத்து வடபுறத்தில் உள்ளது.

மாவடிச் சந்நிதி இத்திருக்கோயிலின் கருவறைக்கு நேர் பின்புறம் அமைந்து உள்ளது. இம்மாவடி இத்தலத்தின் மிக்க சிறப்புக்குரியதாகும். பழமையானமறையே மாமரமாக நின்றது என்பது மரபு[3அ]. அறுபதுஅடி உயரமும் இருபத்தைந்து அடி சுற்றளவும் கொண்ட இம்மாமரம் இன்னும் செழிப்பான நிலையில் உள்ளது. இம் மாமரத்தின் வயது ஏறக்குறைய 3,500 ஆண்டுகள் எனத் தாவர இயல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இம்மாமரத்தின் நான்கு கிளைகளிலிருந்தும் பழுத்து உதிரும் கனிகளுக்கு நான்கு வகைச் சுவை உண்டு என்பர் அவற்றை உண்டு மகிழ்ந்தவர்கள். இதுவே இக்கோயிலின் தலவிருட்சம் ஆகும். இம்மாமரத்தின் கீழ்ச் சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுருவம் மிகச் சிறப்பானது. இம்மூர்த்தியின் கையில் சின்முத்திரை வடிவம் காட்சி தருகிறது. கீழே பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும் இருப்பதைக் காணலாம். அதற்குக் கீழே பஞ்சாக்கினி மையத்தில் தவஞ் செய்யும் நிலையில் 'காமாட்சி' திருவுருவத்தையும் பக்கத்தில் இலிங்கோற்பவர் காட்சியையும் அதை அடுத்துத் தழுவக் குழைத்த காட்சியையும் காணலாம். மாவடியைச் சுற்றிலும் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமன், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இங்குள்ள மாமரம் வழிவடுவதற்குரியதாய் இருப்பதால் இதனை வலம் வந்து வணங்க இடம் விடப்பட்டுள்ளது. இது திருமணங்கள் நடைபெறுவதற்குரிய புனித இடமாகவும் பயன்படுத்தப்பெற்று வருகிறது. மூன்றாம் பிராகாரத்தின் தென்புற மதிலைச் சார்ந்துள்ள கோபுரத்திற்கு நேர் எதிர்புறத்தில் தென் திசை நோக்கி விநாயகர் சந்நிதி உள்ளது.

---


3. கந்தபுராணம் – சுப்பிரமணியர் காப்பு

3.அ. காஞ்சிப்புராணம் – திருவேகம்பப்படலம் 26


சிதம்பரம் சென்று அங்கு நடராசப் பெருமானின் தாண்டவத்தைக் கண்டு இன்புற்றதிருமால் அங்கே தங்கிவிட விரும்பினார். ஆனால், எல்லாப்பாவங்களையும் போக்கும் ஏகாம்பரநாதர் கோயிலில் முதலில் வழிபடுமாறு சிவபெருமான் திருமாலிடம் தெரிவித்தார். இவ்வறிவுரைக்கேற்ப, அவர்இங்குவந்து சிவபெருமானை வழிபட்டார். இவ்வாறு அவர் வழிபாடாற்றிய புனித இடமே விண்டீச்சரக் கோயிலாகும்.[4] இது மூன்றாம் பிராகாரத்தில் கிழக்கே நோக்கி அங்குள்ள விநாயகர் சந்நிதிக்கு மேற்கே அமைந்துள்ளது. கருடன் செருக்கை அடக்கும் முறையில் அதனை, ஐந்தாம் பிராகார மதில்[4அ] இடபம் தானே தண்டித்தது. அத்தண்டனைத் தாங்க இயலாத கருடன் முறையிட்டதன் பேரில், இடபம் காஞ்சிக்குச் சென்று தம்மை மனித வடிவில் வழிபட வேண்டுமெனச்சிவபெருமான் ஆணை பிறப்பித்தார். இவ்வாணைக் கேற்ப, இடபம் காஞ்சிக்குச் சென்று ஏகாம்பரநாதர் கோயிலின் சிவகங்கை தீர்த்தத் திற்கு மேற்கில் மேற்கு முகம் நோக்குமாறுசிவலிங்கம் அமைத்து வழிபாடு ஆற்றிற்று. இதுவே இடபேச்சரமாகும்.

சிவகங்கைத் தீர்த்த விநாயகர் சிவகங்கைத் தீர்த்தத்தின் கிழக்கே உள்ள முற்றத்தில் மேற்கு நோக்கியவாறு சிறிய சந்நிதியில் எழுந்தருளியுள்ளார். போரில் தம்மை எதிர்த்தவர் வலிமையில் சரிபாதி தன்னையடைய வாலிவரம் பெற்றிருந்தது வாலீசம் ஆகும். கச்சி மயானத்திற்குக் கிழக்கே மேற்குநோக்கியதாய்ச்சித்தர்கள் வழி படத்தோன்றியது வாயுலிங்கம். வாலிதன்இருப்பிடத்திற்குவாயுலிங்கத்தைக்கொண்டு செல்ல முயற்சி செய்த போது, அந்த இலிங்கம் அங்கிருந்து இடம் பெயரவில்லை. அந்நிலையில், வாலியின் வால் அற்று வீழ்ந்தது. அதன் வடு சிவலிங்கத்தின் மேல் பதிந்தது. அப்போது, சிவபெருமான் ''இக்காஞ்சியை விட்டு எப்போதும் நீங்கோம்'' என அருள் செய்தார். இச்சிறப்பினை இந்த வாலீசம் பெற்று உள்ளது[5] பண்டன் என்னும் அசுரன் தேவர் முதலியவர்கள் உடம்பில்கலந்து அவர்களுடைய ஆற்றலை கவர்ந்து அவர்களை மெலிவித்ததால் அவர்களுக்குப் பேரிடர் ஏற்பட்டது. இந்த இடரைப் போக்கப் பண்டனது உடல் உட்பட அனைத்து உயிர்களும் வேள்வி யின் அவியாக இடப்படுமாறு சிவபெருமான் எல்லாரையும் அழித்தார். அவ்வாறு அவர் அழித்த இடமே கச்சிமயானம் ஆகும். பின்னர்அவர்அனைத்துஉயிர்களையும் படைத்தார். கச்சியில் மயானமாகிய வேள்வியில் முளைத்தவர் இப்பெருமான் என்பதைக் கச்சி மயானம் தெரிவிக்கிறது.[6] இது திருவேகம்பநாதர் கோயில் முன் மண்டபத்துக்குள் மேற்கு நோக்கி அமைந்தகற்கோயில் சந்நிதி. இது திருநாவுக்கரசு நாயனாரால் வைப்புத் தலமாகப் பாடல் பெற்ற சிறப்பு உடையது. இவ்வைப்புத் தலப்பாடல் ஆறாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.[7] இக்கச்சி மயானத்தின்

4. காஞ்சிப்புராணம் – தழுவக்குழைந்த படலம் – 175 – 176
4.அ. காஞ்சிப்புராணம் - தழுவக்குழைந்த படலம் – 86
4.ஆ. காஞ்சிப்புராணம் – தழுவக்குழைந்த படலம் – 106
5. காஞ்சிப்புராணம் – திருவேகம்பப்படலம் – 117 - 119
6. காஞ்சிப்புராணம் – கச்சி மயானப்படலம் - 19 - 20
7. சைவத் திருமுறை – 6 - 97 - 10




ஏகாம்பரநாதர் கோயில் தெற்கு கோபுரம்



ஏகாம்பரநாதர் கோயில்
கோயில், நந்தி மண்டபம்



ஏகாம்பரநாதர் கோயில்
திருக்கலியாணம் சிவன், பார்வதி



இறாவதீசர் கோயில்
(பக்கம் எண் 17 பார்க்க)

பின்புறம் இலிங்கோற்பவர் எனப்படும் அடிமுடி தேடப் பெற்றவர் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சந்நிதிக்கு முன்புறமுள்ள தூண்கள் இசைத்தூண்களாக உள்ள சிறப்பு குறிப்பிடத்தக்கது.

விகடச்சக்கர விநாயகர்சந்நிதி ஆயிரக்கால் மண்டபத்தின் முகப்பில் உள்ளது. இங்கு விநாயகரைத் திருமால் வழிபடும் காட்சியைக் காணலாம். சிவபெருமானிடம் தாம்பெற்ற சுதர்சனச் சக்கரத்தைத் திருமால் வீரபத்திரக் கடவுள் மீது ஏவ, அச்சக்கரம் வீரபத்திரர் அணிந்திருந்த ஒரு கபாலத்திற்குள் சென்று விட்டது. அதைப் பெறு வதற்காகத் திருமாலின் கருடனுக்கு அடுத்தபடி அமைந்தவராகிய வீடுவசேனர் வீரபத்திரர் முன்னிலையில் விகடக் கூத்து ஆடினார். அப்போது சுதர்சனச் சக்கரம் கபாலத்திலிருந்து கீழே விழுந்தது.

அங்கிருந்து விநாயகர் சுதர்சனச் சக்கரத்தை எடுத்துக்கொண்டு, வீடுவசேனர் மீண்டும் விகடக் கூத்தாடுமாறு அவரிடம் கூறினார். அவரும் அவ்வாறு செய்யச் சுதர்சனச் சக்கரத்தை அவரிடம் விநாயகர் கொடுத்து விட்டார். இதன் காரணமாக இவருக்கு விகடச் சக்கர விநாயகர்[8] என்ற பெயர் வழங்குவதாயிற்று.

ஆறுமுகர் சந்நிதி விகடச் சக்கர விநாயகருக்கு மேற்புறத்தில் அச்சந்நிதிக்கு நேரொத்த பரப்பில் அமைந்திருக்கிறது. இதில் ஆறுமுகர் மயில் மீது அமர்ந்து காட்சி யளிக்கிறார். இங்கு முகப்பில் இடப்புறத்தில் விநாயகர் சந்நிதியும் வலப் புறத்தில் ஆறுமுகர் சந்நிதியும் உள்ளன. இவ்விரண்டு சந்நிதிகளும் இக்கோயிலுக்கு வருபவர்களுக்குவரவேற்பு அருள்புரியும் நிலையில்உள்ளன. இத்திருக்கோயிலுக்குரிய முதன்மைத் தீர்த்தங்களில் 1. கம்பைத் தீர்த்தம், 2. சிவகங்கைத் தீர்த்தம், 3. சருவ தீர்த்தம் ஆகிய மூன்றுமாகும். ஊரின் நடுவில் தெருவின் மேற்குப் புறத்தில் திருக் கோயிலும், வடகிழக்கு, தென்மேற்கு மூலைகளில் குளங்களும் அமைக்கவேண்டு மென்று மானசாரசிற்ப சாத்திரம் கூறுகிறது.[9] இவ்விதிக்கேற்ப வியக்கதக்க வகை யில் இக்கோயிலுக்குத் தென்மேற்கில் கம்பைத் தீர்த்தம் அமைந்திருப்பதும், வட கிழக்கில் சிவகங்கைத்தீர்த்தம் விளங்குவதும் சற்றுத்தூரத்தில் எனினும் கோயிலுக்குத் தென்மேற்கில் சருவதீர்த்தம் சார்ந்திருப்பதும் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்க தனிச் சிறப்புகளாகும்.

ஆயிரக்கால் மண்டபத்திற்குச் செல்லும் வழியில் இடப்பக்கத்தில் உள்ளது கம்பைத் தீர்த்தமாகும். இது 41.65 மீட்டர் நீளமும், 8.4 மீட்டர் அகலமும் கொண்டது. இதற்கு மழை நீரன்றி வேறு நீர் வரத்தில்லை. இதன் ஆழம் $2\frac{1}{2}$ மீட்டர் எனத்தெரிய வருகிறது. 17 படிக்கட்டுகளுடன் கூடிய இத்தீர்த்தம் அழகிய முறையில் அமைந்த

---

8. கந்தபுராணம் ஆறுமுக நாவலர் மதிப்பு விகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான் எனத் தொடங்கும் பாடலுக்குரிய அடிக்குறிப்பு.
9. இந்தியக் கலை வரலாறு முதல் பக்கம் கோ. தங்கவேலு எம்.ஏ. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், முதல் பதிப்பு 1976, பக்கங்கள் – 45,46

நீண்ட சதுரத்தில் உள்ளது. இத்தீர்த்தத்தின் முன்புறம் நீங்கலாக மற்ற மூன்று பக்கங்களிலும் ஒவ்வொன்றும் 1.86 மீட்டர் உயரமுள்ள 46 தூண்களைக் கொண்ட முற்றங்கள் கட்டப்பட்டுள்ளன. இத்தீர்த்தத்தில் நீராடுபவர்களுக்குப் பயன்படும் முறையில் அவை அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தீர்த்தத்திற்கு முன்புறத்தில் ஒவ்வொன்றும் $3\frac{1}{2}$ மீட்டர் உயரமுள்ள நான்கு தூண்களைக் கொண்ட ஒரு மண்டபமும் இதற்கு நேரொத்த முறையில் இத்தீர்த்தத்திற்குத் தென்புறத்து முற்றத்தில் மற்றொரு மண்டபமும் உள்ளன. அம்மையார் வழிபட்ட இடமாதலால் இக்குளத்தில் நீராடுபவர்கள் பெரும்பான்மை மகளிரேயாவர். ஆடவர் இங்கு நீராடுவதைக் காண்பதே அரிது.

தன்னிடத்து மூழ்கி நீராடுவோர் பாவச்சுமைகளைப் போக்கும் ஆற்றல் உடையது கம்பை என்பதைக்கம்பைஎன்னும்பெயர் தெரிவிக்கிறது [9அ] கோயிலின் மூன்றாம் பிராகாரத்தின் வடபுறத்தில் அளவிலும், அழகிலும் மிகப் பெரியதாக உள்ளது சிவகங்கை தீர்த்தம். இது நடு மையத்தில் சீர்மிக்க நீராழி மண்டபத்தைக் கொண்டுள்ளது. இதன் நீளம் 57.3 மீட்டர்; அகலம் 57.3 மீட்டர்; இதன் ஆழம் 3.78 மீட்டர் எனத் தெரிய வருகிறது. இதில் மக்கள் இறங்கிப் பயன்படுத்துவதற்கேற்பக் கடந்த 1871 ஆம் ஆண்டு அழகான முறையில் அகன்ற படிகள் அமைக்கப்பட்டு இது சீரியமுறையில் செப்பம் செய்யப்பட்டுள்ளது.

இத்தீர்த்தத்தின் வடபுறத்தில் 28 தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணின் உயரம் 2.18 மீட்டர். இந்தத் தூண்கள் நிற்கும் முற்றத்தின் உயரம் 2.82 மீட்டர்; இதன் நீளம் 57.17 மீட்டர்; அகலம் 2.12 மீட்டர். இத்தீர்த்தத்தின் தோற்றம் அழகிய தாமரை மலர் போல் உள்ளது. இதன் நீர் விரும்பதக்க வகையில் சற்றுப் பளபளப்போடு உள்ளது. இதற்கும் மழை நீரன்றி வேறு நீர் வரத்து இல்லை. அகத்தியர் இத்தீர்த்தத்தில் நீராடிச் சிவபெருமானை வழிபட்டுத் தமிழ் இலக்கணம் கற்பித்தார் எனக் காஞ்சிப்புராணம் செப்புகிறது.[10] அகத்தீசுவரர் இலிங்கம் என்பது முதல் பிராகாரத்தில் இருப்பது இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது.

சருவ தீர்த்தம் இக்கோயிலிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தில் மேற்கில் ஆர்க்காட்டுச் சாலையிலிருந்து சற்றுத் தெற்கில் காஞ்சிபுரம் நகராட்சி 4 ஆவதுபகுதி 30 ஆவது பிரிவில் 2568 நகர அளவை எண் புலத்தில் 135 மீட்டர் நீளமும், 135 மீட்டர் அகலமும் கொண்டு 5 ஏக்கர் 33534 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ளது. இதன் மையத்தில் நீராழி மண்டபம் ஒன்றுள்ளது. சருவ தீர்த்தம் 21 படிக்கட்டுகளுடன் விளங்குகிறது. இதன் ஆழம் 9 மீட்டர் எனத் தெரிய வருகிறது. பங்குனி உத்திர விழாவின் 13 ஆம் நாள் காலையில் ஏகாம்பரநாதர் இத்திருக்குளத்திற்கு தீர்த்தம்காண எழுந்தருள்கிறார். நெடுங்காலமாக இங்கு நடைபெற்று வந்த தெப்பத் திருவிழா தற்போது கொண்டாடப் பெறுவதில்லை.

---

9அ. காஞ்சிப்புராணம் – திருவேகம்பப் படலம் – 88

10 காஞ்சிப்புராணம் - தழுவக் குழைந்த படலம் - 245, 248

சில ஆண்டுகளாகத் தெப்பத் திருவிழா இங்கு நடைபெறாத காரணமாக இதன் நாற்புறங்களிலும் உள்ள கோயில்கள் தனிக்கவனம் பெறுவனவாகத் தோன்றவில்லை. தென்புறக் கரையிலுள்ள கோயில் தக்க முறையில் பாதுகாப்புப் பெற்றுள்ளது. இத்தீர்த்தத்தின் நாற்புறங்களிலும் கோயில்கள் இருந்தன, என்பதை 1967 ஆம் ஆண்டில் அரசின் நில அளவைத் துறையினரால் அச்சிட்டு வெளியிடப்பட்ட சருவ தீர்த்தப்படமும் காட்டுகிறது. காஞ்சிப்புராணம் கீழ்க்காணுமாறு அக்கோயில்களைக் காட்டுகிறது.[11] மூவுலகும் ஆளும் அரசு வேண்டி இரணியன் காஞ்சியை அடைந்து இங்கு இரணியேசம் என்பதன் பெயரில் சிவலிங்கத்தை நிலை நாட்டிச் சிவபெருமான் அருளைப் பெற்றான். இவன் பிரகலாதன் தந்தை என்பதை யாவரும் அறிவர். இது சருவ தீர்த்தத்தின் கிழக்குக் கரையில் உள்ளதாகும்.

காமன் என்னும் பெயருடையமன்மதன் காஞ்சியை அடைந்துசருவதீர்த்தத்தின் தென்கரையில் சிவலிங்கம் நிறுவி வழிபாடு இயற்றினான். இவ்வகையில் இந்த இடம் காமேச்சரம் என்னும் பெயர் பெற்றது. காமாட்சியம்மையார் ஆற்றிய சிவ பூசையின் பின்னர், அனைத்துத்தீர்த்தங்களும் கூடிச்சருவதீர்த்தம் என்னும்பெயரில் மேற்குக் கரையில் சிவ இலிங்கம் நிறுவி வழிபட்டன. சிவபெருமானைத் தீர்த்தராசன் எனப்போற்றி இங்கு வழிபட்ட பிரகலாதன், விபீடணன், பரசுராமன், அருச்சுனன், அசுவத்தாமன் ஆகியோர் முறையே, தந்தையை, தமயன்மார்களை, வீரர்களை, குருவைக் கொன்றழித்ததால் ஏற்பட்ட பாவங்களைத் தீர்த்துக் கொண்டார்கள். இந்த இடம் இரணியேசத்திற்குக் கிழக்கிலுள்ளது.

வருணன் கங்கையோடு காஞ்சிக்கு வந்து இறைவனை வணங்கிப் போற்றிய பின்னர் நீருக்கும் நீரிடை வாழும் உயிர்களுக்கும் தலைவனாயினன். இவ்வகையில் இது கங்காதீச்சரம் என்னும் பெயர் பெற்று மேற்கு நோக்கிய சந்நிதியுடையதாய் கரையின் கிழக்கில் உள்ளது. இராஜ கோபுரம் அமைந்திருக்கும் வெளியில்தென் புறம் மதிலாகும். இம்மதிலும் மற்றத் திக்குகளிலுள்ள மதில்களும் உயர்ந்த நிலையில் 12 மீட்டர்உயரத்திலும்1மீட்டர்கனத்திலும்உறுதியாகக்கட்டப்பட்டுள்ளன. மதில்களின் மேல் 12.25 மீட்டர் இடைவெளிகளில் இடபத் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. இக்கோயிலின் வடக்கு, கிழக்கு, மேற்கு மதில்களில் மூன்று கோபுரங்கள் முன்பு இருந்திருக்கின்றன. இவற்றுள் வடபுற மதிலிலுள்ள கோபுர வாயில் 5 மீட்டர் நீளம்; தற்போதுஐந்துபருத்தகல்தூண்களால்இது அடைக்கப்பட்டுள்ளது. மேற்கிலும், கிழக்கிலும் கோபுரங்கள் சிறிய அளவுடையவையாகக் காணப்படுகின்றன. இவ்விரு கோபுர வாயில்களுக்கு எதிரில் நீண்ட தெருக்கள் உள்ளன. மேற்குக் கோபுரம் 5.60 மீட்டர் நீளமும் 1 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது தெற்கிலுள்ள இராச கோபுரம் மிகப் பெரியதும், மிக அழகியதுமாகும். இது 33.75 மீட்டர் நீளமும், 24.89 மீட்டர் அகலமும் கொண்ட 839.44 சதுர மீட்டர் பரப்பில் ஒன்பது அடுக்குகளையும் பதினொரு கலசங்களையும் கொண்டு 57 மீட்டர் உயர்ந்து அருங்காட்சி தருகிறது. இந்த இராசகோபுரம் கி. பி. 1509 ஆம் ஆண்டில் விசயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரால்

---

11. காஞ்சிப்புராணம் 1964 பொன்குமாரசுவாமி அடிகள், பக்கங்கள் – 816, 830

கட்டப்பட்டது என்பதற்கான சான்றுக் குறிப்பு, இத்திருக்கோபுரத்தின் முதல் தளத்தின் மீதுள்ள வெளியிடத்து மேற்புறத்தில் உள்ளது. இங்குக்கிருஷ்ணதேவராயர் தம் அரசு அலுவலர்களுடன் கூடியிருந்து அரசு முறை ஆராய்வது போன்றதொரு படிமம் இருப்பதைக் காணலாம். இக்கோபுரத்தின் அடித்தளம், வாயில் நிலைவரை கற்களாலும், மேற்கட்டுமானம் செங்கற்களாலும் காரையாலும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்தின் இடையிலும் ஒரு வாயில் வகுக்கப்பட்டுள்ளது.

இராச கோபுரத்தை அடுத்துள்ளது பிராகாரத்தில் ஆயிரக்கால் மண்டபத்தினை ஒட்டி 17.60 மீட்டர் நீளமும், 15.69 மீட்டர் அகலமும் கொண்டு 276.14 சதுர மீட்டர் நிலப்பரப்பில் எழுப்பப்பட்டிருக்கும் கோபுரம் ஆகும். இதில் சில சிற்ப நுணுக்கங்கள் காணப்படுகின்றன. இது ஏழு அடுக்குகளையும், ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. இதன் உயரம் இராசகோபுரத்தை விடத் தெளிவாகக் குறைந்ததாகக் காணப்படுகிறது.

மேற்கு நோக்கிய கோபுரம் திருவேகம்பர் சந்நிதிக்குப் பின்புறம் உள்ள பிராகாரத்தில் வெளி மதிலோடு இணைந்து காட்சியளிக்கிறது. இதுவும் ஏழு அடுக்குகளையும், ஐந்து கலசங்களையும் கொண்டுள்ளது. இது 273.51 சதுரமீட்டர் பரப்பில், ஏறத்தாழ 30 மீட்டர் உயரத்தில் 20.23 மீட்டர் நீளமும், 13.52 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில்கட்டப்பட்டுள்ளது. இது இராசகோபுரத்தைவிடக்குறைந்துள்ளது எனினும், அமைப்பில் இவ்விரண்டும் ஒரே தன்மையின. ஐந்து அடுக்குகளையும், ஏழு கலசங்களையும் அருமையான சிற்பங்களையும் பெற்றுக் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கும்விமானம்ஒன்றுஏகாம்பரநாதர்சந்நிதிமீதுநிலைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மேற்கட்டுமானம் முழுவதும் செங்கற்களாலும் காரையாலும் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோயில் கோபுரங்கள் அமைப்பைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கத்தக்க நுட்பங்கள் சில உள்ளன.

சிவன் கோயில் கிழக்கோ, மேற்கோ நோக்கி இருக்கலாம் என ஆகமங்கள் கூறுவதாகவும், சிவன் கோயில்களில் பதின்மூன்று கோயில்கள்[12] மட்டும் மேற்கு நோக்கியுள்ளன எனவும் டாக்டர் கே. கே. பிள்ளை எடுத்துக் காட்டுகிறார் இதற்கு காரணம் கதிரவன் ஒளி காலையிலோ மாலையிலோ சிவலிங்கத்தின் மீது எவ்வாறாயினும் பதிய வேண்டும் என்பதாகும். மாலைக் கதிரவன் ஒளியைவிட உதயக்கதிரவன் ஒளி சிறந்தது என்பதற்காகக் காலைக் கதிரவன் ஒளி சிவலிங்கத்தின் மீது விழுமாறு பெரும்பான்மைச் சிவன் கோயில்கள் கிழக்கு நோக்கியவண்ணம் அமையுமாறுகட்டப் பெற்றுள்ளன.

---

12. சுசீந்திரம் கோயில் – டாக்டர் கே. கே. பிள்ளை – இயல் 3 கட்ட அமைப்பு 1. திருவானைக்கா; 2. கண்டியூர்; 3. கார்குடி; 4. திருக்கண்டமுடி; 5. கொள்ளுக்காடு; 6. திருவான்மியூர்; 7. கோட்டூர்; 8. திருக்கோயிலூர்; 9. திருத்துருத்தி; 10. திருநல்லம்; 11. திருப்பனந்தாள்; 12. திருவிற்குடி; 13. சுசீந்திரம் கபிலாசநாதர். இவற்றோடு திருமயிலையையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

திராவிடக் கோயில்கள் யாவும்பொதுவாகக்கிழக்கு நோக்கியவாறுஇருக்கின்றன எனவும் அவ்வாறு இருப்பதால் சிறப்பாக ஆண்டில் சில நாள்கள் கதிரவன் நேர் கோட்டில் வரும்போது, கதிரொளி இலிங்கத்தின் மீது விழும் எனவும், அவ்வாறு விழுவதற்குத் திராவிடக் கோயில்கள் யாவும் கிழக்கு நோக்கியே அமைக்கப்படுகின்றன எனவும், இரண்டுக்கு மேற்பட்ட கோபுரங்கள் தெற்கு அல்லது மேற்கு அல்லது வடக்குத் திசைகளில் இருக்குமெனில் அவை கோபுர வாயில்கள் எனக் குறிக்கப்படுமேயன்றி அவை 'வாயில்கள்' ஆகா எனவும், 'வாயில்' என்பது கிழக்கு நோக்கிய கோபுரமே எனவும் இந்தியக் கலை வரலாறு கூறுகிறது.[13] ஆதலின் வாயில் என்று குறிக்கப்படுவது கிழக்கு நோக்கிய கோபுரமாகும்.

இந்நோக்கிலே திருவேகம்பநாதர் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இதற்கு 'வாயில்' கிழக்கில் இருக்க வேண்டும். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இக்கோயிலை அடைந்து வழிபாடு ஆற்றியவர்கள் திருநாவுக்கரசு நாயனாரும், திருஞானசம்பந்தரும் ஆவார்கள். காஞ்சியடைந்தவுடன் திருநாவுக்கரசு நாயனார் முதலில் 'திருவாயிலைப் பணிந்தெழுந்து' சென்றார் எனவும்[14] திருஞானசம்பந்தர் இக்கோயிலில் 'வாயில் கண்டு கைகுவித்தெடுத்து உம்பர் ஓங்கு கோபுரத்தின் முன் இறைஞ்சினார்' எனவும்[15] கி பி. 8ஆம்நூற்றாண்டில்திகழ்ந்தசுந்தரமூர்த்திசுவாமிகள்இக்கோயிலின் முன் வளர்திரு வாயில் வணங்கினார் வன் தொண்டர்[16] எனவும் தெரிய வருகிறது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் நாட்டுத் தலைநகர்க்குரிய ஏகாம்பரநாதர் கோயிலில் வழிபாடாற்றி அதன் நுட்பங்களை முன்னமே கண்டறிந்தார் என்பது மறுக்கப்பட முடியாததாகும். தற்போதுதெற்குமதிலிலுள்ளஉயர்கோபுரமோ விசயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரால் கி பி. 1509ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. எனவே சைவ சமய ஆசிரியர்களாகிய இம்மூவரும் தங்கள் தங்கள் காலத்தில் கிழக்கு நோக்கி அமைந்திருந்த கோபுரத்தை வணங்கிய பின்னர், கோயிலினுள் வழிபாடு ஆற்றினார்கள் என்பது தெளிவாகிறது தற்போதுள்ள கிழக்குக் கோபுரத்திற்கு எதிர் திக்கில் நன்கமைந்த தெரு இப்போதும் உள்ளது. இக்கோபுரத்திற்கு நேரொத்தவாறன்றிச் சற்று வடக்கில் ஒரு சிறு நுழைவாயில் மூன்றாம் பிராகாரத்தில் உள்ளது. இதன் வழியாக மூன்றாம் பிராகாரத்திற்குள் செல்லலாம். சைவ சமய ஆசிரியர் மூவரும், சேக்கிழாரும் மேற்கொண்ட வழிபாட்டு முறைக்கேற்பக் கிழக்குக் கோபுர வாயிலும் பயன்படுத்தப்படத்தக்கது

பிராகாரம் என்பது ஆவரணம் என்னும் பெயரில் ஆகமம் விளக்கம் தருகிறது. இதனைச் ''சுற்று'' எனவும், 'சுற்றுப் பாதை'' எனவுட சிலர் குறிக்கிறார்கள். அன்னமயம், பிராணமயம் மனோமயம், விஞ்ஞானமயம் ஆகிய நான்கு கோசங்களுக்கு அப்பால் உள்ளதுஐந்தாவதாகிய ஆனந்த மயகோசம் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.[17]இம்முறையில்இக்கோயில்களின் ஐந்து பிராகாரங்களும் அமைகின்றன

13. இந்தியக்கலை வரலாறு முதல் புத்தகம் - முதல் பதிப்பு 1976 – பக்கம் 361
14. பெரியபுராணம் - திருநாவுக்கரசர் புராணம் - பாடல் 1952
15. பெரியபுராணம் திருஞானசம்பந்தர் புராணம் - பாடல் 993
16. பெரியபுராணம் - ஏயர்கோன் கலிகாம நாயனார் புராணம் பாடல் 186, 187
17. சிவஞான சித்தியர், நான்காம் சூத்திரம் 23

திருவேகம்பநாதர் கோயில் பெரும் பரப்பளவாகிய $23\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளதால், இதன் பிராகாரங்கள் மிக நீளமாகவும் நீளத்திற்குத் தக்கவாறு அகலமும் கொண்டுள்ளன. ஐந்தாம் பிராகாரம் இக்கோயிலின் வெளி மதிலுக்கும் இக்கோயிலின் நாற்புறங்களிலுள்ள வீடுகளின் முகப்புகளுக்கும் இடையில் உள்ள நாற்புற வெளியிடமாகும். இவ்வாறு நாற்புறமுள்ள நான்கு வெளியிடங்களும் நான்கு மாடவீதிகள் எனப் பெயரிடப் பெற்றுள்ளன. ஐந்தாம் பிராகாரத்தைத் தொடர்ந்து மற்ற நான்கு பிராகாரங்களும் அமைந்து இருக்கின்றன. நான்காம் பிராகாரமும் மூன்றாம் பிராகாரமும் திறந்த வெளிப் பிராகாரங்கள். மற்றவை கோயிலுக்குள் அமைந்திருக்கின்றன.

ஐந்தாம் பிராகாரம் 365 மீட்டர் நீளமும் 304 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இப்பிராகாரத்தின் நான்கு வெளிப்புறங்களில் வீடுகள் வரிசையாக உள்ளன. இவற்றில் பல வீடுகள், கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குரிய மனை வாடகையைக் கோயில் பெற்று வருகிறது. ஐந்தாம் பிராகாரத்தில் மேற்கு மதிலை அடுத்து இரண்டு சத்துணவு கட்டடங்களும் வடபுற மதிலைச் சார்ந்து மற்றொரு கூடமும் அண்மையில் கட்டப்பட்டுள்ளன. ஐந்தாம் பிராகாரம் மண் சாலை வடிவில் உள்ளது. இது கோயிலுக்குச் சேர்ந்ததாகக் கோயிலார் கருதுகிறார்கள். ஆனால் அது அரசுக்குரிய புறம்போக்கு என நகராட்சி அலுவலகர்கள் கூறுகிறார்கள். ஆகம முறைப்படி வழிபடுவோர்கள் இப்பிராகாரத்தை வலம் வந்து பின்னர் இராசகோபுரம் வழியாக நான்காம் பிராகாரத்துள் நுழைகிறார்கள்.

நான்காம் பிராகாரம் 340 மீட்டர் நீளமும் 269 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இப்பிராகாரத்தினுள் வெளி மதிலில் இராசகோபுரமும் கம்பைத் தீர்த்தமும், அதையொட்டி நந்தவனமும், ஆயிரக்கால் மண்டபமும் உள்ளன. இப்பிராகாரம் ஆயிரக்கால்மண்டபத்தில்விகடச்சக்கரவிநாயகர்சந்நிதியையும், ஆறுமுகர்சந்நிதியையும்கடந்துசென்றுவலம்வந்துபின்னர்ச்சரபேசர் மண்டபத்தைக்கடந்துமூன்றாம்பிராகாரத்தினுள் நுழைகிறது. மூன்றாம் பிராகாரம் 250 மீட்டர் நீளமும், 160 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இப்பிராகாரத்தில் இரு கோபுரங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை ஆயிரக்கால் மண்டபத்தைஒட்டிய கோபுரமும்திருவேகம்பர் சந்நிதிக்கு நேர்பின்புறமுள்ள மற்றொரு கோபுரமும் ஆகும்.

இப்பிராகாரம் விநாயகர் கோயில் அதற்கருகிலுள்ள விட்டீச்சரத்துச் சந்நிதி ஆகிய சந்நிதிகளைக்கடந்து வலப்புறம் வந்து பின்னர் இடபேச்சரம் வழியாகச் சிவகங்கைத் தீர்த்த விநாயகரைக் கடந்து சிவகங்கைத் தீர்த்தத்தின் வட எல்லை ஓரமாகக் கிழக்கு நோக்கிச் சென்று சிவகங்கைத் தீர்த்தத்தில் நீராடுவோர் மண்டபத்திற்குப் பின்புறமாகத் தெற்கு நோக்கிச் செல்கிறது. இதன் பின்னர், இப்பிராகாரம் சந்நிதிக்கும் வாலீச்சரத்திற்கு வலப்புறமாகச்சென்று மேற்கே திரும்பிக் கச்சிமயானத்திற்கு வலப்புறமாகச் சென்று பின்னர் இக்கோயிலின் பிராகார வாயிலில் அமைந்துள்ள துவாரபாலகர் களைக்கடந்து இரண்டாம் பிராகாரத்தின் உட்புறத்தை அடைகிறது.

சிவகங்கைத் தீர்த்தத்திற்குக்கிழக்கே உள்ள பிராகார வழி 1 மீட்டர் உயரத்தில் மண்ணாலும் கல்லாலும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிராகாரத்தின் கிழக்கு மதிலில் 1.65 மீட்டர் அகலத்திலும் 2.35 மீட்டர் உயரத்திலும் ஒரு வாயில் உள்ளது. இவ்வாயிலின் கதவுகள் பயன்படுத்தப்படுவதற்குரியன. இரண்டாம்பிராகாரம் 84.54 மீட்டர் நீளமும் 57.53 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இப்பிராகாரத்தின் இருபுறங்களிலும் அழகிய தூண்கள் இக்கோயிலின்கண் அமைந்திருக்கும் சிற்ப நுணுக்கத்திற்குச் சான்று பகருவனவாக உள்ளன. இப்பிராகாரத்தினை வலம் வரும்போது மடைப்பள்ளியும் வாகன மண்டபமும் பிராகார வழியில் இடப்புறத்திலும், பிரளய சக்தி இப்பிராகாரத்தின் வலப்புறத்திலும் அமைந்திருக்கின்றன. இப்பிராகாரத்தின் தென்மேற்கு முனையில் அமைந்திருக்கும் பஞ்சமுக விநாயகரையும், வடமேற்கு முனையில் 1008 இலிங்கங்களைக் கொண்டுள்ள ஒரே சிவலிங்கத்தைக் கடந்து வலம் வரும்போது அம்பலவாணர் சந்நிதி, வயிரவர் சந்நிதி, புதிய பள்ளியறை ஆகியவற்றையும் காணலாம். இவற்றையெல்லாம் கடந்து தெற்கு நோக்கித் திரும்பும் போது இடப்புறத்தில் யாகசாலையும் வாகனமண்டபமும் வலப்புறத்தில் நவக்கிரகங்களின் சந்நிதியும் கடந்து முகற்பிராகாரத்தினுள் நுழையும் வண்ணம் இரண்டாம் பிராகாரம் அமைந்திருக்கிறது.

முதற்பிராகாரம் கருவறையினைச் சுற்றி 31.43 மீட்டர் நீளமும் 17.92 மீட்டர் அகலமும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பிராகாரத்தின் வாயிலிலிருந்து வலம் வரும்போது அடியவர் மூவர் சந்நிதி, பாலசந்திர விநாயகர் சந்நிதி, படிகலிங்க மூர்த்தி, அறுபத்து மூவர் சந்நிதி, வெள்ளக்கம்பர் சந்நிதி, சந்தான ஆச்சாரியர்கள் சந்நிதி, காசிவிசுவநாதர் சந்நிதி, சந்தான கணபதி, சௌபாக்கிய கணபதி, சக்தி கணபதி ஆகிய சந்நிதிகள், 108 இலிங்கங்களைக் கொண்டுள்ள சந்நிதி, நாகலிங்கத்தின் சந்நிதி, ஆறுமுகர், ஏகாந்தமுருகர் சந்நிதி, மார்கண்டேயர் இலிங்கச் சந்நிதி, மத்தளமாதேசுவரர் சந்நிதி, கள்ளக்கம்பர் சந்நிதி, வயிரவர், பிட்சாடனர் உட்பட நின்ற கோலத்தில் உற்சவ மூர்த்திகள் சந்நிதி ஆகியவை உள்ளன.

இராசகோபுத்திற்கு நேராகப் பன்னிரண்டு தூண்களையும் ஒன்பது மீட்டர் நீளமும் ஆறு மீட்டர் அகலமும் $7\frac{1}{2}$ மீட்டர் உயரமும் கொண்ட வாகன மண்டபம் உள்ளது. இதற்குச் சரபேசர் மண்டபம் என்னும் பெயருமுள்ளது. இது தெற்கு முகமாய் அமைந்திருப்பதோடு, இம்மண்டபத்தின் பின்பகுதி மூன்றாவது பிராகார மதிலோடு இணைந்துள்ளது இம்மண்டபத்தின் மேற்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இதன் தென்புறம் மட்டும் திறந்த அமைப்புடன் விளங்குகிறது. நவராத்திரி நாள்களில் தேவியர் அலங்காரத்தோடு இம்மண்டபத்திற்கு எழுந்தருளி அடியவர்களுக்குக் காட்சி அளிக்கிறார்.

நான்காம் பிராகாரத்திலுள்ள கம்பைத் தீர்த்தத்திற்கு மேற்புறத்தில் ஆயிரக்கால் மண்டபம் ஒன்றுள்ளது. இது 63.54 மீட்டர் நீளமும் 45.37 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இதன் உயரம் 4 மீட்டர். இதில் தற்போது 655 தூண்கள் கால்களாக உள்

ளன. எஞ்சியவற்றின் நிலைமை யாதென்பது தெரியவில்லை. இதிலுள்ள தூண்கள் அனைத்தும் மிகப் பழமையானவை. ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருநாளில் திருவேகம்ப நாதருக்கும் காமாட்சி அம்மையாருக்கும் திருமண விழா இம்மண்டபத்தின் மீதுள்ள மெத்தை மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்த மெத்தை மண்டபத்தினைக் கட்டியவர் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் எனக் கூறுகிறார்கள். மெத்தை மண்டபத்தில் சுவாமி வீற்றிருப்பதற்காக இதில் சிறிய மேடை ஒன்று உள்ளது.

முன்மண்டபம் என்று வழங்கப்பெறும் மண்டபம் இக்கோயிலின் நுழைவாயிலின் முன் அமைந்துள்ளது;அளவில் மிகப்பெரிய மண்டபம் இஃதாகும். இது கச்சிமயானம், கல்யாண மண்டபம், திருக்கோயில் அலுவலகம் மற்றும் பலிபீடம் முதலியவற்றை அடக்கிகொண்டுள்ளது. இம்மண்டபத்திலிருக்கும் தூண்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

இரண்டாம் பிராகாரத்தின் வலப்புறத்தில் அமைந்திருப்பது அம்பலவாணர் மண்டபமாகும். இதன் நீளம் 15.28 மீட்டர்; அகலம் 10.35 மீட்டர். இங்குள்ள மொத்தத் தூண்களின் எண்ணிக்கை 8. இம்மண்டபத்தின் உயரம் 15 அடி. இங்கு நடராசப்பெருமான் நடனம்புரியும் கோலத்தில்உள்ளார். அருகில் சிவகாமி அம்மையாரும் இருக்கும் காட்சியைக் காணலாம். சுற்றி வலம் வந்து வழிபடுவதற்கேற்பச் சிறிய பிராகாரம் ஒன்றையும் இம்மண்டபத்தில் காணலாம். இங்குச் சைவத் திருமுறைகள் பேழையில் வைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன.

இரண்டாம் பிராகாரத்தின் இடப்புறத்தில் நாயகர் மண்டபம் உள்ளது. மாவடிக்குத் தென்புறத்திலிருக்கும் உற்சவர் சந்நிதிக்கு முன்பாக அமைந்திருக்கும் இம்மண்டபத்தில் இருபுறமும் அழகுமிகு தூண்கள் உள்ளன.

காமாட்சி மண்ணுலகுக்கு வந்துமுப்பத்திரண்டு அறங்களைப் புரிதற்குக் காரணமாக இருந்த செயலே திருக்கண் புதைத்தல் ஆகும் இச்சிற்பம் கோயிலினுள் நுழைந்தவுடன் பிரியும் இரண்டாம் பிராகாரத்தில் வலப்புறத் தூணில் காணப்படுகிறது. இறைவன் தியான நிலையில் அமர்ந்திருக்க, அம்பிகை பக்கத்தில் நின்று இறைவனின் வலக்கண்ணைத் தமது வலக்கையால் மூடும் நிலையில் இச்சிற்பமுள்ளது. இதைச் சுற்றிலும் கீழும் நந்தி, முனிவர்கள் ஆகியோர்களின் உருவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

திருக்கண் சிற்பத்திற்கு நேரெதிரிலுள்ள இடப்பக்கத் தூணில் இறைவன் காமாட்சியைத் திருமணம் செய்து கொள்வதை விளக்கும் சிற்பம் உள்ளது. திருமால் முன்னின்று நடத்தித்தரப் பெருமான் தேவியரை மணம் புரிந்திடும் எழில்மிகு இச்சிற்பத்தில் திருமண வேள்வி, முனிவர்கள் கைகூப்பி வணங்குதல் முதலியன இதன் கீழ் வடிக்கப்பட்டுள்ளன.

மேலும், மாவடியின் கீழ்ச் சோமசுகந்த வடிவிலிருக்கும் சிற்பத்தில் தேவியார், திருமணக் கோலத்தில் நாணத்துடன் தலை கவிழ்ந்திருக்கும் மங்கையைப் போலச் சற்றுக் குனிந்த வடிவில் காணப்படுகிறார். அவர் முகத்தில் நாணத்தின் சாயலைக் காட்டியிருக்கும் கைவண்ணம் மிகச் சிறப்பானது.

1008 இலிங்கங்களை ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் காட்சி மாட்சி பொருந்திய மகாலிங்கச் சிற்ப நுணுக்கத்திற்குச் சான்று பகருவதாகவுள்ளது. இக் கோயிலின் குறிப்பிடத்தக்க சிற்பங்களுள் இதுவும் ஒன்றாகும்.

ஏகாம்பரநாதர் கோயில் கருவறையில் எழுந்தருளிய மூல இலிங்கத்தற்குப் பின் புறம் சோமசுகந்த வடிவில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பது சற்று ஆராய்ந்து பார்க்கப்படுவற்குரியதாகும். சிவலிங்கத்திற்குப் பின்புறம் சோமசுகந்த மூர்த்தியைக் கருவறையின் உட்புறச் சுவரில் காட்டுவது வழக்கமாக இருந்ததுஎன்பதாகவும் பல்ல வர் காலத்தில் இத்தன்மை பொதுவாக மேற்கொள்ளப்பட்டது என்பதாகவும் டுப்பிரியல் எடுத்துக்காட்டுகிறார் என்பதைச் சுட்டிக்காட்டி, இவ்வகையில் அவர் கூறியதை அவ்வாறே டாக்டர் கே. கே. பிள்ளை கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார். ''பல்லவர் காலத்துத் தெய்வத் திருவுருவச் சிற்பக்கலையில் மிகத் திறமை வாய்ந்த அமைப்பு சோமசுகந்தரின் திருவுருவமாகும்'' இது கி பி. 7–ஆம் நூற்றாண்டில் பல்ல வரின் சைவ சமயத்தில் முக்கியமான பகுதியாகும். ஏனெனில் இது கருவறையின் பின்புறம் அமைந்த சுவரில் சிவலிங்கத்திற்குப்பின்புறம் காணப்படுகிறது. இக்கோயி லுள்ள இச்சிற்பம் பல்லவர் காலச் சிற்பக்கலையை எடுத்துக்காட்டுகிறது.

சிவகங்கைத் தீர்த்தத்திற்குத் தெற்கிலுள்ள முன்மண்டபத்தில் பல தூண்களில் யாளி எனப்படும் விலங்கின்உருவம்செதுக்கப்பட்டுள்ளது.தென்னிந்தியாவில் உள்ள மற்றக் கோயில்களில் சிறந்த முறையில் சிற்பவடிவங்கள் காட்டப்பட்டன போலஇங் கும்இது காட்டப்பட்டுள்ளது.யாளி உண்மையில் ஒரு விலங்கன்று;முற்றிலும் சிங்கத் தின் வடிவத்தில் யானையின் துதிக்கையைக்கொண்டது. சிங்கத்தின் வடிவிலான யாளிக்குரிய துதிக்கை மிக நீளமாக இருப்பதால், யாளி நிமிர்ந்து நிற்கும் நிலையில் காட்டப்படும் போது துதிக்கை அதன் கால்கள் வரை தொங்குகிறது. இங்குள்ள இத்தகைய சிற்பங்கள் கண்டு மகிழ்வதற்குரியவை.

இரண்டாம் பிராகாரத்துத் தூண் வரிசைகளின் அழகமைப்பு, தென்னிந்தியா வில் எடுத்துக்காட்டாக இராமேச்சரம் கோயிலிலுள்ள பண்டைக்காலத்துச் சிற்பச் சிறப்புடைய வடிவின் எழிலமைப்புடன் ஒத்திருக்கிறது; தூண்களில மலர்களின் வடிவங்கள் ஆங்காங்கு அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலை முதல் முதலில் கட்டத் தொடங்கியவர் எவராய் இருக்கக்கூடும் என்பது சிந்தித்துப் பார்ப்பதற்குரியதாகும். கி. பி. 190 ஆம் ஆண்டில் தொண்டை மண்டலத்தை ஆண்டதாகக் கருதப்பெறும் சோழன் கரிகால் பெருவளத்தான் காஞ் சியை ஆண்டதாகத் தெலுங்குச் சோழர்கள் வரலாறு தெரிவிக்கின்றது.[18] காஞ்சி

18. தெலுங்குச் சோழர்கள் பதிவுருக்கள்

புரத்திற்கு இம்மன்னன் பொன் வேய்ந்ததாகத் திரு ஆலங்காட்டுச் செப்பேடுகள் எடுத்துக்காட்டுகின்றன.[19] இவ்வாறு இம்மன்னன் பொன் வேய்ந்தது ஆகமப்படி கட்டப்பட்ட ஒரு கோயிலாகும். ஏகாம்பரர் கோயில் நுழைவாயில் முகப்பில் இடப் புறம் காணப்படும் சிலை கரிகாலன் உருவமென்பர் அறிஞர் என ஜே. எம். சோம சுந்தரம் குறிப்பிடுகிறார்.[20]

கரிகாற்சோழன் புரிந்த பணியைப் பற்றிப் பேரறிஞர் எம். பாலசுப்பிரமணியம் கூறுவது, ''கரிகாற் பெருவளத்தான் காலத்தில் காஞ்சிபுரம் மிகச் செம்மையாக்கப் பெற்று நான்கு இராஜவீதிகளும் ஏற்பட்டன. இவை போன்ற அகன்ற மாடவீதிகள் வேறு எத்தலத்திலும் இல்லை. அரண் செய்யும் முறையில் இச்சோழனே நாற்புறத் திலும் உயர்ந்த பருத்த மதில்களை எழுப்பினான்'' என்பதாகும். சைவத் திருமுறை களின் சில பாசுரங்களில் கச்சியின் மதில் கூறப்படுகிறது.[21] கச்சியை நடுவில் கொண்டதொண்டை நாட்டுப் பகுதியும் எயிற்கோட்டம் எனப்பெயரிடப்பட்டது. (எயில் – மதில்)[22]

சோழ மன்னனின் அமைச்சராக இருந்த சேக்கிழார் தாம் பெரியபுராணம் இயற்றும் முன்னர் முதன்மை பெற்றுள்ள சிவத்தலங்களில் வழிபாடாற்றி, அவற்றை பற்றிய பல செய்திகளைத் திரட்டினார் என்பது ஆராய்ச்சியாளர் கொண்ட கருத்து ஆகும். தமது சொந்த மண்டலமாகிய தொண்டை மண்டலத்தில் பெரிய சிவத்தல மாகிய் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு வந்திருந்து அதன் பல்வேறு நிலைகளைக் கண் டறிந்தார் என்பது மறுக்கப்பட முடியாததாகும். அவர் திருநாவுக்கரசு நாயனார் 'செம்பொற்கோயிலை' வந்தடைந்து' கச்சி ஏகம்பர் கனகமணி மாளிகையில் வழிபாடு ஆற்றினார்''[23] எனவும், திருஞானசம்பந்தர், ''ஏகாம்பரநாதர் பொன் மாளிகைப் புறம் எய்தினார்''[24] எனவும் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்புகள் இக்கோயிலுக்குப் பொன் வேயப்பட்ட செய்தியை உறுதிப்படுத்துகின்றன. பல்லவர் காலம் கி.பி. 600 ஆம் ஆண்டு முதல் கி.பி. 900 ஆம் ஆண்டு வரையிலாகும். இக்காலத்திய மன்னரா கிய மகேந்திர வர்மன் தான் இயற்றிய 'மத்தவிலாச பிரகர்சனம்' என்னும் நூலில் ஏகாம்பரநாதர் கோயிலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான். திருவேகம்பத்து ஆயிரக் கால் மண்டபத்தருகில்இருந்தஒருகல்தூணில் இம்மன்னனின் விருதுப்பெயர்கள்பதின் மூன்று பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று ''சித்தராகாரப்புலி'' என்பதாகும். இக்கல்வெட்டுத் தூண் தற்போது சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தின் பாதுக் காப்பில் வைக்கப்பட்டுள்ளது.

---

19. தென்னிந்தியக் கல்வெட்டுகள் 3 பி. 3 பக்கம் 395.
20. ஜே. எம் சோமசுந்தரம் இயற்றிய நூல் 1967 பக்கம் 26.
21. சைவத் திருமுறை – 1-133-6, 7-21-10, 4-99-3, 47-9
22. தேவார அடங்கன் முறை – மயிலை இளமுருகனார் பதிப்பு – 1953 பக்கங்கள் 1197-1198
23. பெரியபுராணம் – 1591-1592
24. பெரியபுராணம் – 2896

இவ்வாதாரங்களிலிருந்து தெரியவருவது, பல்லவ மன்னர்கள் இக்கோயிலை ஆதரித்து வந்தார்கள் என்பதாகும். அடுத்து இக்கோயிலைப் பொறுத்தவரையில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் சோழ அரசை நிலைநாட்டிய ஆதித்த சோழனின் மரபினனாகிய உத்தம சோழன் (கி.பி. 949 - 959), இராசராசன் (கி.பி. 985 – 1014), இராசாதிராசன் (கி.பி. 1018 – 1054), குலோத்துங்கன் 1. (கி.பி ,1070 – 1120), குலோத்துங்கன் II (கி.பி. 1133 – 1150), இராசராசன் II(கி.பி. 1146 – 1173) ஆகியோர்களின் கல்வெட்டுகள் இங்குள்ளன. இவற்றில் சிலவற்றைக் குறிப்பாகக் காணலாம்.

கோயிலின் இரண்டாம் பிராகாரத்தில் மேற்கு வடக்குச் சுவரில் முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு காணப்படுகிறது (கல்வெட்டு எண் 813 தெ. இ. க.). காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பண்டிதன் ஒருவன் வீரணுக்கன் தாமோதரன், கெரளாந்தகமாராயன் என்பவனிடம் 108 காசுகளைப் பெற்றுக்கொண்டு அதன் வட்டியிலிருந்து திருவாராதனை செய்வதற்கும், சந்தனம், கற்பூரம், சிதாரி, திருப்பரி வட்டங்கள் (புடவை, உத்தரீயம்) ஆகியவற்றை அளிக்கவும், பதார்த்தம் ஆச்சாரிய தட்சணை, பூசைசெய்யும் மணிகள், பால், தர்ப்பை ஆகியவைபோன்றவற்றிற்கும் ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.

இரண்டாம் பிராகாரத்தின் மேற்குப் புறச்சுவரில் காணப்படும் மற்றொரு கல்வெட்டு, இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது ஆகும் (கல்வெட்டு எண் 818 தெ. இ. க 4)

கங்கநாட்டுச் சிற்றரசன் இக்கோயிலில் நந்தா விளக்கெரிக்க 64 பசுக்களையும் 2 எருதுகளையும் கொடுத்ததை மேற்கண்ட கல்வெட்டு தெரிவிக்கிறது

இரண்டாம் பிராகார மேற்குச் சுவரில் இரண்டாம் இராசராசன் காலத்திற்கு உரியதாகிய கல்வெட்டு (கல்வெட்டு எண் 816) வைதும்ப மகாராசனான இராசேந்திர சோழ மும்முடி விஷ்ணுதேவன் துரை அரசன் என்பவன் இக் கோயிலுக்கு நந்தா விளக்கெரிப்பதற்குப் பால்பசு 10, சினைப்பசு 12, வறல் பசு 6. கிடாரி 4, எருது 1 ஆக மொத்தம் முப்பத்து மூன்றும் கொடுத்த செய்தியைக் கூறுகிறது.

மேலும் அதே சுவரில் இரண்டாம் இராசராச சோழனின் 17 – ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு, தெலுங்குச் சோழர் குல இளவரசன் மதுராந்தகப் பொத்தப்பிச்சோழன் கண்ட கோபாலன் என்போன் படை வகுப்பைச் சார்ந்த வீரர்களில் ஒருவனான காமிநாய்க்கன் என்பவர் திருவேகம்பன் கோயிலுக்கு நந்தா விளக்கெரிப்பதன் பொருட்டுப் பாற்பசு, சினைப்பசு, கன்று ஆகியவை உட்பட 32, எருது ஒன்று ஆக மொத்தம் முப்பது மூன்றினைத் தாமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது.

இரண்டாம் பிராகாரத்தின்வடக்குப்புறச்சுவரில் மேற்குச்சாளுக்கியர்களின் கீழ் வாழ்ந்த சிற்றரசர்களில் ஒருவனாகிய காகதீய கணபதி மன்னனின் கல்வெட்டு

(கல்வெட்டு எண் 814) காணப்படுகிறது இக்கல்வெட்டு கி.பி. 1250 ஆம் ஆண்டைச் சார்ந்திருக்கலாம் என்பது வல்லுநர்களின் கருத்து.காகதீய மன்னன் கணபதி தன் பெயரில் சந்தியொன்று ஏற்பாடு செய்து, திருவமுது, கறியமுது, ஆகியவற்றுக்கும் பரிவட்டங்களுக்கும், பூசைக்குரிய பொருள்களுக்கும் நம்பிமார், திருப்பரிசாரகர், திருமஞ்சனமெடுப்பார், திருப்பள்ளித்தாமம் தொடுப்போர் ஆகியோர்களுக்காகத்தாமற் கோட்டத்துக் களத்தூரிலிருந்து பெறும் வரிகளை நிரந்தரமாகப் பெறுவதற்கான அறக்கட்டளை நியமித்ததைக் குறிப்பிடுகிறது.

அம்பலவாணர் மண்டபத்தின் தென்மேற்குப் புறச்சுவரில் பாண்டி நாட்டுப் பாணர்களின் தலைவனான புவனேச வீரனின் 22 ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1469) கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டு புவனேச வீரன் தன் பெயரில் ஒரு சந்திப் பூசை நடப்பதற்கும் மாதம் பிறந்த நட்சத்திரத்திற்கும் விசேட பூசை நடத்து மாறு அமுதுபடி, கறியமுது, இலையமுது, அடைக்காயமுது, திருப்பரிவட்டம், சாத்துப்படி, திருவிளக்கு உட்பட வேண்டும் நிவத்தங்களுக்குப் பாண்டி மண்டலத்து வீரநாராயண வளநாட்டுப் புவனேச வீர நல்லூரையும் சமரகோலாகல நல்லூரையும் விட்டுள்ளான் என்பது தெரிகிறது.

இக்கோயிலில் திருப்பள்ளி எழுச்சிப் பூசை, கால சந்தி, உச்சிக்காலப் பூசை, பிரதோடக் காலப் பூசை, மாலைச் சந்தி, இரவுப்பூசை என்னும் ஆறுவிதமான பூசைகள் ஆறுவேளைகளில் நடைபெறுகின்றன. ஒவ்வொரு காலப் பூசைக்கும் தனித் தனியே கட்டளைகள் இருக்கின்றன. சுப்பிரமணிய முதலியார், காஞ்சிபுரம் வயிர இராமநாத செட்டியார், நகரத்தார் மரபினர், தொண்டை மண்டல ஆதி சைவ வேளாள மரபினர், ஏகாம்பரநாதர் கோயிலார், பச்சையப்பன் அறநிலைக் கட்டளை ஆகிய ஆறு கட்டளைகளும் முறையே மேற்கண்ட ஆறு பூசைகளையும் நடத்தி வருகின்றன.

இப்பூசைகள் யாவும் சைவ ஆகமங்களில் குறிப்பாகக் காமிக ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி நடத்தப்படுகின்றன. இத்திருக்கோயிலின் மூலவரின் மணல் சிவலிங்கத்திற்கு வில்வ இலையில் அருச்சனை நடக்கிறது; வடமொழியில் அருச்சனை செய்யப்படுகிறது. அன்பர்கள் விரும்புமிடத்துத் தமிழில் அருச்சனை செய்யப்படுகிறது. பதினாறு உபசாரங்களுடன் பூசைகள் நடைபெறுகின்றன.

பெரும்பாலும் எல்லா மாதங்களிலும் திருவிழாக்கள் நடப்பினும், பங்குனி மாதத்தில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழாவே மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இத்திருவிழா பத்து நாள்கள் மிக விமரிசையாகநடைபெறுகிறது.ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகை வாகனமான சிம்ம வாகனம், கிளி வாகனம், அன்ன வாகனம், இடப வாகனம், வெள்ளித்தேர், குதிரை வாகனம், வெள்ளி மாவடி ஆகிய வாகனங்களில் கோயிலிலுள்ள மூர்த்தங்கள் உலாவரும்.

பங்குனிப் பெருவிழாவின் ஆறாம் நாள் அறுபத்து மூவர் புறப்பாடு சிறப்பாக நிகழ்வதும் தவறாமல் குறிப்பிடத்தக்கது. உற்சவங்களில் மாவடி சேவை, கயிலாச சேவை ஆகியவற்றின் வெள்ளித் தேர்ச் சேவையும் முக்கியமானவை. திருவாதிரையில் காஞ்சியிலுள்ள எல்லாக் கோயில்களின் உற்சவ மூர்த்திகளும் நான்கு இராச வீதிகளிலும் உலா வருவதும், சிவராத்திரியில் மூலை முடுக்குகளிலுள்ள எல்லாச் சிவ லிங்கங்களுக்கும் பெரிய அளவிலோ, சிறிய அளவிலோ அபிடேகம் முதலிய சிறப்பு நடப்பது காஞ்சியிலுள்ள ஒரு தனிச் சிறப்பு.

பத்தாம் நாள் ஏகாம்பரேசுவரர் காமாட்சியம்மை திருக்கலியாணம் மிகச் சிறப்பாக நடைபெறும். ஒவ்வொரு நாளும் மாலையில் கோயிலில் அமைக்கப்படும் சிறப்புப் பந்தலில் சமயச் சொற்பொழிவுகளும் தேவாரப் பாராயணமும் நடைபெறுகின்றன. மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கக்கூடிய திருவிழாக்களில் இது மிக முக்கியமானது.

பங்குனி உத்திர விழா மற்றொரு வகையில் பெருஞ்சிறப்புப் பெறுகிறது. இப் பெருவிழாவில் ஏகாம்பர நாதருக்கும் காமாட்சியம்மையாருக்கும் நடைபெறும் திருமண விழாவின்போது, இப்பகுதியில் வாழும் மக்கள் தங்கள் தங்கள் குடும்பத் திருமணங்களை ஏகாம்பரர் காமாட்சி திருமணக்கோலக்காட்சியின் முன்னிலையில் நடத்திக் கொள்கிறார்கள். இது பன்னெடுங்காலமாக நடைபெற்றுவரும் அரிய சமயச் சமுதாய ஒருங்கிணைப்புச் சாதனையாகும். ஆடம்பரமின்றியும் அடக்கமாகப் பொருள் விரயமின்றியும் நடத்தப் பெறும் இத்தகைய திருமணங்கள் ஆண்டுக்காண்டு பெருகி வருகின்றன.

இவ்விழாவின் போது வெள்ளித்தேர் திருவுலாவும் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றாம் நாள் பங்குனி உத்திர விழாவின்போது ஏகாம்பரர் சின்னகாஞ்சி புறப்பட்டுச் சென்று மூன்றாம் நாள் கட்டளை மண்டபத்தில் தங்குவார்; அங்கிருந்து விநாயகர், முருகர்ஆகியோருடன் வரதராசர் கோயில் வரையிலும் சென்று மீள்வார்.

பங்குனிஉத்திரவிழாவின்பதினான்காம் நாளில்திருமுறைப்பெருவிழாவும்நடைபெறுகிறது. திருமுறைகள் யானை மீது புறப்பட்டு இராச வீதிகளிலும் உலா வருதல் நடைபெறுகிறது. இரவின்போது ஓதுவார் மூர்த்திகளால் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தப்பெறுகிறது. திருப்பனந்தாள் மடத்து அறக்கட்டளைக்கு ஏற்ப யானை மீது திருமுறைகளின் புறப்பாடு நிகழ்கிறது. இவ்விழா தவிர, சித்திரை மாதத்தில் பாலூர்த் திருவிழா நடைபெறுகிறது. இக்கோயிலிலிருந்து சுவாமி புறப்பாடு நடைபெறும். பின் காஞ்சிக்கு அருகிலுள்ள பாலூரில் சுவாமி வீற்றிருக்க மிகச் சிறப்பான விழா ஒன்று அங்கு நடத்தப்பெறுகிறது.

பவித்திரோற்சவம் என்று குறிக்கப்படும் ஆறு நாள் திருவிழா பெரும்பாலும் ஆவணி மாதத்தில் நடைபெறுகிறது. இதன் நோக்கம், நாள்தோறும் நடைபெறும்

பூசைகளிலும் மற்ற ஆராதனைகளிலும் குற்றம் குறைகள் எவையேனும் ஏற்பட்டிருப்பின் அவற்றைத் தீர்த்துக்கொள்ளுதல் ஆகும். அவ்வமயம் வேள்வி முதலியவற்றை ஆற்றி வேதமந்திரங்களை உரிய முறையில் ஓதுவார்கள். சுவாமி பவித்திரமாலை சாத்தப் பெற்ற நிலையில் வழிபாட்டை ஏற்றுக்கொள்வார். புரட்டாசி மாதத்தில் இக்கோயில் அம்பாளுக்கு நவராத்திரித் திருவிழா ஒன்பது நாள்கள் நடைபெறுகிறது. முருகப் பெருமானுக்கென ஐப்பசி மாதத்தில் ஆறு நாள்கள் கந்தர் சஷ்டித் திருவிழா நடத்தப் பெறுகிறது. இவை தவிர, விநாயகர் சதுர்த்தித் திருவிழா ஒருநாள் மட்டும் கொண்டாடப்படுகிறது. கார்த்திகையில் சோமவாரமும் மார்கழியில் திருவாதிரை விழாவும் நடைபெறுகின்றன. திருவாதிரையின் போது நடராசர் சிறப்பாக இராச வீதிகள் அனைத்தின் வழியே ஊர்வலம் வருகிறார்.

இந்தத் திருவிழாக்களைத் தற்போது அனைத்துச் சமூகத்தினரும் ஒன்றுபட்டு நடத்துகிறார்கள். குறிப்பாகப் பங்குனி உத்திரத் திருவிழாவில் ஒவ்வொரு நாள் திருவிழாவையும் குறிப்பிட்ட ஒவ்வொரு சமூகம் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்துகிறது. ஒவ்வொரு விழாவும் மிகுந்த கவனத்துடனும், பேரன்போடும் முன்னரே வகுக்கப்பட்ட திட்டத்தின்படி நடத்தப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் அருளிய தேவாரப் பதிகங்களைக் கற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்காகக் காஞ்சிபுரத்தில் உரூபாய் 5,000 அறக்கட்டளையைப் பரிசுத் திட்டத்திற்கென 15.8.1948 ஆம் நாளில் காசிமடத்து அருள்நந்திதம்பிரான் சுவாமிகள் நிறுவினார்கள். திருவேகம்பத்தில் திருமுறைகளை ஓதிப் பரப்புவதற்குக் காஞ்சிபுரத்துத் திருக்கச்சி ஏகம்பன் உருத்திராக்கத் தேவார நிதிக்காக உரூபாய் 50,000 அறக்கட்டளையை 17.2.1955 ஆம் நாளில் அவர்கள் நிறுவினார்கள்.

கி.பி. 642 ஆம் ஆண்டு காஞ்சிக்கு வந்திருந்த சீனயாத்திரிகர் யுவான் சுவாங் காஞ்சியைப் பற்றிக் கீழ்க்காணுமாறு எழுதியுள்ளார். இது முற்காலத்துச் சிறப்பைக் காட்டுகிறது.

"நிலம் செழிப்பானது; நல்ல விளைவு தருவது; நாடு வெப்பமானது; மக்கள் அஞ்சா நெஞ்சினர்; உண்மைக்கு உறைவிடமானவர்; கற்றவர்களையும் உயர்ந்த கொள்கைகளையும் மதிப்பவர். நாட்டில் 100 சங்கிராமங்கள் அல்லது பௌத்த மடங்கள் இருக்கின்றன. சைவ வைணவ சமணக் கோயில்கள் 80 இருக்கின்றன. திகம்பர சமணர் பலர் திராவிட நாட்டில் இருக்கின்றனர் புத்தர் காஞ்சிக்கு வந்து பலரையும் பௌத்தராக்கியதாக இந்நாட்டில் கூறப்படுகிறது. அசோகன் திராவிட நாட்டில் பல தூபிகளை அமைத்தான். அவற்றுள் சில காஞ்சியைச் சுற்றிலும் பழுதுற்ற நிலையில் உள்ளன. காஞ்சி ஆறு கல் (மைல்) சுற்றளவு உடையது. அது கடற்கரை நோக்கி இருபது கல் (மைல்) விரிந்துள்ள நகரம். இந்தக் கரையிலிருந்து கப்பல்கள் இலங்கைக்குப் போகின்றன."

காஞ்சியிலுள்ள சிவன் கோயில்களில் அம்மன் கோயில்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அந்நாளில் சிவன் கோயில்களில் அம்பிகை சந்நிதி அமைக்கப்படவில்லை என்பதற்கு ஆதாரமாகக் காஞ்சிச் சிவன் கோயில்கள் விளங்குகின்றன.

இக்கோயிலில் வழிபாடாற்றி அம்மையார் முப்பத்திரண்டு அறங்களை[25] புரிந்தது பற்றித் தலபுராணம் கூறுகிறது. இம்முப்பத்திரண்டு அறங்களில் பல சமுதாயத்திற்கும் பிற உயிர்களுக்கும் நன்மை அளிப்பனவாக உள்ளன. இங்கு வழிபாடாற்றி இடக்கண் பார்வை பெற்ற சுந்தரர் வரலாறும், இங்குச் சிவவழிபாட்டில் ஈடுபட்டு முத்தியடைந்த திருக்குறிப்புத் தொண்டர், வேளாளர் சாக்கிய நாயனார், மன்னர் ஐயடிகள் காடவர் கோன் ஆகிய நாயன்மார்கள் அருள் பெற்றதும் சிவசக்தி துணை கொண்டுசிவனருள்பெறுதல்என்னும்சைவசித்தாந்தப்பேருண்மையையும்அறங்களின் மேன்மையையும் சாதி சமய வேறுபாடற்ற பண்பாட்டையும் மக்களிடையே பரப்பியுள்ளன. சைவ சந்தான ஆசிரியர்களின் திருவுருவங்கள் இக்கோயிலில் அருமையாக நிலைநாட்டப்பெற்றுள்ளன. இந்நிலை சைவசித்தாந்த நுட்பங்களை அறிந்து கொள்ள உதவுகிறது. இசை, சிற்பம், ஓவியம் ஆகியவற்றிற்கு இக்கோயிலின் இசை நிகழ்ச்சிகள்,சிற்பங்கள் ஆகியவைஊக்கம் அளித்துள்ளன. கோயில் வழிபாட்டுக்குத் தேவைப்படும் பொருள்களின் பெருக்கத்திற்கும் வாணிபத்திற்கும் இக்கோயில் இடம் வகுத்ததால் மக்களின் பொருளாதார வளம் ஓங்கிற்று. தற்போது காஞ்சிபுரம் வாணிப மையமாக முன்னேறியுள்ளது இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது. கல்வெட்டுகளே தெரிவித்துள்ளது போன்று பல பசுக்கள் கோயிலுக்கு அளிக்கப்பட்டதால் அவற்றைப் பராமரிப்பதன் முறையில் பசு வளர்த்தலிலும், பால் விற்பனையிலும் பலர் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டது. கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களைப் பயிரிடுவதில் பலர் ஈடுபட்டனர்.

பங்குனி உத்திர நாள் ஏகாம்பர நாதர் காமாட்சியம்மை திருமணத் திருவிழா நாளில் ஏகாம்பர நாதர் கோயிலில் இங்குள்ள மக்கள் சாதி வேறுபாடற்ற முறையில்

25. முப்பத்திரண்டு அறங்கள் :– 1. ஐவகை வேள்வி, 2. வறியோர்க்கீதல், 3 துறந்தோர்க்கு மடம் அமைத்துக் கொடுத்தல், 4. தண்ணீர்ப்பந்தல் அமைத்துத் தருதல், 5. சோலை அமைத்தல், 6. இரப்போர், குருடர், உடலுறுப்புக்குறைவு காரணமாகத் துன்புறுவோர் ஆகியோர்களைக் காப்பாற்றுதல், 7. கொடிய நோய்களைப் போக்குவதற்கு மருந்தளித்தல், 8. திக்கற்ற குழந்தைகளை வளர்த்தல், 9. சுண்ணாம்பு வழங்குதல், 10. பாக்கு வெற்றிலையளித்தல், 11. தலைக்குப் பூசிக்கொள்ள எண்ணெய் வழங்குதல், 12. முழுகுவதற்கு அரைப்புப்பொடிகள் வழங்குதல், 13. படுக்கையளித்தல், 14. நிலம் வழங்குதல், 15. ஆவினங்களை வழங்குதல், 16. மகவு பெறுவித்தல், 17. திருமணம் செய்வித்து உதவுதல், 18, விளக்கு அமைத்தல், 19. தீராக்கடன்களைத் தீர்த்து வைத்தல், 20. சிவனடியார்க்கு வேண்டுவன அளித்தல், 21. உருத்திராக்கம் அளித்தல், 22. சிவாகமங்கள், சிவபுராணங்கள் ஆகியவற்றை ஓதுவித்தல், 23. திருநீறு அளித்தல், 24. சிவப்பூசைக்காகப் பொருள்கள் அளித்தல், 25. சிவ உபதேசம் செய்தல், 26. அபயம் அளித்தல், 27. பிறர் துயர் நீக்கல், 28. விலை கொடுத்து உயிர் காத்தல், 29. விலங்கினங்களுக்கு உணவளித்தல், 30. ஆதுல சாலை அமைத்தல், 31 அறவை சாலை அமைத்தல், 32. அநாதைகளுக்குச் சோறு அளித்தல் ஆகியவை.

தங்கள் குடும்பத் திருமணங்களை அடக்கமான முறையில் வீண்செலவின்றிப் பன்னெடுங்காலமாக நடத்திக்கொண்டு வரும் வழக்கம் சமுதாயத்தில் மாபெரும் சாதனையை நிலை நாட்டியுள்ளது.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிருவாக அலுவலரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் புதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 4,89,000/-

இத்திருக்கோயிலைப்பற்றிக் கூறும் நூல்களின் விவரங்கள் :

| சைவத் திருமுறைகள் | திருமுறை | பதிகம் | |
|---|---|---|---|
| திருஞானசம்பந்தர் | 1 | 133 | |
| | 2 | 12 | |
| | 3 | 42 | |
| திருநாவுக்கரசு நாயனார் | 4 | 7 | திருநாவுக்கரசு நாயனாரின் பிறபதிகங்களிலுள்ள பாடல்களில் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் குறிக்கப் படுகிறது. எடுத்துக் காட்டுகள்:- நான்காம் திருமுறை 9ஆம் பாடல்; ஆறாம் திருமுறை8ஆம் பாடல். |
| | 4 | 44 | |
| | 4 | 99 | |
| | 5 | 47 – 48 | |
| | 6 | 64, 65 | |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | 7 | 61 | |

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் க்ஷேத்திர வெண்பா 1பாடல்

11ஆம் திருமுறை பட்டினத்து அடிகள் 11ஆம்திருமுறை திருவேகம்பமுடையார் திருவந்தாதி 100 பாடல்கள்

12ஆம்திருமுறை பெரியபுராணம் திருஞானசம்பந்தர் புராணம் பாடல்கள் எண்கள் 985 - 999

திருநாவுகரசு நாயனார் ,, ,, 321 – 329

சுந்தரமூர்த்தி சுவாமிகள் 183 – 190

ஏயர்கோன் கலிக்காம நாயனார்ப் புராணம்

### காஞ்சிபுரம் புதுப்பாளையம்

# ஏகாம்பரநாதர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் புதுப்பாளையத் தெருவின் தென்கோடியில் உருத்திரேசம் என்னும் சிவன் கோயிலுக்குத் தெற்கில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மெய்கண்டார் திருமடத்தின் வளாகத்தில் உள்ளது.

தெற்கு நோக்கிய இச்சந்நிதியின் வலப்புறம் மாதவச் சிவஞான முனிவரின் திருவுருவம் உள்ளது. முன்புறம் இங்கு ஏகாம்பரநாதர் சந்நிதிசிறந்து விளங்குகிறது. பொதுவான மகாமண்டபம் உள்ளது. இங்கு பூசை நடத்தப் பெறுகிறது; திருவாவடுதுறை ஆதீனத்துத் திருமடத்துத் துறவிகளால் நிர்வாகம் செய்யப்படுகின்றது. இதன் முன்புறம் பெரியதோட்டம் உள்ளது. அதன் கிழக்கில் திருவாவடுதுறைத்திரு மடாலயக்கிளை உள்ளது. இம்மடத்தைச்சேர்ந்த துறவியர் ஒருவர் இங்கு இதனை நிர்வாகம் செய்துவருகின்றார். திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறைஆதீனத்து மாதவச்சிவஞான சுவாமிகள் வழிபட்ட தலம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

### காஞ்சிபுரம்

# ஓணகாந்தன் தளி - சலந்தரேசுவரம்

இக்கோயில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து அரக்கோணம் செல்லும் வழியில் பஞ்சுப்பேட்டையில் சாலைக்கு வடக்கே உயர்ந்த மேட்டின் மீது கிழக்கு நோக்கியவாறு 50 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

பாணாசுரன் என்பவனின் சேனாதிபதிகளான ஓணன், காந்தன் என்னும் இருவர் தங்கள் பெயரில் இரண்டு சிவலிங்கங்களை நிறுவி வழிபட்டனர் அச்சிவலிங்கங்களே ஓணேச காந்தேசர் என விளங்கும் காட்சியைக் காண்கிறோம்.

இரண்டு கோயிலுக்குள் பொதுவான மூன்று ராசகோபுரம் உள்ளது. இனி இதனுட் சென்று எதிரே காட்சிதரும் வயிறு தாரிப்பிள்ளையாரைக் காணலாம். இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் கணபதியேல் வயிறுதாரி என்று குறிக்கப்பட்டுள்ளார். முக்காலத்தில் இவருடைய வயிற்றில் காதுவைத்துக் கேட்டால் கடல் முழங்குவது போன்ற ஒலி கேட்கும் என்று கூறுகிறனர்.

இனி தென்படுதியில் இருக்கும் ஓணேசுவரரை வணங்கி வலமாக வருகையில் முருகப்பெருமானைக் காணலாம். இனி வண்ணை வடக்குப் பகுதியில் உள்ள சிவலிங்கம் காந்தேசுவரரைக் கண்டு தொழலாம்.

இவ்விரண்டு மூர்த்திகளுக்கும் எதிரே தனித்தனியாக நந்தி, பலிபீடம் ஆகியவை உள்ளன.

இக்கருவறைகள் ஒவ்வொன்றின் மீதும் 3 தளங்களைக் கொண்ட விமானங்கள் ஒற்றைக் கலசத்துடன் திகழ்கின்றன.

இங்கு ஒருகாலப்பூசை குருக்களால் நடத்தப்படுகிறது. இக்கோயில் தனியார் நிர்வாகத்தின் கீழ்த் தூய்மையுடன் பராமரிக்கப்படுகின்றது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 300 ஆகும்.

## காஞ்சிபுரம்

# ஐராவதீசுவரர் கோயில்

இக்கோயில் பெரிய காஞ்சிபுரம் இராசவீதியில் கச்சபேசுவரர் கோயிலுக்கு எதிரே அமைந்துள்ளது.

கோபுரவாயிலைக் கடந்ததும் தென்மேற்குப் பக்கத்தில் விநாயகர் சந்நிதியைக் காணலாம். அடுத்து நந்திதேவர் சந்நிதி உள்ளது. ஐராவதீசுவரரின் கருவறைக்கு வடக்கில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. கருவறையில் ஐராவதீசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறுள்ளார். சிவலிங்கம் பதினாறு பட்டைகளையுடையது. கருவறை சதுரமானது. சிவலிங்கத்தின் பின்புறச்சுவரில் சோமாசுகந்தர் வடிவம் காணப்படுகிறது. வடக்குச், சுவரிலும் தெற்குச் சுவரிலும் பிரமதேவரும் பிற தேவர்களும் சிவலிங்கத்தை வழிபடுவது போன்ற சிற்பங்கள் உள்ளன. கருவறையின் வெளியே தேவ கோட்டங்களில் தெற்குமுதல் வடக்கு வரை முறையே தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இக்கோயிலின் சிறிய இராசகோபுரம் மூன்று தளங்களையும் மூன்று கலசங்களையும் பெற்றுள்ளது.

கருவறையின் முன்புறமுள்ள சிறிய உள்மண்டபம் இரண்டு அரைத்தூண்களைக் கொண்டுள்ளது. இதன் பீடத்தின் பட்டிகை கருங்கல்லாலானது.

கோபுரத்தின் இரண்டாவது தளத்தில் மேற்கு நோக்கியவாறு சிவனின் சிற்ப வடிவம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது தளத்தில் நான்கு மூலைகளிலும் சிகரத்தைத் தாங்கியவாறு நான்கு பெண்களின் சிற்பங்கள் உள்ளன.

உள்மண்டபத்துத்தூண்களில் சிங்கங்கள் அமர்ந்த நிலையில் ஒன்றையொன்று பார்த்தவாறு இருமருங்கிலும் உள்ளன. உள்மண்டபத்தின் உட்புற வடக்குச்சுவரில் இந்திரன் சிவலிங்கம் அமைத்து வழிபடுவது போன்ற சிற்பம் காணப்படுகிறது. அதன் மீது உமாதேவியாருடன் சிவன் அருள்பாலிப்பது போன்ற சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. உள்மண்டபத்தின் உட்புற வடக்குச்சுவரில் ஊர்த்துவதாண்டவம் செதுக்கப்பட்டுள்ளது. துவாரபாலகர்கள் உள்மண்டபத்திற்குள்ளும் வெளிப்புறமும் உள்ளனர். இங்குக் கருவறையில் வெளிச்சுவரின் நான்கு மூலைகளிலும் வீரர்களுடன் கூடிய சிங்கங்களின் உருவங்கள் நிமிர்ந்து நிற்கின்றன.

இக்கோயிலின் நிருவாகம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ்க் கச்சபேசுவரர் கோயில் நிருவாகத்தின் கீழ் நடைபெறுகிறது.

நாட்பூசை காலையில் மட்டுமே நடைபெறுகிறது. சிவராத்தி நாளில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன.

காஞ்சிபுரம்

# கங்கணீசுவரர் கோயில்

இச்சிறிய கோயில் காஞ்சிபுரம் பெரிய கம்மாளர் தெருவில் கிழக்கு நோக்கிய வாறு அமைந்துள்ளது.

பார்வதி, ஐப்பசி மாதத்து அமரபட்சம், ஏகாதசிதிதி, பூரநட்சத்திரத்தில் இங்கு இறைவனைப் பூசித்துக் கங்கணமணிந்தார். அது காரணமாக இறைவனுக்குக் கங்கணீசுவரர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இக்கோயில் சிறிது பாதாளத்தில் காணப்படுவதால் இவ்வீசுவரர் பாதாள ஈசுவரர் என மக்களால் அழைக்கப்பெறுகிறார்.

கருவறையில் கங்கணீசுவரர் சிவலிங்க வடிவில் காட்சி அளிக்கிறார். அடுத்து விநாயகரும், வள்ளி தெய்வயானையுடன் முருகரும் கருவறை வாயிலின் இருமருங்கிலும் உள்ளனர். வாயிலின் இருமருங்கிலும் துவாரபாலகர்களின் சிற்பங்களும் வாயில் மீது கசலட்சுமி சிற்பமும் உள்ளன வடக்கு நுழைவாயிலின் மீது சிவபெருமானைக் காமாட்சி வழிபடும் சிற்பமும் கந்தருவர்கள் சிற்பங்களும் உள்ளன.

கருவறை உள்மண்டபத்தில் விநாயகர் சிலை தென்மேற்குப் பகுதியிலும் நவக்கிரகங்களின் சந்நிதி வடகிழக்கிலுமுள்ளன. இரண்டு தூண்களையுடைய உள் மண்டபத்தில் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் உள்ளன.

இக்கோயிலின் விமானம் ஒரு தளத்தையும் ஒரு கலசத்தையும் கொண்டுள்ளது. நான்கு பெரிய நாசிகளும் நான்கு சிறிய நாசிகளும் உள்ளன. கிரீவக் கோட்டத்தில் தெற்கு முதல் கிழக்கு வரை முறையே தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், சிவபெருமான் ஆகியோர் சிற்பங்களும் உள்ளன. வடக்கு நுழைவாயிலின் முகப்பில் இடப வாகனத்தில் சிவனும் பார்வதியும் காட்சி அளிக்கின்றனர். இருமருங்கிலும் இடபதேவர் திருவுருவங்களும் அதிகார நந்தி திருவுருவமும் உள்ளன.

கருவறைக் கோட்டங்களில் தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. சண்டேசுவரர் சிலை மட்டும் உள்ளது.

இக்கோயிலில் காலையில் மட்டும் பூசை நடைபெறுகிறது. விநாயகர் சதுர்த்தி, சிவராத்திரி முதலிய நாள்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன.

காஞ்சிபுரம் ஆசாரி பரம்பரைக்குச் சொந்தமாக இக்கோயில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரம்

# கெங்காதீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் சர்வதீர்த்தக்கரையின் கிழக்கில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

சர்வ தீர்த்தத்தின் கிழக்குக்கரையில் வருணன் கங்காதேவியோடு சேர்ந்து இறைவனைப் பூசித்து நீருக்கும் நீர்வாழ் உயிர்களுக்கும் தலைவனாக விளங்கினான். ஆதலால் இத்தலம் கங்காதரேச்சரம் என்னும் பெயர் பெற்றது.

இக்கோயிலின் கருவறையை அடுத்துச்சிறியஉள்மண்டபமும் அதன்முன்புறம் சிறிய மண்டபமும் காணப்படுகின்றன. உள்மண்டபம் நான்கு எண்பட்டைச் சதுர அமைப்புடைய தூண்களைக் கொண்டது. கருவறையையும் உள்மண்டபத்தையும் சுற்றச் சிறிய பிராகாரம் உள்ளது. இக்கோயிலில் சிறிது காலத்திற்கு முன்பு இதன் பிராகாரத்தில் சந்நிதிகள் இருந்திருக்கக்கூடும். தெற்கில் காணப்படும் வாயில் ஒன்று தற்போது மூடப்பட்டுள்ளது. உள்மண்டபத்தில் விநாயகரும் சுப்பிரமணியரும் எழுந்தருளியுள்ளார்; நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் காணப்படுகின்றன.

ஒரு தளத்தையுடைய இக்கோயிலின் விமானத்தின் சிகரத்தில் நான்கு பெரிய நாசிகளும் நான்கு சிறிய நாசிகளும் ஒரு கலசமும் காணப்படுகின்றன. திசைக்கு இரண்டாக எட்டுக் கோபுரத் தாங்கிகளின் சிற்பங்கள் கிரீவத்தில் அமைந்திருக்கின்றன. கிரீவக் கோட்டங்களில் தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை

ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. இடபதேவரின் உருவங்கள் எட்டு மூலைகளிலும் அமைந்திருக்கின்றன. அவற்றிடையே தேவர்களின் வழிபடும் சிற்பங்கள் உள்ளன.

பூசைகளின்றியும் பாதுகாப்பின்றியும் இக்கோயில் பகுதியும் அதன் சுற்றுப் புறமும்சீர்குலைந்து வருகின்றன.

காஞ்சிபுரம்

# கங்கை கொண்டான் மண்டபம்

பெரிய காஞ்சிபுரம் காமகோடி சங்கராச்சாரியார் திருமடத்திற்கு எதிரில் தெற்கு நோக்கியவாறு இம்மண்டபம் 20 மீட்டர் நீளமும் 20 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது.

காஞ்சியிலுள்ள கோயில்களுக்கு வெளியில் இருக்கின்ற மண்டபங்களுள் இதுவே பெரியது. சின்ன காஞ்சிபுரம் வரதராசர் உற்சவக் காலங்களில் இங்கு நாள் தோறும் ஒருமணி நேர அளவில் அவர் தங்கிச் செல்வார்.

சோழமன்னர் ஒருவர் வரதராசர் கருடசேவைக்குக் காஞ்சிபுரத்திற்குவந்திருந்த போது அதனைக் கண்டு களித்தார். இடையில் வரதராசர் தங்கிச் செல்ல ஒரு மண்டபத்தைக் கட்டினார். தாம் கங்கையாற்றுப் பகுதியில் எய்திய வெற்றியை முன்னிட்டு இம்மண்டபத்திற்குக் கங்கைகொண்டான் மண்டபம் என்னும் பெயர் சூட்டினார். இதன் அடியொற்றித் தமிழகத்தின் பல பகுதிகளிலும் திருமால் கோயில் மாடவீதியில் கங்கைகொண்டான் மண்டபம் என்னும் பெயரில் ஒருமண்டபம் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

காஞ்சியிலுள்ள இம்மண்டபத்தில 3 மீட்டர் உயரமுள்ள கல்லாலான வீர ஆஞ்சநேயர் திருவுருவமுள்ளது. அதன் வலப்புறத்துத் திருக்கை உயர்ந்து அபய மளிக்கும் முறையிலும், இடப்புறத்துக்கை தாமரை மலரொன்றைப்பற்றியமுறையில் தொடைமீதும் உள்ளன. அதன் வலப்புறம் இதே நிலையிலான ஒரு மீட்டர் உயர முள்ள ஆஞ்சநேயர் சிலையுள்ளது. இக்கோயிலில் ஒருவேளைப் பூசை நடைபெறு கிறது.

சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் மக்கள் திரளாக இங்கு வருகிறார்கள். இக்கோயிலின்குடைசெய்வோர் இம்மண்டபத்தில்தங்கிக்குடை வேலைசெய்துவருகின்றனர். முன்னறிவிப்புகளின் பேரில் இவர்கள் தரமான குடைகள் செய்து தமிழகத்தின் திருக்கோயில்கள் பலவற்றிற்கு அனுப்பி வருகின்றார்கள்.

காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் விழாவையொட்டி இங்குப் பெரிய பந்தல் அமைக்கப்படுகின்றது. விழாவில் சுவாமி இங்குவந்து அருள்பாலிக்கின்றார் போர்வை களைதல் விழா இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இக்கோயி லின் நிருவாகம் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலாரிடம் உள்ளது.

## காஞ்சிபுரம்

# கச்சபேசர் கோயில்

காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள பண்டைக்காலச் சிறப்புடைய கோயில்களில் கச்சபேசர் திருக்கோயிலும் ஒன்றாகும். இந்நகரின் இராச வீதியை அடுத்துக் கிழக்கு மேற்குச் சாலையிலே 92.25 மீட்டர் நீளமும், 83.25 மீட்டர் அகலமும் கொண்ட 7 ஏக்கர் நிலப்பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது.

கச்சபம் + ஈசர் என்னும் இருசொற்களும் சேர, கச்சபேசர் என்னும் பெயர் அமைந்தது. கச்சேபம் என்பது ஆமையைக் குறிக்கிறது. இங்குத் திருமால் ஆமை வடிவில் சிவபெருமானை வழிபட்டார். இவ்வகையில் இங்கு எழுந்தருளியுள்ள ஈசர் கச்சபேசர் என்னும் பெயரில் திகழ்கிறார்.

முன்னொரு காலத்தில் அசுரர்களுக்கும் தேவர்களுக்குமிடையே நீண்டதொரு போர் மூண்டது. மரணத்தைத் தவிர்க்கும் அமுதம்உண்ணவேண்டுமெனத்தேவர்கள் விரும்பி, இதற்காகப் பின்பற்றப்படத்தக்க வழிகான அவர்கள் பிரமதேவருடன் திருமாலிடம் சென்று அவரது உதவியை நாடினார்கள். இதற்கு இசைந்த திருமால் வகுத்த ஏற்பாட்டிற்கேற்ப, பாற்கடலிலிருந்து அமுதம் பெற அக்கடலைக் கடைய, மந்தரமலை மத்தாகவும் ஆயிரம் நாவுடைய வாசுகி என்றும் பாம்பு கயிறாகவும் பயன்படுத்தப்பட்டன. வாசுகியின் வால்புறம் தேவர்களும், தலைப்புறம் அசுரர்களும் நின்று பாற்கடலைக் கடைத்தபோது, மந்திரமலையாகிய மத்து கடலில் ஆழ்ந்து விடாமல் இருக்கத் திருமால் ஆமை வடிவில் அம்மத்தைத் தாங்கிக் கொண்டார். தான் கயிறாகப் பயன்படுத்தப்பட்டது காரணமாகத் தனக்கு ஏற்பட்ட வருத்தம் தாங்காது வாசுகி தன்னிடமிருந்த நஞ்சை உமிழ்ந்தது. அதே சமயத்தில் கடலிலிருந்தும் நஞ்சு கிளம்பிற்று. அவையிரண்டும் ஒன்று சேர்ந்து அண்டங்கள் அனைத்தையும் அழிக்கும் ஆற்றல் பெற்றதை உணர்ந்த தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, அவர் அந்த நஞ்சையுண்டு அனைவரையும் காத்தருளினார். ஆனால், திருப்பாற்கடலைக் கடையத் தாம் ஆமை வடிவில் உதவி செய்ததைப் பெரிதாகக் கருதித் திருமால் அக் கடலையே கலக்கினார். இதனால் பேரிடர் ஏற்பட்டது[1]. இந்த இடரினின்றும் உயிர்

1. காஞ்சிப்புராணம் – சிவஞானமுனிவர் – கச்சபேசப்படலம் – 1

களைக் காப்பாற்றுவதற்காகச் சிவபெருமான் அந்த ஆமையின் உயிரை விரைவினில் போக்கி, அதன் ஓட்டினைத் தனது வெண்தலை மாலை நடுவில் பொருத்திக்கொண்டார்.[2] இக்குற்றம் நீங்கிட, அவர்மீள உய்வு பெறுகிறார்.

கடலைக் கலக்கித் தாம் இடர் விளைவித்தது பெருங்குற்றம் என உணர்ந்த திருமால், அக்குற்றம் நீங்கிடக் காஞ்சிக்குப் போந்து சோதி இலிங்கத்திற்கு வழிபாடு செய்து, பல காலம் குறையிரந்து துதி செய்தபோது, அவர்முன் சிவபெருமான் இடப வாகனத்தில் காட்சியளித்தார். அப்பெருமானைத் திருமால் இறைஞ்சிப் போற்றித் தமக்கு இடையீடின்றி வைகுந்தப் பதவி நிலைத்திட வேண்டுமென்றும், தாம் கச்ச பேசத்தில் என்றும் வழிபட இயலுமாறு உமையம்மையோடு கச்சபேசத்தில் வீற்றிருக்க வேண்டுமென்றும் சிவபெருமானிடம் வேண்டினார். சிவபெருமானும் அவ்வாறே அருள்புரிந்தார்.[3]

இங்குத் திருமால் தவிர விநாயகர், துர்க்கை, சரசுவதி, அய்யனார், வயிரவர், ஆதித்தன் ஆகியோரும் கச்சபேசரை வழிபட்டனர். இக்கோயிலின் வெளிப் பிர காரத்தில் தென்மேற்கில் 3 மீட்டர் சதுரப் பரப்பில் நான்கு திசைகளிலும் எழுப்பபட்ட சுவர்களால் பாதுகாக்கப்பட்ட நிலையில் இக்கோயிலின் "பலாச தலவிருட்சம்" செழிப் பான நிலையில் இருக்கிறது. இதன் சுற்றளவு மூன்று மீட்டராகும்; இம்மரத்தின் உயரம் ஆறு மீட்டராகும். இம்மரத்தின் சமித்துகள் வேள்விகளில் தீ ஓம்புதலுக்காகப் பயன்படுகின்றன. இதன் அடியில் ஆமைவடிவில் திருமால் சிவபெருமானைப் பூசிக்கும் பலகைச் சிற்பம் உள்ளது. இக்கோயிலின் கோபுர வாயிலைக் கடந்து வெளிப்பிராகாரத்தின் வழியாக வலம் வரும்போது கிழக்கில் துர்க்கை அம்மன் கோயி லின் தெற்கு நோக்கிய சந்நிதியைக் காணலாம். இந்தக் கோயிலின் முன்புறத்தில் 10 மீட்டர் நீளமும் 9 மீட்டர் அகலமும் கொண்டு 14 தூண்களுடன் ஒரு முன்மண்டபம் உள்ளது.

அடுத்து வயிரவர் சந்நிதி தனிச் சந்நிதியாகத் துர்க்கையம்மன் சந்நிதிக்குத் தெற்கே 3.5 மீட்டர் நீளமும் 2.5 மீட்டர் அகலமும் கொண்டு மேற்கு நோக்கிய வாறு அமைந்துள்ளது. தொடர்ந்துள்ள சிறுகோயிலில் சூரியமூர்த்தி 3 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் நின்ற கோலத்தில் மேற்கு நோக்கிய வண்ணம் உள்ளார். கச்சபேசர் கோயில் உட்புற வாயிலைச் சார்ந்த சுவரோடு இணைந்துள்ள சந்நிதி அய்யனார் சந்நிதியாகும். துர்க்கை, வயிரவர், சூரியமூர்த்தி ஆகியோர்கள் சந்நிதிகளுக்கு மேற்கிலும், அய்யனார் சந்நிதிக்குக் கிழக்கிலுமுள்ள திறந்தவெளியில் வடக்கு நோக்கி விநாயகர் அமர்ந்துள்ளார். இங்கு முன்மண்டபம் 10.14 மீட்டர் நீளமும், 8.5 மீட்டர் அகலமும் நான்கு தூண்களும் கொண்ட 42 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. துர்க்கை, வயிரவர், சூரியமூர்த்தி அய்யனார்

2. திருஞானசம்பந்தர் தேவாரம் – கோளறுபதிகம் – இரண்டாம் பாடல்
3 காஞ்சிப்புராணம் – கச்சபேசப் படலம் – 6
,, – கச்சபேசப் படலம் – 9–11

ஆகிய நான்கு சந்நிதிகளுக்கு மையத்தில் ஐந்தாவது சந்நிதியாகஇச்சந்நிதி அமைந்துள்ளதால் இங்கு வீற்றிருக்கும் பெருமான் பஞ்சசந்தி விநாயகர் என்னும் பெயரில் விளங்குகிறார். இக்கோயிலின் தென்மேற்கில், திருமால் வழிபட்ட பொய்யாமொழி கணபதி சந்நிதி 3 மீட்டர் சதுரப்பரப்பில் உள்ளது. இவருக்குச் சத்திய மொழி விநாயகர் என்னும் பெயரும் உண்டு.

கோயிலினுள்ள சூர்ய தீர்த்தக்கரையின் மேற்குப் பகுதியில் இட்டசித்தி தீர்த்தம் உள்ளது. வடமேற்குப் பகுதியில் நாகதேவதைகள் சந்நிதி மேடையில் அமைத்துள்ளது. பிள்ளைப் பேறுவேண்டி நூற்றுக்கணக்காக நாகப் பிரதிட்டைகள் இங்குச் செய்து வைத்துள்ளார்கள். மற்றும் இங்குள்ள மேடையில் அரசமரமும் வேம்பும் இணைந்து செழித்து வளர்ந்துள்ளன. இதனருகில் இட்டசச்தீச்சரம் என்னும் சிறு கோயில் உள்ளது. சிவலிங்க வடிவில் திகழும் இட்ட சித்தீசத்தின் பெருமையைக் காஞ்சிப்புராணம் விரிவாக எடுத்துக் கூறுகிறது. ஒருவருக்கு விருப்பமானவற்றை அளிப்பவர் இட்டசித்தீசர் ஆவார் என்பது தெரிவிக்கப்படுகிறது

காசிப முனிவர் பரம்பரையில் உதித்த் ததிசி முனிவர் குபன் என்னும் மன்னனுடன் நெருங்கிப் பழகி வந்த காலத்தில் ஒரு நாள், இருவருக்கும் இடையே தோன்றிய சொற்போர் மற்போராக மாறிற்று. இறுதியில் மன்னன் தன் வச்சிராயுதத்தால் முனிவரை வெட்டினான். அப்போது அம்முனிவர் சுக்கிரன் பெயரைக் கூறிக் கொண்டே வீழ்ந்தார். இதற்குச் செவிசாய்த்த சுக்கிரன் விரைந்து வந்து முனிவர் உடல் பகுதிகளை ஒன்று சேர்த்து மந்திரம் ஓதி முனிவரை உயிர்ப்பித்தார்.[4] பின்னர் இட்டசித்தீசுவரைத் தாம் வழிபட்டு அடைந்த நற்பேற்றைப் பற்றியும், சிவ பெருமானைப் போற்றி வழிபட்டு அவ்வகையில் பல நன்மைகளையடைந்த மற்றவர்களைப் பற்றியும் கச்சபேசர் கோயிலுக்கும், இட்டசித்தீசத்துக்கும் இடையிலுள்ள இட்டசித்திதீர்த்தத்தின் மகிமையைப் பற்றியும் விரிவாகமுனிவருக்குச் சுக்கிரன் எடுத்துரைத்தார். மேலும், இறந்தவர்களை எழுப்பித் தரத்தக்க மந்திரத்தையும் உரைத்தார்.[5] பின்னர் இவ்வாறு இட்டசித்தீசத்தில் வழிபாடு ஆற்றி ஆற்றல் பெற்றதும் முனிவர்குபமன்னனைத்தாக்கினார். அம்மன்னன் வேண்டுகோளுக்கிரங்கி உதவ முன்வந்த திருமால் பின் வாங்க நேரிட்டது. இதுமுதல் இத்தலத்தின் பெருமை ஓங்கிற்று. இட்டசித்தீச்சரக் கோயிலுக்கு 30 மீட்டர் நீளமும், 7.25 மீட்டர் அகலமும் கொண்ட பிராகாரம் முன்புறம் உள்ளது. இட்டசித்தீசர் கோயில் 16 மீட்டர் நீளமும் 7.30 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. வடபுறத்தில் உள்ள பிராகாரத்தின் அகலம் 1.75 மீட்டராகும். இக்கோயிலின் தென்புறச் சுவரில் தட்சிணாமூர்த்தி, விநாயகர் ஆகியோர் உருவங்களும், வடபுறத்தில் துர்க்கை, சண்டேசுவரர் சந்நிதிகளும் உள்ளன. இக்கோயிலின் முன் பிராகாரத்தையடுத்து மேற்கில் 20 மீட்டர் நீளமும் 12 மீட்டர் அகலமும் கொண்ட நந்தவனம் உள்ளது. ஆனால் இது பராமரிக்கப்படாத நிலையில் உள்ளது. இட்டசித்தீசர் வழிபாடு முதலியவை கச்சபேசர்

4. காஞ்சிப்புராணம் - இட்டசித்தீச்சரப் படலம் – 7
5. காஞ்சிப்புராணம் - இட்டசித்தீச்சரப் படலம் - 22

தீர்த்தம் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்திலே வடக்கு முதல வலமாக வருமிடந்து வடபுறம் ''தரும தீர்த்தம்'' எனவும் கிழக்குப் பகுதிக்கு ''சித்த தீர்த்தம் எனவும் தென் பகுதி'' காம தீர்த்தம் எனவும் மேற்குப் பகுதி ''முத்தி தீர்த்தம்'' எனவும் நான்கு தீர்த்தங்களாக உள்ளன. அந்த அந்த திக்கில் இறங்கி அதனதில் மூழ்குவோர் அந்த அந்தப் பயன் பெறுகிறார் எனச் சொல்லப்படுகிறது. தீர்த்தத்தின் மேற்குக் கரையில் ஜலகண்டேசர்கோயில் உள்ளது.இங்குள்ள தீர்த்தத்தின் ஆழம் 5மீட்டராகும் இது ஆர்ய தீர்த்தம் எனவும் வழங்கப்பெறும் இக்கோயிலின் இராஜகோபுரம் 121 2 மீட்டர் நீளமும் 8.60 மீட்டர் அகலமும் கொண்டு ஐந்து தலங்களோடு 30 மீட்டர் உயரம் கொண்டதாய்த் திகழ்கிறது இதன் உச்சியில் ஏழுக்கலசங்கள், இருக்கின்றன. சிற்பங்கள்மிகுந்து காணப்படும் இக்கோபுரம் சோழர் காலக்கட்டடக் கலையை விளக்கும் வண்ணம் உள்ளது.

இக்கோயிலின் கருவறைக்கு நேர் கிழக்கில் சிறியதொரு கோபுர அமைப்பு காணப்படுகிறது. இதன வாயில் கதவு இரும்புக் கம்பியால் அமைக்கப்பட்டுள்ள து. கச்சபேசர் சந்நிதி வாயிலின் மேலுள்ள கோபுரம் ஐந்து அடுக்குகளைக் கொண்டு உள்ளது. ஐந்து கலசங்கள் இக்கோபுரத்தின் உச்சியில் அணி செய்கின்றன.

இக்கோயிலுக்கு இரு பிராகாரங்கள் உண்டு. வெளிப்பிராகாரம் தென்வடலில் 92.25 மீட்டர் நீளமும், கிழமேல் 8?.23 மீட்டர் நீளமும் கொண்டுள்ளது. பிராகார பாதையின் அகலம் நான்கு திசைகளிலும் வேறுபடுகிறது. கோயிலுக்கு முன்புறப் பிராகாரம் 27.40 மீட்டர் அகலமும் சந்நிதிக்குத்தென்புறப்பிராகாரம் 7மீட்டர்அகலமும் அடுத்த சந்நிதிக்குப் பின்புறமுள்ள (மேற்குப்புறம்) பிராகாரம் 8,5 மீட்டர் அகலமும் வடக்குப் புறமுள்ள பிராகாரம் 8 மீட்டர் அகலமும் கொண்டுள்ளன. கோயிலின் உட் பிராகாரம் தென்வடலாக 19 மீட்டர் நீளமும், கிழமேலாக ,5 மீட்டர் நீளமும் கொண் டுள்ளது. பிராகாரத்தின் அகலம் 4.5 மீட்டராகும்.

கச்சபேசர் கோயில் வாயில் மண்டபம் 9 மீட்டர் நீளமும். 9 மீட்டர் அகலமும் 17 மீட்டர் உயரமும் உடையது. இது 16 தூண்களைக் கொண்டுள்ளது. கோயிலின் கருவறைக்கு நேர் எதிரில் கீழ்க்காணும் மண்டபங்கள் உள்ளன. (1) 5 மீட்டர் சதுரப் பரப்பிலுள்ள முன் மண்டபம் (2) 6 மீட்டர் சதுரப்பரப்பிலுள்ள மண்டபம். (3) 6 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் கொண்ட நீண்ட சதுர மண்டபம். (4) 10 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் கொண்ட நீண்ட சதுர மண்டபம.

இந்நான்கு மண்டபங்களை அடுத்து கிழக்கில் 30.80 மீட்டர் நீளமும், 20.5 மீட்டர் அகலமும் கொண்ட முன் மண்டபம் உள்ளது. இதில் மொத்தம் 55 தூண்கள் உள்ளன.இந்த முன்மண்டபத்துக்கு இடப்புறத்தில திறந்த வெளிக்கு அப்பால் 21.10 மீட்டர்நீளமும்,18.15மீட்டர் அகலமும் கொண்ட ஒரு முற்றம்ஒருபகுதிகிழமேலாகவும், மற்றப் பகுதி தென் வடலாகவும் செல்கின்றன. இந்த முற்றம் பயன் படுத்தபபடாத நிலையில் உள்ளது. உற்சவமூர்த்தி மண்டபம்15மீட்டர் நீளமும் 13 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. தூண்களின் உயரம் 5 மீட்டராகும். உற்சவ மூர்த்தி மண்டபத்தில்

கச்சபேசர் உலாத்திருவுருவமும், சுந்தராம்பாள் தேவி உற்சவத்திருவுருவமும் உள்ளன.

இக்கோயிலுக்குரிய நந்தவனங்கள் மூன்றாகும். இட்டசித்தீசுவரர் கோயிலின் முன்பிராகாரத்தை அடுத்து மேற்கில் 20 மீட்டர் நீளமும், 12 மீட்டர் அகலமும் உடைய நந்தவனம் ஒன்றுள்ளது. கோயில் அலுவலகத்தினை அடுத்து கிழக்கு திசையில்

துர்க்கை அம்மன் சந்நிதிக்கு வடக்கில 12 மீட்டர் நீளமும், 10 மீட்டர் அகலமும் கொண்ட நந்தவனம் சுற்றுப்புறச் சுவர்களால் பாதுகாக்கப்பட்ட வண்ணம் காட்சி தருகிறது. மூலவர் சந்நிதிக்கு செல்லும் நுழைவாயிலுக்கு தெற்கே 16 கால் மண்டபத்துக்கு மேற்கே கோயிற்சுவருடன் சார்ந்து அமைந்திருக்கும் மற்றொரு நந்தவனத்தின் நீளம 20 மீட்டர் அகலம் 7 மீட்டராகும். இந்த நந்தவனத்துக்குள் சிறிய கிணறு ஒன்றுள்ளது. இம்மூன்று நந்தவனங்களிலும் பூச்செடிகள் எவையும் இல்லாத நிலை உள்ளது.

கச்சபேசர் சுந்தரம்பாள் அம்மையார் உற்சவ மண்டபத்தின் வடபுறத் தூண் ஒன்றில், திருமால் ஆமை வடிவில் சிவலிங்கத் திருமேனியைப் பூசிக்கும வடிவமைப்பு சிற்பக் கலைச் செய்திறனைச் சீரிய முறையில எடுத்துக் காட்டுகிறது. இதில திருமாலின் இடுப்பளவுக்கு மேற்பட்ட பகுதி மனித வடிவத்திலும், அடிப்பகுதி ஆமை வடிவத்திலும் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள பெரிய மண்டபத்தின் பல தூண்களில் நன்கு செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களில தாவிப்பாய்ந்து கொண்டிருக்கும குதிரைகளின் உருவங்களும், அவற்றின் மீதுவாள் ஏந்தித்தாக்க முற்படும வீரர்களின் உருவங்களும் காணப்படுகின்றன. பல்வேறு அணிகலன்களால அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் அவற்றின் முன்கால்களைத் தூக்கித் தாவிப்பாய்வது போல நிற்க, அவற்றின் மீது குதிரை வீரர்கள் ஊக்கத்தோடு அமர்ந்திருக்கும காட்சி மன ஆற்றலை ஊட்டுவனவாக உள்ளன. இவையெல்லாம் விசயநகரப் பேரரசின் கலையையும பண்பாட்டையும் விளக்குகின்றன.

காஞ்சிபுரம் காஞ்சிக் கடிகை என்னும் கல்விச்சாலை நிறைந்தநகரமாக இருந்தது. வடபுலத்து அரசன் மயூரசர்மன் என்பான் கல்விகற்ப இங்குவந்தான். வினையத்தால் அவனுடைய கண்கள் பழுதாயின. அவன் இஷ்ட தீர்த்தத்தில மூழ்கி சூரியன் மீது சூர்யசதகம் என்னும் நூலை இயற்றி வழிபட்டான். அதனால் அவனது கண்பார்வை மீண்டது. அன்று முதல் இத்தீர்த்தம் சூர்ய தீர்த்தம் என்றும அழைக்கப்படலாயிற்று. அச்சதகம் கோயில் சுவர்களிலும் வெட்டி வைக்கப்பட்டது. ஆனால் அக்கற்களை வேறு வகைகளின் பயன்படுத்திவிட்டார்கள் இதன் தலைப்புப் பகுதியை நவக்கிரகத்தின் சந்நிதிமீது கட்டப்பட்டுள்ள ஜன்னலுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

இக்கோயிலில காலையில் (1) உசாத்காலப்பூசை (2) அடுத்த பூசை (3) கால சந்திப் பூசை என்னும் மூன்று பூசைகளும், பகலில் உச்சிக்காலப்பூசையும், மாலையில் சந்நிதிக்காலப்பூசையும் பின்னர் இரவுப் பூசையும் நாள்தோறும் நடைபெறுகின்றன. பிரதோட காலங்களில் கச்சபேசருக்கும், கிருத்திகை நாள்களில் முருகப்பெருமானுக்கும

ஆராதனைகள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. நடராசப் பெருமானுக்கு ஆண்டுதோறும் ஆகமங்களில் குறிப்பிடப்பட்ட ஆறு அபிடேகங்கள் நடைபெறுகின்றன; ஆண்டுதோறும் பத்து நாள்களிலும பூசைகளும் குறிப்பிடப்பட்ட அந்த அந்த வாகனங்களில் அந்த அந்தக் காலங்கள் வீதி உலாக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. கச்சபேசத்தில் சித்திரைப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. ஐந்தாம் நாள் சித்திரை நட்சத்திரத்தில் திருக்கல்யாணத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. கச்சபேசர் கோயில் பிரார்த்தனைத்தலமாக இருப்பதால் பல நோய்கள் தீரும் பொருட்டு மக்கள் இங்குப் பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். அவ்வகையில் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் இட்டசித்தீச்சரத்தீர்த்தத்தில் மூழ்கி மாவிளக்குகளை எடுத்தும், அவற்றைத் தலையால் சுமந்து கொண்டும் கோயிலை வலம் வருகிறார்கள். சோமாஸ்கந்தர் திருவீதி உலா சிறந்த காட்சியாகும். மார்கழித் திருவாதிரையில் விநாயகர், முருகர், அம்பிகை, சிவபெருமான் ஆகிய எல்லா உற்சவ மூர்த்திகளின் வீதி உலா உன்னதக் காட்சியாகும்.

கச்சபேசர் நான்முக இலிங்கமும், அதன் பழமை அமைப்பும், மகாவிஷ்ணுவின் உட்கோயிலும், பௌத்த உருவங்கள் பொறிக்கப்பட்ட கல் தூண்களும் பரந்த சமயப் பண்பாட்டைக் காட்டுகின்றன. கச்சபேசர் தலவிருட்சமாகிய பலாச மரத்தின் சுற்றுச் சுவரில் மேற்குப் பக்கத்தில் உள்ள பலகணி சிற்பக்கலை பொருந்தியுள்ளது. இத்தகைய அரிய வடிவழகு சிற்பக்கலைக்கு இக்கோயில் அளித்த ஆதரவினை எடுத்துக்காட்டுகின்றது, இக்கோயில் செங்குந்த மரபினர் சிறப்பாக வழிபடும் தலமாக விளங்குகிறது. நோய்கள் தீரும்பொருட்டு மக்கள் இங்குப் பிரார்த்தனை செய்து கொண்டு வருவது அவர்கள் தெய்வ வழிபாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளதை நன்கு விளக்குகிறது. கங்கைக் கரையில் நைமிசாரணியம் என்னும் வனம் அத்தகைய சிறப்புப் பெற்று விளங்கியதற்கும், முனிவர் பலர் அதனையே தாம் தவம் செய்வதற்குரிய வனமாகத் தெரிந்து கொண்டு அங்கே அமர்ந்து பல தவச்செயல்களில் ஈடுபட்டதற்கும் கச்சபேசர் ஆலயமே காரணமாயிருந்தது எனக் கந்தபுராணம் கூறுகிறது.

செங்குந்த மரபினர் ஆதரவைப் பெற்றுள்ள இத்திருக்கோயில் 60.05 ஏக்கர் நன்செய் நிலங்களும், 80.97 ஏக்கர் புன்செய் நிலங்களும் உரிமை கொண்டுள்ளன. இவற்றிலிருந்து ஏறத்தாழ 5,000 ரூபாய் மதிப்புடைய நெல் கிடைக்கிறது. பணமாக வரவு 25,000 ரூபாய் ஆகும். 50,000 ரூபாய் வருமானம் நிலுவையில் உள்ளது. மனையிடம் ஒன்றும் 20 கட்டடங்களும் இக்கோயிலுக்குரியவை. இக்கோயிலின் மொத்த ஆண்டு வருமானம் 31,850 ரூபாயாகும். இக்கோயிலுக்கு மரத்தேரும், பல வகை வாகனங்களும் உள்ளன. வாகனங்கள் விலை மதிப்புடையவை அல்ல. இது செங்குந்த மரபினரின் உரிமைக் கோயிலாதலால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர் குழுவும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால நியமிக்கப்பட்ட நிர்வாக அலுவலரும் இணைந்து நிர்வாகத்தைச் செயல்படுத்தி வருகின்றனர். இங்கு வேதபாராயணமும், சைவத்திருமுறைகள் ஓதுதலும் முறையாக நடைபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டு விழாக்களின்போது சமயச் சொற்

பொழிவுகள் நிகழ்த்தப் பெறுவதற்குரிய வழிமுறைகளையும், நிர்வாகம் கவனித்து வருகிறது. இங்குள்ள கோயிலில் ஆதி சைவர்களாகிய குருக்கள் பூசை செய்து வரு கிறார்கள். இவர்களுக்கு கோயிலார் அளிக்கும் ஓரளவு படித்தரமும், அர்ச்சனைச் சீட்டுகள் விற்பனையில் விதாச்சாரப் பங்கும், அன்பர்கள் அளிக்கும் தொகையும் இவர்களின் ஊதியமாக அமைகின்றன.

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம்.
சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சிப்புராணம்.
கச்சியப்ப முனிவர் இயற்றிய காஞ்சிப்புராணம் இரண்டாம்பாகம்.
ஆகிய நூல்கள் இக்கோயிலைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 2,26,000

காஞ்சிபுரம்

# திருக்கச்சி மயானம்

இது காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலின் கொடிமரத்தின் தென்புறம இரண்டு செண்ட் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இது பாடல் பெற்ற வைப்புத்தலமாகும். பாடல்பெற்ற மயானங்களில்மற்றவை கடவூர் மயானமும் நாலூர் மய்யானமும் ஆகும். இங்கு மயானம் என்பதுஇடுகாட்டைக் குறிக்காது. கபாலிகச் சமயத்தவர்கள் தொழும் இடங்கள் மயானங்கள் எனப்பட்டன. திருவொற்றியூரிலுள்ள கல்வெட்டொன்று மயானமும் மடமும் உடைய (லகுளீ சபாசு பதர்) பண்டிதர் ஒருவரைக் குறிப்பிடுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

இம்மரபினர் சிவனையும் பார்வதியையும் ஒரே பீடத்தில் வழிபட்டனர். இவர் களுடைய குறியீட்டுக் கைப்பிரம்பு கட்டங்கம் எனப்பட்டது. சிவன்கட்டங்கம் ஏந்தி யுள்ளார் எனச் சில இடங்களில் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டு

கட்டங்கந்தா மொன்று கையிலேந்திக்
கடியவிடையேறிக் கபாலியர்
இட்டங்கள் தாம்பேசியில்லே புக்கு
இடும்பலியும் இடக்கொள்ளார் போவாரலலர்
பட்டிமையும்படி றுமேபேசாநின்றார்

பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின் றார்தாம்
அட்டியசில பலியுங் கொள்ளார் விள்ளார்
*அழகியரே ஆமாத்தூர் ஐய்னாரே*[1]

முன்னாளில் இக்கோயில ஏகாம்பரநாதர் கோயிலுக்கு அருகில் வெளியில் இருந்திருக்கலாமென்றும் அதனை இடம் பெயர்ந்து இங்கு உள்ளே கட்டியிருக்கலாமென்றும் சிலர் கருதுகின்றனர். இப்போதுள்ள கோயிலும் பின்னாளில் விரிவுபடுத்தி கட்டியிருக்கலாம் என்று *சிலர் கருதுகின்றனர்; சிலர்* இக்கோயிலின் கருவறையில் புதியதாகச் சிவலிங்கம் நிறுவப்பட்டதென்பர். புறச்சுவர் மாடங்கள் நல்ல வேலைப்பாடுகளுடன் வடக்கில் துர்க்கையும் பிரமனும், கிழக்கில் அருணாசலர், தெற்கில் விநாயகரும் தட்சணாமூர்த்தியும் உள்ளனர், சிதைந்த கருங்கல்லால் உயர்ந்த உபபீடத்தின் மீது எண்பட்டைச் சிகரம் கொண்ட மூன்று தளச் சதுரவிமானம் உள்ளது.

இக்கோயில் காஞ்சி ஏகாம்பரநாதர்கோயிலின் துணைச் சந்நிதியாக ஆகிவிட்டதால் அங்குள்ள குருக்கள்களாலேயே ஒருகாலப் பூசை செய்யப்படுகின்றது. ஏகாம்பரநாதர் கோயிலாலேயே இங்கு நிர்வாகம் செய்யப்படுகின்றது.

இப்போது கோயில் அலுவலகத்தின் பின்புறமுள்ள ஒரு கோடியில் உமாசத்தர் வடிவம் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதில் உமையும் சிவனும் ஒரே ஆசனத்தில வீற்றிருக்கிறார்கள். இருவருக்கும் மேற்கரங்களில் கட்டங்கமும் கீழ்க்கரங்களில் வாளும் கபாலமும் உள்ளன. இவ்வாறு கட்டங்கத்துடன் கூடிய சிவனும் உமையும் உள்ள சிலை அரிதாக இங்கே உள்ளது.

காஞ்சிபுரம்

# கச்சியப்ப முனிவர் கோயில்

இது காஞ்சிபுரம் புதுப்பாளையம் தெருவின் மையப் பகுதியில் அமைந்துள்ள திருவாவடுதிறை ஆதினத்தின் கிளை மடத்திற்குச் சொந்தமான தோட்டத்துள் 1 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது,

---

1. இது ஆமாத்தூர்ப் பதிகப் பாடல் (6-9 3)
இப்பாடலில் சிவபெருமான் பிட்சாடனராகப் பலியேற்றுத் தம்மை அடைந்தவர்களின் குற்றங்களைப் போக்கும் நிலை தெரிவிக்கப்படுகிறது.

காஞ்சிப்புராணத்தைப் பாடியவர் மாதவச் சிவஞான சுவாமிகள். இவர் திருக் கயிலைப் பரம்பரை, திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தவர். இம்மடத்து வழி யில் வந்தவர் கவிராட்சசன் என்று அழைக்கப்பட்ட கச்சியப்ப முனிவர் ஆவார். இவர் கந்தபுராணச் சுருக்கம், பேரூர்ப்புராணம், காஞ்சிப்புராணத்தின் இரண்டாம் பாகம், விநாயகபுராணம் ஆகியவற்றைப் பாடியவர் ஆவார்.

இவர் இறுதியில் இங்கு கி.பி. 1790 ஆம் ஆண்டில் பரிபூரணம் எய்தினார். இவரது சமாதியின் மீதுசிவலிங்கம் அமைக்கப்பெற்றுள்ளது;வழிபாடும்செய்யப்பட்டு வருகின்றது. சுவாமிகளின் திருநட்சத்திரத்தின்போதும் திருவிழாக்களின் நாள்களி லும் சிறப்பு வழிபாடுகள் இங்கு நடைபெறுகின்றன. இத்திருமடத்து துறவி ஒருவரே இங்குப் பூசையும் நிர்வாகமும் செயல்படுத்தி வருகின்றார்.

## காஞ்சிபுரம்

# இடபேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் பெரிய கம்மாளத் தெருவில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இக்கோயில் தற்போது பழுதடைந்து சிறிய அளவில் இருக்கிறது.

பார்வதி இவ்விடத்தில் சிவலிங்கம் நிறுவிக்காப்பு அணிவித்ததாக அறிகிறோம் இக்கோயிலில் கருவறையில் சிவலிங்கமும் வெளியே நந்தி தேவர் உருவமும் பலிபீட மும் உள்ளன. ஒரு தளத்தையுடைய இக்கோயில் விமானத்தின் சிகரம் வட்டமானது; ஒரு கலசம் சிகரத்திலுள்ளது. கிரீவக் கோட்டத்தில் தெற்கு முதல் கிழக்கு வரை முறையே தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், சிவன் ஆகியோர் சிற்பங்கள் காணப்படுகின்றன. நான்கு மூலைகளிலும் இடபதேவர் திருவுருவங்கள் அமர்ந்த நிலையில் உள்ளன. நான்கு பெரிய நாசிகளும் நான்கு சிறிய நாசிகளும் சிகரத்தில் உள்ளன. அவற்றில் கின்னரர் தலைகள் உள்ளன. பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் சித்தி விநாயகர் சந்நிதி மேற்கு நோக்கியவாறு உள்ளது. இக்கோயில் பிராகாரத்தின் வடக்கில் திருமஞ்சனக்கிணறு உள்ளது. இக்கோயில் பெரியகாஞ்சி புரம் கேசவ ஆசாரி பரம்பரைக் சொந்தமான கோயிலாகும்.

இங்குப் பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை.

காஞ்சிபுரம்

# மொட்டைக் கோபுரம்

இக்கோயில் வடக்கு இராச வீதியில் காமாட்சியம்மன் கோயிலின் வடக்குக் கோபுரத்திற்கு அருகிலுள்ளது. இதற்கு மொட்டைக் கோபுரம் என்னும் பெயர் வழங்கிவருகிறது.

திருப்பாற்கடலில் எழுந்த விடத்தால் வெந்து வெப்பமுற்ற திருமால் கண்ணேசர் என்னும் பெயரில் சிவலிங்கம் நிறுவிப் போற்றி அப்பெருமான் ஆணைப்படி திருவேகம்ப நாதர் திருமுடியிலுள்ள நிலவின் உதவியால் வெப்பம் நீங்கப்பெற்று நிலாத்துண்டப் பெருமாள் என்னும் பெயர் பெற்றார்.

இங்கு முறையாகப் பூசை நடைபெறுவதில்லை. திருவிழாக்கள் நடைபெறுவதில்லை. சிவராத்திரியில் வழிபாடு நடைபெறுகிறது.


காஞ்சிபுரம்

# கயிலாசநாதர் கோயில்


காஞ்சிபுரத்திலிருந்து பிள்ளையார் பாளையம் செல்லும் வழியில் சாலையில் வலப்பக்கத்திலுள்ள கயிலாயநாதர் கோயில் முக்கால் ஏக்கர்ப் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயில் இராச சிம்ம பல்லவன் என்கிற இரண்டாம் நரசிம்மவர்மனால் (கி.பி. 680-720) கட்டப்பட்டதாகும். கயிலையங்கிரி வாசனான பரமேசுவரன் காஞ்சியில் மனம் விரும்பி உறையும் இடமாக இக்கோயிலைத் தாம் கட்டியதாக அக்கோயிலில் தான் பொறித்த கல்வெட்டில் அம்மன்னன் குறித்துள்ளான். இம் மன்னனின் துணைவி ரங்கபதாகை பிராட்டியார் இங்குள்ள சிறுகோயில்களின் ஒன்றைக் கட்டியுள்ளார்.

சிவபெருமானிடம் பேரன்பு கொண்ட பல்லவ மன்னன் இராசசிம்மன் காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த காலத்தில் காஞ்சிபுரத்தில் 'கயிலாச நாதர் கோயிலைக் கட்டி அதற்கு குடமுழுக்கு விழா நடத்துவதற்காக ஒரு நாளைக் குறிப்பிட்டிருந்தான். முன்னாள் இரவில் அப்பல்லவ மன்னன் கனவில் சிவபெருமான் தோன்றித், திருநின்றவூரில் வாழும் பூசலார் நெடிது நாளாக நினைத்துக் கட்டி முடித்த கோயிலில் நாளை நாம் புகுவோம். நீ கட்டிய கோயில் குடமுழுக்கு விழா




கைலாசநாதர் கோயில், காஞ்சிபுரம்



காஞ்சிபுரம், கைலாசநாதர் கோயில், சிற்பங்கள்,



காஞ்சிபுரம், கைலாசநாதர் கோயில், சிற்பங்கள்



காமாட்சியம்மன் கோயில் கோபுரம், காஞ்சிபுரம்

(பக்கம் எண் 80 பார்க்க)

நாளைத் தள்ளி வைத்துக்கொள்க" எனக் கூறி மறைந்தார், இதை மனத்தில் கொண்ட மன்னன், பூசலார் வாழும் ஊரை அடைந்து அவ்வூரில்கோயில் கட்டபெற்ற தற்கான அடையாளம் யாதும் காண இயலாது, பூசலார் வாழ்ந்த இடத்திற்கே சென்று அவரை நேரில் கண்டு வினவினான். தான் கண்ட கனவு நிகழ்ச்சியையும் பற்றிப் பூசலாருக்குத் தெரிவித்தான். பூசலார் தாம் இறைவனை நினைத்துத் தமது மனத்தில கோயில் கட்டி அதனில் இறைவனை வரவழைக்க முயன்றதாகக் கூறவே, மன்னன் பூசலாரது பேரன்பையும், சிவபெருமானின் பேரருளையும் உணர்ந்து வியப்புற்றான். இப்பெருஞ்சீலர் பூசலாரது பெருமையைச் சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்தில்,

"நீண்ட செஞ்சடையி னார்க்கு
நினைப்பினால் கோயி லாக்கிப்
பூண்ட அன்பு இடைஅறாத
பூசலார் பொற்றாள் போற்றி"[1]

எனப்புகழ்ந்துள்ளார்.

இக்கோயிலில் இம்மன்னனின் 250 விருதுப் பெயர்கள் காணப்படுகின்றன அவற்றுள் ரிஷபவாஞ்சவன், ஸ்ரீசங்கரபக்தன், ஸ்ரீ ஆகமப்பிரியன், சிவசூடாமணி, ஆகியவை போன்றவை இவனுடைய சைவ சமயப் பற்றைக் காட்டுகின்றன, ஸ்ரீவாத்யவித்யாதரன் என்னும்பெயர் இசைக்கருவிகளை இசைப்பதில இம்மன்னனின் வல்லமையைக் காட்டுகிறது. மற்றொரு கல்வெட்டு இக்கோயிலைச் சந்திரசேகரன் கோயில் எனக் கூறுகிறது. இராச சிம்மன் கலவெட்டு ஒன்றில் பலலவேசுரம், சிவன் மந்திரன் என்னும் பெயர்களிலும் இக்கோயில் குறிக்கப்படுகிறது.

இம்மன்னனின் மனம் கவர்ந்த சிவபெருமானின் சுதைச்சிற்பம இக்கோயிலின் பல இடங்களில் உள்ளது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் காஞ்சியைக் கைப் பற்றிய இரண்டாம் விக்கிரமாதித்தன் இக்கோயிலிலுள்ள பெரும் செல்வத்தைக் கண்டு வியந்து இதனைச் சிவபெருமானுக்கே அர்ப்பணித்தான் என்பது ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வுண்மையைச் சாளுக்கியரின் வக்கலேரி, கேந்தூர்ப்பட்டயங் களும் உறுதிப்படுத்துகின்றன.

கிழக்கு நோக்கிய வாயிலின் வலப்புறம் இரண்டும், இடப்புறம் ஆறும் எனச் சிறுகோயில்கள் எட்டுஉள்ளன. இவற்றில் மூன்றிலமட்டுமே சிவலிங்கங்கள் உள்ளன. வெளியிலுள்ள இக்கோயில்கள் எல்லாவற்றிலும் சோமாசுகந்த மூர்த்தி இடம் பெற்றுள்ளார். இவற்றில் இரண்டும் வட்டச் சிகரம் கொண்ட விமானங்களால் அழகு படுத்தப்பட்டுள்ளன.

தலைவாயிலை ஒரு நிலைக்கோபுரம ஒன்று அழகுசெய்கிறது. இதனைக் கடந்தால் சிறுமுற்றம் ஒன்றை அடைகிறோம். இங்கு 1 மீட்டர் உயரமுள்ள மேடை

1. பெரிய புராணம் – பூசலார் நாயனார் - 17

மீது அமைந்துள்ள கோயிலுள் சிவலிங்கம் ஒன்றுள்ளது. இதனை வலமாக வரும் போது பெரிய பிராகாரத்துடன் கூடிய மேடை மீது கபிலாசநாதரின் சந்நிதி அமைந்துள்ளதைக் காண்கிறோம். இவ்வெளிப்பிராகாரத்தில 58 சுற்றாலைக் கோயில்கள் 'ப' வடிவில் அமைந்துள்ளன. வலப்பக்க நுழைவாயிலின் வழியாக உள்ளே செல்லும் போது 18 கரங்களுடைய துர்க்கையைக் காண்கிறோம். இதன்பின் அப்பாலுள்ள பிராகாரம் முழுமையிலும் பலகைச் சிற்பங்கள்உள்ளன அவ்வாறே கருவறை வெளிச் சுவர்கள் சிறுசிறு அறைகளாகப் பகுக்கப்பட்டுப் பலவகைச் கதைத் தொடர் சிற்பங்கள் உள்ளடங்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் 2 மீட்டருக்கும் மேற்பட்ட உயரம் கொண்டவை.

53 சிறு சுற்றுக்கோயில்களும சிறு முகமண்டபங்களுடன் கூடியவை. இமமண்டபங்களைச் சிங்கத்தூண்கள் தாங்குகின்றன. இக்கோயில்கள் தரையிலிருந்து ஒரு மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளன, ஓர் ஆலயத்திற்கும் மற்றோர் ஆலயத்திற்குமுள்ள இடைவெளி சிறு மண்டபங்களாகப் பகுக்கப்பட்டு அவற்றின் உள்ளும் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான சிறு கோயில்களில் சோமாசுகந்தமூர்த்தம் வீற்றிருக்கிறது. இடையிட்ட மண்டபங்களில் உமாசகிதர் திருவுருவம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் பல்லவமன்னனையும் அவன் தேவியையும் குறிக்கின்றன எனச் சிலர் கருதுகின்றனர். உள்ளடக்கமான மண்டபங்களில அம்பிகை திருவுருவமும் அம்பிகையின் தோழியர் உருவங்களும், கிளி மான் ஆகியவற்றின் உருவங்களும் சுதை வடிவிலுள்ளன.

இடமிருந்து வலமாக உள்ள முக்கியமான சில சிற்பங்களை இனிக் காண்போம்.

திரிபுரதகனர் : பிரமதேவர் தேரோட்ட அத்தேரில சிவபெருமான் எட்டுக்கரங்களுடன் போர்நிலையில் வில்லேந்திய வடிவம்வடக்கு நோக்கியுள்ளது.

காலகாலர் : இயமனோடு போரிட்டு வெலலுதல், மேலே சிவலிங்கத்தை அணைத்த மார்க்கண்டேயர் உள்ளார்.

இரண்யன் நரசிம்மர் : இரண்யனுக்கும் நரசிம்மருக்கும் நிகழும் சண்டை செதுக்கப்பட்டுள்ளது.

உலகளத்தல : ஓங்கி உலகளக்கும் திருமால் நடுவிலும் ஒருபுறம் குள்ளனாகத் திருமால் வாமனராக வந்து தானம் கேட்பது, மாவலி அவருக்குத் தானம் அளிப்பது, மாவலியின் மகள் நமுகி, சுக்கிரர் ஆகியோர் உருவங்களும் படைக்கப் பெற்றுள்ளன.

கருடாந்தகர் : அடுத்து கருடர்க்கு அருளிய கருடாந்தகர் வடிவம் உள்ளது.

மழுநடனம் : சிவபெருமான் மழுஏந்தி நாகம் தொடர ஆடும் கூத்து.

பிரமன் தேரோட்டல் : பிரமன் ஓட்டிவரும் தேரில் சிவன் வில் வளைத்து முப்புராதிகளை அழிக்கும் கோலம்.

சலந்தர சம்மாரம் : சலந்தரன் என்பவனைச் சிவன் சக்கராயுதத்தால் கொல்லுதல் சிவன் மேல்பகுதியில் யோகநிலையில் இருப்பது. கீழ்ப்பகுதியில் சலந்தரன் மண்டியிட்டு அஞ்சி நடுங்கி இருத்தல்.

கிராதகன் அருச்சுனன் : அருச்சுனன் பாசுபதம் பெற வேண்டித் தவம் செய்த போது சிவபெருமான் வேடனாக வந்து அவனோடு போரிட்டது. இருவரும் விட்ட அம்புபட்டு இறந்த பன்றி ஆகியவை சிற்பங்களாக அமைக் கப்பட்டுள்ளன.

வயிரவர் : வயிரவராகச் சிவபெருமான் வந்தது,

ஜேஷ்டா : உள்ளடங்கிய ஒரு மாடத்தில் ஜேஷ்டாதேவி அவள் புதல்வன் புதல்வி ஆகியோருடன் உள்ளாள். இவள் பின்புறம் காகக்கொடி உள்ளது

பிரமன் துணைவியருடன் : பிரமன் தாமரை மீதிருக்க அவனுடன் சாவித்திரியும் சரசுவதியும் உள்ளனர். சுற்றிலும் முனிகணங்கள் உள்ளன.

துர்க்கை : எட்டுக்கரங்களுடன் அமர்ந்த நிலையில் துர்க்கை வீற்றிருக்கிறாள் இங்கு வீற்றிருக்கும் துர்க்கை அரிய பல்லவர் படைப்பு; பெரும்பாலும் நின்றோ அல்லது போரிடும் நிலையிலோ அமைப்பதே மரபு.

சப்தமாதர் : ஒருபுறம் விநாயகரும் யோக சிவனும் இருக்கத்தொடர்ந்து ஏழு மாதர்களும் ஒரே மேடையில் வீற்றிருக்கின்றனர். பிராமி முதல் சாமுண்டீசுவரி ஈறாக எழுவரும் நெருக்கமாக உள்ளனர்.

இயமசங்காரம் : இயமனைப் போரிட்டு அடக்கும் இயம சங்காரர் எட்டுக்கரங் களுடன் திகழ்கிறார்.

காளி : எட்டுக்கரங்களையுடைய காளி தேவி சிலை அமர்ந்த நிலையில் உள்ளது

கசசம்மாரர் : யானையை உரித்துப் போர்த்துக் கொள்ளும் கசசம்மாரர்.

முனிவர் : சிறுமாடம் ஒன்றில் முனிவர் ஒருவர் அமர்ந்துள்ளார். இவரை அகத்தியர் என்கின்றனர் சிலர்.

ஊர்த்துவதாண்டவம் : காளி வெட்கம் எய்துமாறு வலக்காலை உயர்த்திச் சிவன் வானுற நிமிர்ந்து ஆடுதல், கீழே கணங்கள் இசைக்கருவிகளை மீட்டுகின்றன.

## *கருவறைச் சுவரில்*

சண்டேசுவரர் : சண்டேசுவரர் மழுவேந்தி நிற்கின்றார்.

போகமூர்த்தி : பார்வதி தேவியை அணைத்து அருளும் நிலையில் போகாங்கமூர்த்தி யாகச் சிவபெருமான் விளங்குகின்றார்.

தென்முகக்கடவுள் : அவரையடுத்து விரிந்த சடையுடன் ஒருகாலை மடித்து வைத்துள்ள அருளுடன் கூடிய தட்சிணாமூர்த்தியுள்ளார்.

இவரையடுத்துப் பதினொரு சிவலிங்கங்கள் உள்ளன. (ஏகாதச ருத்திரர்)

இலக்குமி : இலக்குமிதேவி அமர்ந்திருக்க, இரு யானைகள் நீர் சொரிவதுபோலச் சிற்பம் உள்ளது.

லதாவிருச்சிகம் : 108 ஆடல் நிலைகளில் ஒன்றான லதாவிருச்சிக தாண்டவகோலத்தில் சிவன் உள்ளார்.

திருமாலும் தேவியரும் : திருமால் பூவில் வீற்றிருக்கச் சீதேவி, பூதேவி இவருடன் அமர்ந்துள்ளனர்.

உலகளந்தார் : மாவலியிடம் மூன்றடி மண் விரும்பி வந்துதானம்பெற்றபின்வளர்ந்த நிலையாகும். இதில் வாமனர் மாவலி ஆகியோரும் உள்ளனர்.

கயிலைக்காட்சி : இராவணன் மலையைப் பெயர்த்தல்; அதன்மீதுஇறைவன்இறைவி ஆகியோர் வீற்றிருத்தல்.

பிரமதேவர்க்கு உபதேசம் : பிரமதேவருக்கு உபதேசிக்கும் மூர்த்தியாகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார்.

மணக்கோலம் : மணம் செய்து நிற்கும் சந்திரசேகரர் கோலம்.

சர்ப்பதாண்டவம் : சர்ப்பங்களை எடுத்துச் சிவபெருமான் வீசியாடும் சர்ப்பத் தாண்டவம்,

சரசுவதி : வீணை வாசிக்கும் சரசுவதி.

லதாவிருச்சிகம் : தேள் போல லாவகமாகக் கை, கால்களை நீட்டி மடக்கிய நிலை. 108 தாண்டவநிலைகளுள் இது ஒன்று. இதில் இறைவன் 4 கைகளுடன் இந்நிலையில் ஆடுகிறார்.

ரிஷபாந்திகர் : ரிஷபத்தின் மீது சாய்ந்த நிலையில் சிவன்.

இலிங்கோற்பவர் : இலிங்கமாக உள்ளதில் பரமசிவன் நிற்றல். மேலே அன்னம் கீழே வராகம், இருபுறமும் தேவர்கள் சூழ நின்று வாழ்த்தல்.

பிட்சாடனர் : இறைவன் இரவலனாக வருதல்; பெண்கள் எழுவர் உமையுடன் கூடிச் சடைவிரித்து நிற்றல்.

ஊர்த்துவ தாண்டவர் : நெடிய வடிவில் காலைத் தூக்கியாடுதல், நந்தி மத்தளம் வாசிக்கின்றார்; கணங்கள் இசைக்கருவிகளை இசைக்கின்றன.

துர்க்கை : ஒருபுறம் சிங்கத்தலையும் மற்றொரு புறம் மான் தலையும் கொண்டு 10 கரங்களுடன் துர்க்கை நிற்றல், இருபுறமும் காவலர்கள் இருக்கின்றனர்

கருவறை மேடை மீதேயுள்ளமேடை பட்டிகை, குமுதம் போன்ற உப அங்கங்களால் துணைக் கோயில்கள் அழகுபடுத்தப்பட்டுள்ளன, ஒவ்வொருதுணைக் கோயிலும் சதுர அடிப்படையுடனும் வட்டச் சிகரத்துடனும் அமைந்துள்ளது. நடுவில் சதுர வடிவில் இருக்கிறது. இதனை ஒட்டியும் சிறுசிறு அறைகளாகப் பகுக்கப்பட்ட கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று நிலைகளையுடைய இக்கோபுரம் வட்டக்கிரீவமும் எண்பட்டைச் சிகரமும் சுதையாலான கலசமும் கொண்டுள்ளது. பிரகாரத்தில் ஒரு மீட்டர் உயரமுள்ளச் 12 நந்திகளின் உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வெளியிலுள்ள எட்டுச் சிறு கோயில்களும் 1 மீட்டர் உயர மேடையில் 1 மீட்டர் சதுரத்தில் அமைந்துள்ளன. இவை ஒரே சதுர தளத்தில் உருண்டையான சிகரத்துடன் கூடியதாக உள்ளன. இதில் 5 ஆவது கோயிலை இராஜசிம்மனின் மனைவியான சாளுக்கிய இளவரசி ரங்கபதாகைப்பிராட்டியார் கட்டியதாகும். இதன் கருவறை அடிபீடத்தில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இங்குச் சிம்மங்களால் தாங்கப்பெற்ற மகாமண்டபம், கருவறை, உள்மண்டபம், வெளிமண்டபம் ஆகியவை உள்ளன. தெற்கில் அமைந்த உள்வாயிலைக் கடந்தால் மண்டபத்தின் கருவறை வாயிலை ஒட்டி விநாயகரையும் முருகப்பெருமானையும் வணங்கலாம் கருவறையில் பெரிய சிவலிங்க வடிவில்கயிலாசநாதர் எழுந்தருளியுள்ளார். பின்சுவரில்சோமாஸ்கந்த மூர்த்தியும் 1 மீட்டர் சதுரப்பரப்பில் உள்ளார். கருவறையைச் சுற்றிச் சிறு பிராகாரம் அமைந்துள்ளது. இது சுவர்க்க பிராகாரம் எனப்படும் இதனுள் வலம்வருவோர் பிறவி நீக்கம் பெறுவர் என்பது நம்பிக்கையாகும்.

இக்கோயிலைக் கட்டிய இராசசிம்மன் யாவர் என்பதைப் பேராசிரியர் க. வெள்ளைவாரணன் தாம் இயற்றிய பன்னிரு திருமுறை வரலாறு இரண்டாம் தொகுதியில் தெளிவாக்கியுள்ளார் (பக்கம் 546) அவர் தெரிவித்துள்ளது, சிவன் அடியார்களுள் ஒருவர் தம் காலத்தில் அரசு வீற்றிருந்த பல்லவவேந்தருமாகிய கழற் சிங்க நாயனாராம் போற்றற்குரிய நம்பியாரூரர் (சுந்தரர்) கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன் எனத் திருத்தொண்டத் தொகுதியில் பாராட்டிப் போற்றியுள்ளார். இங்கே கழற்சிங்கன் என்ற பெயரால் குறிக்கப்பட்ட பல்லவமன்னன் வான்க்ஷத்திரிய சிம்மன் நரசிம்ம இராசிம்ம பல்லவ மன்னனே என்பது முன்பு ஆராய்ந்து விளக்கப்பட்டது. காஞ்சியில் கயிலாய நாதர் திருக்கோயிலைக் கட்டிய இராசசிம்ம பல்லவனே திருத்தொண்டத் தொகையில் போற்றப்பெற்ற கழற்சிங்க நாயனார் என்பதாகும். எனவே இக்கயிலாயநாதர் கோயிலைக்கட்டிய இராசசிம்மன் அறுபத்துமூன்று நாயனார்களுள் ஒருவரான கழற்சிங்க நாயனார் என்னும் கொள்கை வலியுறுத்தப் பெறுகிறது.

சுந்தரரால் அவரது திருத்தொண்டத் தொகையில் பாராட்டப்பெற்ற இராசசிமமன் கட்டிய கயிலாயநாதர் கோயிலுக்கு மிக அருகில் சுந்தரரால் பதிகம் பாடி வழிபட்ட அநேக தங்காவதம் கோயில் உள்ளது. இதன் சிறப்பை முன்னிட்டுப் பின்னர் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இதற்குக் கயிலாயநாதர் கோயிலுக்கு வடக்கிலுள்ள ஒரு நிலம் அளிக்கப்பட்டதையும இதே அநேக தங்காவதம கோயிலுக்கு இம்மன்னன் 3 வேலி நிலம் அளித்ததையும் இக்கோயிலுக்குரிய கைக்கோளர்களுக்கு 1400 குழி நிலம் அளித்ததையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. (1790–ஆம் ஆண்டுக்குரிய தென்னிந்தியக் கல்வெட்டுகள் 22–24). இக்கோயிலுக்கு வந்து வழிபாடு ஆற்றிய சுந்தரர் இக்கோயிலுக்கு மிக அருகிலுள்ள கயிலாயநாதர் கோயிலுக்கு வந்ததற்குக் காரணம் தெரியவில்லை.

இக்கோயிலில் நாள்தோறும் இருவேளைகளில் பூசை நிகழ்கிறது. மகா சிவராத்திரி விழாவும் இலட்சதீப விழாவும் நடைபெறுகின்றன. நடராசர், சோமாசு

கந்தர் ஆகியோர் திருமேனிகள் உள்ளன. கோயிலுக்கு வெளியே நான்கு தூண்களோடு நிற்கும் மேடையில் சுதையாலான பெரிய நந்தி இறைவனை நோக்கியவாறு உள்ளார். மதிலின் வெளிப்புறம் பாயும் நிலையிலான சிங்கங்கள் உருவங்கள் வரிசையாக உள்ளன. இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கோயில் பராமரிக்கப் பட்டு வருகின்றது. இக்கோயிலுக்கு 6 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களும் உள்ளன. அவற்றிலிருந்து 4,000 ரூபாய் வருமானம் கிடைக்கின்றது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 6,262

காஞ்சிபுரம்

# கருக்கினில் அமர்ந்தாள் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ள கருக்கினில் அமர்ந்தாள் கோயில் தெருவின் மேற்குக் கோடியில் கிழக்கு நோக்கியவாறுள்ள வாயிலும் வடக்கு நோக்கியுள்ள கருவறையும் கொண்டு ஐம்பது சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது,

தாய்மைபெற்ற பெண்களின் கருவினில் அமர்ந்து கருவிற்குத் தாய்போல இருந்து காப்பதால் இப்பெயர் அமைந்தது என்பர். பொதுவாகக் காளியின் அருள் அமாவாசை நள்ளிரவில் கருக்களில் வெளிப்படுமாதலின் அந்த நேரத்தில் வழிபடுவதால் நன்மை விளையும் என மக்கள் நம்பினர். கருக்களில் வழிபடப்படுவதால் கருக்கலில் அமர்ந்தவள் என்னும் பெயர் அமைந்தன்பர்.

பனைமரங்கள் உள்ள சாலைகளைக்கருக்கடி என்பர். எடுத்துக்காட்டாகத் திருக்கச்சூர் விநாயகரைக் கருக்கடி விநாயகர் என்றும தாலமூல விநாயகர் என்றும் அழைக்கின்றனர். இவர் பனைமரத்தடியில் இருந்ததால் இப்பெயர் பெற்றார். பனை மரத்தில் மட்டைப்பகுதியில் மரத்தை அறுக்கும் வாள் போன்ற கூர்மையான பற்கள் போன்ற அமைப்பைப் 'பனங்கருக்கு' என்பர். இப்பெயர் மரத்திற்கு ஏற்பட்டது,

அம்பிகையின் கோயில் பனைமரத்தடியில் அமைந்திருந்ததால் கருக்கடி அமர்ந்தவள் என்றழைக்கப்பெற்றுக்கருக்கினில்அமர்ந்தவள் என மருவிற்று என்பர். காஞ்சிபுரத்தில் பண்டைக் காலத்தில் எல்லைத் தெய்வங்களின் கோயில்களுள் இக்கோயிலும் ஒன்று என்பர். சோழன் பூர்வபட்டயம் என்னும் நூல் குறிப்பிடும் காஞ்சி நகர்க் காளிதேவி இவளே என்பர் ஆய்வாளர்கள். அந்த நூலில் காஞ்சி நகரின் காவல் தெய்வமாகவும் இவள் குறிக்கப்படுகின்றாள்.

கிழக்கு நோக்கிய வாயிலின் வழியாக உள்ளே சென்று பெரிய திறந்த வெளி முற்றத்தை அடையலாம். இதன் மையத்தில் கருவறைக்கு நேரொத்தவாறு ஒரு மேடையையும் அதன்மீது செழித்துவளர்ந்தவேப்பமரங்கள், மகிழ மரங்கள் அரசமரங்கள் ஆகியவற்றின் தொகுதியையும்காண்கிறோம். இவற்றின் அடியில்நாகர், சிவலிங்கம் அம்பிகை முதலியோர் திருவுருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவை இவ்வட்டாரத்தில் சிதைந்த பிறகோயில்களிலிருந்து கொண்டு வரப்பெற்றவை. இவற்றுள் இங்கு குறிப்பிடத்தக்கது தியான புத்தரின் சிலையாகும். அருகிலிருந்த புத்த சமயக் கோயில் அழிவு எய்தியபின் அச்சிலை அங்கிருந்து கொண்டு வந்து இங்கு வைக்கப்பட்டுள்ளதென்பர்.

இனி இக்கோயிலினுள் வலமாக வருவோமெனில், கிழக்குப் பிராகாரத்தில கோயில் மனை எனப்படும் பெரிய மண்டபம் அடைகிறோம். விழா நாள்களில் அன்பர்கள் தங்குவதற்குரிய மண்டபம் இஃது ஆகும். வலமாக வரும்போது கருவறை பின்புறச் சுவர் மாடங்களில் துர்க்கை, காளி, மாகாளி, முதலியோர் திருவுருவங்கள் உள்ளன. வலம் வந்து வடக்குப் பிராகாரத்தில் உள்வாயிலின் வழியாகச் சென்றால் மிகப்பெரிய மகாமண்டபத்தை அடையலாம். இதனுள் தூண்களில் தேவி, முருகன், விநாயகர் ஆகியோர்களின் பல்வேறு சிற்பங்கள் காணப்படுகின்றன. கருவறையில் குதித்தெழுந்து அசுரனை வெல்லும் கோலத்தில் அம்மன் ஒன்றரை மீட்டர் உயரமுடைய கருங்கல் சிற்பமாக எழுந்தருளியுள்ளார். முன்மண்டபத்தில் விநாயகர், முருகன் ஆகியோர் மூலவத்திருமேனிகள் உள்ளன. மகாமண்டபத்தில் உற்சவ அம்பிகை எழுந்தருளியுள்ளாள்.

இக்கோயிலின் கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம் ஆகியவை கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளவை. உபபீடம், குமுதப்பட்டைகள் பஞ்சரங்கள் கோட்டங்கள் கபோதவரி ஆகியவற்றால் கருவறையின் மகாமண்டப புறப்பகுதிகள் அழகுபடுத்தப்பட்டுள்ளன. கருவறைமீது மூன்று நிலை சாலகார விமானம் மூன்று கலசங்களைக் கொண்டுள்ளது.

இங்கு அகன்ற திறந்தவெளிப் பிராகாரம் உள்ளது. உள்வாயிலையொட்டிச் சிறு தெய்வங்களுக்கே உரிய வகையில் பெரிய திண்ணைகள் கட்டப்பட்டுள்ளன. பிராகாரத்தில் பூச்செடிகள் வளர்க்கப்பட்டுள்ளன. முன்புறம் தோரண வாயிலும் முகப்பில் மீதுள்ள வளைவில் அம்பிகை சிங்கவாகனத்தின் மீதுள்ள சுதைச் சிற்பமும் காண்கிறோம்.

இக்கோயிலில் பூசாரி ஒருவர் இருவேளைப் பூசை செய்து வருகிறார். இராகு காலப்பூசை, பௌர்ணமி பூசை ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் மிகுதியான எண்ணிக்கையில் அன்பர் வழிபாடு செய்கின்றனர்.

குலதெய்வமாகக் கொண்டவர்கள் மொட்டையடித்துக் கொள்ளுதல், குழந்தை

களுக்குக் காதணிவித்தல் முதலிய சடங்குகளைச் செய்கின்றனர். தனியார் குடும்பத்தினர் இங்கு நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ 1,500

காஞ்சிபுரம் புதுப்பாளையம்

# கருக்கினில் அமர்ந்தாள் கோயில் - 2

இக்கோயில் காஞ்சிபுரம் புதுப்பாளையம தெருவின் மேற்குச் சிறகில் கிழக்கு நோக்கிய தலைவாயிலும் வடக்கு நோக்கிய கருவறையும் கொண்டு விளங்குகின்றது. இக்கோயில் 30 சென்ட் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

கிழக்கில் அமைந்து வாயிலின் மீது 3 நிலை இராஜகோபுரமும் 5 கலசமும் கொண்டுள்ளது. அடுத்து வலம் வரும்போது தென்மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ள சந்நிதியைக் காண்கிறோம். வடக்கு மதிலின் உட்புறம் தெற்குநோக்கியவாறுள்ள பெரியமாடங்களில் வீரபத்திரர், பத்திர காளி ஆகியோரும்வடகிழக்கு முனையில் உருவமற்று கற்சிலைக் கன்னிமார் எழுவர் ஆகியோரும்எழுந்தருளியுள்ளனர். வடக்குப் பிராகாரமையத்தில்பலிபீடம்சிங்கத்தின் உருவம் ஆகியவை உள்ளன.

உள்மண்டபத்தின் இருபுறமும் விநாயகரும் முருகனும் துவாரசக்தியரும் எழுந்தருளியுள்ளனர். கருவறையில் குதித்தெழுந்து அசுரனை எண்கரங்கள் கொண்டு வீழ்த்தி வெல்லும் நிலையில அம்மன் எழுந்தருளியுள்ளார், இவர் ஓங்கிய சூலம், கேடயம், கத்தி, மணி, கபாலம் ஆகியவற்றை ஏந்தியுள்ளார்.

இக்கோயில் கருவறை, உள்மண்டபம், நெடிய தூண்களைக் கொண்ட அகன்ற முன்மண்டபம், வாயிலின் மீது 5 நிலை இராசகோபுரம், கருவறை மீது 3 நிலை விமானம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அண்மையில்குடமுழுக்கு செய்யப்பட்டதால் புதுப் பொலிவுடன் இது திகழ்கிறது. இங்குக் குருக்கள் ஒருவர் இருகால்ப் பூசை செய்து வருகின்றார். தை ஆடி மாத செவ்வாய் வெள்ளிக்கிழமை ஞாயிற்றுக் கிழமைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. பௌர்ணமி பூசை சிறப்பாக நடைபெறுகிறது. திரளாக மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர்.

ஆண்டிற்கொருமுறை பெரிய விழாவும் வீதி உலாவும நிகழ்கின்றன. ஊர்ப் பொதுவில் நிர்வாகம் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம்

# ஆதிவாரகப் பெருமாள் கோயில்

இக்கோயில் நூற்றெட்டுத் திவ்வியத் திருப்பதிகளுள் ஒன்றாகும். இது தனிக் கோயிலாக அமையாமல் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் துணைச் சந்நிதியாக அமைந்துள்ளது. காமாட்சியம்மன் கருவறையில் தென்புறமுள்ள இடத்தில் இவர் எழுந்தருளியுள்ளார். இவருக்குக் கள்வன் என்பது திவ்வியத் தேசப் பெயராக அமைந்த போதிலும், இம்மூர்த்திக்குப் பெயர் ஆதிவராகப் பெருமாள் என்பதாகும். இவர் மேற்கு நோக்கிய திருமுகம் கொண்டுள்ளார்.

இவருடைய தேவி (தாயார்) அஞ்சிலைவல்லி ஆவாள். இவரும் காமாட்சியம்மன் கோட்டத்து மாடத்தில் எழுந்தருளியுள்ளார் என்பர். காமாட்சி யோக நிலையில் விளங்குவதைக் கண்டு திருமகளாகிய இத்தேவி பணிவிடை செய்தற்கு இங்கு எழுந்தருளியுள்ளாள் என்பர். அவள் அறியாமல அவளைக் காண இங்கு வந்து பெருமாள் நின்றதால் அவருக்குக் கள்வன் என்னும் பெயர் வழங்குவதாயிற்று என்பர்.

இக்கோயில் முற்காலத்தில் தனியே இருந்ததென்றும், பின்னர் இங்கு உள்ளே கொண்டுவந்து அமைத்தனர் என்பதும் சிலர் கருத்து. ஆதிகாலம் முதல் இங்கேயே அமைந்திருப்பதெனவும் சிலர் கூறுவர். நூற்றெட்டுத் திவ்வியத் திருப்பதி என்னும் நூலில் இக்கோயில் விமானம், தாயார் பெயர் முதலியன தனித்தனியே குறிப்பிடப் பட்டிருப்பது எண்ணத்தக்கதாகும்.

இங்கு இவருக்குத் தனியே உற்சவர் விழா என்பதெல்லாம் இல்லை. இங்குக் காமாட்சியம்மனைப் பூசித்துவரும் பிராமணர்களே இங்கும் பூசை செய்கிறார்கள்.

திருமங்கையாழ்வார் ''திருநீரகத் தாய்'' எனத் தொடங்கும் பாடலில் இப் பெருமானைக் குறிப்பிடுகின்றார்.

பிறசெய்திகளைக் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் கட்டுரையில் காண்க.

# கற்றீசம்

இத்தலம் திருவோணகாந்தன் தளிக்கு மேற்கில் ஒரு பர்லாங்கு தொலைவில் வயற்கண் உள்ளது.

ஊழி முடிவில் கொடியவர்களை அழித்தற் பொருட்டுத் திருமால் கல்கி (குதிரை) ஆக இருந்து வீரராகவேசத்திற்குத் தெற்கில் மண்ணித் தீர்த்தக் கரையில் சிவபெருமானை வணங்கி வரம்பெற்ற தலம் ஆகும். வீரராகவேசத்திற்கும் அய்யனார் கோயிலுக்கும் அடுத்துள்ள இச்சிவலிங்கத்தை வணங்கினோர் யோக மோட்சங்களைப் பெறுவர் என்பது நம்பிக்கையாகும்.

காஞ்சிபுரம்

## கன்னிமார் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்தின் மேற்கில் திருப்பருத்திக்குன்றம் செல்லும் சாலையின் கிழக்கில் மேட்டுப் பகுதியில் (குடிநீரேற்று நிலையத்தையொட்டி) பெரிய மைதானத்தின் நடுவில் அமைந்துள்ளது. அருகில் தூர்ந்த குளம் உள்ளது. இது ஒரு காலத்தில் நாகதீர்த்தம் என்று மிகவும் சிறப்பாக விளங்கியதாகும்.

இதன் மேற்குக் கரையில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. கருவறையில் கன்னிமார் எழுவர் எழுந்தருளியுள்ளனர். உள்மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றில் உருவமற்ற கன்னிமார் சிலைகள் வைக்கப் பெற்றுள்ளன.

கோயிலின் வடக்கில் பெரிய மரத்தின் அடியில் நாகப் பிணைவுகள், விநாயகர், நாகதேவி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இங்குப் பூசாரி ஒருவர் பூசை செய்கின்றார். வெள்ளி, ஞாயிறு ஆகிய நாள்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இத்தெய்வத்தைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் இங்கு வந்து அடிக்கடி பூசை செய்கின்றனர். ஊரை விட்டு மிகவும் ஒதுங்கியிருப்பதால் மக்கள் நடமாட்டம் பெருமளவில் இல்லை.

காஞ்சிபுரம்

## காசி விசுவநாதர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் சர்வதீர்த்தக்கரையின் மேற்கில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

## காஞ்சிபுரம் கோயில்கள்

உலகத்திலுள்ள சிவத்தலங்கள் எல்லாம் சூக்குமமாகப் பொருந்தி இருக்கும் இத்தலம் காசியிலும் சிறந்ததென்பதற்காகச் காசி விசுவநாதர் இங்கு வந்து தங்கினார் என்பர்.

இக்கோயிலில் கருவறையை நோக்கியுள்ள நந்தியின் உருவத்தை முதற்கண் காணலாம். முத்தி மண்டபத்தில் நுழைந்ததும் முதலில் நந்திதேவர் திருவுருவம், பலிபீடம் ஆகியவற்றைக் காண்கிறோம். விநாயகர் சந்நிதிக்கு எதிரே வள்ளி, தெய்வயானை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன. அதை அடுத்துத் தட்சிணாமூர்த்தி திருவுருவமும் அடுத்துச் சண்டேசுவரர் திருவுருவமுமுள்ளன. அடுத்து வயிரவர் திருவுருவம் காணப்படுகிறது. கருவறையில் காசி விசுவநாதேசுவரர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார். கருவறைச் சுவரில் சோமாசுகந்தரின் புடைப்புச் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது.

மூலத்தானத்தின் மீது விமானம் காட்சியளிக்கிறது. இஃது ஒரு தளத்தையும் வட்ட வடிவமான சிகரத்தையும் கொண்டது.

இக்கோயிலில் காணப்படும் முத்தி மண்டபம் காஞ்சிபுரம் முத்தீசுவரர் கோயில் மண்டப வடிவில் அமைந்துள்ளது. ஊழிக்காலத்திலும் அழியாத இம்முத்தி மண்டபத்தை விடியற்காலையில் எழுந்து அன்போடு நினைப்பவர்கள் பாசத்திலிருந்து நீங்கி முக்தியை அடைவர் எனவும், இம்முத்தி மண்டபத்தைக் காண்பவர்கள் முத்தராவர் எனவும் கூறுவர். இம்மண்டபம் நான்கு சதுர எண்பட்டை அமைப்புடைய தூண்களைக் கொண்டுள்ளது. கருவறை முன் உள்மண்டபமும் மகாமண்டபமும் உள்ளன.

முத்தி மண்டபத்தில் விநாயகர், வள்ளி, தெய்வயானை, சுப்பிரமணியர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. மண்டபத்தின் நடுவில் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் காணலாம். தெற்குச்சுவரில் ஒன்பது புடைப்புச் சிற்பங்களும் மேற்குச் சுவரில் ஐந்து புடைப்புச் சிற்பங்களும் வடக்குச்சுவரில் மூன்று சிற்பங்களும் உள்ளன. மகிடாசுரமர்த்தினி, திருமால், விநாயகர், முருகர், தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர், வயிரவர் ஆகியோர் சிற்பங்கள் சுவர்களில காணப்படுகின்றன.

காஞ்சி காமகோடி சங்கர மடத்தின் ஆதரவில் இக்கோயிலின் பரம்பரைக்குருக்கள் பூசை செய்து வருகிறார். நாள்பூசை மட்டுமே நடைபெறுகிறது.

காஞ்சிபுரம்

# காசி விநாயகர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் புதுப்பாளையத்தின் தெருவின் வடக்குக் கோடியில் தெற்கு நோக்கியவாறு 20 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

காசியிலிருந்து கொண்டு வரப்பட்டதாலும், கங்கை நீர் கொண்டு வந்து அபிடேகம் செய்யப் பெற்றதாலும் இப்பெயர் அமைந்தது என்பர். காசி என்பவர் அமைத்து வழிபட்ட விநாயகர் என்பாரும் உளர்.

இங்குத்தெற்கு நோக்கிய கருவறையில் விநாயகர் தம் தேவியராகிய சித்திபுத்தியுடன் எழுந்தருளியுள்ளார். உள்மண்டபம், முன்மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன. முன்மண்டபம் மிகவும் அகன்றதாகும்.

இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார். இக்கோயில் தெருவார் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. விநாயகசதுர்த்திவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின் இக்கோயிலின் ஆண்டு வருமானம் வருமானம் ரூ. 4,058.

காஞ்சிபுரம்

# காமாட்சியம்மன் கோயில்

சென்னைக்குத் தென்மேற்கில் 75 கிலோமீட்டர் தொலைவிலுள்ள காஞ்சிமாநகரின் மையத்தில் 16.884 சதுரமீட்டர் பரப்பளவில் இக்கோயில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயில் கிழக்கு நோக்கியுள்ளது எனினும் திசை நியமத்தில் சற்றுச் சாய்ந்தே அமைந்திருக்கிறது. இதன் காரணமாக இக்கோயிலினுள் வந்தவர் திசை தெரியாது மயங்குவர் என்பது கூறப்படுகிறது. இவ்வுண்மையை,

''அந்தமின்றி நல்லறம் புரிந்தளிக்கும் அன்னைதன் திருக்காமக்கோட்டத்தில்
வந்து சந்திரசூரியர் மீது வழிக்கொளாத தன்மருங்கு போதவினால்
சந்தமாதிரம் மயங்கி யெம்மருங்கும் சாயை மாறிய தன்திசை மயக்கம்
இந்த மாநிலத்தவரெலாம் காண என்றும் உள்ளதொன்றுஇன்றும் அங்குளதால்''

எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது.

காமகோட்டம் முழுவதும் பராசக்தியில் சக்கரக் கோணத்தின் அமைப்பை யொட்டியே அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறுகிறார்கள்.

காமாட்சி, இங்கே 'க' என்பதன் சொற்பொருளாகிய பிரமனையும், 'அ' என்னும் சொற்பொருளாகிய திருமாலையும் ம' என்னும் சொற்பொருளாகிய உருத்திரனை யும் தம் திருவிழிகளிலிருந்து தோற்றுவித்தார் ஆதலால், அம்மையாருக்குக் 'காமக் கன்னி' என்னும் பெயர் பொலிவுற்றது 'காமாட்சி' என்னும் பெயருக்கு 'அன்பர்கள் விரும்புவனவற்றை அளிப்பவரும் உயிர்களின் நன்மையைக் கருதி வசீகரத்தன்மை யுடைய விழிகளுடையவருமாக விளங்குபவர்'' என்னும் பொருள் அமைகிறது. அட்சி என்பது கண்ணைக் குறிக்கும். (க + அ + ம + அட்சி = காமாட்சி).[1] காமாட்சி கோயில் அமைந்துள்ள பகுதி காமகோட்டம் என்னும் பெயரில் விளங்கிவருகிறது.

சிவபெருமான் மீது ஐம்மலர் அம்புகளை எய்திய மன்மதன்வெந்து பொடியாகச் சிவபெருமான் ஆணை பிறப்பித்தார். ஆனால் அவன் துணைவி வேண்ட, அவள் கண்ணுக்கு மட்டும் மன்மதன் புலனாகுமாறு சிவபெருமான் அருள்புரிந்தார்.

''வெந்து பொடியான காமனுயிர்இரதி வேண்டப்புரிந்தளிந்த புண்ணியனே'' எனச் சேக்கிழார் தாம் அருளிய பெரியபுராணத்தில் குறிப்பிடுகிறார்.[2] இவ்வகையில் மன்மதன் பொதுவாக அருவத் திருமேனி எய்தினன். என்றுமே யாவர்க்கும் புலப் படும் வண்ணம் தன் உருவம் அமையவேண்டுமென மன்மதன் காஞ்சியில் காமாட் சியை நோக்கித் தவம்புரிந்தான். இத்தவத்தை ஏற்றுக்கொண்ட காமாட்சியம்மை தமது அருட்பார்வைகொண்டு மன்மதனுக்குப் புதிய உருவம் அளித்தார். இதனோடு மனநிறைவு கொள்ளாமல் மன்மதன் நான் சிவபெருமானையும் வெல்லத் தமக்கு ஆற்றல் வழங்குமாறு தேவியைத் துதித்தான். இதனையும்ஏற்றுக்கொண்டகாமாட்சி அம்மையார், கயிலாயம் உட்படச் சிவன் கோயில்கள் எல்லாவற்றிலுமிருந்த தமது சாந்நியத்தை ஈர்த்துக்கொண்டு காம கோட்டத்திலுள்ள பிலாகாசம் என்னும் சிறு குகையில் தம்மை உள்ளடக்கிக் கொண்டார். தேவியை விடுத்துத் தனித்திருக்க வேண்டிய நிலைமை சிவபெருமானுக்கு ஏற்பட்டது.

இதன்பின்னர், ஒருநாள் சிவபெருமானை வழிபடப் பிரமதேவர் கயிலாயம் சென்றார். ஆனால் தேவியை அங்குக் காண அவரால இயலவில்லை. அவர் உடனே சிவன் கோயில்களெல்லாவற்றிற்கும் சென்றார். எங்குமே தேவி அவர் கண் ணுக்குத் தென்படவில்லை.

---

1. காஞ்சிப்புராணம் - ஏகாம்பப் படலம் - 23
2. பெரியபுராணம் – திருஞானசம்பந்தர் புராணம – பாடல் 476

இவ்விளைவுகளெல்லாம் காமாட்சியம்மையாரின் திருவுள்ளப் பாங்கிற்கேற்ப ஏற்பட்டன என்பதைப் பிரமதேவர் உணர்ந்தார். பின்னர், காமாட்சி சாநியத்தியம் முன்பு போல் எல்லாக்கோயில்களிலும் விளங்கவேண்டுமெனப் பிரமதேவர் காம கோட்டத்தில் தவம் புரிந்தார். இத்தவத்திற்கு இரங்கிய காமாட்சி, "காஞ்சியைத் தவிர மற்றெல்லாச் சிவன் கோயில்களிலும் என் சாநியத்தியம் மீண்டும் தோன்றுக. காஞ்சியைப் பொறுத்தவரையில எனக்குத் தனிக்கருவறை தேவையில்லை. ஏனெனில், காஞ்சி "சிவ சித்" சேத்திரமாகும்" என்றார். இதன் பின்னர்த் தமிழகத்திலுள்ள சிவன் கோயில்கள் எல்லாவற்றிற்கும் காமகோட்டத்திலிருந்து காமாட்சியின் சாநியத்தியம் விடுவிக்கப்பட்டதால் அவை யாவுமே காமகோட்டம் எனக் குறிப்பிடப்படுகின்றன. இதனை அவ்வக் கோயில்களின் கல்வெட்டுகளும் சிற்பங்களும் லலிதா தோத்திரங்களும் குறிப்பிடுகின்றன.[3]

காஞ்சி நகரிலுள்ள முக்கியமான கோயில்களெல்லாம் காமாட்சி கோயிலையை நோக்கியவாறுள்ளன. திருவிழாக் காலங்களில் காஞ்சியிலுள்ள மற்றக் கோயில்

---

3. சிதம்பரம் — "கோவிலுக்கும் திருக்காமக் கோட்டமுடை பெரிய நாச்சியாருக்கும்" தென்னிந்தியக் கல்வெட்டுகள் அரசு பழஞ்சுவடிகள் நூலகம், சென்னை, பகுதி 1, எண் 14, பக்கம் 27.

அவினாசி — "கோயிலில் திருக்காமக் கோட்டத்துப் பெருங்கருணை" பகுதி 1, எண் 197, பக்கம் 190.

விசயமங்கலம் — "திருநாகீசுவரர் திருக்காமக் கோட்டத்தாருடைய நாச்சியாருக்கு அமுதுபடி" பகுதி 1, எண் 267, பக்கம் 248.

திருவொற்றியூர் — "திருவொற்றியூருடைய நாயனார் கோயில் திருக்காமக் கோட்டமுடைய நாச்சியாருக்கு வேண்டும் நிபந்தங்களுக்கு" பகுதி 1, எண் 530, பக்கம் 517.

திருப்பாலைவனம் — "திருபாலைவனமுடைய நாயனார் திருக்காமக்கோட்டம்" பகுதி 1, எண் 539, பக்கம் 528.

திருக்காட்டுப்பள்ளி — "திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் அழகமர் மங்கையார்க்கு" பகுதி 2, எண் 597, பக்கம் 566.

வல்லம் — "இக்கோயில் சிவகாம கோட்டமுடையநாச்சியார்க்கும் வேண்டும் நிபந்தத்துக்கு" பகுதி 2, எண் 635, பக்கம் 613.

தெய்வங்களெல்லாம் காமாட்சி கோயிலை வலம் வருவதை இன்றும் காணலாம். காஞ்சியில் எங்குமே தேவிக்கெனத் தனிச்சந்நிதி இல்லை. காமாட்சி காஞ்சியில் எழுந்தருளிய வரலாற்றைப் புராணம் எடுத்துரைக்கிறது.

முன்பொரு காலத்தில், பந்தகாசரன் தவம் புரிந்து. மூவுலகங்களிலும் அதிகாரம் செலுத்துவதற்கான வரத்தைப் பிரமதேவரிடம் பெற்றுத் தேவர்களுக்குத் துன்பம் விளைவித்தான். இந் நிலையில் இத்துன்பத்திற்குட்பட்ட தேவர்கள் சிவ பெருமானிடம் முறையிட்டனர். அப்போது, கயிலாயத்திற்கு வடக்கிலிருந்த கோமுகத் தலத்தில் பிலத்திலிருந்து (துவாரத்திலிருந்து) காஞ்சியில் பிலத்திற்கு இறங்கி வந்து அங்கிருந்து எழுந்து வெளிவந்த அன்னை பராசக்தியை இதற்காக வழிபடுக" எனச் சிவபெருமான் அவர்களுக்கு அறிவுறுத்தினர். இவ்வாறு இவர்கள் வழிபட்டதை ஏற்றுக்கொண்ட அன்னை அம்பிகை, கயிலையில் உறங்கிக் கொண்டிருந்த பந்தகாசுரனைக் கொன்று அவன் தலையை ஏந்தியவண்ணம் தேவர்கள் முன் தோன்றினார். இதன் பின்னர், காமாட்சியின் ஆணைக்கேற்ப பந்தகாசுரன் உடற்பகுதி காஞ்சியிலேயே புதைக்கப்படத் தேவர்கள் முற்பட்டார்கள். இதற்காகத் தோண்டப்பட்ட பள்ளத்தில் மல்லகன் என்னும் அசுரன் தோன்ற, அவனை அழிக்கத் திருமாலின் உதவியைத் தேவர்கள் நாடினர். திருமால்

---

திருப்பழனம் — இக்கோயிலின் பூசை நிலைகளும் திருக்காமமுடைய நாச்சியார் கோயில் பட்டாச்சாரிய நிலையும் எண் 1042

கோவிலடி — இக்கோவிலில் எழுந்தருளிவித்துக் திருக்காமக் கோட்டமுடைய அகில நாயகியார்க்குப் பூசைக்கும்
பகுதி 3, எண் 1175, பக்கம் 1152.

மானசார சிற்பசாத்திரம்

"காமகோஷ்த விதம் வாக்ல்யக்குத தவக் தத்
பிரபஞ்சன்" எனக் குறிப்பிடுகிறது - (165-1)
"சக்தி பிரதஷ்த - காமகோட்டி"

எனச் சூக்ஷாகாமம் கூறுகிறது.

லலிதா சகஸ்ரநாமம் காமகோடி எனக் குறிப்பிடுகிறது.

"காமகோட்டி நிலய" எனவும் "காமேசு வரிகாம கோட்டி"எனவும் "காமகோஷ்டிமகா பத்ம பிடஸ்தா" இம்மூன்றும் தேவியின் இடம் காமகோடி எனக் குறிப்பிடுகின்றன.

அவனைத் தாக்கியபோது அவனது உதிரத்திலிருந்து அசுரர் பலர் தோன்றிய வண்ணமாக இருந்தனர். இவர்களை அழிக்குமாறு சிவபெருமானிடம் தேவர்கள் வேண்ட, அவர் தமது சடையிலிருந்து இரு பூதங்களை விடுவித்தார். இந்பூதங்கள் அசுரர்களை அழித்தன. பின்னர் அவை திருமாலுடன் போரிட்டன. திருமால் அவற்றை மிதித்து அடக்கினார். அவை பின்னர்த் திருமாலிடம் மன்னிப்புக் கோரின. அந்தச் சமயத்தில் சிவபெருமான் தம் சடையிலிருந்து பஞ்ச தீர்த்தம் நீர்ப் பெருக்கெடுக்குமாறு அருளினார். அதில் திருமாலும், அப்பூதங்களும் நீராடிய பின்னர், அப்பூதங்களை அத்தீர்த்தத்திற்குக் காப்பாளர்களாகத் திருமால் நியமித்தார்.

முன்பு அப்பூதங்களுடன் தாம் நின்று போரிட்டதையும் அவற்றின் மீது ''நின்றார்'' ''இருந்தார்'' ''கிடந்தார்'' என்கிற மூன்று நிலைக் கோலங்களைத் திருமால் கொண்டார். இம்மூன்று நிலைகளையும் காட்டத் திருமால், அத்தீர்த்தக் குளத்தின் மேற்பகுதி மாடங்களில் அவ்வடிவங்களில் எழுந்தருளினர்.

தேவர்கள் பந்தகாசுரன உடலைப் புதைத்த இடத்தில் வெற்றிக் கொடியை நாட்டி அதற்கு அருகில் காயத்திரி மந்திரத்தின் அட்சரங்களை இருபத்து நான்கு கால்களாக நாட்டி அதற்குக் காயத்தரி மண்டபம் என்னும் பெயரிட்டு அதில் பிரணவத்தை ஆசனமாக அமைத்து அதன் பேரில் ஒரு பீடமிட்டு அம்பிகை போன்ற பிம்பத்தை நிலை நாட்டி அடுத்தநாள் விடியும் வரையில் வழிபாடாற்றி வந்தனர். கதிரவன் உதயமான நேரத்தில் ஆசாரத்தோடு பார்க்கும் போது அப்பிம்பம் இராச ராசேசுவரியாகிய திரிபுரசுந்தரி வடிவில்காமாட்சியாகக் காட்சி அளித்தது. காமாட்சி நிலையாகக் காஞ்சியில் அருள்பாலித்து வரவேண்டுமென்று தேவர்கள் உட்பட அனைவரும் வேண்டினர்.

திருப்பாற்கடல் கடையப் பெற்ற காலத்தில, கடலிலிருந்து வெளிவந்த நஞ்சினால் தாக்கப்பட்டதால் திருமாலின் திருமேனி கறுநிறம் எய்திட்டதை முன்னிட்டுப் பொன்னிறத்தில் திகழ்ந்து வந்த இலட்சுமி தமது நிறந்திற்கும் திருமாலின் நிறம் குறைந்து விட்டதைச் சுட்டிக்காட்டி எள்ளி நகையாடினாள், அவளுக்கு அறிவு புகட்டும் முறையில், ''நின் அழகு நீங்கிடுக'' எனத் திருமால் சாபம் இட்டனர். அச்சாபத்தின் விளைவாகப் பொன்னிற இலட்சுமி அரூப லட்சுமியாயினள். இக்கோலமெய்திய திருமகள் காஞ்சி வந்து காமாட்சியிடம் சரண்புக்காள். காமாட்சி, இலட்சுமியைத் தமது இடப்பக்கத்தில் இருத்தி, ''தம்மை அன்பர்கள் அருச்சித்த குங்குமத்தை எனது திருவடியில் இடும்போது, அக் குங்குமத்தின் ஆற்றலால், நீ முந்திய அழகைப் பெறுவாய். அன்பர்களும் எல்லாப் பேறுகளையும் எய்துவார்கள்'' என காமாட்சி அருள் புரிந்தார். காமாட்சியின் திருவருள் துணை கொண்டு தம் துணைவி தனது அழகை மீண்டும் பெற்றதை

உணர்ந்த திருமால் அவளது அழகைச் சற்று மறைவில் இருந்து கொண்டு கண்டு களித்தார் .இவ்வாறு மறைந்து தமது அழகைக் கண்ட திருமாலை அறிந்து கொண்ட இலட்சுமி, திருமாலை "கள்வா" என்றழைத்தாள். இவ்வகையில் திருமாலுக்குக் "கள்வர்" என்னும் பெயர் அமைந்தது.

பிரமதேவர், தாம் காமாட்சியை வழிபட்ட பின்னர், அதில் பயன்படுத்தப்பட்ட தாமரை மலர் ஒன்றை ஆகாயத்தில் வீச, அது விரிந்து மலர்ந்து அழகிய மனித வடிவமெய்திப்பிரமதேவரை வணங்கிய போது, பிரமதேவர் அவரைக் காஞ்சிக்கு மன்னராக்கினர். அவர் "ஆகாச பூபதி" என்னும பெயரில் காஞ்சி அன்னையை வழிபட்டுவந்தார்

ஆகாசபூபதி தமக்கு மகப்பேறில்லாமைக்காக வருத்தமுற்றார். அவர் நாட்டிலும் பஞ்சம் ஏற்பட்டது. இக் குறைபாடுகளெல்லாம் நீங்குவதற்காக ஆகாச பூபதி அன்னையைப் பேரன்போடு வழிபட்டார். பிரமதேவர் பிறப்பித்த ஆணைக்கேற்பக் காமாட்சிக்குப் பிரம்மோற்சவம் நடத்தி வைத்தார். இதன் பயனாக அன்னையின் அருள் நோக்கில் ஆகாசபூபதி விரதம் மேற்கொண்டு அன்னதானம செய்த போது விநாயகப்பெருமான் அவதாரமோ என வியக்கத்தக்க வகையில ஆகாச பூபதி புதல்வன் ஒருவன் பிறந்தான். அவனுக்குத் "துண்டீரன்" என்றும் பெயர் சூட்டப்பெற்றது. ஆகாசபூபதி விரதம் மேற்கொண்டு அன்னதானம் செய்த போது காமாட்சியே சுமங்கலி வடிவில் அதில் பங்கேற்றார். இதன் காரணமாகப் பொன்மாரி பெய்யுமாறு காமாட்சி அருள் புரிந்தார். பொன் போன்ற கதிர்களுடன் நெல் விளைய நாடு செழித்தது. அன்னை வழிபாட்டில் ஆழ்ந்து ஈடுபட்ட துண்டீரன் பின்னர் மாமன்னராகத் திகழ்ந்தார்; தொண்டை மண்டலத்தையும் ஆண்டார்.

பராசக்தியின் நெற்றிக்கண்ணிலிருந்து உதித்தருளிய ஒளிப்பிழம்பாகிய திரிபுர சுந்தரியின் வடிவம் பிரமதேவர் பூசித்த பங்காரு காமாட்சியின் திருவுருவமாகும் இத்திருவுருவம் ஏறத்தாழ முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர்க் கர்நாடகப் போர்க்காலத்தில் தற்போது திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம அரசால் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. இன்றும் உடையார் பாளையம் சிவன் கோயிலின் காமாட்சியம்மன் கலியாண மண்டபம் இருப்பதைக் காணலாம்.

இந்தத் தலத்தில் காமாட்சியிருந்த இடத்தில் இப்போது அம்மையாரின் ஆதார பீடம் இருக்கின்றது. இச்சந்நிதிக்கெதிரிலுள்ள பெரிய மண்டபத்தில் ஆதிசங்கரர் சர்வகுருபீடம் ஏறியதாகச் சொல்லப்படுகிறது.

இக்கோயிலின் கிழக்குப்புறக் கோபுரவாயிலின் வலப்புறம அகத்தியர் திருவுருவமும், இடப்புறம் அயக்கிரீவர் திருவுருவமும் உள்ளன, காமாட்சியை

அகத்தியர் வழிபட்டார். கிழக்குக் கோபுர உள் வலபக்கத்தில் காலவயிரவர் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. இதிலே கண்ணன் திருவுருவமும் உள்ளது. கோபுரத்தின் உட்புர இடப்பக்கத்தில் மகிடாசுரமர்த்தினி திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளவாறு உள்ளது. தென்கிழக்கில் அமைந்துள்ள சந்நிதியில் காசி விசுவநாதர் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். அடுத்த மேற்கில் தெற்கு நோக்கியவாறு துர்க்கையின் சந்நிதி அமைந்துள்ளது.

தம்மோடு போரிட்ட இரு பூதங்களின் எதிரில் நின்றும் அவற்றின் மீது இருந்தும் கிடந்தும் ஆகிய மூன்று கோலங்களில் திருமால், பூதானுக்கிரகப் பெருமாள் என்னும் பெயரில் இக் கோயிலின் மேற்குப்புறச் சுவர் மாடங்களில் எழுந்தருளி உள்ளார்.

4. சில காலத்திற்குப் பின்னர் தஞ்சாவூர் மராட்டியப் பரம்பரை பிரதாசிங் தஞ்சையில் காமாட்சி எழுந்தருளச் செய்தார். இன்றும் இவ்வூரில் இத்தேவி திருக்கோயில் இருக்கின்றது.

பூதானுக்கிரகப் பெருமான் சந்நிதியை அடுத்து இக்கோயிலை வலம் வரும் போது கிழக்குப் பகுதியில் ஆதிசேடன் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. அடுத்து மேற்கில் வரசித்தி விநாயகர் வடக்கு நோக்கியுள்ளவாறு எழுந்தருளியுள்ளார். ஆதிசேடன் சந்நிதிக்கும் வரசித்தி விநாயகர் சந்நிக்கும் இடையிலுள்ள நுழைவாயிலின் இருபுறங்களிலும் துவாரசக்திகளில் திருவுருவங்கள் நிலைப்படுத்தப் பட்டுள்ளன. துவார சக்திகளைக் கடந்து உட்பகுதிக்குக் கிழக்கே செல்வோமெனில் சுவர் மாடத்தில் துர்வாசர் சந்நிதியை அடைகின்றோம். துர்வாசர் தேவியைப் தியானம் செய்தவண்ணம் மேற்கு நோக்கியவாறுள்ளார். இவரே முதன்முதலில் தேவியை ஆராதிக்கும் முறையைக் கூறும் ''சௌபாக்கிய சிந்தாமணி'' என்னும் நூலை இயற்றினார். இதையொட்டியே இன்றும் பூசை முறைகள் நடத்தப்பெறு கின்றன. துர்வாசர் சந்நிதியைக் கடந்து கிழக்கு நோக்கி வரும் வழியில் இட்ட சித்தி விநாயகர் மேற்கு நோக்கி வீற்றிருப்பதைக் காணலாம். இட்ட சித்தி விநாயகர் சந்நிதியை அடுத்துக் காமாட்சியம்மன் உற்சவர் சந்நிதி இருக்கின்றது. இச் சந்நிதி தெற்கு நோக்கியிருக்கின்றது. இக்கோயில் திருவுருவங்களுள் முதன்மை வாய்ந்தது காமாட்சி அம்மையின் உற்சவர் திருமேனியாகும்.

உற்சவர் காமாட்சி சந்நிதிக்கு எதிரில் தெற்குப்பகுதியில் துன்டீர மாமன்னர் திருவுருவம் காணப்படுகிறது. இவர் திருவுருவம் கைகூப்பியவாறு தேவியை வணங்கிய நிலையிலுள்ளது. இவரே தொண்ட மண்டலத்தை ஆண்டார் என்பார்கள். இவர் சந்நிதிக்குச் செல்லும் போது அமைதியாய் வழிபட்டுச் செல்லவேண்டும் என்பது வழிமுறையாகும்.

துன்டீர மாமன்னர் திருவுருவத்திற்கு மேற்கில் பங்காரு காமாட்சி சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அன்னியர் தாக்குதலுக்கு அஞ்சிச் சுவர்ண காமாட்சி எனப்படும் பங்காரு காமாட்சியின் திருவுருவத்தைச் சங்கீத மூர்த்திகளுள் ஒருவரான சியாமா சாஸ்திரிகளின் மூதாதையர்களில் ஒருவர் செஞ்சி உடையார்பாளையம் திருவாரூர் வழியாகச் சென்று தஞ்சை நாயக்க மன்னர்களிடம் தந்தார். காஞ்சியில் காமகோடி பீடம் ஆச்சார்ய சுவாமிகள் பங்காரு காமாட்சி திருவடிகளை இங்கு மண்டபத்தில் நிறுவினார். இத் திருவடிகள் உரிய முறையில் பூசிக்கப்படுகின்றன.

பங்காரு காமாட்சி சந்நிதிக்குப் பின் புறத்தில் சியாமள தேவி திருவுருவம் வடக்கு நோக்கியுள்ளது. இத்தேவிக்கு மாதங்கி என்னும் பெயருமுண்டு; எட்டுக் கைகளோடு வீணையேந்திய வண்ணம் வடக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார். இந்த வடிவம் காளிதாசர் இயற்றிய ''ஸ்மாய சியாமள'' தண்டகத்தில் போற்றப் படுகிறது.

சியாமள சந்நிதிக்கு மேற்கில் சரசுவதி சந்நிதி கிழக்கு நோக்கியவாறுளது. சரசுவதி சந்நிதிக்கு வடக்கில் சாத்தன் சந்நிதி உள்ளது இச் சந்நிதியில் சாத்தன் தம் இரு மனைவியரும் இரு புறங்களிலிருக்க, கிழக்கு நோக்கியவாறுள்ளார். இச் சாத்தனிடமிருந்து கரிகால்சோழன் சென்று பெற்று அதனைக் கொண்டு இமயமலை மீது புலிச்சின்னம் அமைத்தார் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

ஆதிசங்கரர் திருவுருவம் வீற்றிருந்த திருக்கோலமாக ஆறு சீடர்கள் உடனிருக்கத் துறவுக் காட்சியோடு உள்ளது. இவர் காலடியில் அவதாரம செய்து ஞான நூல்கள் பல கற்று, அத்வைத நெறியை நிலைநாட்டப் பத்திரிநாத், துவாரகை, சிருங்கேரி, பூரி, காஞ்சி ஆகிய நான்கு திசைகளில் பீடங்களை நிறுவினார். காஞ்சியில் காமகோட்டத்தைச் சக்கர பீடமாக அமைத்துச் சக்கரத்தைக் காமாட்சியின் முன்னிலையில் பதித்துச் சித்தி பெற்றார். சாத்தான் சந்நிதிக்கு வடக்கில் ஆதிசங்கரர் சந்நிதி உள்ளது. இங்கே ஆதிசங்கரர் மூலவர் உற்சவர் திருவுருவங்கள் உள்ளன.

ஆதிசங்கரர் சந்நிதிக்குத் தென்கிழக்கில் அன்னபூரணி சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இவர் பால்கலசத்துடன் இருக்கின்றார். காஞ்சிக்கு வந்து தவம் செய்வதற்கு முன்னர் காசியில் பராசக்தி அன்னபூரணியாகத் தவம செய்தார். பன்னிரண்டாண்டுகளாக அங்குப் பசிப்பிணி போக்கிப் பின்னர் இங்கு வந்த கோயில் கொண்டுள்ளார்.

காமாட்சி சந்நிதிக்குள் செல்லும் வழியில விநாயகர், முருகர் ஆகியோர்களின் திருவுருவங்களைக் காணலாம். காமாட்சியின் சந்நிதிக்கு செல்லும் வழியில் வடக்குப் பகுதியில 5 மீட்டர் நீளமும், 1 மீட்டர் அகலமும் கொண்ட மன்றத்தின்

மேற்குக் கோடியில், திருமால் திருவுருவம் கிழக்கு நோக்கியிருக்கின்றது. காமாட்சியை அடைந்து இலக்குமி தன் முந்திய அழகுவடிவத்தைப் பெற்றாள். தம் துணைவியாகிய இலக்குமி பெற்ற இவ்வழகு வடிவத்தைச் சற்று மறைந்து நின்று திருமால் பார்த்தார். இதன்காரணமாக இவருக்குக் கள்வர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இச்சந்நிதி திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் மங்களாசாசனம் செய்யப் பட்டுள்ளது.

கள்வர் திருவுருவத்தையடுத்து காமாட்சியின் திருவருளால் தன் அழகை மீண்டும் பெற்ற இலட்சுமி சொரூப இலட்சிமியாகத்தெற்கு நோக்கிக்காட்சி தருகிறார்

திருமாலும் இலக்குமியும் பிரிந்த நிலையில் காட்சி அளித்த கள்வர் சொரூ இலட்சுமி ஆகியோருக்குமாறுபட்ட நிலையில், உமாதேவியும் சிவபெருமானும் ஒருமித்து அர்த்த நாகரீசுவரராகக் காட்சியளிக்கும் திருவுருவம் அடுத்துத்தெற்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறது.

கருவறையில் ஸ்ரீ சக்கரத்தின் மேற்கில் பதுமாசனத்தில் கிரீடம் தரித்து பாசம் அங்குசம், கரும்புவில், மலர் அம்பு ஆகியவற்றைத் தம் நான்கு கரங்களில் தாங்கிச் சூரியன், சந்திரன் ஆகியோர்களைக் காதணிகளாகக் கொண்டு இராசராசேசுவரி பொன்மய விளக்கத்துடன் கிழக்கு முகமாகக் காமாட்சி காட்சி அளிக்கிறார் காமாட்சியின் கருவறையினுள் ஒரு பிலாகாசம் (குக+ஆகாசம்) இருக்கின்றது இதைக் காஞ்சிப்புராணமும் காமாட்சி பிலாசமும் தெரிவிக்கின்றன. ஸ்ரீ சக்கரம் ஆதி சங்கரரால் நிறுவப்பெற்றது. இதுவட்டவடிவத் தொட்டி போன்ற அமைப்பிலுள்ளது இதில் எட்டு இலட்சுமிகளின் திருவுருவங்களும் உள்ளன.

மூலக்காமாட்சிக்கு வலப்புறம் காமாட்சி தவக்கோலத்தில் வீற்றிருக்கிறார் இத்தவக்கோலம் ஒரு கால் மடக்கப்பட்டு, வயிற்றின் இடமாகவும், மற்றக் கால் கீழே ஊன்றப்பட்டும் சடைமுடியுடன் ஒரு கை மகாலிங்கத்தைத் தாங்கியும், மற்றொரு கை வழிபாட்டு மாலையைக் கொண்டும் விளங்குகின்றன. காமாட்சி சந்நிதி எதிரில் சிம்மத்தின் உருவமுள்ளது.

காமாட்சியம்மனை வழிபட்டுத் திரும்பும்திசையில் கருவறையின்வடக்குப்புறச் சுவரில் கிழக்குக் கோடியில் வராகியம்மன் திருவுருவம் வடக்கு நோக்கியவாறுள்ளது

இலட்சுமி தன் இயற்கை அழகை இழந்த கோலத்தில் காணப்படுவது அரூப இலட்சுமியின் திருவுருவமாகும். கருவறையின் வடக்குப்புறச் சுவரில் மேற்குக் கோடியில் அரூபலட்சுமியின் சந்நிதி வடக்கு முகமாக இருக்கின்றது. இங்குக் காமாட்சிக்கு அருச்சனை செய்தகுங்குமத்தை அரூபலட்சுமியின்திருவடியில்வைத்து

வணங்கி அதனை மக்கள் எடுத்துச் செல்வார்கள். இஃது அரூபலட்சுமி, தனது முந்திய அழகைப் பெறுவதற்குக் காமாட்சியின் திருவருள் உதவுகிறது என்பதைக் குறிக்கும்.

கருவறையின் வடக்குப்புறத்தில் விநாயகர் திருவுருவங்கள் இரண்டு உள்ளன இவற்றுள் ஓர் உருவம் கிழக்கு நோக்கியும், மற்றொன்று தெற்கு நோக்கியும் காணப்படுகின்றன.

இக்கோயிலின் தீர்த்தம் இக்கோயிலின் கருவறைக்கு மேற்கிலுள்ள ''பஞ்ச தீர்த்தம்'' ஆகும். இது 59 மீட்டர் சதுர வடிவில் 3,481 சதுர மீட்டர் பரப்பைக் கொண்டுள்ளது. இதற்கு நாற்புறங்களிலும் இறங்கு படிகள் நன்கு அமைக்கப்பட்டு உள்ளன. தீர்த்தத்தின் மையத்தில், நீராழி மண்டபம் ஒன்றுள்ளது. இம்மண்டபத்தில் 16 தூண்கள் 3 1/2 மீட்டர் உயரத்திலுள்ளன.

திருமால அசுரனை எதிர்த்துப் போரிட்ட போது அங்குத் தோன்றிய மல்லாசுரனை எதிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது அவனைத் திருமால் தாக்கிய போது அவன் உடலிலிருந்து வீழ்ந்த உதிரத்திலிருந்து தோன்றிய அசுரர்களை அடக்க, சிவபெருமானால் இரண்டு பூதங்கள் அமைக்கப்பட்டன. இவ்விரண்டின் உருவங்கள் இத்தீர்த்தத்தின் கிழக்குக் கரையிலுள்ளன. இத்தீர்த்தத்தில் வெள்ளிக் கிழமைகளில் நீராடுவது சிறந்தது என்பது நம்பப்படுகிறது இக்கோயிலில் சுக்கிரவார மண்டபத்திற்குக் கிழக்கில் தீர்த்தக்கிணறு உள்ளது.

இக்கோயிலுக்குரிய நாற்றிசைகள் ஒவ்வொன்றிலும் ஒரு கோபுரமாக நான்கு கோபுரங்கள் உள்ளன. கிழக்குக் கோபுரம் ஐந்து தளங்களையும் ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. தெற்குக் கோபுரம் 5 தளங்களையும் 7 கலசங்களையும் பெற்று உள்ளது மேற்குக் கோபுரம் 5 தளங்களையும் 7 கலசங்களையும கொண்டுள்ளது வடக்குக் கோபுரம் 5 தளங்களுடனும் 7 கலசங்களுடனும் விளங்குகிறது. இக்கோயிலின் வெளிப்பிரகாரம் இக்கோயிலின் நாற்றிசைகளிலும் இக்கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மாட வீதிகளுமாகும்.

• இக்கோயிலின் உட்பிரகாரத்தைப் பொறுத்தவரையில் நீளம் கிழக்கில் 21மீட்டர் அகலம் 4 மீட்டர், தெற்கில் நீளம் 22 மீட்டர், அகலம் 22 மீட்டர், மேற்கில நீளம் 27 1/2 மீட்டர், அகலம் 6 மீட்டர், வடக்கில் நீளம் 22 மீட்டர், அகலம 2 1/2 மீட்டர் அளவும் கொண்டுள்ளது.

இக்கோயிலினுள் நுழைந்ததும் மேற்கு நோக்கிச் செல்வோமெனில், அங்கு சுக்கிரவார மண்டபம் 20 மீட்டர் நீளமும், 9 மீட்டர் அகலமும், 6 மீட்டர் உயரமும் கொண்ட பரப்பில் 20 தூண்களுடன் இருப்பதைக் காணலாம். இம்மண்டபத்தின்

மையத்தில் நான்கு தூண்கள் கொண்ட சிறிய மண்டபமுள்ளது. இம்மண்டபத்தில் வெள்ளிக்கிழமைகளில் உற்சவர் காமாட்சி எழுந்தருளுவது வழக்கம். பங்காரு காமாட்சி சந்நிதியின் கிழக்குப் பகுதியில் முன்மண்டபம் அமைந்துள்ளது. காயத்திரி மண்டபம் உட்பிரகாரத்தின் மையத்தில் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் கருவறை அமைந்துள்ளது இதுகாயத்திரியின் 24 அட்சரங்களை 24 தூண்களாகவும் 4 வேதங்களை 4 சுவர்களாகவும் கொண்டதாகும். வெளிப் பிராகாரத்திலிருந்து காமாட்சி சந்நிதிக்குச் செல்லும் வழியிலுள்ள கோபுர மண்டபத்தில் தருமதம்பம் அல்லது ஜெயத்தம்பம் இருக்கின்றது. இங்குக் காமாட்சி எழுந்தருளியிருப்பதால் அவள் 32 அறங்களைப் புரிந்து வந்த காரணமாகக் காமாட்சிக்குத் தருமவர்த்தினி என்பது போன்ற பெயர்கள் லலிதா சகசுர நாமத்தில காணப்படுகின்றன. பஞ்ச தீர்த்தத்தின் தெற்குக் கரையில் நாற்கால் மண்டபமொன்று விளங்குகிறது. வெளிப் பிரகாரத்தில் வடமேற்குக் கோடியில் உற்சவ மண்டபம் உள்ளது. மார்கழி மாதத்தில் மாட்டுப் பொங்கலன்று இறுதியடைகின்ற திருவிழாவின் போது அம்மனின் உற்சவர் திருமேனியை இம்மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்கின்றார்கள்.

இக்கோயில் மடைப்பள்ளி கோயிலின் தென் கிழக்குக் கோடியில் இருக்கிறது. வெளிப் பிரகாரத்தின் வடக்குக் கோடியில் வாகன அறையும் வாகன அறைக்குக் கிழக்கில் கொடியேற்று மண்டபமும் உள்ளன. இதனருகில் யாகசாலை இருக்கிறது

இக்கோயில் கிழக்கு நோக்கியவாறுள்ளது என்றாலும் திசை முறையில் இது சாய்ந்தே அமைந்துள்ளது.

கிழக்குக் கோபுரத்தின் ஒவ்வொரு தளத்தின் முகப்பு மையத்திலும் இதன் உச்சித் தளத்தின் மேற்பகுதியிலும் ஸ்ரீ சக்கரம் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அடித் தளத்தின் இருபுறங்களிலும் ஒவ்வொன்றின் மூன்று மாடங்களிலும் தெய்வச் சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. வலப்புறத்து மாடத்தில் விநாயகர் திருவுருவம் தெளிவாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு தளத்தின் முகப்பு நுழைவாயிலின் இரு புறங்களிலும் தெய்வச் சுதைச் சிற்பங்கள் பொருத்தப் பட்டுள்ளன.

இக்கோயிலின் சாத்தன் கோயிலின் முன்புறமுள்ள மண்டபத்தின் இரண்டாவது தூணில் காமாட்சி அமர்ந்த கோலத்துடன் கூடிய அழகிய சிற்பம் காணப்படுகிறது. காயத்திரி மண்டபத்திற்குள் நுழையும் வாயிற்படிக்கு அருகில், அன்னபூரணி கோயிலுக்குப் பக்கத்திலுள்ள கருங்கல் மண்டபத்தில் வலப்பக்கத் தூணில் காமாட்சியின் திருவுருவம் தவக்கோலத்தில் காணப்படுகிறது.

வசிட்ட முனிவரால் இராமருக்கு உபதேசிக்கப்பட்டதைக் கூறும் சிந்தாமணி நூலில் ''காஞ்சி காமகோட்டம்'' ஆகாச பீடமாகக் கூறப்பட்டுள்ளது. மூலத்தானச்

சந்நிதியில் பூமிக்குள் பிலாசாகம் (குகாகாசம்) விளங்குவது இதற்குச் சான்று. இங்கு எழுந்தருளியுள்ள அமபிகை கங்கணம் பூண்ட கைகளை உடையவர். இத்தேவியின் மீது மூத்த கவி பாடிய தோத்திரப் பாடல்களில் அம்பிகை கங்கணம் பூண்ட கைகளையுடையவள் என்று கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்து உரைமேற்கோள் செய்யுளிலும் காமாட்சி ''கச்சி வளைக்கைச்சி'' எனப் புகழப் பெற்றுள்ளார். அம்பிகையின் கங்கணம் அவள் கைகளில் திகழ்வதை நாம் இன்றும் காணலாம. இக்கோயில் உற்சவ மூர்த்திகளைத் தவிர 5 காமாட்சி தானங்கள் உள்ள சிறப்பு குறிப்பிடத்தக்கது. அவையாவன : 1. பிலாகாசம், 2. ஸ்ரீசக்கரம், 3. மூல காமாட்சி, 4. தவ காமாட்சி, 5. பங்காரு காமாட்சி.

சுக்கிரவார மண்டபத்தில விநாயகர், அம்மன், ஆஞ்சநேயர் ஆகியோர் திருவுருவங்கள் சிற்பவடிவிலுள்ளன. கருவறைக்குச் செல்லும் வடக்கு நுழைவாயிலின் எதிரில் பிரசன்ன விநாயகர் திருவுருவம் சிற்பமாக இருக்கிறது. காயத்திரி மண்டபத்தின் கிழக்குப்புற வெளிப்புறச் சுவரின் இரு புறங்களிலும் சுப்பிரமணியர், விநாயகர் திருவுருவங்கள் எழிலுறச் செதுக்கப்பட்டுள்ளன. சங்கராச்சாரியார் கோயிலின் வடக்கு மேடைப் பகுதியில் சங்கராச்சாரியார் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் சிற்பங்கள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. உற்சவர் காமாட்சி சந்நிதியின் முன் புறமுள்ள மண்டபத்தின் ஒரு தூணில் ஆஞ்சநேயர் திருவுருவத்தைக் காணலாம்.

தமது இருப்பிடமாகிய காஞ்சிக்கு உமையம்மை வந்திருந்து தவமியற்றித் தமது கணவராகிய சிவபெருமானை அடையுமாறு உமையம்மையிடம் (வட இந்தியாவில் கிறித்துக்கு முற்பட்ட காலத்தில் பல கோயில்களை அமைத்த) பெருமைமிக்க யக்ஷன் மகாபதும நாகன் வேண்டினான் என்பதைப் பெரியபுராணம் கூறுகிறது. இப்பதுமநாதன் வாழ்ந்த புனிதத்துவார இடமும் உமையம்மை பூசித்த இடமும் இக்கோயில் பகுதியிலுள்ளன என்பதை மரபுவழிச் செய்தியும் இலக்கியங் களும் குறிப்பிடுகின்றன.

காஞ்சிக்கு அருகிலுள்ள சாத்த மங்கலத்தில் கிடைக்கப் பெற்ற சமணப்பதிவு ஒன்று பல்லவ மன்னர் நந்திவர்மன் 14–ஆம் ஆட்சி ஆண்டு (கி. பி. 746) காலத்திற்குரியது இப்பதிவு சமணப் பள்ளிக்குப் பொற்கழஞ்சுகள் அளிக்கப்பட்டன எனவும், ஊர்ச்சபையார் இதனை ஏற்றுக்கொண்டு இவ்வறக் கட்டளையை நிறைவேற்ற ஒப்புக் கொண்டனர். இதனடியிலுள்ள ஒரு வாசகம் குறிப் பிடத்தக்கது இவ்வறக் கட்டளை தீய வழியில் பயன்படுத்தினால் காம கோட்டத்தை அழித்தலினால் ஏற்படக்கூடிய பாவத்தை ஏற்க வேண்டியதாக இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குக் காம கோட்டம் என்பது காமாட்சியமமன் கோயில் ஆகும். இஃது இக்கோயில் கி. பி. 8–ஆம் நூற்றாண்டிலே சமணர்களால் பெரிதும மதிக்கப்பட்டதை எடுத்துக்காட்டுகிறது. இஃது அக்காலத்து சமயத்தினர் எல்லாரும் இக்கோயிலின் பெருமையை அறிந்ததைக் காட்டுகிறது.

தெலுங்குச் சோழர் விசயகண்ட கோபாலன் கி. பி. 12-ஆம் நூற்றாண்டுச் செப்பேடு சயிலத்திற்கு (வரதர் கோயிலுக்கு) மேற்கிலுள்ள சங்கரமடத்துச் சங்கராச்சாரியாருக்கு நன்கொடை அளிக்கப் பட்டதைக் குறிக்கிறது. இது காம கோடி பீடத்திற்கு ஒரு கிராமம அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கி. பி. 14, 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் விசயநகர் மன்னர்கள் காமாட்சி அம்மையிடம் பேரன்பு கொண்டு ஆதரவு அளித்தார்கள். இரண்டாம் அரிகரன், (விசயநகர் மன்னர்) இக்கோயில் விமானத்திற்கு கி. பி. 1392-ஆம் ஆண்டில் பொன்வேய்ந்தான். இதை இக்கோயில் கோபுரத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு கூறுகிறது.

கிருட்டினதேவராயருக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்று அவர் உடன் பிறந்தவராகிய அச்சுதராயர் (கி. பி. 1530 — 1542). தமிழ் நாட்டில் பல திருக்கோயில்களில் வழிபட்டார் என்றும் அப்போது நன்கொடை அளித்தார் என்றும அங்சுதராயப்புதயம் கூடுகிறது. இவ்வகையில் இவர் மேற்கொண்ட போர்ப் பயணத்தின் போது எய்திய வெற்றியை முன்னிட்டுக் காமாட்சி கோயிலுக்கு எட்டு ஊர்களை கி. பி. 1534-ஆம் ஆண்டில் கொடுத்த செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகிறது. கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் இடையில் அரசாண்ட விசயநகர சதாசிவ மன்னர் இக்கோயில் திருப்பணிக்காக இரண்டு கிராமங்களை மகமண்டலேசுவரர் திருமலை தேவமகராசானின் நலத்திற்காக அளிக்கப்பட்டது என்பதை இச்சாசனம் குறிக்கிறது.

கிருட்டினதேவரரயரும் அச்சுதராயரும் காமாட்சி கோயிலில் அக்கறை கொண்டார்கள், நிலங்கள் அளித்தார்கள், மற்ற நன்கொடைகளும அளித்தார்கள்.

கோயில்களுக்குப் பொன்வேய்தலினால் நாட்டுக்கு நன்மை ஏற்படும் என்னும் கருத்தில் சிதம்பரம் கோயிலுக்கும், திருவரங்கம் கோயிலுக்கும் மன்னர் பலர் பொன் வேய்ந்தனர். இதே நோக்கில் இக்கோயில்களுக்குப் பொன்வேயப்பட்டது. காமாட்சி அம்மன் கோயிலுக்கு அண்மையில் பொன்வேயப்பட்டது.

இக்கோயிலில் ஐந்து காலப் பூசைகள் நடைபெறுகின்றன. உசத் காலம் காலைச்சந்தி, உச்சிக்காலம், மாலை, இரவு ஆகியவேளைகளில் நித்தியப் பூசைகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

| பூசைகள் | | நைவேத்தியம் |
|---|---|---|
| உசத் காலம் | — | தயிர்ச்சாதம் |
| காலைச் சந்தி | — | சுத்தான்னம் |
| உச்சிக் காலம் | — | சுத்தான்னம் |
| மாலை | — | சுத்தான்னம் |
| இரவு | — | வடை, தோசை, சர்க்கரைப் பொங்கல் |

இக்கோயிலில் வெள்ளி — செவ்வாய், ஞாயிறு ஆகிய நாள்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அமாவாசையிலும மாதப் பிறப்பிலும் அம்பாளுக்குப் பிராகார உற்சவமும் பௌர்ணமியன்று மாலை ஆச்சார்ய உற்சவ மூர்த்தியுடன் மாடவீதி உற்சவமும் நடைபெறுகின்றன. பௌர்ணமி உற்சவத்திற்குப் பிறகு அம்பிகைக்கு நவாவர்ண பூசை நடத்தப் பெறுகிறது.

சித்திரை மாதம் முதல் நாள் அம்பாள் வலம் வந்து சுக்கிரவார மண்டபத்தில் இறங்கியதும் ஆண்டுப் பிறப்பு பஞ்சாங்கப்படனம் செய்யப்படுகின்றது. பின்பு தீபாராதனை நடத்தப்பட்டபின் அம்பாள் திருவுருவம் மூலத்தானத்தை அடைகிறது. சங்கரசயந்தி உற்சவம் வைகாசிச் சுக்கில பஞ்சமியை முதல் நாளாகக் கொண்டு பத்து நாள்கள் நடத்தப்பெறுகின்றது. முதல் ஒன்பது நாள்களும் ஆதிசங்கரர் பிராகாரத்தில் எழுந்தருளுகிறார். பத்தாம் நாள் காமாட்சி திருவுருவமும் ஆதிசங்கரர் திருவுருவமும் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் எழுந்தருளுமாறு திருவிழா கொண்டாடப் பெறுகிறது. இப்பத்து நாள்களிலும் ஆதிசங்கரரால இயற்றப் பட்ட சௌந்தர்ய லகரியின் பத்துச் சுலோகங்கள் அம்பாள் திருவுருவத்திற்கு எதிரே ஆதிசங்கரர் திருவுருவத்தை நிறுத்தி ஓதப்பெற்று வருகிறது.

வைகாசி மாதம் மூன்று நாள்கள் வசந்தத் திருவிழா நடைபெறுகிறது. இவ் விழாவின் முதல் இரண்டு நாள்களிலும் அம்பாள் பிராகாரத்தில் எழுந்தருள்வார். மூன்றாம் நாள் மாலை அம்மன் திருவுருவம் கோயிலின் வெளி வீதிகளில் உலா கண்டருள்கிறது.

ஆனி மாதத்தில் வியாச பூர்ணிமை பூசைத் திருவிழா ஒரு நாள் நடை பெறுகிறது. இந்நாள் காலையில் ஆதிசங்கரர் திருவுருவம் கோயிலின் நான்கு வீதிகளில வழியாகச் சர்வதீர்த்தக் கரைக்கு எழுந்தருளுகிறது. அங்கு விசுவநாத சுவாமி கோயிலில் அபிடேக ஆராதனைகள் நடத்தப் பெறுகின்றன. ஆதியில் காஞ்சிபுரத்திற்கு வந்த போது ஆதிசங்கரர் முதன்முதலாக இந்தக் கோயிலுக்கு எழுந்தருளினார் என்பது சொல்லப்படுகிறது. பின்னர் இத்திருவுருவம் மூலத் தானத்திற்கு வந்தடைகிறது. அப்போது விசாய பூசை செய்யப்படுகிறது ஆடி மாதத்தில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெறும். அப்போது அம்பாள் பிராகாரத்தில் வலம் வருகின்றார்.

ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா ஒரு நாள் நடைபெறும். ஆவணி மூல நட்சத்திரத்தன்று அம்பாள் பிராகாரத்தில் உலாக் கண்டருள்வார். இதுவும ஒரு நாள் திருவிழாவாகும்.

ஸ்ரீ சுவரூப யாத்திரைத் திருவிழா புரட்டாசி மாதத்தில் நடைபெறுகிறது. சுக்கில பௌர்ணமி காலையில் ஆச்சார்யமூர்த்தி புறப்பாடு நடைபெறுகிறது. இம்மாதம் நவராத்திரி பத்து நாள்கள் நடைபெறும். இந்த உற்சவத்தின் போது நாள் தோறும் மூல காமாட்சியம்மை, உற்சவர் ஆகியோர் திருவுருவங்களுக்குத் தனிப்பட்ட அபிடேகங்கள் நடைபெறுகின்றன. இந்நாளில் நவாவரணப் பூசை, கன்னிய பூசை ஆகியவை நடத்தப்பெறுகின்றன. இரண்டு வேலைகளிலும் யாக சாலையில வேள்வி நிகழ்கிறது. மாலையில் உற்சவ காமாட்சி பிராகாரத்தில் வலம் வந்து தெற்குப் பிராகாரத்திலுள்ள நவராத்திரி மண்டபத்தில் இறங்குகிறார்; இன்னிசை, நைவேத்தியம், தீபாராதனை ஆகியவற்றிற்குப் பின்னர் மூலத்தானம் அடைகிறார். அட்டமியில் துர்க்கை அம்பாள் புறப்படுகிறார். பத்தாம் நாளில் கோயில் குளத்தில தீர்த்தவாரி நடைபெறுகிறது. நாள் தோறும் நடைபெறும் பூசைகள் தவிர சுவாசுனிப் பூசையும், பிரம்மசாரிப் பூசையும் நடைபெறுகின்றன.

ஐப்பசியில் பூர நட்சத்திரத்தன்று உற்சவ காமாட்சி பிராகாரத்தில் எழுந்தருளு கிறார். தெற்குப் பிராகாரத்திலுள்ள ஐப்பசி பூர மண்டபத்தில் மண்டகப்படி தீபாராதனை நடைபெறும். இந்நாளில் மூலத்தானத்தில் பிலாகாசத்திற்குப் பால் அபிடேகம் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் வியாச பூசைக்குச் சில நாள் களுக்கு முன் காமகோடி பீடாதிபதி ஆணைக்கேற்பக் காஞ்சி நகர் மன்னருக்கு அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமுகப் படலம் செய்யப்பட்டு வருகிறது. இச்சமயத்தில் ஸ்ரீ முகம் மேளதாளத்துடன் ஊர்வலமாக வந்து தேவத்தானம் அடைகிறது. பின்னர் ஆச்சார்யாளின் உற்சவ மூர்த்தியும் எழுந்தருளச் செய்து ஸ்ரீ முகப் படலம் செய்யப் பட்டுவருகிறது. தீபாவளிப் பண்டிகை நாளில் விடியற் காலையில் எல்லாச் சந்நிதி களிலும் தைல அபிடேகம் நடைபெறுகிறது. அம்பாள் நான்கு வீதிகளிலும் உலாத் திருவிழா நடைபெறுகிறது.

கார்த்திகை மாதத்தில் பரணி உற்சவம் ஒரு நாள் நடைபெறுகிறது கார்த்திகை மாதம் பரணி நட்சத்திரத்தில் அம்பாள் சந்நிதியில் வேள்வி செய்து தீபம் ஏற்று கிறார்கள். கார்த்திகை உற்சவத்தின் போது அம்பாள் தனிப்பட்ட அலங்காரத்தோடு நான்கு வீதிகளிலும் எழுந்தருளுகிறார்.

மார்கழித் திருவாதிரை உற்சவம் ஒரு நாள் நடைபெறுகிறது. இந்நாளிலும் மூலக் காமாட்சிக்கும், உற்சவர் காமாட்சிக்கும் தனிப்பட்ட அபிடேகம் நடத்தப் பெறுகிறது. தனுர் மாதக் காலசந்திப் பூசைக்குப் பின்னர் உற்சவ மூர்த்தி நான்கு வீதிகளிலும எழுந்தருள்கிறார்

பின்னர் ஏழு நாள்களும் அம்பாளின் உற்சவ மூர்த்தி வடக்குப் பிராகாரத்தில் உள்ள மண்டபத்திற்கு எழுந்தருளுகிறார் கடைசி நாள் திருவிழாவிற்குக் கணுத்

திருப்பாவாடை என்பது பெயராகும். இந்நாளில் சிறந்த சித்திரான்னம நிவேதனம் நடைபெறும். இத்திருநாள் மாட்டுப் பொங்கலோடு முடிவடைகிறது.

தை மாதத்தில் சங்கராந்தி ஒரு நாள் கொண்டாடப் பெறுகிறது. இந்நாள் உச்சிக் காலத்தில் அம்பாளுக்குத் தனி அபிடேகம், ஆராதனையும, சர்க்கரை அன்ன நிவேதனமும் நடைபெறுகின்றன. இதை மாதத்தில் மக நட்சத்திரத்தில் காலையில் நித்தியப் பூசைக்குப் பின்னர், அம்பாள் உற்சவத் திருவுருவம் தனி அலங்காரத்துடன் வேகவதி நதிக்கரை இருக்கும் கதிர் பூந்தோட்டத்திற்கு எழுந்தருள்கிறார். அங்குத் தனியபிடேகம் நடைபெறுகிறது.

மாசி மாதத்தில் சிவராத்திரி ஒரு நாள் நடைபெறுகிறது. இந்நாளில் இரவில் எல்லாச் சந்நிதிகளிலும் தனி அபிடேகங்கள் நடைபெறுகின்றன. இமமாதம பிரம்மோற்சவம் 12 நாள்கள் நடைபெறுகின்றது. முதல் நாள் இடப வாகனம்; மாலையில் மான் வாகனம், இரண்டாம் நாள் காலையில் மகர வாகனம, மாலையில் சந்திரப் பிரபை, மூன்றாவது நாள் காலையில் சிம்ம வாகனம்; மாலையில் யானை வாகனம, நான்காம் நாள் காலை சூரிய பிரபை; மாலை அன்ன வாகனம், ஐந்தாம நாள் காலை பல்லக்கு; மாலை நாக வாகனம், ஆறாம் நாள் காலை சப்பரம்; மாலை கிளி வாகனம், ஏழாவது நாள் காலையில் தேர்த்திருவிழா, எட்டாம் நாள் காலையில் பத்திரப் பீடம; மாலை குதிரை வாகனம், ஒன்பதாம் நாள் காலை ஆள்மேல் பல்லக்கு; மாலை காமகோடி விமானம், பத்தாம் நாள் காலை சரபபட்சி வாகனம்; மாலை கல்ப நோத்தியானம், உற்சவம முடிந்ததும் கொடியிறக்கம் நடைபெறுகிறது. பதினொராம் நாள் மாலை மகாமேரு வாகனம்; பன்னிரண்டாம் நாள் விசுவரூப தரிசனம் ஆன பிறகு விடையாற்றி உற்சவம், விடையாற்றி உற்சவம் கடைசி நாளுக்கு முதல் நாள் சந்தனக் காப்புத் திருவிழா நடைபெறுகிறது. விடையாற்றி கடைசி நாளில் நான்கு வீதிகளிலும் புட்பப் பலலக்குத் திருவிழா நடைபெறுகிறது

பங்குனி மாதத்தில் தெப்போற்சவம் மூன்று நாள்கள் நடைபெறுகிறது முதல் நாள் காலையில் உற்சவ காமாட்சி திருவுருவம ஒக்கப்பிறந்தான் குளத்திற்கு எழுந்தருளுவிக்கப்படுகிறது. மாலையில் நான்கு வீதிகளின் வழியாக ஏகாம்பரநாதர் சுவாமி அமமனுடன் இச்சந்நிதி பதினாறு கால் மண்டபம வரை சென்று பின்பு இக்கோயிலின் மூலத்நானத்திற்கு எழுந்தருள்கிறார்.

காமாட்சியம்மன் கோயில காஞ்சிபுரத்தில் முக்கியம வாய்ந்ததால் இது பற்றியே காஞ்சி காமாட்சி என்னும் சொற்றொடர் நெடுங்காலமாக வழங்கி வருகிறது. காஞ்சிபுரத்தில் அமமனுக்கு வேறெங்கும் தனிச் சந்நிதி இல்லாத நிலையில், இங்கு மட்டும் அம்மன் மூல அம்மன் வடிவில் காமாட்சியாக காஞ்சியில் காமகோட்டத்தில் எழுந்தருளியிருப்பது இக்கோயிலில் தனிச் சிறப்பாகும. காஞ்சியில எல்லைக்கு

அப்பாலுள்ள பல கோயில்களும் காமகோட்டம் குறிக்கப்பட்டுள்ளதைச் சிதம்பரம், அவினாசி, திருவொற்றியூர், திருக்காட்டுப்பள்ளி, முதலிய தலங்களிலும் சிவன் கோயில்களில் கல்வெட்டுகள் காட்டுகின்றன. காமாட்சி எழுந்தருளிய காமகோட்டம் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலும் இவ்வாறு பாராட்டப்படுவது இக்கோயிலின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

காஞ்சியில் வீற்றிருக்கும் காமாட்சி அறத்தை நிலைநாட்டியதால் அறவழிக்கு இக்கோயில் ஓரளவு வழிகாட்டி வருவதுடன் இறைவழிபாட்டுக்கும் தொடர்ந்து ஆக்கம் அளித்து வருகிறது. இக்கோயில் தூய்மையாகப் பராமரிக்கப்படுவதாலும் இங்கு இக்கோயிலைப் பராமரித்து வருவோர்கள் தெய்வ வழிபாட்டில் மிக்க ஈடுபாடு உடையவர்களாக இருப்பதாலும் இக்கோயில் இங்கு ஓர் எடுத்துக்காட்டுக் கோயிலாக அமைகிறது.

காஞ்சிபுரம் காமகோடி சங்கராச்சாரியார் திருமடத்தினர் இக்கோயிலின் பரம்பரை அறங்காவலர்களாவர். காஞ்சிபுரம் வரதராஜர் கோயில் நிர்வாக அலுவலர் காமாட்சியம்மன் கோயில் நிர்வாக அலுவலராகவும் இருந்து வருகிறார். இந்து சமய அறநிலையத் துறையின் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் 10,00,000/- ரூபாயாகும்.

இத்தலத்தைப் பற்றியும் இக்கோயிலைப் பற்றியும் பின்வரும் ஆதாரங்கள் உள்ளன.

51 ஆதாரங்களின் அறிகுறியாக 51 சக்திபீடங்கள் உள்ளன. அவற்றுள் மூன்று பீடங்கள் நம் நாட்டில் முக்கோண நிலையில் உள்ளன. அவற்றுள் ஒன்று பஞ்சாப் மாகாணத்திலும் ஒன்று அசாம் மாநிலத்திலும் இருக்கின்றன. மூன்றாவது காமராச பீடம் காஞ்சியில் உள்ளது. இது அயக்கிரீவரால் பூசிக்கப்பட்ட பீடமென்று கூறப்படுகிறது.

1. சக்தி நாமங்களைப் புகழும் லலிதா சகஸ்ரநாமத்திலும் லலிதா திரிசதி நாமத்திலும் லலிதா அஷ்டோத்திரத்திலும் சகஸ்ரநாமத்திலும் காமாட்சியின் பெயர் விளங்குகிறது.

2. லலிதா வியாக்கியானத்தில், அகத்தியர், இதோபதேச அத்தியாயத்தில்கலியின் பாவங்கடியவல்ல காமக்கண்ணியாரை வழிபட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

காஞ்சிபும் காமாட்சி கோயிலில் இடம் பெற்றுள்ள சாத்தனிடமிருந்து கரிகால் சோழன் கொண்டு பெற்று அதனைக் கொண்டு இமயமலை மீது புலிச்சின்னம்

---

5. சைவத் திருமுறை 7—5—6

அமைத்தான் என்பது தமிழ் இலக்கியம் தரும் ஆதாரமாகும். மேலும் காமாட்சி தம் கையில் வளையல் அணிந்திருந்ததாகச் சிலப்பதிகாரத்தின் மேற்கோள் செய்யுள் தெரிவிக்கிறது. சிலப்பதிகாரம் கி பி இரண்டாம் நூற்றாண்டிற்கு உரியது.

எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சுந்தரர் தாம் இயற்றிய ஓணகாந்தன் தளிப் பதிகத்தின் ஒரு பாடலில் சிவபெருமானிடம் ஒரு வினா தெரிவிக்கிறார். அவ்வினா மனைவியாகிய உம் தேவி உலகமெலாம் துன்பமின்றி வாழ்தல் பொருட்டு அமைந்துள்ள சிறந்த அறச்சாலையாகிய காஞ்சி காமக்கோட்டம் இருக்க நீர் சென்று உளரவர் இடும்பிச்சை ஏற்பது என்ன? என்பதாகும்.

குமர குருபரரும் தாம் அருளிய திருவாரூர் நான்மணி

"ஒரு காலத்தின் உருமற்றொன்றே
இடப்பால் முப்பத்திரண்டு அறம் வளர்ப்ப
வலப்பால் இடத்தில மாநிலத்தின்றே"

என இவ்வுண்மையை எடுத்துக்காட்டுகிறார்.

காஞ்சிபுரம்

# காமேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்தின் மேற்கில் அமைந்துள்ள சர்வதீர்த்தத்தின் மேற்குக் கரையில் கிழக்கு நோக்கியவாறு 20 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

மன்மதனாகிய காமவேள் தன்னுடைய தொழிலை தொடங்குவதற்கும் மனதில் ஆசைகளையும் அதன் பயனாக விளைகின்ற இன்பத்தைத் தரவல்ல சக்தியைப் பெறவும் இங்கு சிவலிங்கம் நிறுவி வழிபட்டதால் இதற்கு காம ஈச்சுவரம் என்ற பெயர் உண்டாயிற்று. இக்கோயில் கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம், திறந்த வெளிச் சுற்றுப்பிராகாரம் ஆகிய அமைப்புகளைக்கொண்டதாகும். கருவறையில் தாமரை போன்ற ஆவுடையாரில் சிவலிங்கம் அமைந்துள்ளது. இங்கு மன்மதன் வடிவமாக அல்லாமல் அருவமாக இருந்து பூசை செய்வதாகக் கோட்பாடு உள்ளது. அவனைக் குறிக்கும் வகையில் பலிபீடம் ஒன்று உள்ளது. இதன் காமவேள் உறைவதாகக் கூறுவர்.

சர்வதீர்த்தம் இக்கோயிலின் தீர்த்தமாகும். கருங்கல்லால் இக்கோயில் எளிய வேலைப்பாட்டுடன் கட்டப்பட்டுள்ளது. கருவறைமீது இரண்டு தளங்களையும்

வட்டச் சிகரத்தையும் கொண்ட விமானம் உள்ளது. பஞ்சகோட்டத்தில் இருந்த திருவுருவங்கள் காவடைப்பட்டுள்ளன. இக்கோயிலின் முன்மண்டபத்தில்பலிபீடமும் நந்தி தேவர் சந்நிதியும் அமைந்துள்ளன இக்கோயில் ஒருகாலப் பூசை குருக்களால் செய்யப்படுகிறது. காஞ்சி காமகோடி பக்த ஜன சபை நிர்வாகத்தினரால் இக் கோயில் செயற்படுத்தப்படுகின்றது.

காஞ்சிபுரம்

# சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில்

யதோத்காரி, சொன்னவண்ணம் செய்த பெருமாள் ஆகிய பெயர்களில் விளங்கி வரும் கோயில் சின்ன காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலுக்கு மேற்கில் ஒரு கிலோ மீட்டர்த் தொலைவில் 92 மீட்டர் நீளமும், 55 மீட்டர் அகலமும் கொண்ட 5060 சதுரமீட்டர் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயில் அமைந்துள்ள பகுதி திருவெஃகா எனப்படுகிறது. பிரமதேவர் கஞ்சிபுரத்தில் வேள்வி இயற்றிய இடத்தில் வேகவதி ஆறு வெள்ளப்பெருக்கு எடுத்ததைத் தடுப்பதற்காக அவ்வாற்றின் குறுக்கே ஓர் அணையாகுமாறு திருமால் பள்ளிகொண்டார். இவ்வாறு அமைந்த தலப் வெக அணை எனத் திரிபு எய்திப் பின்னர் வெஃகா என ஆயிற்று. திரு என்னும் அடைமொழியுடன் இதுதிருவெஃகா என்னும் பெயர் பெற்றுள்ளது.

வேகவதி ஆற்றின் வெள்ளப்பெருக்கைத் தடுத்து நிறுத்துமாறு பிரமதேவரும் முனிவர்களும் சொன்னார்கள். அவர்கள் சொன்னவாறு திருமால் அணையாக அவ்வாற்றின் குறுக்கே பள்ளிகொண்டார். இவ்வாறு அவர் பள்ளி கொண்ட இடம் சொன்னவண்ணம செய்த பெருமாள் கோயில் என்னும் பெயர் பெற்றது. மற்றொரு வகையிலும் இப் பெயருக்கு விளக்கம் காணப்படுகிறது.

திருமழிசையாழ்வார் சொன்னவாறு இங்கு எழுந்தருளிய பெருமாள் இக் கோயிலிலிருந்து இவ்வாழ்வார் பின்சென்றார். பின்னர் அவர் சொன்னவாறு இப் பெருமாள் இக்கோயிலுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். இவ்வகையிலும் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்னும் பெயர் அமைந்தது எனக் கொள்கிறார்கள். 'யதோத்கா '' என்னும் வடசொல் சொன்னவண்ணம் செய்பவரைக் குறிக்கிறது.

காஞ்சிபுரத்திலுள்ள வைணவத்தலங்கள் அனைத்திலுமே மிகப்பழமையானது இதுவேயாகும். சங்ககால இலக்கியமாகிய பெரும்பாணாற்றுப்படையில் இக்கோயில் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

முதலாழ்வார்கள் மூவரில் பேயாழ்வர், பொய்கை ஆழ்வார் ஆகிய இருவர் நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகியோர்களால பாடப் பெற்ற சிறப்புடையது இத்தலம். இக்கோயிலை அடுத்துள்ள திருக்குளத்தில் பூத்திருந்த தாமரை மலரொன்றில் பொய்கையாழ்வார் தோன்றினார் என்பது வைணவ சமய மரபாகும்.

திருமகளும் கலைமகளும் தம்முள் சிறந்தவர் எவர் என்பதில் வாதம் எழுந்தது. இதில் தமது கருத்தைத் தெரிவிக்குமாறு இந்திரனும் பிரமதேவரும வேண்டப்பெற்ற போது, திருமகளுக்கே அவர்கள் ஏற்றம் அளித்தனர். இக்கருத்தை ஏற்காக கலைமகள் அவ்விருவரிடமும் வெறுப்புக் கொண்டார்.

தமது கூறாக இந்நிலவுலகில் பெருகிவந்த சரசுவதி ஆற்றைவிடக் கங்கை சிறந்தது எனப் பிரமதேவர் தெரிவித்த கருத்து, கலைமகளுக்கு வருத்தப் விளைவித்தது, பின்னர், தமது மனத்தைத் தூய்மைபடுத்திக் கொள்வதற்காகப் பிரமதேவர் காஞ்சிபுரத்தில் வேள்வி இயற்றினார். இதற்குத் தம் துணைவியாகிய கலைமகளை அழைக்கவில்லை. இது காரணமாக முன்னமே தம் கணவரிடத்துக் கலைமகள் கொண்டிருந்த வெறுப்பு சீற்றமாக மாறிற்று. உடனே கலைமகள் வேகவதி ஆற்றின் வடிவில் வெள்ளப்பெருக்கெடுத்துப்பிரமதேவர் வேள்வியை அழிக்கத்தொடங்கினாள் இந்நிலைமையை உணர்ந்த திருமால், இதனைத் தடுக்க எண்ணி, வெள்ளம் வரும வழியில் குறுக்கே, ஐந்து தலைப்பாம்பாகிய ஆதிசேடனையே அணையாகக்கொண்டு அதன்மீது பள்ளி கொண்டார். கலைமகள் தன் முயற்சியை நிறைவேற்ற இயலவில்லை. இங்கு அவர் தமது திருக்கை கீழ்ப்படக் கண் வளர்ந்ததால் இவர் ''திருவணைப் பள்ளிக்கொண்ட பெருமாள்'' என்னும் திருப்பெயருடன் திகழ்வாராயினர். இவ்வாறு எழுந்தருளிய பெருமாளை உலகத்திற்கு உணர்த்த இங்குள்ள பொய்கையாகிய பொற்றாமரைக் குளத்தில் ஆழ்வார் ஒருவர் தோன்றினார் இக்காரணமாக இவர் பொய்கை ஆழ்வார் என்னும் பெயரில் விளங்கிப் பெருமாள் பெருமையை விளக்கி வந்தார்.

இக்கோயிலுக்குத் திருமழிசை ஆழ்வாரது நெருங்கிய தொடர்புள்ளது. சென்னைக்கு தென்மேற்கில் 20 கிலோ மீட்டர்த் தொலைவிலுள்ள திருமழிசையில் தவம் புரிந்து வந்த பார்க்கவ முனிவருக்கு கனகாங்கி என்னும் தெய்வ மகளிருக்கும் தோன்றத் திருவாளன் என்னும் வேளாளரால் வளர்க்கப்பெற்றவர். திருமழிசையாழ்வார். இவர் அரிய மாணவர் கனிகண்ணன். அப்பகுதியை ஆண்டுவந்த மன்னன் திருமழிசை ஆழ்வாராலோ கணிகண்ணனராலோ பாடப்பெற விரும்பி, இவ்வகையில் கணிகண்ணனை அணுகித் தமக்கு உதவ வேண்டும் எனக் கணிகண்ணனிடம் தெரிவித்தார். இதற்கு உடன்படாத கணிகண்ணனை அந்நாட்டிலிருந்து வெளியேற்றினான். மன்னன் ஆணைக்குட்பட்ட கணிகண்ணன் அந்நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வதை அறிந்த திருமழிசை ஆழ்வார் தாமும் கணிகண்ணனைத் தொடர்ந்து சென்றதுமன்றி அங்கு எழுந்தருளிய பெருமாளை நோக்கிக்

''கணிகண்ணன் செல்கிறான். யானும் அவன்பின் செல்கிறேன். நீயும் உன் படுக்கையைச் சுருட்டிக்கொண்டு புறப்படு'' எனக் கூறப் பெருமாளும் கணிகண்ணனையும் திருமழிசை ஆழ்வாரையும் தொடர்ந்து சென்றார். அவ்வூர் மக்களும் பெருமாளைப் பின்தொடர்ந்து செல்வாராயினர். இந்நிலையை அறிந்த மன்னன் பின்னர்த் தான் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு திருமழிசை ஆழ்வாரிடம் வேண்ட, அவரும் கணிகண்ணன் செல்வதை தடுத்து நிறுத்தி, பெருமாளும் அக் கோயிலுக்குத் திரும்புமாறு வேண்டினார். பெருமாளும் ஆழ்வார் சொன்னவாறு தம் திருக்கோயிலை வந்தடைந்து பள்ளிகொண்டார். அவ்வூர் மக்களும் திரும்பிவந்து தங்கள் தங்கள் இருப்பிடம் சேர்ந்தனர். ஆழ்வார் சொன்னவாறு செயலாற்றிய பெருமாள் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்னும் பெயர் எய்தினர். எவ்வாறு (ஆழ்வார்) சொன்னாரோ அவ்வாறு நடந்து கொண்டவர் என்னும் பொருளைக் கொண்டது யதோத்காரி என்னும் வடமொழிச்சொல்.

## கார்வானம்

# (உலகளந்த பெருமாள் கோயில் உட்கோயில்)

காஞ்சிபுரத்தில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற கோயில்களுல் ஒன்று கார்வானப் பெருமாள் கோயில் ஆகும். உலகளந்த பெருமாள் கோயிலின் நுழைவாயிலைக் கடக்கும் வெளி பிராகாரத்தின் வல்ப்புரத்தில் கார்வானப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் 8 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது.

மேகத்தின் தன்மைகள் யாவும் கார்வானத்து எம்பெருமானிடத்தும் பொருந்தி உள்ளன. காரகத்துப் பெருமாள் தனித்து நிலையில் மேகத்தின் கருணைத் தன்மையைக் கொண்டுள்ளது. கார்வானத்தில் எம்பெருமாள் பூதேவி, சீதேவி ஆகிய தேவிகளோடு நின்ற கோலத்தில் மேகத் தன்மையையும் கொண்டு விளங்குகிறார். திருமங்கையாழ்வார் இப்பெருமானை ''கார்வானத்துள்ளாய்'' எனப் போற்றுகிறார்.

1. பிள்ளைப்பெருமானும் அய்யங்காரும் 'மாலே' பூங்கார்வானத்துள்ளார் என உளமாரத் துதிக்கிறார்.

---

1. திருநெடுந்தாண்டகம் – 8.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
வ.எண்: 857
நாள்: 17/5/02
நூலகம்



2. இக்கோயிலின் முற்றத்தில் உலகளந்த பெருமாள், தாயார் ஆகியோர்களின் திருக்கல்யாண விழாவின்போது அவர்கள் இங்கு எழுந்தருளி அருள் புரிவதால் இக்கோயில் உலகளந்த பெருமாள் கோயிலினுள் அமைந்துள்ளதாலும் உலகளந்த கோயிலுக்கு நித்திய பூசைகள் செய்யப்படும்போதே இக்கோயிலுக்கும் அவ்வப்போது பூசை நடைபெறுகிறது. ஆதலால் இக்கோயிலின் நிர்வாகம் உலகளந்த பெருமாள் கோயிலில் அடங்கியுள்ளது.

---

2. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி - 84.

காஞ்சிபுரம்

# காரகம்

ஆழ்வார்கள் மங்களாசாசனம் பெற்றுள்ள தலங்களுள் காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள உலகளந்த பெருமாள் கோயிலும் ஒன்றாகும். அதிலுள்ள கோயில் காரகம். இது திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்றுள்ளது.

கார் என்பது மேகம். மேகத்திற்கும் திருமாலுக்கும் ஒற்றுமைகள் பலவற்றை உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

பயிர்கள் வளர்ந்தோங்க வேண்டுமானால், மழை பெய்வதற்கு வழிவகுக்கும் மேகங்கள் தேவைப்படுகின்றன. இது போன்றே புகலிடம் காண முடியாதவர்கள் எம்பெருமான் திருவருளையே நாடி நிற்கிறார்கள்.

கருங்கடலில் நீரை முகந்து மேகம மழையாகப் பொழியும். எமபெருமானும் தமது கருணை வெள்ளத்தை அருவியாகப் பொழிகிறார்.

மின்னல் தோன்றும்போது மேகம் அடர்த்தியாக மழை பொழியும். இவ்வாறே எம்பெருமானும் தம் பெருமாட்டியோடிருக்கும் போது கருணை வெள்ளம் பெருகும். மேகம் கடிது செல்வது போன்று எமபெருமானும் விரைந்து வந்து அருள்புரிவார்.

மேகம் கைம்மாறு கருதாது மழை பொழிந்து உலகினைக் காக்கும். எம்பெருமானும் கருணையே வடிவமாக உடையவர். இவ்வகையில் அவர் கருணாகரமூர்த்தி எம்பெருமானை "உலகம் ஏத்தும் காரகத்தான்" எனத் திருமங்கையாழ்வார் துதிக்கின்றார்.[1] இவ்வாறு காரகப் பெருமாளை வழிபடுதலினால் நம்மிடம் வஞ்சங்கள் தலைகாட்டா என நூற்றெட்டு திருப்பதி அந்தாதி அறிவிக்கின்றது.[2]

---

1. திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகம் - 8
2. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி - 83

இக்கோயில் உலகளந்த பெருமாள் கோயிலுக்கு இடப்புறத்தில் காணலாம். இங்கு எம்பெருமான் ஆதிசேடன் மீது இருந்த கோலத்தில் அமர்ந்துள்ளார். இவருக்கு உலகளந்த பெருமாள் கோயிலில் போன்று நித்தியப்பூசைகள் நடைபெறுகின்றன. தனிப்பட்ட முறையில் திருவிழாக்களோ பூசைகளோ வகுக்கப்படவில்லை.

இக்கோயிலின் முற்றத்தில் 9.85 மீட்டர் நீளமும் 3.85 மீட்டர் அகலமும் 12 மீட்டர் உயரமும் கொண்டு 14 தூண்களுடன் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது இம்மண்டபத்தின் முன்புறத்துப் பகுதியில் பழைய வாகனங்கள் சில வைக்கப்பட்டுள்ளன.

காரகப் பெருமாளைச் சேவித்துச் சிறிது நேரம் அன்பர்கள் இங்குத் தங்கிச் செல்லப் பயன்படும் வகையில் இம்மண்டபம் உதவுகிறது.

காஞ்சிபுரம்

# கௌசிகேசுவரர் கோயில்

காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் கோயில் கிழக்கு மதிலும் வடக்கு மதிலும் இணையும் முனையில் 5 சென்ட் பரப்பில் கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் கிழக்கு நோக்கியவாறுள்ள கருவறையுள் கௌசிகேசுவரர் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். இந்த சிவலிங்கம் $1\frac{1}{2}$ மீட்டர் உயரமுடையது. கருவறையை ஒட்டி மகாமண்டபம் உள்ளது. வெளியே இறைவனை நோக்கியவாறு நந்திதேவர் உள்ளார். இதன் பீடம் முதல் உச்சிக்கிரீகம் வரையிலுள்ள பகுதி கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. விமானம் கருங்கல்லால் பூவேலைகளுடன் உருண்டை வடிவில் கட்டப்பட்டுள்ளது. இதில் தெற்குப் பகுதியில் தென்முகக்கடவுளும் மேற்கு நோக்கிய பகுதியில் யோக நரசிம்மரும் உள்ளனர்.

கருவறை வெளிப்புறச் சுவர்கள் குமுதம் பட்டிகை, கும்ப பஞ்சரம், கோட்டம், கபோதம் ஆகியவற்றால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. பஞ்சகோட்டங்களில் விநாயகரும் துர்க்கையும் மட்டுமே உள்ளனர். இக்கோயிலில் ஒரு வேளைப் பூசை குருக்கள் ஒருவர் செய்துவருகிறார். இதன் கட்டக்கலை காஞ்சிநகர்க் கோயில் அமைப்பினின்று மாறுபட்டது. காஞ்சிநகர் அனைத்துக் கோயில்களும் கபோதம் வரை கருங்கல்லால் அதன் மீதுள்ள விமானம் சுதையால் அமையபெற்றது. ஆனால் இக்கோயில் மட்டும் முழுவதும் கல்லால் அமைக்கப்பெற்றுள்ளது.

மகாசிவராத்திரி போன்ற நாள்களில் மிகச் சிறப்பாக அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலை மைய அரசின் தொல்பொருள் துறை பராமரித்து வருகின்றது.

# குமரகோட்டம் கோயில்

இந்தியாவில் முக்தி தரும் நகரங்கள் எனப் பாராட்டப்பெறும் ஏழு தலங்களுள் ஒன்றாகிய காஞ்சி நகரில் குமரகோட்டம் மேற்கு இராச வீதியில் மேற்கு நோக்கிய சந்நிதியையுடைய தலமாக விளங்குகிறது. இது காமாட்சியம்மன் கோயிலுக்கு வலப்பக்கத்திலும், கச்சி ஏகாம்பரநாதர் கோயில் இடப்பக்கத்திலும் அமைந்திருப்பது காரணமாக குமரகோட்டமே சோமஸ்கந்த வடிவத்திற்கு சான்றுபகருவதாக உள்ளது என்பர். மற்றொரு வகையிலும் இத்தலத்திற்கு தனிச்சிறப்பு இருக்கின்றது.

இத்திருக்கோயில் காஞ்சிபுரம் நகராட்சி 1760, 2.1756, 1757, 1758 நில அளவைப் புலங்களில் 2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளதை நகராட்சி நில அளவைப் படம் தெரிவிக்கிறது. இக்கோயில் மட்டும் 1760-2 எண் நில அளவைப் புலத்தில் கட்டப்பட்டுள்ளது. 1758 எண் நில அளவைப் புலம் தீர்த்த குளமாகவுள்ளது. எஞ்சிய புலங்கள் வெற்றிடமாக உள்ளன.

கச்சியப்ப சிவாச்சாரியார், குகனேரியப்பர், அருணகிரிநாதர், சிவஞானமுனிவர் கச்சியப்ப முனிவர் ஆகிய அருளாளர்கள் தாங்கள் இயற்றிய நூல்களில் இத்திருத் தலத்தை சிறப்பித்துள்ளார்கள். குமரகோட்டத்தில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணிய சுவாமியின் மீது கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிய கந்தபுராணம் இங்கு அரங்கேற்றப் பட்டபோது, "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" எனத் தொடங்கும் முதற் பாடலை ஓதி இந்த அடிக்கு "தமிழ் – விளங்குகின்ற - பத்து கரம் - கைகளும் ஐந்து திருமுகங்களுடைய சிவபெருமான்" என்னும் பொருள் கூறினார். அப்போது அங்கிருந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் "திசழ் - தசம்" என்னும் இரு சொற்கள் "திகடசம்" என ஆவதற்கு இலக்கணம் விதி இல்லை என்றார் இத்தடைக்குரிய விதி இல்லதெனக் கூறாது. கச்சியப்பர் "இந்த முதலடியைச் சுப்பிரமணியக்கடவுளே எனக்கு எடுத்துத் தந்தருளினார்." இந்த அடியை அக்கடவுளே எடுத்துக் கொடுத்தார் எனில், இதனை அவரே தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் இதற்கு நீவிரே இலக்கண ஆதாரம் காட்ட வேண்டும் என வற்புறுத்தினார். இந்நிலையில் இவ் விடரைத் தீர்க்குமாறு அன்றிரவு சுப்புரமணியக் கடவுளை அழுத்தமாக கச்சியப்பர் வேண்டிக் கொண்டார். அடுத்த நாள் தொடங்கிய அரங்கேற்றத்தின்போது, ஒரு நூலை ஏந்திய வண்ணம் ஒரு புலவர் அங்குத் தோன்றினார் அந்நூல் வீரசோழியம் என்னும் இலக்கண நூலாகும். முந்திய நாள் தடை எழுப்பிய புலவர் அந்நூலைப் பெற்று அதனைப் படித்துப் பார்த்தபோது அதன் பதினெட்டாம் பாடலில் கச்சியப்ப

சிவாச்சாரியார் ''திகடசம்'' என்பதற்குப் பயன்படுத்திய இலக்கண விதி இருந்ததை அவர் கண்டு வியப்பெய்தனர். மற்றவர்களும் இதனை உணர்ந்து மகிழ்ச்சியுற்றார்கள். அந்நூலைத் தந்த புலவர் அங்கிருந்தோர் அனைவரையும் நோக்கி ''ஐயம் நீங்கிற்றா'' என்று வினவியவாறே மறைந்து விட்டார். கச்சியப்பர் தம்மை ஆட்கொண்ட சுப்பிரமணியக் கடவுளை வணங்கித் துதித்தனர். இந்நூலைக் கொணர்ந்தவர் குமரக் கடவுளே எனத் துணிந்து மற்றவர்களும் போற்றினார்கள்.

கச்சியப்ப சிவாச்சாரியார் காலம் பதினொன்றாம நூற்றாண்டில் இறுதியும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் என்பர். 1. சிலர் இவர் காலம பதினான்காம் நூற்றாண்டு என்பர். 2. கச்சியப்ப சிவாச்சாரியார் 0,586 விருத்தப் பாடல்களைக் கொண்ட கந்தபுராணத்தை ஆறு காண்டங்களில் இயற்றினார். கந்த புராண உபதேசகாண்டம் என்னும்பெயரில் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கட்டளைக்கு ஏற்ப, அவரிடம் திட்சைப் பெற்று செங்குந்த மரபினராகிய குகனேரியப்பர் 4,884 செய்யுள்களை பாடி அரங்கேற்றினர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் குமரகோட்டம் பெருமான் மீது ''அறிவிலார்'' எனத்தொடங்கும் திருப்புகழ் பாடியுள்ளார். இப்பாடல் குமரகோட்டக் கோயில் உட்பிரகாரச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இருநூறு ஆண்டுகளுக்கு முன் திகழ்ந்த சிவஞானமுனிவர் தாம் இயற்றிய காஞ்சிபுராணத்தில் உள்ள குமரகோட்டப் படலத்தில் கந்தவெற்பிலிருந்து பெருமான் காஞ்சிக்கு எழுந்தருளிய வரலாற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். இவருடைய மாணவராகிய கச்சியப்ப முனிவர் தாம் இயற்றிய காஞ்சிப்புராணத்தில் இரண்டாம் காண்டத்தில் குமரகோட்டத்துப் பெருமையை நன்கு விளக்கியுள்ளார்.

வீரசோழியம் இயற்றியவர் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த வீர சோழீயத்தில் காலத்தில் வாழ்ந்த புத்தமித்தரர்.

தமது நெற்றிக் கண்ணால் சிவபெருமான் மன்மதனாகிய மாரனை எரித்தார். அந்த நெற்றிக்கண்களிலிருந்தே குமரனாகிய முருகப்பெருமானை அளித்து அருளினார். மாரனை அவர் எரித்தது நிக்கிரகம், குமாரனை அவர் அளித்தது அனுக்கிரகம். குமாரன் என்னும் சொல்லில் உள்ள 'கு' என்னும் எழுத்து குற்கிதம், அருவருப்பு, மலம் என்னும் தீயவற்றைக் குறிக்கும். மாரன் என்னும் சொல் அவற்றை மரிக்கச் செய்பவன், அ அழிப்பவள் என்னும் பொருளைக் கொண்டுள்ளது. உயிர்களின் மலப்பிடிப்பை அழித்து ஒழிக்க வல்லவன் எவனோ அவனே குமாரன்எனப்படுவான்

1. வா. சு. செங்கல்வராயர்பிள்ளை, முருகவேள் திருமுறை – பன்னிரண்டாம் திருமுறை – 1957 ஆம் ஆண்டு பதிப்பு – பக்கம் 914.
2. மு. அருணாசலம் – தமிழ் இலக்கிய வரலாறு.

குமாரன் என்னும் சொல் குமரன் என்னும் பெயரில் விளங்கி வருகிறது. நாதா குமரா எனக்கந்நர் அனுபூதி பாடல் ஒன்று தொடங்குகிறது. குமரன் என்னும் சொல்என்றும் இணையோன் முருகப்பெருமான என்பதையும் காட்டுகிறது.

முருகப்பெருமான் இந்திரன் உலகந்திலும் தக்மகு உரியதான கந்தலோகத்திலும் கந்த வெற்பிலும் வீற்றிருந்து அருள் செய்தல் போலவே, இக்குமரகோட்டத்திலும் மிக விரும்பி எழுந்தருளி உள்ளார் என்பதைக் கந்தபுராணம்,

''வச்சிரம் எடுதத செம்மல் வைகிய துறக்கந் துன்னில்
அச்சுதன் பதத்தும கப்பால் ஆனதன் பதத்தில் வின்னோர்
மெச்சிறு கந்த வெற்பில் வீற்றிருந்த தருளு மாபோல்
கச்சியில் குமர கோட்டம் காதலித தருமங் கந்தன்''

என்று கூறுகிறது.

பிரமன் பிரணவத்தின் பொருள் தெரியாது விழித்தனன். தாரக மந்திரமான பிரணவப் பொருளைப் பிரமதேவன் ஆராய்ந்தனன். தாரகம் என்றால் தாண்டச் செய்வது என்று பொருள் அதாவது நமது பிறவிப் பெருங்கடலைக் கடக்கச் செய்வதனால் அது தாரக மந்திரம் எனப்படும்.

நான்முகம் செய்த படைப்புத் தொழிலை ஒருமுகம கொண்டு முருகப்பெருமான் செய்யத் தொடங்கினார்.

''ஒருக ரந்தனில் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரக லந்தனில் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரத மோடப யந்தரப் பரம் பொருள் மகன்ஓர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்''

என்று கந்தபுராணம் இச்செய்தியினைக் கூறுகின்றது.

இக்கோயிலை அடுத்துக் கிழக்கு நோக்கிய வண்ணம் முருகப்பெருமான் பூசை செய்த சேனாதி பதிச்சர இலிங்கப எடுப்பாகக் காட்சியளிக்கின்றது.

செங்குன்றுத் தண்டபாணி சந்நிதிக்குவலப்புறம் தெய்வத்தை அடுத்துக் கிழமேல் வரிசையில் தெய்வத் திருவுலாத் திருமேனியில் சண்முகர் மயிலமீதமர்ந்து வீற்றிருக்கிறார். அவர் முன்னே வள்ளியும், தெய்வயானையும நின்ற கோலததிலும உள்ளார் இத்திருவுவத்தை அடுத்து வேள்விச் சாலைக்கும், பள்ளியறைக்கும் இடையில் வயிரவநும் உள்ளார்கள். அடுத்துக் காணப்படுவது திருமால திருவுருவம் இங்குக் காணப்படுவதற்குப் புராண வரலாறு அமைந்துள்ளது. மார்க்கண்டேயரால் அறிவுறுத்தப்பெற்ற திருமால், காஞ்சியை அடைந்து ஆங்கு மாவடியில் கீழ் ஏகாம்பரநாதரைவணங்கி, ஒப்பற்ற காமக்கோட்டத்தில் தேவிக்கு அர்ச்சனை புரிந்த பின்னர்க் குமரகோட்டத்துத் தேவசேனாபதிச்சரப் பெருமானை விதி முறையில் பூசனை செய்து, நேர்மை உள்ளம் கொள்ளவும, முருகப் பெருமான் சந்நிதியில் அமர்த்திருக்கவும் அருள்புரிக என வேண்டினார். திருமால்

னோரியவற்று. ''பேரன்புடையராய் உருகும் உள்ளத்தேரன் என்னும் திருப்பெயர் எய்துக எனச் சிவபெருமான் அருள்புரிந்தார். இவ்வாறு அருள்பெற்ற திருமால் குமரகோட்டத்தில் இப்பெயருடன் தங்குவாராயினர். அடுத்துச் சோமஸ்கந்தர் திருவுருவம், முத்துக்குமார சுவாமி திருவுருவம் நவவீரர்களின் உலாத்திருவுருவங்கள் ஆகியவை வரிசை முறையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்திருவுருவங்களை அடுத்துக் காணப்படுவது கஜவள்ளி திருக்கோல மாகும். ''கஜ'' என்பது களத்தால் (யானையால்) வளர்க்கப்பட்ட தேவசேனை அம்மையார் குறிக்கும். வள்ளியம்மையார் ''வள்ளி'' எனக் குறிக்கப் பெறுகிறார் தெய்வயானை அம்மையாரும் வள்ளியம்மையாரும் இணக்கமாக உள்ளார்கள். என்பதைக் காட்டுவதற்காக எடுத்துள்ளது கஜவள்ளி திருவுருவமாகும். பின்னர்க் காணப்படுவன தட்சிணாமூர்த்தி, திருமால், வீரபத்திரர், நாகர் ஆகியோர் களின் திருவுருவங்கள், இத்திருவுருவங்களின் வரிசையில், 1. வீரவாகு; 2. வீரகேசரி. 3. வீரமாமகேந்திரம் 4.வீரமகேசுவரம 5. வீரமாபுரந்தரன் 6. வீரராக்கதன் 7.வீரமார்த்தாண்டன், 8.வீராந்தகன் 9.வீரதீரன் ஆகியோர்களின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. இந்நவவீரர்களை அடுத்து நவக்கிரகங்களின் உருவங்கள் ஆகமமுறையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன மற்ற இடங்களில் சனியும் அருகில் கேதும் காணப்படுகிறார்கள். ஆனால் இங்குச் சனிக்கு அருகில் குருவும, புதனும் இருப்பதைக் காணலாம். பின்னர்த் தொடர்ந்து தெய்வயானை அருணகிரிநாதர் ஆகியோர்களின் திருவுருவங்களுக்கு அடுத்து மடைப்பள்ளியும், தியானமண்டபமும் உள்ளன. அருணகிரிநாதர் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார் வடக்கு நோக்கிய வண்ணம் வள்ளி தெய்வானை திருவுருவத்துடன் கல்யாணசுந்தரர் காட்சியளிக்கிறார். குமரகோட்டத்தின் சந்நிதியில் சற்று வலப் புறத்தில் சக்தி கணபதியின் கோயில் அமைந்துள்ளது. தேவசேனாபதிச்சர லிங்கத்தை நிறுவி வழிபாடு ஆற்றிப் பின்னர் முருகப்பெருமானார் முன்பு நான் முகனைப் சிறையிட்டுப் படைத்தல் தொழிலை நான்கு கரங் ளுடன் செய்து வந்த பிரமாச்சரிய கோலத்துடனே குமரகோட்டத்தில் எழுந்தருளி னார் அவர், புள்ளிகளையுடைய மான்தோலை உடையதாகவும், தருப்பையால் ஆன கயிறு அரை ஞானாகவும், அமைந்த இடையில் பொலிவுடன்விளங்கும் உருத் திராத்துடன் வலக்கையில் வடமும் தென்னிய நீரையுடைய கமண்டலமும் தம்முடைய திருக்கைகளில் விளங்கவும், தவச்சாலை போல் அமைந்த குமரகோட்டத் தில் மற்றொரு வலக்கரம் அடைந்தோர்களுக்கு அபயம் அளிக்கும்வகையில்தொடை யின்மீது ஊன்றிய நிலையிலும், முனிவர்கள் போற்ற இனித்திருந்தார். இக்கோயி லின் உற்சவ மூர்த்தியின் திருவுருவமும் அமைந்துள்ளது.

குமரகோட்டத்தின் கருவறை 12.30 மீட்டர் நீளமும், அந்த அளவு அகலமும் கொண்ட நிலப்பரப்பு தெளிவாக விளங்கும் வகையில் அமைந்துள்ளது. இங்கு மேடையில் கிழக்குப் பகுதியில் நான்கு தூண்களும், முன் பகுதியில் பதின் மூன்று தூண்களும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. முருகப்பெருமான் சரவணப்

பொய்கையிலிருந்து உதித்தார் என்பதற்காக முருகப்பெருமான் எந்த எந்தத் திருக் கோயில்களில் எழுந்தருளியுள்ளாரோ அந்த அந்தக் கோயில்களைச் சார்ந்த தீர்த் தங்கள் சரவணப் பொய்கை என்னும் பெயரில் விளங்குகின்றன.[3] இத்திருக் கோயிலுக்குக் கிழக்குத் திக்கில் குளம் ஒன்றுள்ளது. இதுவும் சரவணப்பொய்கை எனக் குறிக்கப்படுகிறது. ஆனால் இது பயன்படுத்தாத நிலையில் உள்ளது. கோயிலின் புனிதத் தீர்த்தக் கிணறு இடப்புற வெளிப் பிரகாரத்தில் தோண்டப்பட்டு ள்ளது. இது நன்முறையில் பராமரிக்கப்பெற்று வருகிறது.

இக்கோயிலின் நூலகத்தில் சமய, இலக்கிய நூல்கள் ஒழுங்கான முறையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. நாள்தோறும் ஐம்பது பேர்கள் வரையில் இந் நூல கத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நூலகக் கட்டம் அமைக்கப்பட்ட இடத்தில முன்பு கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தை அரங்கேற்றினார் எனச் சொல்லப் படுகிறது. இம் மண்டபம் பழம் பெருமையும் பொலிவும் கொண்டு விளங்குகிறது. இந் நூலகத்திற்குத் தெற்கில் சொற்பொழிவு மண்டபத்தைக் காணலாம்.

இத்திருக்கோயில் எப்பொழுதுகட்டப்பட்டது என்பதை எடுத்துக்காட்டும் கல்வெட்டு ஆதாரங்களோ, இலக்கிய ஆதாரங்களை கிடைக்கப் பெறாத நிலையில் உள்ளோம். கச்சியப்ப சிவாச்சாரியர் தாம் இயற்றிய கந்தபுராணத்தில் குமர கோட்டத்து மேயோ எனக் குறிப்பிட்டுச் சிறப்பிக்கிறார். இதன் பின்னர் 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரியாரும் தமது திருப்புகழில் இத்தலத்தினைப் போற்றிப்பாடியருளி யுள்ளார். இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சிவஞானமுனிவர் குமர கோட்ட த்துப் பெருமான் பெருமைகளைத் தாம் இயற்றிய காஞ்சிப்புராணத்தின் எடுத்துக் கூறியுள்ளார். சிறிய நிலப்பரப்பில் முன்னர் அமைந்துள்ள இக்கோயில்நாளடைவில் விரிவாக்கம் செய்யப்பட்டு வந்ததாகத் தெரிய வருகிறது. 1901 ஆம் ஆண்டில் இக் கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் 1915 ஆம் ஆண்டில குடமுழக்கு விழா நடைபெற்றது. பின்னர் 1976 ஆம் ஆண்டில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டதில் பேரன்பர்கள் பலர் ஆதரவில் மீண்டும் கோயில் திருப்பனி மேற்கொள்ளப்பட்டது. 1982 ஆம் ஆண்டில் குடமுழக்கு விழா சிறப்பாக நடைபெற்றது.

உசாக்கால பூசை, காலைச் சந்தி, உச்சிக்கால பூசை பிரதோடக்காலப் பூசை மாலைப்பூசை, இரவுப்பூசை ஆகிய ஆறு காலங்களில் பூசைகள் நாள்தோறும் நடைபெறுகின்றன. ககஞ்சிபுரம் ஐவுளிக்கடை சத்திரம்ஒரு கட்டளையை ஏற்படு த்தி, நாள்தோறும் உசாக்காலப் பூசையினை நிறைவேற்றி வருகிறது. இரவு காலப் பூசை நடத்துவதற்கு ஒரு கட்டளை உள்ளது. சிறுவள்ளூரிலுள்ள 3.95 ஏக்கர் நிலத்

---


3. திருத்தணிகையில் முருகப் பெருமான் சிவபெருமானை வழிபாடு ஆற்றப் பயன் படுத்திய தீர்த்தம் ''குமார தீர்த்தம்'' என்னும் பெயரிலும் அவர் வழிபட்ட சிவலிங்கம குமாரலிங்கம் என்னும் பெயரிலும், அவரால போற்றப்பெற்ற சிவபெருமான் கும ரேசன் என்னும் பெயரிலும் விளங்குவதைத் தணிகைப்புராணத்தில் காணலாம கச்சியப்ப முனிவர் -தணிகைப் புராணம் - குமரேசப்படலம் - 1, 42, 43.

திலிருந்து கிடைக்கும் வருமானம் இதற்குப் பயன்படுகிறது. மற்ற நான்கு வேளை பூசைகளைக் கட்டளையும், கார்த்திகைக் கிருத்திகை திருவிழாக் கட்டளையுத் இக் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு வேளைகளில் பூசைகளைத் தவிர, மாதந்தோறும் வளர்பிறை சட்டியில், இரவுக் காலப் பூசைக்கு முன் பிரதோட பூசை என்று வழங்கப்பெறும் யந்திர பூசையும் செய்யப்படுகிறது. இத்திருக்கோயி வில் நடத்தப்பெறும் பூசைகள் அனைத்தும் குமார தந்திர அடிப்படையில் கச்சியப்ப சிவாச்சாரியார் பரம்பரை சிவாச்சாரியர்கள் நடத்தி வருகிறார்கள் இத்திருக்கோயிலில் ஆண்டு தோறும் வைகாசி மாதம நடைபெறும் விசாகப் பெருவிழாவும், ஐப்பசி மாதம் நடைபெறும் மிக முக்கியமானவையாகும். விசாகப் பெருவிழா பத்து நாள்களிலும் [illegible] சட்டி ஆறு நாள்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. விசாகப் பெருவிழாவில் மூன்றாம் நாள் விழாவும், சஷ்டிப் பெருவிழாவில் ஆறாம் நாள், தேவேந்திர மயில் வாகனத்தின் மீது முருகப் பெருமானின் திருவீதியுலா திரும்பும் போது பிரம்மதேவர் திருவுருவத்தை அலங்கரித்து வெளியில் கொண்டு வந்து அமர வைப்பது வழக்கம். இத்திருவுருவத்தின் முன் முருகப்பெருமான் நிற்கும் காட்சி [illegible] பிரணவத்தின் பொருளைக்கூறுமாறு நான்முகனை வினவியதைச்சுட்டிக்காட்டுகிறது. [illegible] நேரத்திற்குப் பின்னர், பிரணவத்தின் பொருள் தெரியாதநான்முகன் முருகப் பெருமானை மூன்று முறை வலம் வந்து நிற்கும் கோலமும் பின்னர் அதே முறையில் அவன் சிறைப்படும் நிலையும் பாவனையில் காட்டப்படுகிறன. இந் நிகழ்ச்சிகள் காட்டப்பட்ட பின்னர் நான்முகன்சிறையிலிருந்து விடுதலை பெற்றது உணர்த்தப் படுகிறது.


இறுதியில் முருகப் பெருமானுக்கும், நான்முருகனுக்கும் வழிபாடு நடைபெறு கிறது பத்தாம் நாள் வள்ளியம்மையார் திருக்கல்யாணம் நிகழ்கிறது. அடுத்த நாள் நேடயம் மங்களகிரி திருவிழாவுடன் நிகழ்ச்சிகள் இனிது நிறைவுறுகின்றன.

கந்தசட்டி விழா ஐப்பசி மாதம் வளர்பிறையில் இனிது நிறைவுறுகின்றது. விழா நாள்களில் முத்துக்குமார சுவாமி திருவீதிவுலா வருகிறார். ஆறாம் நாள் சட்டி விழாவின்போது முருகப்பெருமான் திருக்தேரின் எழுந்தருள்கிறார். அச்சமயத்தில் சூரன் வதம் நிகழ்கிறது. சட்டி விழா நாள்களில் நடைபெறும இலட்சார்ச்சனை மிகவும் சிறப்பு உடையதாகும்.

தொல்காப்பியம், சங்கப் புலவர்களுள் ஒருவரான நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை, பரிபாடல், குறுந்தோகை, சிலப்பதிகாரம், கல்லாடம், ஒன்பதாம்சைவ திருமுறை, ஆசிரியர் சேர்ந்தனார் இயற்றிய நற்றாயிரங்கள் பதிகம் ஆகியவற்றில் ஆங்காங்கு முருகப் பெருமான் போற்றப் பெற்றிருப்பினும், கச்சியப்ப சிவாச்சாரியார் ஒருவரே தாமியற்றிய கந்த புராணத்தில் முருகப் பெருமான் திரு அவதாரம். அத்திரு அவதாரத்தின் பெருமை, முருகவேளின் வீரம், வீரவாகுத் தேவர் முருகரிடம் செய்து கொண்ட வேண்டுகோள், முருகரின் விசுவருபத்தைக் கண்டு சூரன் வியத்தல், தேவர்கள் முருகவேளிடம் ஒலமிடுதல், சூரன்வதத்திற்குப் பின்னர் தேவர்கள் முருகவேலை துதித்தல், வள்ளி தேவியிடம் திருமுருகப் பெருமான் கொண்ட பேரன்பு ஆகியவை விளக்கமாக் இயம்பியுள்ளார். இதன் விளைவாக முருகவேள் வரலாறு நாடெங்கும் பரவலாயிற்று. இந்த உண்மையைக் கந்தபுராணத்தின் இறுதியில் அமைந்துள்ள ஆலிருந்தடந்தோன் வாழ்க அறுமுகம் வாழ்க எனத் தொடங்கும் வாழ்த்துப்பா ஒவ்



காஞ்சிபுரம், குமரக்கோட்டம்



காஞ்சிபுரம், குமரக்கோட்டம் கோயில், சுப்பிரமணியர்

வொரு சைவ சமய நிகழ்ச்சி முறையின் போது பாடப் பெறுவதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். 82 ஆண்டுகளுக்கு ள் இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழாக்கள் நான்கு. சிறப்புற நடைபெற்றிருப்பது மக்களிடையே பெற்றுள்ள பெருமதிப்பை எடுத்துக் காட்டுகிறது. இக்கோயில் செல்வ நிலையிலும் செல்வாக்கில் உயர்வடைந்து வருவது கண்கூடாக விளங்குகிறது

இக்கோயில் நெடுங்காலமாக காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை ஜவுளிக்கடை சத்திரத்தின் நிர்வாகத்தில் இருந்து வந்தது. இச்சத்திரத்தைச் சேர்ந்தவர்களே இக்கோயிலின் அறங்காவலராக இருந்து இத் திருக்கோயிலில பல திருப்பணிகளைச் செய்து வந்திருக்கின்றார்கள். இதற்கு ஆதாரமாக 5. 2. 1857 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஓர் ஆவணம் இன்றும் ஜவுளிக்கடைச் சத்திரத்தின் அலுவலகத்தில் உள்ளது. 1950 ஆம ஆண்டு முதல் இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் தலைவர் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு 30,64 , 4. 9. 1975 ஆம் (நாளிட்ட) திட்டத்தின்படி நிர்வாகம் செய்யப்பட்டுவருகிறது.

இக்கோயிலுக்கென்று தனியாக நிலங்கள் எவையும் இல்லை. ஆனால் சொந்தமாக மொத்தம் 16 ஏக்கர் 45செண்டு நன்செய் நிலங்கள் நான்கு சிற்றூர்களில் உள்ளன. களத்தூரிலுள்ள 8 23 ஏக்கர் நிலம் நாகோஜிராவ் கட்டளைக்கெனவும் வேடல் கிராமத்திலுள்ள 2.96 ஏக்கர் நிலம் மகாசிவராத்திரி பூசைக் கட்டளைக்கெனவும், சிறுவள்ளூரிலுள்ள 3.95 ஏக்கர் நிலம் இரவுக் கட்டளைக்கெனவும், கீழ்க் கதிர்பூரிலுள்ள 1 26 ஏக்கர் நிலம் கார்த்திகை கிருத்திகைத் திருவிழாகக் கட்டளைக்கெனவும் கோயிலுக்காக அளிக்கப்பட்டுள்ளன. கட்டிடக்கள்வகையில் குடியிருப்பு வீடு ஒன்றும், பதினாறு வணிகக் கடைகளும். ஒன்பது மனைப்பகுதிகளிலும் உள்ளன. இவற்றிலிருந்து வருமானமும் வருகிறது. இவற்றின் மூலமாக கடந்த 1390 பசலி ஆண்டில் இக்கோயில் பெற்ற வருமானம் 1, 79இ586 ரூபாயாகும். மேலும் 1984 டிசம்பர் 31 ஆம் நாள் மதிப்பிட்டின்படி இக்கோயிலில உள்ள அனைத்து தங்கம், வெள்ளி மற்றும் நகைகளில் மொத்த மதிப்பு 4,00, 286/- ரூபாயாகும். 1984 ஆம் ஆண்டில் இக்கோயிலின் மொத்த வருமானம் 3, 80, 086/ ரூபாயாகும்.

கோயில் தன் வருமாத்திலிருந்து, நிர்வாக அலுவலர் கோயில் ஊழியர்கள் மற்றும் குருக்களுக்கு ஊதியமாக ஏறத்தாழ 81,000/—ரூபாய்த் தொகை அளித்து திருவிழா, நகராட்சி வரி இந்து சமய அறநிலைலை ஆட்சித்துறையினருக்குச் செலுத்தும் பங்கு, மற்றும் மற்ற செலவினங்களுக்காக ஏறத்தாழ 1, 18,000/–ரூபாய்செலுத்தி வருகிறது. இக்கோயிலைப் பொறுத்த வரையில் வழக்குகள் தொடர்பாகச் செலவுகள் இதுவரை செய்யப்படவில்லை என்பது குறிபிடத்தக்கது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம். ரூ. 5,60,000

குமரகோட்டத்தை பற்றிக் கூறும் இலக்கியங்கள்

1. கந்தபுராணம் – கச்சியப்ப சிவாச்சாரியார்
2. திருப்புகழ் – அருணகிரிநாதர். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களில் ஒன்றில் குணமாகிய சிறந்த குமரகோட்டத் தலங்கள் பெருமாளே குறிப்பிடுகிறது.
3. காஞ்சிப்புராணம் – சிவஞானமுனிவர்

காஞ்சிப்புராணம் – இரண்டாம் காண்டம் - கச்சியப்ப முனிவர்

காஞ்சிபுரம்

# சங்குபாணி விநாயகர் கோயில்

இக்கோயில் பெரியகாஞ்சிபுரம் உலகளந்தார் தெருவில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

திருமால் பூசை செய்த தலம் இதுவாகும். திருமாலுக்கு விநாயகர் சங்கு ஒன்றைக் கொடுத்ததாகவும், பின்னர் அச்சங்கே சங்குபாணி விநாயகராக மாறியதாக வும் புராணம் கூறுகிறது. இங்கு விநாயகர் சங்கு வடிவில் புதுமையாகக் காட்சியளிக் கிறார்.

இவ்விநாயகர் சிற்பத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்தி மகேந்திரவர்ம பல்லவன் வாதாபியை வெற்றிகொண்ட காலத்தில் அங்குள்ள கோயில் ஒன்றில் காணப்பட்டஇச்சிற்பத்தைப் பெயர்த்துவந்து காஞ்சிநகரில்அதற்குகோயில் அமைத்து வழிபட்டான் என்பதாகும். இவ்விநாயகர் சிற்பத்தின் பின்புறம் பெயர்த்து எடுத்ததற்கான கல் அமைப்பு உள்ளது எனக் கூறுகின்றனர்.

இக்கோயிலில் நுழைந்ததும் இடப்பக்கம் நாகேசுவரர் திருவுருவத்தைக் காணலாம். வடமேற்குக் கோடியில் வாகன அறையும் வடகிழக்குக் கோடியில் நவக்கிரகங்கள் சந்நிதியும் இருப்பதைக் காண்கிறோம். அவற்றையடுத்துச் சனீசுவரர் சந்நிதியுள்ளது. தென்கிழக்குக் கோடியில் உற்சவர் அறை இருக்கிறது. கருவறை யின் முன்மண்டபத்தின் வலப்பக்கம் யானை வாகனமும், இடப்பக்கம் பெருச்சாளி உருவமும் காணப்படுகின்றன. கருவறையில் சங்குபாணி விநரயகரின் திருவுருவம் தெற்கு நோக்கியவாறுள்ளது.

இக்கோயிலின் இராசகோபுரம் தற்காலத்தில் கட்டப்பட்டதாகும். இரண்டு தளங்களையுடைய கோபுரம் இதுவாகும். இது கூடு–பஞ்சரம்–சாலை–பஞ்சரம்–கூடு என்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. மூலத்தான விமானம் ஒருதளக்தையுடையது. வட்டமான உருத்திரகாந்த வகையைச் சார்ந்த சிகரமாகும் ஒருகலசத்தைளிடையது. கிரீவ கோட்டத்தின் மேற்கில் சித்தி விநாயகரும் வடக்கில் விநாயகர் முருகன் ஆகியோரும் தெற்கில் விநாயகரும் கிழக்கில் இடப வாகனத்தில் உமாமகேசுவரரும் அருகில் விநாயகரும் முருகனும் உள்ளனர். அவர்களின் வாகனங்களும் அருகிலுள் ளன. நான்கு பெரிய நாசிகளும் நான்கு சிறிய நாசிகளும் சிகரத்தில் காணப்படு கின்றன. இவை வடக்கில் நான்கு இடபங்கள் மூலைக்கு இரண்டாகவுள்ளன

அவற்றிடையே இரண்டு பூதங்களின் உருவங்கள் காணப்படுகின்றன. கபோதங்களின் கூடுகளில் பழனியாண்டவர், முனிவர்கள், மனிதர்கள் ஆகியோர் தலையுருவங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் காலையில் ஒருவேளை மட்டும் பூசை நடைபெற்றுவருகிறது. விநாயகர் சதுர்த்தி, திருவாதிரை, மார்கழி நாள்கள், சிவராத்திரி, சங்கட சதுர்த்தி ஆகிய நாள்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. விநாயகர் உற்சவ மூர்த்தியும் அதற்குரிய புறப்பாடும் இக்கோயிலில் சிறப்பாக அமைந்துள்ளன. இச் சிறிய கோயிலுக்கு மக்கள் திரளாக வந்து வழிபடுகின்றனர்.

இக்கோயில் நீலகண்ட சிவாச்சாரியார் பரம்பரையினருக்கு உரியதாக இருந்து வருகிறது. மூஞ்சூறு வாகனமொன்றும் இக்கோயிலிலுள்ளது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் 3,800 ரூபாயாகும்.

காஞ்சிபுரம்

# சந்திரேசுவரர் கோயில்

இக்கோயில் பிள்ளையார் பாளையத்தின் மேற்கில் அமைப்பு செல்லும் சாலையின் மேற்கில் அமைந்துள்ள வெள்ளைகுளம் கிழக்குக் கரையில் கிழக்கு நோக்கியவாறு 5 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

காஞ்சிப்புராணம் இக்கோயிலைப்பற்றி குறிப்பிடுகிறது.

இக்கோயில் கருவறை உள்மண்டபம் மட்டுமே கொண்டதாகும். கோயிலின் முன்புறம் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் அமைந்துள்ளன. கருவறையில் சந்திரேசுவரர் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். உள்மண்டபத்தில் கணபதி வீற்றிருக்கிறார். கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள கருவறையின்மீது ஒற்றைக் கலசம் கொண்ட உருண்டையான விமானம் அமைந்துள்ளது.

இக்கோயிலில் ஒருகாலப்பூசை குருக்களால் செய்யப்படுகின்றது. தெருவார் நிர்வாகத்தின்கீழ் இது இயங்கி வருகிறது. விழாக்கள் நடைபெறுவதில்லை.

## பெரிய காஞ்சிபுரம்

# சந்தை வெளியம்மன் கோயில்

இது பெரிய காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள சர்வ தீர்த்தக் குளத்தின் தெற்கில் அமைந்துள்ள சந்தை வெளியம்மன் கோயில் தெருவின் மேற்கில் கிழக்கு நோக்கிய வாறு 20 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

ஒரு காலத்தில் சந்தை கூடிய இடத்தில் அமைந்திருந்த காரணத்தால் இந்த காவல் தேவதை சந்தைவெளியின் பெயரில் சந்தை வெளியம்மன் என்றே அழைக்கப்படுகின்றாள்.

கிழக்கு வாயிலின் வழியாக உள்ளே சென்று வலம் வரும்போது தென்மேற்கு முனையில துர்க்கை எனப்படும் மகிஷாசூரமர்த்தினியைக் காண்கிறோம். 2 மீட்டர் உயரம் சிங்க வாகனத்தில் ஒருகாலையும் தரையில் ஒருகாலையும் வைத்துக்கொண்டு ஓங்கிய குலத்தால் கீழே உள்ள மகிஷனை சங்கரிக்கும் கோலம் எட்டு கரங்களிலும் திருவாசியுடனும் நல்ல கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் இருபுறமும் இரண்டு யோகினிகள் சிலைகள் உள்ளன. ஒரு சதி புலியின் மீது அமர்ந்தவாறும் மற்றவள் வீணைவாசிப்பது போலவும் உள்ளனர். ஒருத்தி தலையில் மண்டலம் விளங்குகின்றது. இவை வேறு கோயிலில் இருந்தவை சிலைகளாகும். தற்போது இங்கு வைக்கப்பட்டுள்ளன. இனி வலமாக வரலாம், மேற்கில் கருவறையின் பின் புறம் சண்டியின் வடிவம் உள்ளது. வடமேற்கு முனையில் நாகங்கள் நவநாகம் என்னும் முறையில் நடுவில் ஒரு நாகத்தின் உருவமும் சுற்றிலும் எட்டு நாகங்களின் உருவங்களும் உள்ளன. இவை பல்வேறு கால கட்டங்களில் புத்திரப் பேறு இல்லாதவர்கள் செய்து வைத்த நாகப் பிணைகள் எனினும் பின்னர் வந்தவர்களும் இந்த அமைப்பில் சிலவற்றை வைத்துள்ளனர், வடக்கிலுள்ள சிறு சந்நிதியில் பழைய அம்மன் திருவுருவம் காண்கிறோம. இதன் முன்புறம் கழுத்து வரையிலான அம்மன் அதன் முன்புறம் உள்மண்டபத்தில் பெரிய சிவலிங்கம் முன்புறம் நந்தி பலிபீடம் ஆகியவை உள்ளன. இது இறைவி ஓர் அசுரனைக் கொன்ற பாவம் நீங்கச் சிவலிங்கம நிறுவி வழிபட்டதால் இதைப் பாவநாச லிங்கம் என்று கூறுகின்றனர். இதற்கு அடுத்து நவக்கிரகங்களின் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது.

இனி கருவறையை நோக்கியுள்ள சிறுமண்டபத்தில் எதிரிடையானை வணங்கி மகாமண்டபத்தை அடையலாம். இதன் தென்புறம விநாயகரும் வடபுறம் முருகனும் எழுந்தருளியுள்ளனர்.

இந்த விநாயகர் மேற்கரஙகளில் வலக்கையில் மழுவும் இடக்கரத்தில் பாம்பை யும் ஏந்தியுள்ளார். மார்பில் குறுக்காகப் பாமபுகளையே வீரச்சங்கிலியாக அணிந் துள்ளார். இவர் குறிப்பிடதக்க நாகாபரணப் பிள்ளையாராவார். அடுத்து மூலத் தானத்தில் வீற்றிருக்கும் பெரிய சந்தைவெளி அம்பிகையைக் கண்டு வணஙகலாம. நான்கு கரங்கள் கொண்டு அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றாள்.

உள்மண்டபத்தில் விநாயகர் மூவருமசந்தைவெளியம்மன்உலாத்திருமேனியும் உள்ளன. இக்கோயில் கருவறை உள்மண்டபம் மகாமண்டபம (வலப்புறச் சந்நிதி) இடப்புறச் சந்நிதி திறந்தவெளிப் பிராகாரம் துர்க்கையம்மன் சந்நிதியும் உள்ளன. துர்க்கையம்மன் மூலவர் சந்நிதியில் விமானம் உள்ளது.

இக்கோயிலில் பூசாரி ஒருவர் இரண்டு வேளைகளும பூசை செய்கின்றார்' ஆடி மாதம் தைமாதம் வெள்ளிக்கிழமை செவ்வாய்க்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் திரளாக மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர். குலதெய்வமாகக் கொண்டவர்கள் பொங்கலிட்டுப் பூசை செய்கின்றனர்.

இப்பகுதியில் அமமை நோய் தாக்கப்பட்டவர்கள் இக்கோயிலில் வந்து தங்கிக் கொள்கின்றனர். தீராத நோய் தீர்ந்து விடுகின்றது என்னும் நமபிக்கை நிலவி வருகிறது. மிகவும் கடுமையாக அம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்தால் நோய் எளிதில் தீர்ந்து விடுவதைக் காண்கிறோம்.

தெருவாரும் பொதுவில் நிர்வாகத்தை செயல்படுத்துகின்றனர். காஞ்சி நகர் சிறு தெய்வக் கோயில்களில் இது முதன்மை பெற்றதாகும்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 19,000

காஞ்சிபுரம்

# சப்தரிஷீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்தில் ஏழுமுனிவர்களான காசிபர், அத்திரி, குச்சன், வசிட்டர், பிருகு, கௌதமர், ஆங்கிரசர் ஆகியோர் தம் பெயரால் இலிங்கம அமைத்து வழிபட்டனர். இவை ஏழும் அவர்கள் பெயரால் தனித்தனி இடங்களில் இருந்து வருகின்றன. அவற்றை உள்ள இடஙகளில் உள்ளவாறு காணலாம். இவற்றை சப்ததானம் என அழைப்பர்.

இக்கோயிலைப் பற்றி காஞ்சிபுராணம் கூறுவதாவது :

முன்னாளில் அத்திரி, குச்சன், வசிட்டன், பிருகு, கௌதமர், காசிபர், ஆங்கீரசர், என்னும் முனிவர் எழுவரும் இமயமலையில தவமபுரிந்து பிரமதேவனைக் காணும் வாய்ப்புப் பெற்றார்கள் பிரமதேவனிடம் அவர்கள் வினவியது பேரறிவாளர் பெறுதற்குரிய முத்தியை அறிவில்குறைந்தவருப் எய்தற்குரியவழியாது என்பதாகும். இதற்குப் பிரமதேவன் அறிவித்தது, ''தருமம் ஒன்றே இறைவன் திருவுள்ளத்தை மகிழ்வித்து முத்தியை நல்குவிக்கும். அது இரு வகைப்படும். ஒன்று சிவதருமம் என்னும் சிவபுண்ணியம். மற்றது பசு (உயிர்க்கு உதவுதல்) தருமம என்னும் பசு புண்ணியம். நல்வினையாகிய வேள்வி முதலியவை தத்தம் பயன்களை அளித்து விட்டு அழிந்துவிடும். உணவு உண்ட அளவில் பசிதீரும் பின்னர் பசி தோன்றும். இது பசு புண்ணியம், அமிழ்தம் பிற உணவுகளைப் போலன்றி அதனை உண்டவழி பசி தீரும. பின்னர்ப் பசி தோன்றாது. இது போன்றது சிவபுண்ணியம். இச்சிவ புண்ணியம் சிவலிங்கத்தை வழிபட்டுச் சிவனடியார்களுக்கு உதவி அளித்து மகிழ்த லாம். இத்தகைய சிவபுண்ணியம் செய்தற்குரிய தலம் காஞ்சிபுரம். இத்தலத்தில் செய்வதால் அடையும் பயன் பிற தலங்களில் செய்யும் வழிபாட்டில் கிடைக்கும் பயன்களை விடப் பன்மடங்கில் கிடைக்கும'' என்பதாகும்.

## காசிபேசம்

காசிபேசம் சின்ன காஞ்சிபுரம் கண்ணப்பன் தெருவின் கீழ்க்கோடியில் பச்சை யப்பன் மகளிர் கல்லூரி வளாகத்திற்கு முன்புற ஆற்றங்கரை அம்மன் கோயிலுக் குள் அமைந்துள்ளது.

காசிபர் வழிபட்ட கோயில் அழிந்ததால் அச்சிவலிங்கத்தினைக் கொண்டுவந்து இக்கோயிலினுள் வைத்து வழிபட்டு வருகின்றனர். அம்மன் கோயிலில் பூசை செய்யும் பூசாரிகளே இச்சிவலிங்கத்திற்கும் பூசைசெய்து வருகின்றனர். அம்மன் கோயில் நிருவாகத்தின் கீழ் இது இருந்துவருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் 2,357 ரூபாயாகும்

## அத்திரிசம் - குச்சேசகம்

இவ்விரண்டு கோயில்களும் பச்சையப்பன் கல்லூரி வளாகத்தினுள் அமைந் துள்ளது.

இக்கோயில்கள் முழுவதும் அழிந்துவிட்டன. சிவலிங்கம் மட்டுமே எஞ்சியுள் ளது. அதற்குச் சிறுமண்டபங்கள் கட்டியுள்ளனர்.

முறையான பூசை இல்லை. அன்பர் ஒருவர் நாள்தோறும் விளக்கு வைத்து வருகின்றார். சிவராத்திரி, திருவாதிரை போன்ற சிறப்பு நாள்களில மட்டும் வழிபாடு செய்யப்படுகின்றது.

இக்கோயில்கள் எவர் பொறுப்பிலும் இல்லை. இரண்டு இலிங்கங்களும் அத்திரி முனிவராலும் குச முனிவராலும் வழிபடப்பட்டு வந்தவை.

### ஆங்கீரச ஈசுவரம்

இது காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரிக்குச் செல்லும் பாதையில (வெங்குடி மருத்துவமனைப் பேருந்து நிறுத்தத்திலிருந்துதெற்கேஆற்றுக்குப்போகும பாதையில்) உள்ள வியாச சாந்தாலீசுவரர் கோயிலின் முன்புறம் உள்ளது.

சிறு சந்நிதியில் இலிங்கம் மட்டும் உள்ளது. ஆங்கீரச முனிவர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். வியாச சாந்தாலீசுவரர் கோயில் குருக்களே இக்கோயிலையும் பூசித்து வருகிறார்.

### வசிட்டேசுவரர்

இக்கோயில் சாந்தலீசுவரர் கோயிலுக்கு முன்புறமுள்ள குளத்தின் தெற்குக் கரையில் மேற்கு நோக்கியவாறு 4 செண்ட் நிலப்பரப்பிலுள்ளது.

வசிட்டர் வழிபட்டதால் இத்தலம் வசிட்டேசுவரம் என்னும பெயர் பெற்றது. முனிவர் ஒருவர் இட்ட ஆணையால் வெடித்துக் கூடியதால், இவ்விலிங்கம் வெடித்து கூடிய வசிட்டேசுவரர் என்னும் பெயர் பெற்றுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் முழுவதும் அழிந்த சிவலிங்கம் மட்டுமே எஞ்சியிருந்தது. இக்கோயிலின் சிவலிங்கத்திற்கு அன்பர்கள் முயற்சியால்மண்டபமொன்று அமைக்கப்பட்டுள்ளது. சைவப்பேரன்பர் ஒருவர் நாள்தோறும் பூசை செய்து வருகின்றார். மேலும் வெடித்துக் கூடிய வசிட்டேசுவரர் திருக்கூட்டம் என்னும் பெயரில் அன்பர்களைக் கூடிச் சைவப்பணியும் தமிழ்ப்பணியும் செய்து வருகின்றார்கள்.

காஞ்சிபுரம்

## சலந்தரேசுவரர் கோயில்

இது காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்தின் வடக்கில் வேலூர் செல்லும் சாலையில், வடபுறம் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள ஓணகாந்தன் தளி வளாகத்திலேயே 5 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

முன்னாளில் இக்கோயில் இப்போதுள்ள இடத்திற்கு சற்றுத் தொலைவில் உள்ளடங்கியவாறு மிகவும் அழிந்த நிலையில் இருந்ததால் பாடல் பெற்ற தலமான ஓணன்காந்தன் தளியைப் புதுப்பிக்கும்போது இதையும் இங்கே கொண்டு வந்து வைத்துப் புதியதாகத் திருப்பணி செய்து புதிய கோயில் கட்டியுள்ளனர். சிவபெருமானின் அட்ட வீரட்டங்களில் ஒன்று சலந்தரனவதம் சலந்தரனை வென்ற பின் அவனுடைய உயிர் ஒளிப்பிழம்பாகவந்து காஞ்சியில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு அதனோடு இரண்டறக் கலந்த இடம் இதுவென்பர். காஞ்சிப்புராணம் இக்கோயில் பற்றிக் குறிப்பிடுகிறது.

பல்லவர்காலத்தில் காஞ்சியில் சலந்தரன் கதை பெரிய அளவில் வழங்கி வந்துள்ளது. அவர்கள் கட்டியுள்ள பெரும்பான்மைக் கோயில்களில் வடக்குப்புற மாடத்திலும் சலந்தரவதைச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கயிலாயநாதர், ஐராவதேசுவரர், அமரேசுவரர், முத்தீசுவரர் ஆகிய பல்லவர் கோயில்களில் இவ்வடிவம் அமைந்துள்ளது காணலாம்.

இக்கோயில் இன்று ஓணகாந்தன் தளியுள் துணைச் சந்நிதியாக அமைந்துள்ளது. கருவறை முன்மண்டபம் சிறு சுற்றுப்பிராகாரம் கொண்டது கருவறையுள் சிவலிங்க வடிவில் சலந்தரேசுவரர் எழுந்தருளியுள்ளார். புறச்சுவர் மாடங்களில் விநாயகர் தட்சணாமூர்த்தி ஆகிய மூர்த்திகளும் கோமுக்கிக்கருகில் சண்டேசுவரரும் முன்புறம் நந்தி பலிபீடம் ஆகியவையும் அமைந்துள்ளன. கருவறை மீது ஒற்றைக் கலசம் கொண்ட மூன்று தள விமானம் அழகுடன் அமைந்துள்ளது. கோயில் திருப்பணி செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

இங்குக் குருக்கள் ஒருகாலப்பூசை செய்து வருகின்றார். தனியார் நிர்வாகத்தின் கீழ்ச்செயல்படுத்தப்படுகின்றது. திருவாதிரை சிவராத்திரி முதலிய அனைத்துச் சைவ விழாக்களும் நன்முறையில் சிறப்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

### காஞ்சிபுரம்

## சவுனகேசுவரர் கோயில் (காஞ்சீசுவரர்)

புராணங்களில் சௌனகேசுவரர் எனப் போற்றப்பெறுபவர் இங்கு காஞ்சிசுவரர் என விளங்கி வருகிறார். இக்கோயில் பெரிய காஞ்சிபுரம் தானப்ப நாயக்கர் தெருவில் கிழக்கு நோக்கியவாறு 10 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

சௌனகர் என்னும் முனிவர் காஞ்சிக்கு வந்து சிவலிங்கத்தை நிறுவி மும்மலங்களை அறுத்து முத்திபெற்ற இடம் இதுவாகும். இக்கோயில் கருவறை உள்மண்டபம் மட்டுமே கொண்டுள்ளது. கருவறையில் சௌனர் பூசை செய்த சிவலிங்கம் சௌனகேசுவரர் எனும் பெயரில் விளங்கி வருகிறது. பிராகாரத்தில் வேறு சிவலிங்கத்திற்கும் சிறு சந்நிதி உள்ளது. சௌனர் இறுதியில் இஙகு ஒடுங்கி வீடுபேற்றை பெற்று இதனுள் ஐக்கியமானார் என்பதாக கூறுகின்றனர்.

ஏகாம்பரநாதர் கோயிலுக்கு சாரம் கட்ட இங்கிருந்தே தொடங்கினார் என்பது செவிவழிச் செய்தியாகும். மண்டபத்தின் தென்கிழக்கில்விநாயகருமஅவரையடுத்துச் சண்டேசுவரரும் எழுந்தருளியுள்ளனர். கருவறையுள் சுவரில் பார்வதியுடன் சிவபெருமானின் படைப்புச் சிற்பம் உள்ளது. கோயிலின் வடமேற்கு முனையில் வள்ளி தெய்வயானையுடன் முருகன் சந்நிதி அமைந்துள்ளது. இக்கோயிலின் தலமரம் அத்தியாகும். இது கோயிலின் கிழக்கு முற்றத்தில் செழித்து வளர்ந்துள்ளது. கருவறைமீது ஒற்றைக் கலசம் கொண்ட வட்டமான ஒருதள விமானம் உள்ளது.

இக்கோயில் தெருவார்கள் பொதுவில் இக்கோயில் நிர்வாகம் நடைபெற்று வருகிறது இங்கு க் குருக்கள் ஒருகாலப் பூசை செய்கின்றார். இங்கு அனைத்துச் சைவவிழாக்களும் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றன.

இக்கோயிலையொட்டி அரம்பையர்கள் பூசித்துப் பேறுபெற்ற அரம்பேசுவரம என்னும் சிறு சிவன் கோயில உள்ளது.

காஞ்சிபுரம்

# சித்திரகுப்தர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெருவின் மேற்குச் சிறகில் கிழக்கு நோக்கியவாறு முப்பது சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் கருவறையில் சித்திராபுத்திரர் தம் தேவியான கர்ணகி தேவியோடு நின்றவாறு எழுந்தருளியுள்ளனர். இக்கோயில் கருவறை உள்மண்டபம் மகாமண்டபம் ஆகியவற்றை கொண்டது. மகாமண்டபத்தின் தெற்கில் வடக்கு நோக்கியவாறு உற்சவர் சபை அமைந்துள்ளது. இதில் சித்ரகுப்தர் தம் தேவியோடு உலாத்திருமேனியாக எழுந்தருளியுள்ளனர்.

தேவியர் இருவரும் நின்ற நிலையில் உள்ளனர். சித்திரகுப்தர் வலக்கையில் எழுத்தாணியும் இடைக்கையில் ஏடும் ஏந்தியுள்ளனர். அம்பிகை தம் வலக்கையில் மலருடன் இடக்கையைத் தொங்கவிட்டுக் கொண்டவாறு உள்ளார். இவர் தம் தலையில் கிரீடம் அணிந்துள்ளார்கள். இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசை செய்கின்றார்.

நவக்கிரகங்களால் துன்புறுவோர் இவரை வணங்குகின்றனர் குறிப்பாகக் கேதுக்கிரகத்தின் அதிதேவதையாகிய இவரைக் கேது திசையில் துன்புறுவோர் வந்து வழிபாடு செய்கின்றனர். நவக்கிரகங்களும் விநாயகரும் இக் கோயிலில் எழுந்தருளியுள்ளனர். சித்திரைப் பௌர்ணமியில் மிகவும் சிறப்பான வழிபாடுகள் வீதிஉலா, திருக்கல்யாண உற்சவம ஆகியவை சிறப்பாகக் கொண்டாட படுகிறன்றன.

இந்தச் சித்ராபுத்திரனின் வழி வந்தவரே சீர் கருணீகர் என்னும் இனத்தினர் ஆவர். சித்ராகுப்தர் கோயிலுக்கு தென்புறம் சிறு அறை ஒதுக்கப்பெற்றுள்ளது. அதில் வள்ளல் பெருமானின் பெரிய படம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கோயிலின் அம்மரபைச் சார்ந்த சீர் கருணீர்களே மேற்பார்வை பார்த்து செயல்படுத்தி வருகின்றார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 1,700

காஞ்சிபுரம்

# சித்தீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம்–வந்தவாசிப் பாதையில் குயவர் வீதியில் மஞ்சள் ஓடையின் கரையில் கிழக்கு நோக்கியவாறு 50 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

உமையம்மை மஞ்சட்காப்பினைத் தம் திருமேனியில் கொண்டு வெள்ளப் பெருக்கத்தைத் தடுத்து ஆற்றில் மூழ்கிப் பூசைசெய்தார். இவ்வெள்ளப்பெருக்கின் நறுமணம் பரவி மஞ்சள் நீர், நதி என்றும் பெயரில் வழிந்தோடிற்று. இங்குச் சிவபெருமான் சிவலிங்க வடிவில் தோன்றினார். இதன் காரணமாக இவருக்கு ''மஞ்சள் தீர்க்கூத்தர்'' என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இங்குச் சித்தர் பலர் வழிபாடாற்றிச் சித்திகளைப் பெற்றார்கள். ஆதலினால், இது சித்தீசம் என்னும்

பெயர் பெற்றது. இங்குள்ள தீர்த்தம் சித்த தீர்த்தம என்னும பெயரில் இருந்தது இங்கு ஞாயிறு, சனிக்கிழமைகளில் நீராடி வழிபடும் பழக்கம் இருந்துவந்தது.

கிழக்கு நோக்கிய வாயிலின்மீது சிறு கோபுரமுள்ளது. அதனைக் கடந்தால் நந்தி, பலிபீடம் ஆகியவற்றைக் காணலாம். வடமேற்கு முனையில் முருகன், வள்ளி, தெய்வயானை சந்நிதியும் தென்மேற்கில் விநாயகர் சந்நிதியும உள்ளன. நுழைவாயிலின் வலப்புறம உள்ளே திருமால் சந்நிதி மேற்கு நோக்கியும் வடகிழக்கு முனையில் நவக்கோள் சந்நிதியும் உள்ளன. பிராகாரத்தை வலமவந்துஉட்செல்வோமெனில், கருவறையுள் 2 மீட்டர் உயரமும் 3 மீட்டர் சுற்றளவும் கொண்ட பாறை வடிவில் சித்தீசர் பெருமான் விளங்குகின்றார். இங்குச் சந்திரசேகரர், அம்பிகை ஆகியோர் உற்சவ மூர்த்தங்கள் உள்ளன. கருவறைக் கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரரும் உள்ளனர்.

சதுரமான வடிவமான கருவறைமீது சதுரவடிவவிமானம் மூன்று நிலைகளை கொண்டுள்ளது. நந்தி மண்டபமும முகமண்டபமும் மகாமண்டபமும் உள்ளன. திறந்த வெளிப்பிராகாரமுள்ளது.

குருக்கள் இரண்டு வேளைப் பூசை புரிகின்றார். இக்கோயில் தனியார் நிருவாகத்தில் இயங்கி வருகின்றது. சிவராத்திரி, திருவாதிரை, பௌர்ணமி போன்ற நாள்களில் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 7,500

காஞ்சிபுரம்

# சித்தீச்சரங்கள்

காஞ்சிபுரத்தில் சித்தீசுவரம் எனும் பெயரில காந்தி சாலையில பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியை ஒட்டியும் உள்ளது. இது சித்தர்களால் பூசிக்கப் பெற்றது.

சித்தி பெறுதல் என்பதற்கு சிறந்த பொருள் தன்னை அடைதல என்பதாகும். தருமம், யோகம், ஞானம, வேதம், யுகம், (காலம்), பொருள, காமம், வீடு ஆகியஎண் வகைப் பொருள்களும் தமது ஆணைக்குட்பட்டுச் செயல்படுத்த வலல நிலையை பெறுதல் சித்தி பெற்ற நிலையாகும். காஞ்சிக் கச்சபேசுவரத்துள் நம் மனத்தில் எண்ணியதை எல்லாம் ஈடுஏற்றும் இஷ்டசித்தீசுவரம் எனும் சிவன் கோயிலும்

இஷ்டசித்தி தீர்த்தமும் உள்ளன. மேலும் இக்கோயிலின் உள்ளே முன்சொன்ன என் பொருள்களையும் அருளவல்ல சிவலிங்கங்களும் உள்ளன. அவற்றை இங்குக் காணலாம்.

### தரும சித்தீச்சரம்

இது கச்சபேசுவரர் கோயில் உற்சவர் சபையில் மகாமண்டபத்தின் வடக்குப் பகுதியில உள்ளது.

### யோக சித்தீச்சரம்

இது முன்னுள்ள மண்டபத்தினுள் தெற்குப்பகுதியில் சின்னஞ்சிறு கோயிலாக உள்ளது. எதிரில் அழகிய நந்திதேவர் உள்ளார்.

### ஞான சித்தீச்சரம்

கச்சபேசுவரர் கோயிலின் நடராசர் மண்டபத்தில் நடராசரின் இடப்பக்கத்தில் தெற்கு நோக்கி அமைந்து குருவாக விளங்கும் ஞானலிங்கமாகும்.

### வேத சித்தீச்சரம்

இது முன் சொன்ன நடராசருக்கு வலப்புறத்தில் அமைந்துள்ள சந்நிதியில் எழுந்தருளியுள்ள சிவலிங்கமாகும். நான்கு வேதங்களையும் கொண்டிருக்கும் நாற்புறமும் முகம் கொண்ட சதுர்முகலிங்கம். இதுகாஞ்சியிலுள்ள ஒரே சதுர்முகலிங்கம் என்னும் சிறப்புடையது.

### யுக சித்தீச்சரம்

இதுகாலம் நமக்கு கட்டுபட்டு எந்நாளும் எந்த யுகத்திலும் இளமை மாறாது இருக்கும் நன்மையைத் தரவல்ல சிவலிங்கம். கச்சபேசுவரர் கோயில் மேற்குப் பிராகாரத்தில் தலமரமாகிய பலாமரத்தின் தெற்கில் கிழக்கு நோக்கிய சந்நிதியில் அமைந்துள்ள சிவலிங்கமாகும்.

(தர்ம, அர்த்த, காம, மோட்ச சித்தீச்சரச்கள்) அறம், பொருள், இன்பம் வீடு தரவலல சிவலிங்கம்.

இவை நான்கும் முறையே இஷ்டசித்தீச்சித்தீரத்தின் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு ஆகிய கரைகளில் இருந்தன. இவற்றில் சில இப்போது இல்லை என்பர். இவை யாவும் கச்சபேசுவரத்தின் துணைச் சந்நிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேற்படி கச்சபேசுவரர் கோயிலால் நிர்வாகமும் பூசையும் செய்யப்பட்டுவருகின்றன.

காஞ்சிபுரம்

## சிதம்பர விநாயகர் கோயில்

இக்கோயிலின் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லும் வழியில் வேகவதி பாலத்திற்குச் சற்று வடக்கில் வடக்குநோக்கியவாறுசாலையோரம் 5 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

பஞ்சபூத தலங்களுள் ஒன்றாக விளங்குவது சிதம்பரம். சிதம்பரத்தின் சிதாகாசத்தின் நினைவாக இங்கு விநாயகர் எழுந்தருளியுள்ளார் என்பர். சிதம்பரம் என்பவரால் கட்டபட்டதால் இவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று என்பாரும் உளர்.

இது கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டதாகும். கருவறையில் விநாயகர் எழுந்தருளியுள்ளார். விநாயகர், முருகன், வள்ளி தெய்வயானை ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன.

கருவறைமீது சுதைச்சிற்பங்களுடன் ஒற்றைக் கலசம் கொண்ட ஒருநிலை விமானம் அமைந்துள்ளது. கோபுரம் தாங்கிகள், விநாயகர், முருகன், இடபங்கள் ஆகியோர் சுதைச்சிற்பங்கள் அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. வடமேற்கில் அமைந்துள்ள மழைத்தெய்வமான யோகினியின் அழகிய சுதைவடிவம அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப்பூசை செய்துவருகின்றார். அனைத்துச் சைவ விழாக்களும் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. பரம்பரை அறங்காவலரால் நிருவாகம் செய்யப்படுகின்றது. கோயில் வண்ணம் தீட்டப்பட்டுப் புதுப்பொலிவுடன் விளங்கின்றது.

காஞ்சிபுரம்

## சீதேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் சர்வதீர்த்தக் கரையின் தெற்கில் கிழக்கு நோக்கியவாறு 10 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கோயிற்களஞ்சியம்

ஏகாம்பரநாதர் கோயிலுக்கு முன்புறம் இராமபிரான் சிவலிங்கம் அமைத்து வழிபட்டதன் பின்னர்க் காஞ்சிபுரத்தில் சீதை தானும் ஒரு சிவலிங்கத்தை நிறுவி வழிபட எண்ணிச் சர்வ தீர்த்தக்கரையின் தென்பகுதியில் வழிபட்டாள்.

இக்கோயிலின் வடகிழக்கில் நாககிருட்டிணன் திருவுருவம் உள்ளது. கிழக்கில் நந்திதேவர் திருவுருவமும் அதன் பின்புறம் பலிபீடமும் உள்ளன. முன்மண்டபத்தில் வலப்புறம் விநாயகரும் இடப்புறம்சுப்பிரமணியர் வள்ளி தெய்வயானை ஆகியோரும் உள்ளனர். கருவறையிலுள்ள இலிங்கம் தாமரை வடிவில் கொண்ட ஆவுடையாரை கொண்டதாகும்.

இக்கோயில் கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டதாகும். கருவறைமீது ஒருதள விமானம் அமைந்துள்ளது. உள்மண்டபத்தில் சீதை சிவலிங்கத்தை வழிபடும் புடைப்புச் சிற்பம் அமைந்துள்ளது. கருவறையின் புறக்கோட்டங்களில்முறையே விநாயகர், தென்முகக் கடவுள், திருமால், பிரமதேவன் ஆகியோர் உள்ளன. வடக்கில் சண்டேசுவரர் எழுந்தருளியுள்ளார்.

ஒருகாலப் பூசை குருக்கள் மரபினரால் செய்யப்பட்டுவருகின்றது. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த இராஜம் செட்டியார் மரபினரின் பரம்பரைக் கோயிலாக இது செயல்பட்டு வருகின்றது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 800

காஞ்சிபுரம்

# சுரகரேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் சந்நிதித் தெருவில் மேற்குச் சிறகில் கிழக்கு நோக்கியவாறு 2 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

சூரபத்மன் தொல்லை பொறுக்க மாட்டாமல் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் தம் ஐந்து முகங்களோடு அதோமுகத்தையும் சேர்த்து ஆறு முகங்களிலிருந்தும் நெற்றிக்கண்ணிடத்திலிருந்தும் நெருப்புப் பொறிகளைத்தோற்றுவித்தார். அவ்வகையில் முருகப்பெருமான் தோன்றினார்.

அவ்வாறு தீப்பிழம்பு தோன்றியபிறகு அதன்வெப்பத்தைத் தாங்கமாட்டாது தேவர்கள் தங்கள் உடல்களிலும் வெப்பநோய் தோன்றியதை உணர்ந்தார்கள். அது

நீங்கும் பொருட்டுத் தேவர்கள் நிறுவி வழிபட்ட தலம் இதுவாகும். தேவர்கள் உடல் வெப்ப நோய் ஆகிய ஜுரத்தை உறரம் (அழித்தலால்) செய்ததால் இப்பெயர் இப் பெருமானுக்கு அமைந்தது.

இக்கோயிலின் கிழக்கு வாயிலில்மீது மூன்று நிலை இராசகோபுரம் கடந்து கோயிலுள் செல்லலாம.இங்கு மகாமண்டபத்தில் முன்புறம் அழகிய வேலைப்பாடுகள் உள்ளன. மண்டபத்தில் நந்திதேவர் எழுந்தருளியுள்ளார். உள்மண்டபத்தில் குபேர னுக்கு பெரிய சிலை உள்ளது. இச்சிலையின் மகுடத்தில் கஜலட்சுமியின் உருவம அமைந்துள்ளது. இதுபோன்று குபேரன் வடிவம் எங்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது.

அடுத்து கருவறையில் சிவலிங்கவடிவில்எழுந்தருளியுள்ளஜுரஉறரேசுவரை வணங்கலாம். சிவலிங்கத்தின் பின்புறம் இந்திரன் நின்றவாறு பூசை செய்யும் சிற்பமுள்ளது.

இக்கோயிலின் கட்டடக்கலை புதுமைமிக்கதாம். தமிழகத்தில் வேறெங்கும் இத்தகைய அமைப்பைக்கொண்ட கருவறை இல்லை. இதில் நீள்சதுரமான உள் மேடையும் அதன்மீது நீள்வட்டமான (முட்டை வடிவம) அமைப்பில் கருவறை, மேல்பகுதி விமானமும், அமைந்துள்ளன. அடிப்பகுதியும் கருவறைப்பகுதியும் கருங்கல்லாலும் மேலுள்ள விமானம் செங்கல்லாலும அமைக்கப்பட்டுள்ளது. உச்சி யில் மூன்று கலசங்கள் உள்ளன.

கருவறையில் நன்கு காற்றும் வெளிச்சமும் வரும வகையில் மூன்று புறங்களி லும் சன்னல்கள் அமைந்துள்ளன. இவ்வாறு சன்னல் அமைக்கும் வழக்கமும் பிற கோயில்களில் இல்லை.

இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசை செய்து வருகிறார். இங்கு சன்னல் கள் அமைந்துள்ளன.

இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப்பூசை செய்துவருகிறார். இங்குப் பெருவிழா கள் நடைபெறுவதில்லை. கோயிலின் நிருவாகம் இங்குள்ள தெருவினரால் செய்யப் படுகிறது,

கோயிலின் கட்டடங்களும் அமைப்பும் இந்தியத் தொலபொருள் பாதுகாப்புத் துறையினரால் சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறன.

காஞ்சிபுரம்

## செல்வ விநாயகர் & சுப்பிரமணியசுவாமி கோயில்

இக்கோயில் பெரிய காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டை ஏகாம்பரர் தெருவில் கிழக்கு நோக்கியவாறு 1 ஏக்கர் நிலப்பரப்பில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இங்குக் கருவறையில் விநாயகர் எழுந்தருளியுள்ளார். எதிரிலுள்ள மண்டபத்தில் பலிபீடமும், பெருச்சாளி திருவுருவமும் உள்ளன. கருவறையின் இடப்புறம் அதற்கிணையாக மற்றொரு சந்நிதி உள்ளது. இதில் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை ஆகிய தேவியருடன் எழுந்தருளியுள்ளார். எதிரிலுள்ள மண்டபத்தில் மயில் வாகனமும் பலிபீடமும் உள்ளன. இரண்டிற்கும் பொதுவான அகன்ற மகா முகமண்டபமும் மேற்கூரையுடன் கொண்ட சுற்றுப்பிராகாரமும் உள்ளன. கிழக்குப் பிராகார மையத்தில் மேற்கு நோக்கியவாறு நால்வர், சேக்கிழார் ஆகியோர் எழுந்தருளியுள்ள சந்நிதி இருக்கின்றன. உலாத்திருமேனிகளாக விநாயகர், சண்டேசுவரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சிவன், பார்வதி ஆகிய மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர்.

கருவறைமீதும் முருகன் சந்நிதி மீதும் அழகிய விமானங்கள் அமைந்துள்ளன. கருவறை, மண்டபம் ஆகியவற்றின் சுவர்கள் தரைகள் ஆகியவற்றில் வண்ணக்கற்கள் பதித்துக் கோயில் முழுவதும் வண்ணம் தீட்டப்பட்டதால் கோயில் பொலிவுடன் விளங்குகின்றது. இந்தக் குருக்கள் ஒருவர் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார். விநாயகர் சதுர்த்தி கிருத்திகைகள், சஷ்டி முதலிய அனைத்துச் சைவ விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இக்கோயில் தொண்டை மண்டல ஆதின சைவ வேளாளர் இனத்திற்கு உரியதாக விளங்கி வருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 750

காஞ்சிபுரம்

## செவ்வந்தீசுவரர் கோயில்

இது காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்தின் வடக்கில் நெல் அறவை செய்யும் இடத்தின் உள்ளே ஒரு செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

அந்தி நேரத்தில் மலரும் செந்நிறப்பூ போன்ற மேனி உடையவர் இவர்.

இக்கோயில் கருவறை, உள்மண்டபம் மட்டுமேகொண்டதாகும். கருவறையில் பெரிய சிவலிங்க வடிவில் செவ்வந்தீசுவரர் எழுந்தருளியுள்ளார். முன் முற்றத்தில் பலிபீடமும் நந்திதேவர் சந்நிதியும் உள்ளன. கருவறைமீது ஒற்றைக் கலசம் கொண்ட உருண்டையான விமானம் உள்ளது.

இங்குக் குருக்கள் ஒருகாலப்பூசை செய்துவருகின்றார். தனியார் நிர்வாகத்தின் கீழ்ச் செயல்பட்டு வருகின்றது.

காஞ்சிபுரம்

# சோழீசுவரர் கோயில்

**(அஷ்டவயிரவர் கோயில்)**

இக்கோயில் பிள்ளையார் பாளையம் சோழீசர் கோயில் தெருவில் மேற்குக் கோடியில் கிழக்கு நோக்கியவாறு 20 சென்ட் பரப்பில் அமைந்துள்ளது.

மேருமலைச் சிகரத்தின் தவம்செய்த முனிவர் சிலர் ஐந்து முகங்களோடு விளங்கிய பிரமதேவர் முன் தோன்றினார். பிரமதேவரை நோக்கி முனிவர்கள் ''இவ்வுலகம் யாரை முதல்வராகக் கொண்டுள்ளது. இது எவரிடத்துத் தோன்றிற்று நின்றொடுக்கி உயிர் நீக்கி அருள்புரிவர் யார்'' என வினவினார்கள். பிரமதேவர் இவ்வினாக்களுக்கு உரிய முதற்பொருள் தாமே என்றார். அப்போது வேதங்கள் தோன்றி முதற்கடவுள் சிவபெருமானே என்றன. திருமால் தாமே தலைவர் என்றார்.

அப்போது சூரிய மண்டலத்திலிருந்து வயிரவர் எழுந்தருளினார். திருமால் ஓடிவிட்டார். பிரமதேவர் ''என் மகனே வருக'' என்றனர். அப்போது வயிரவர் பிரமதேவரின் ஐந்தாம் தலையைத் தம் நகத்தால் தொட்டார். பிரமதேவர் பயங்கி விழுந்து எழுந்து, ''எமது பிழையைப் பொறுத்தருள்க'' என்று சென்றுவிட்டார். இவ்வாறு பிரமதேவர் தம் செருக்கைப் போக்கி (இரத்தப் பலியால்) வயிரவர் காஞ்சியை அணுகித் தம் பெயரால் சிவலிங்கம் அமைத்துச்சிவபெருமானையும் உமையம்மையையும் வழிபட்டார். இவர் வழிபட்ட இடம் இத்தலமாகும்.

கிழக்கு நோக்கிய நுழைவாயிலின் இருமருங்கும் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. உள்ளே நந்திதேவர் திருவுருவம், பலிபீடம் ஆகியன உள்ளன. பலிபீடத்தின் வடக்கில் மேற்கு நோக்கிய சிவலிங்கத்தின் சந்நிதியும் தெற்குப் பகுதியில் மேற்கு நோக்கியவாறு மற்றொரு சிவலிங்கத்தின் சந்நிதியுமுள்ளன. தெற்குப் பிராகாரத்தில் சிவலிங்கங்களின் இரு சந்நிதிகள் வடக்கு

நோக்கியும் கிழக்கு நோக்கியும் உள்ளன. வடக்குப் பிராகாரத்தில் சிவலிங்கங்களின் இரு சந்நிதிகள் உள்ளன. நடுவில் சோழீசர் சிவலிங்க வடிவிலுள்ளார். வடமேற்கு பகுதியில் ஒரு வளைவுக்குள் துர்க்கையம்மன் என்ற பெயரில் ஜேஷ்டாதேவி சிலையுள்ளது. இங்குள்ள சிவலிங்கங்கள் முறையே அஜிதாங்க வயிரவர், காலவயிரவர், குருநப வயிரவர், அகோர வயிரவர் முதலிய எண்மருக்கும் அமைக்கப்பட்ட கோயில்கள் உள்ளன. வயிரவரைத் தலைமையாளராகக் கொண்ட சைவத்தைச் சார்ந்தவர் கோயிலாக இது விளங்குகிறது. இப்போது காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் வைக்கப்பட்டுள்ள வயிரவ மூர்த்தியின் பெரிய செப்புத் திருமேனி இக்கோயிலுக்குரியதென்பர். இவரே காஞ்சிபுரத்தில சேத்திரபாலகர் ஆவார்.

இக்கோயிலில் ஒருவேளைப் பூசை நிகழ்கிறது. தெருவினர் நிருவாகத்தில் இக் கோயில் இயங்குகிறது. அண்மையில் திருப்பணி நடைபெற்ற கோயில் இதுவாகும்.

காஞ்சிபுரம்

# தக்கீசுவரர் கோயில்

காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்தில் கச்சியம்மன் தெருவில் மேற்கு நோக்கியவாறு உள்ளடங்கி 20 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

தக்கன் தம்மை அழைக்காது புரிந்த வேள்வியைச் சிவபெருமான் அகோர வீர பத்திரரைக் கொண்டு அழித்தார். தக்கன் பின்னர்த் தன் தவற்றுக்கு வருந்திக் காஞ்சிக்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபட்ட கோயில் இதுவாகும். கோயில் சற்றுப்பள்ளமான இடத்தில் அமைந்துள்ளது. கிழக்கு வாயிலின் வழியாக சிலபடிகள் இறங்கி இக்கோயில் முற்றத்தை அடையலாம். இதில் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் அழகுற அமைந்துள்ளன. வலமாக வரும்போது தென்மேற்கு முனையில் விநாயகர் சந்நிதியும் வடமேற்கில் வள்ளி தெய்வயானையுடன் முருகனின்சந்நிதியும் காணலாம். இங்குள்ள முருகன் தண்டாயுதம் ஏந்திபுள்ளார். வடகிழக்கு முனையில் நவக்கோள்கள் சந்நிதியும் வடக்குச் சுவரையொட்டித் தெற்கு நோக்கிய மாடத்தில் வயிரவர் திருவுருவமும் அமைந்துள்ளன. வடக்கில் சிறு கிணறு உள்ளது. இது திருமஞ்சனத் தீர்த்தமாக உள்ளது. மகாமண்டபத்தில் அறுபத்து மூவர்களின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

கருவறைப்புறக்கோட்டங்களில் தெற்குக்கோட்டத்தில்மட்டும் தட்சிணாமூர்த்தி உள்ளார். இக்கோயில் சோழர்க்காலக் கட்டடமாகும். கருவறைமீது ஒருதள விமானம் அமைந்துள்ளது. இக்கோயிலில் நடராசர், சிவகாமி, விநாயகர், முருகன், வள்ளி,

தெய்வயானை ஆகியோர் உலாத்திருமேனிகள் உள்ளன. இங்கு ஒருகாலப் பூசை குருக்களால் நடத்தம்படுகின்றது. சித்திரைப் புத்தாண்டு நாள், ஆடிமாதம் அம்மன் விழாக்கள் விநாயக சதுர்த்தி, ஆயுதபூசை, தீபாவளி, அன்னாபிடேகம், சிவராத்திரி, பங்குனி உத்திரம், திருவாதிரை ஆகிய நாள்களில் சிறப்பு வழிபாடும் திருஉலாக் களும் நடைபெறுகின்றன.

இக்கோயிலை இது அமைந்துள்ள தெருவோர்களே நிர்வாகம் செய்து வருகின் றனர். இக்கோயில் இறைவன்மீது பதிற்றுப் பத்தாதியை ஒரு புலவர் இயற்றி யுள்ளார்.

காஞ்சிபுரம்

# தவளேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் சர்வதீர்த்தத்தின் வடக்குக் கரையில் கிழக்கு நோக்கிய வாறு 15 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இங்குப் புராணத்தின்படி சந்திரன் சிவலிங்கம் நிறுவி வழிபட்டதால் இப்பெயர் பெற்றதென்பர்.

தவளம் என்பதற்கு முத்து என்பது பெயர். முத்தீசுவரர் எனும் பெயரில் பல தலங்கள் இங்கிருப்பதால் பிரிந்துக்காட்ட தவளேசுவரர் என இக்கோயில் அழைக்கப் பட்டதென்பர். தவளை வடிவமான மாண்டூக முனிவர் இங்குப் பூசை செய்ததால் இப்பெயர் அமைந்தது என்பாருமுளர். முதன்மை வாயில் தெற்கு நோக்கியுள்ளது. இதன் வழியாக மகாமண்டபத்தை அடையலாம். இதனுள் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் அமைந்துள்ளன. உள்மண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, சூரியன், சண்டேசுவரர், நாகேசுவரர் ஆகியோர் திருவுருவங் கள் உள்ளன. வலமாக வரும்போது வெளியே சூரியன், வயிரவர், சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதிகள் காண்கிறோம்.

கருவறை, மகாமண்டபம், சிறு சுற்றுப் பிராகாரம் ஆகியவற்றைக் கொண்ட இக்கோயில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கருவறைமீது மூன்றடுக்கு விமானரு ஒற்றைக் கலசத்துடன் உள்ளது. முன்னாளில் நகரசபை உறுப்பினராக இருந்த ஒருவர் குடும்பத்தினரின் நிர்வாகத்தின்கீழ்ச் செயல்படுத்தப்படுகின்றது. இங்கு ஒரு காலப்பூசை செய்யப்படுகின்றது. திருவாதிரை, சிவராத்திரி மற்றச் சைவ விழாக் களும் நன்முறையில் சிறப்பு வழிபாட்டுடன் கொண்டாடப்படுகின்றன.

இங்குக் குருக்கள் ஒருகாலப் பூசை நடத்தி வருகின்றார்.

காஞ்சிபுரம்

# தான்தோன்றீசர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்து ஏகாம்பரநாதர் கோயிலிலிருந்து தெற்கே இரண்டு பலலாங்கு தூரத்தில் ஏகாம்பரநாதர் கோயில் சந்நிதித் தெருவில் 375 சதுர அடி நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

தம்மை உரிய முறையில்வழிபட்டு எல்லாஉயிர்களும்முக்தியடைய வேண்டும் என்பதற்காக இங்குச் சிவபெருமான் தாமே வெளிப்பட்டு அருளிய காரணமாக அவருக்குத் 'தான்தோன்றீசர் பெருமாள்' என்னும் பெயர் அமைவதாயிற்று. வசிஷ்ட முனிவரின் தங்கையை மெய் அறவினரான வியாக்கிரபரதர் மணந்து உபமன்னியர் என்னும் மைந்தனைப் பெற்றெடுத்தார். வசிஷ்டர் தவச்சாலையில் உபமன்னியர் தங்கியிருந்த காலத்தில் அவருக்குக் காமதேனு தமது இனிய பாலை அளித்து வந்தது. பின்னர் உபமன்னிய முனிவர் தம் பெற்றோர்களின் தவச்சாலைக்குச் செல்ல நேர்ந்த போது காமதேனுவின் பாலைப் பருக அவருக்கு வாய்ப்பு கிட்டவில்லை. அதனால் உபமன்னியர் மனம்உடைந்தார். அதனை உணர்ந்து அவர் தாயார் உபமன்னியரை பார்த்து "முக்கண் மூர்த்தியாகிய சுயம்பு இலிங்கத்தைப் பூசனைச் செய்து உகந்த பால் பெறுவாயாக" என அறிவுறுத்தினார். 2. தம் தாய் தந்த அறிவுரையை தலைமேற்கொண்டு உபமன்னியர் காஞ்சி மாநகரை அடைந்து மூவுலகம் புகழும் தான் தோன்றீச்சர முதல்வனை நோக்கி அரிய தவம் புரிந்தார். அத்தவத்திற்கு இறங்கிய சிவபெருமான் இந்திரன் வடிவில் காட்சி அருளினார். இந்திர வடிவிலான சிவபெருமான் இந்திரன் வடிவில் காட்சி அருளினார். இந்திர வடிவிலான அக்காட்சியை காண விரும்பாத உபமன்னிய முனிவர் உயிர் விடத்துணிந்தார். அப்போது சிவபெருமான் தமது திருவுருவக் காட்சியில் உபமன்னிய முனிவரை ஆட்கொண்டார். 3. அப்போது சிவபெருமான் உபமன்னிய முனிவருக்கு மெய்யறிவையும், மூப்பு அடையாத இளமையையும், இறவாத இயல்பினையும் அருளினார். அச்சமயத்தில் உபமன்னியர் சிவபெருமானிடத்தில் கோரிய வரங்கள், சிவபெருமான் திருவடியில் நிலைபெற்று இருக்கவேண்டும் என்பதும், தாம் பூசித்த சிவலிங்கத்தில எந்நாளிலும் என்றும் நீங்காத அருளைச் சிவபெருமான் வெளிப்படுத்தி வீற்றிருந்து, அறிவு கொண்டு இங்கு அணுகுவோர்யாவருக்கும் பாவத்தைக்கெடுத்து முக்தியை உதவுதல் வேண்டும் என்பனவாகும். 4. இவ்வாறு உபமன்னியர் கோரிய வரங்களைச் சிவபெருமான் திருவருள் புரிந்து தம் தேவியோடும் சிவலிங்கத்தில் மறைந்தருளினார். அந்நாள் முதல் உபமன்னிய முனிவர் அறிஞர் யாவருக்கும் பேரருள் நல்கும் ஆசிரியராகி விடையேறும் சிவபெருமானது சிவநெறியை விளக்கி வீற்றிருந்து வந்தார். 5. துளசி மாலையணிந்த திருமால் தாம் கண்ணபிரானைத் தோன்றிய

காலத்தில் இவ்விடத்தை அடைந்து, யாவரும் போற்றும் இயல்பினைக் கொண்ட உபமன்னியிடத்து சிவதீட்சை பெற்று நற்பேறு பெற்றார். 6. இத்தகைய சிறப்பு உடைய தலம் இதுவாததால் இதற்கு தான்தோன்றீசம் எனவும், உபமன்னிய முனிவர் தலம் எனவும் போற்றப்படுகிறது.

இத்திருக்கோயிலின் வெளிப்பிராகாரத்தின் தெற்கில் விநாயகப் பெருமான் சந்நிதியும் வடக்கில் வள்ளி, தெய்வயானையுடன் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன. இதன் அருகில் தீர்த்தக் கிணறு உள்ளது. இக்கோயில் சந்நிதிக்கு எதிரில் சிறிய நந்தியம் பெருமான் மண்டபம் உள்ளது.

இந்த கோயிலினுள் வருவதற்கு வசதியாகத் திறந்த வாயில் அமைக்கப்பட்டுள்ளது, இவ்வாயிலிலிருந்து கோயில் உட்பிராகாரம் வரையில் சிமெண்ட் தரையிட வசதியாக செப்பம் செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறையில் மூலவர் தான்தோன்றீசர் இலிங்க வடிவில் காட்சி அளிக்கிறார். சிவலிங்கத்திற்குப் பின்புறத்தில் சோமஸ்கந்தர் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு, வடபுறத்தில் நடராசர், சிவகாமி சுந்தரி சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. கோயில் கருவறையின் மீது மூன்று அடுக்குகளுடன் ஒரு கலசத்தோடு வட்ட வடிவிலான விமானம் அழகிய முறையில் காணப்படுகிறது. கோயிலுக்குத் தென்புறத்திலுள்ள ஒரு அறை இராம லிங்கசுவாமிகள் வழிபாட்டு மையமாகப் பயன்படுகிறது.

இக்கோயிலின் தென்புறத்துச் சுவரில் விநாயகர் சிற்பமும், தட்சிணாமூர்த்தி சிற்பமும் காணப்படுகின்றன. இன்னும் சில மணற்கல்லின் வடிலான சிற்பங்கள் தெற்குச் சுவரிலும், மேற்குச் சுவரிலும் எடுப்பாகக் காணப்படுகின்றன. இக்கோயில் கல்வெட்டுகள் எவையும் பொறிக்கப்படவில்லை. இக்கோயில் எக்காலத்தில் கட்டப் பட்டது என்பதும் தெரியவில்லை. ஆனால் கட்டடத்துத்தன்மையைப்பார்க்குமிடத்து பழங்காலத்தியதாகிய இக்கோயில் அண்மைக் காலத்தில் புதுப்பிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சிவஞானமுனிவர் காஞ்சியில் சில காலம் தங்கியிருந்த காலத்தில் காஞ்சிப்புராணம் இயற்றினார். அதில் இவர் இக்கோயிலைப் பற்றி ஒரு படலமே எழுதியிருப்பதால் இது அக்காலத்தில் சிறந்து விளங்கியிருக்க வேண்டும் எனக்கருதலாம்.

இக்கோயில் நித்தியகாலப் பூசை காலையிலும், மாலையிலும காமிக ஆகம முறையில் நடைபெறுகின்றன. இங்கு ஏகாம்பரநாதர் கோயிலைச் சார்ந்த குருக்களில் ஒருவர் பூசை செய்து வருகிறார். இவருக்கு ஊதியம் அளிக்கப்படுவதில்லை.

1. காஞ்சிப்புராணம் – சிவஞானமுனிவர் - தான்தோன்றீசப்படலம் – 2.
2. ,, ,, ,, – 6.
3. ,, ,, ,, – 10.
4. ,, ,, ,, – 11.
5. ,, ,, ,, – 12.
6. ,, ,, ,, – 13.

இக்கோயிலுக்குச் சேர்ந்த ஒரு வீட்டில் வாடகையின்றி குடியிருக்க இவருக்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் வழிபடுவோர் அளிக்கும் தொகையே இவருக்கு ஊதியமாக அமைகிறது. கார்த்திகை மாதத்தில் கந்தர் சட்டி விழா ஆறு நாள்களிலும் மேலும் அதே மாதத்தில் சோமவாரம் ஐந்து வாரங்களிலும் கொண்டாடப் பெறுகின்றன. சிவராத்திரியில் ஏகாம்பரநாதர் கோயிலிலிருந்து புறப்படும் நால்வர் திருஉலா இக்கோயிலுக்கும் வருவது நெடுங்காலமாக இருந்து வருகிறது. மார்கழி மாதத்தில் திருவாதிரை விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

உபமன்னிய முனிவர் பாலகனாக இருந்த காலத்தில் பாலுக்காக அழுதனை முன்னிட்டு சிவபெருமான் பாற்கடலையே அவருக்கு அளிந்தார் என்று சைவத் திருமுறைகள் ஆங்காங்கு தெரிவிக்கின்றன. குறிப்பாக செந்தனார் அருளிய திருப்பல்லாண்டிலும் 7. மாணிக்கவாசகர் அருளிய திருவுந்தியாரிலும் 8. சிறப்பாக இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டப்படுகிறது. மற்றும் கண்ணபிரானுக்கு உபமன்யுய முனிவர் சிவ திட்சை செய்தார் என்பது அழுத்தமான சைவ சமய மரபாகும். இத்தத்துவங்களை யெல்லாம் இத்திருக்கோயில் நினைவுபடுத்துகிறது.

இக்கோயில் ஆறு மாதத்திற்கு முன் வரையில் அறங்காவலர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளது. இக்கோயிலுக்குச் சொந்தமான இடம் நெல் ஆலை நியாய விலைக்கடை ஆகியவற்றிற்கான வாடகை ஆகியற்றிலிருந்தும் பிறவகையிலும் இக்கோயிலுக்கு ஏறத்தாழ4,000/-ரூபாய் ஆண்டுவருமானம் கிடைத்து வருகிறது. இக்கோயிலைப பற்றி விவரமாகக் கூறும் இலக்கியம் சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சிபுராணத்தில் உள்ள தான்தோன்றீசர் படலம் ஆகும்.

காஞ்சிபுரம்

# திரிகால ஞானேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திற்குள் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களின் நிகழ்ச்சிகளை ஒருங்கே அறிந்துகொள்ள முனிவர் சிலர் இங்குச் சிவலிங்கம் நிறுவி வழிபட்டார்கள். இதன் பயனாகத் திரிகால ஞானம் பெற்றார்கள். ஆதலினால், இக்கோயில் திரிகால ஞானேசுவரர் என்னும் பெயர் பெற்றது.

கருவறையுள் திரிகால ஞானேசுவரர் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். வாயிலின் இருமருங்கும் விநாயகரும், சுப்பிரமணியரும் உள்ளனர். கருவறை மீது சிறு வட்ட வடிவ விமானமுள்ளது. முன்புறம் சிமென்ட் தரை வேயப்பட்டுள்ளது. இருவேளைப் பூசை நடைபெறுகிறது. இது நன்முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பெரிய காஞ்சிபுரம்

# திருநின்ற விநாயகர் கோயில்

இக்கோயில் கிருஷ்ணன் தெருவில் வடக்குந் தொடர்ச்சியிலுள்ள ஐயனார் கோயிலுக்கு எதிரில் அமைந்துள்ளது. இதன் நிலப்பரப்பளவு இரண்டு சென்ட் ஆகும்.

இங்குக் கருவறை முன்மண்டபம் மட்டும் உள்ளது. காஞ்சிபுரத்தில் அனைத்து விநாயகரும் அமர்ந்தவாறிருக்க இவர் மட்டும் நின்றவாறு காட்சியளிக்கின்றார்.

இக்கோயிலில கருவறைமீது இருநிலை விமானம் ஒற்றைக் கலசத்துடன் விளங்குகின்றது. இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசை செய்கின்றார். விநாயகர் சதுர்த்தியன்று விழாக் கொண்டாடப்படுகின்றது திருமேற்றிறளிக் கோயில் நிர்வாகத்துடன் இது இணைந்து செயலாற்றப்படுகின்றது.

இதன் வடக்கில் திறந்த வெளிக்கோயிலாக சிறு கோயில் ஒன்று அமைந்துள்ளது. இதில் பின்னப்பட்ட ஐயனார், விநாயகர் முதலியோர் சிலைகள் உள்ளன.

# தழுவக் குழந்தை விநாயகர் கோயில்

இக்கோயில் பெரிய காஞ்சிபுரம் கிருஷ்ணன் தெருவில் கிழக்கு நோக்கியவாறு ஒரு சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் காமகட்சியம்பிகை தழுவப் பெற்றதால் குழைந்த மேனியை உடையரா்ய் விளங்குகின்றார். அவர் திருமகனாகிய விநாயகப் பெருமானுக்கும் இப்பெயர் வந்ததென்பர். தேவி தம்மகனாகிய கணபதியை அன்புடன்தழுவி

கொண்டதால் இவர் குழைந்த மேனியை உடையவராதலின் இப்பெயர் பெற்றார் என்பர். இக்கோயில் கருவறையை மட்டும் கொண்டதாகும். விநாயகர் அதனுள் வீற்றிருக்கின்றார். உயர்ந்த மேடைமீது கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குச் சிறு விமானம் அமைந்துள்ளது. இங்குப் பூசகர் ஒருவர் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார். விநாயகர் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கோயில் நன்கு செப்பனிடப்பட்டு வண்ணம் தீட்டப்பெற்றுப் பொலிவுடன் விளங்குகின்றது. இக்கோயில் தனியார் நிர்வாகத்தின்கீழ் இருந்து வருகின்றது.

காஞ்சிபுரம்

# திருநெறிக்காரைக்காடு

(திருக்காலிமேடு)

காஞ்சிபுரத்து வடகிழக்கில் வேப்பங்குளத்துக்கு அருகில் 12,000 சதுர அடிப் பரப்பில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

காரை வனத்தில் இக்கோயில் அமைந்துள்ளதால் இப்பெயர் இதற்கு வழங்குவதாயிற்று. இது திருக்காலீசுவரர் கோயில் என்னும் பெயரிலும் விளங்கி வருகிறது. கச்சிக்குச் செல்லும் வழியில் (நெறியில்) இருந்த காரைக்காட்டில் இப்பகுதி அமைந்திருந்ததால் கச்சி நெறிக்காரைக்காடு எனப் பெயர் பெற்றது. புராணங்களில் சத்திய விரதநாத சேந்திரமென்று வழங்கப்படும்.

அனைத்துச் செல்வங்களையும் பெற்றுச் சிவி என்னும் பெயரில் புகழோடு வாழ்ந்து வந்த இந்திரன் தனது அரசியலை வெறுத்துப் பொய்த்திறம் தவிர்த்து, மெய்யியனை உணர்ந்து முத்தியடைவதற்காக மெய்ப்பொருளைச் சிந்தித்து வழிபாடாற்றச் சிறந்ததொரு தலத்தைக் குறிப்பிடுமாறு தன் தேவகுருவிடம் வேண்டினான். இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட தேவகுரு இந்திரனை நோக்கி, "காஞ்சி மாநகரில் இடம் விரிந்த கிழக்கெல்லையில் சத்தியயேசுவரர் திருக்கோயிலும், அதற்கு மேற்குப்புறத்தில் சத்திய விரத தீர்த்தமும் உள்ளன. தனக்கு இருந்துவந்த இழிவு நீங்கிடப் புதன் இங்கு போந்து இத்தீர்த்தத்தில் மூழ்கிச் சத்தியவிரதீசுவரருக்கு உரியமுறையில் வழிபாடாற்றி வரும்போது அவ்வழிபாட்டுக்கு உகந்த சிவபெருமான் அவன்முன், வெள்ளிவிடை மேல் உமையம்மையருடன் எழுந்தருளினார். அப்போது புதன் தான் நவக்கிரகப் பதவியடைய வேண்டும் என்றும், புதன்கிழமையில் இங்கு வழிபாடாற்றுவோர்கள் நற்பேறு எய்தவேண்டும் என்றும் வேண்டினான். சிவபெருமானும் அவ்வாறே அருள்புரிந்தார். இந்நிலையில் நீயும் உனது முற்பிறப்பில், ஒரு

புதன்கிழமையில் இத்தலத்தில் வழிபாடாற்றினை. இதன் விளைவாக நீ இந்திரப் பதவியை எளிதில் எய்தினாய். இப்போது நீ கொண்ட நோக்கம் நிறைவேறும் பொருட்டு அத்தலத்துக்குச்சென்று வழிபாடுஆற்றுவாயாக'' என அறிவுறுத்தினார்.

இவ்வறிவுரைக்கேற்ப இந்திரன் தன் அரசாட்சியை அப்போதுதேதன் குருவிடத்து ஒப்புவித்துவிட்டுச் சத்திய விரதேசுவரர் திருத்தலத்தை விரைந்தடைந்து விதிப்படிப் பூசனை செய்து சத்திய விரதீசரிடம் சரண்புக்கான். இந்திரனின் மெய்யன்பிற்கு இரங்கிய சிவபெருமான் உமையம்மையோடும் சத்தியவிரதர் வடிவில் இந்திரனுக்குக் காட்சியளித்தார். இந்திரனும் அப்பெருமானைத் துதித்து, ''என்பிறவியற என்னை ஆட்கொள்ள வேண்டும். இத்தலமும் ஈங்குள்ள தீர்த்தமும் என் பெயரில் விளங்கவேண்டும்'' என வேண்டினான். சிவபெருமானும் அவ்வாறே அருளினார். இவ்வருள் துணை கொண்டு இந்திரன் இறைவன் கணநாதர்களின் தலைவனாக அமர்ந்து, அக்கணநாதர்களைப் போலக் காலந்தரத்தில் இறைவன் திருவடி கூடும் பேறு பெற்றான். அற்றை நாள்முதல் அத்திலம் ''இந்திரபுரம்'' எனவும், அங்குள்ள தீர்த்தம் ''இந்திர தீர்த்தம்'' என்னும் பெயரிலும் விளங்கி வருவனவாயின.

இக்கோயிலின் தலவிருட்சம் காரை மரமாகும். ஆனால் இம்மரம் தற்போது காணப்படவில்லை.

இக்கோயிலின் வடக்கு வெளிப்பிராகாரத்தின் மையத்தில் விநாயகர்திருவுருவம் உள்ளது. மேற்குக்கோபுர வாயிலின் வழியாகக் கிழக்கு வெளிப்பிராகாரத்தின் மையத்தில் விநாயகர் திருவுருவம் அளவில் சிறிய வடிவில் நிலைப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். உட்பிராகாரத்தில் வடக்கு வரிசையில் கருவறைச் சுவரில் கணபதியின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. உட்பிராகாரத்தின் வடக்கு வரிசையில் முதலில் அமைந்துள்ளது. சிவகாமியுடன் அமைந்துள்ள நடராசர் சந்நிதியாகும். அடுத்து நால்வர் திருவுருவங்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து இத்தலத்தில் வழிபாடாற்றிய திருஞானசம்பந்தர், புதன், இந்திரன் மற்றும் வைரவர் ஆகியோர்கள் திருவுருவங்கள் நிலைநாட்டப் பெற்றுள்ளன.

வடக்கு உட்பிராகாரத்தில் கோயில் கருவறைச் சுவரில் வடக்கு நோக்கியவண்ணம் துர்க்கை திருவுருவமும் பிரமதேவர் திருவுருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. வடகிழக்கு உட்பிராகார மூலையில் 2 மீட்டர் சதுரப்பரப்பில் மகாகணபதி கோயில் கட்டப்பட்டுள்ளது. அடுத்துக் கிழக்கு வரிசையில் மேற்கு நோக்கிய முறையில் வள்ளி, தெய்வயானையோடு சண்முகநாதர் கோயில் அமைந்துள்ளது. சண்முகநாதரை அடுத்துத்தனித்த முறையிலும் முதலிலும் இறுதியிலும் ஒவ்வொன்றாக இலிங்கங்கள் நிலைபெற்றிருக்கின்றன. இவ்விரு சிவலிங்கங்களுக்கும் இடையில் இருமருங்கிலும் நாகர் உருவங்கள் உள்ளன. இங்கு அணி செய்யும் முறையில் மற்றொரு சிவலிங்க மூர்த்தியும் காட்சியளிக்கிறார்.

மூன்று சிவலிங்கங்களுக்கு எதிரில் கருவறைச்சுவரில் இலிங்கோற்பவர் திருவுருவம அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு உட்பிரகாரத்தில் கிழக்குக் கோடியில் மேற்கு நோக்கியவாறு வள்ளி, தெய்வயானை, முருகன் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. தெற்கு உட்பிராகாரத்தின் கிழக்குக் கோடியில் பெரிய சிவலிங்கம் ஒன்றும் சிறிய சிவலிங்கம் ஒன்றுமாக இரண்டு சிவலிங்கங்கள் அமைந்திருக்கின்றன.

அடுத்து வடக்கு நோக்கிக் காணப்படுவது கஜலட்சுமி திருவுருவமாகும். அடுத்து சைவசமயத்திற்கு விளக்கவுரை இயற்றிய நீலகண்டசிவாச்சாரியார், தெற்கு கருவறைச் சுவரில் கிழக்குப்பகுதியில் தட்சிணாமூர்த்தி, சற்று மேற்கில் விநாயகர் ஆகியோரைக் காணலாம் நீலகண்ட சிவாச்சாரியாரை அடுத்துச் சந்திரசேகரர், விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய மூவர் திருவுருவங்கள் உள்ளன. பிராகாரத்தின் வடகோடியில் சோமாசுகந்தர் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. மேற்குப்பிராகாரத்தின் கருவறை நுழைவாயிலின் வலப்புறம் பாலசுப்பிரமணியர் திருவுருவம் காணலாம்.

உட்பிராகாரத்தின் வெளிவாயிலில் நவக்கிரகங்கள் சந்நிதி இருக்கின்றது. கருவறையில் மூலவர் சத்தியநாதேசுவரர் என்னும் பெயரிலும் காரை நாதர் என்னும் பெயரிலும் விளங்குகிறார். இச்சந்நிதியின் வலப்புறத்தில் விநாயகர் திருவுருவமும் இடப்புறத்தில் சூரியமூர்த்தி திருவுருவமும் காண்கிறோம்.

இக்கோயிலுக்குத் தெற்கில் 10மீட்டர்தூரத்தில் 150 மீட்டர் நீளமும் 102மீட்டர் அகலமும் கொண்ட பரப்பிலுள்ள தீர்த்தம் இந்திர தீர்த்தம் என்னும் பெயர் பெற்றிருந்தது. இப்போது படித்துறைகளின்றிச் சிதைவுற்ற நிலையில் உள்ளது.

இக்கோயிலுக்குரிய கோபுரம் ஒன்றேயாகும் இது 4 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்ட 40 மீட்டர் சதுரப்பரப்பில் தெற்கு நோக்கியவாறு மூன்று தளங்களையும் ஐந்து கலசங்களையும் கொண்டுள்ளது.

இக்கோயிலின் உட்பகுதியில் வலப்புறம் 9.75 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் கொண்டு 8 தூண்களைக் கொண்டுள்ள மண்டபம் இருக்கின்றது. இதைப் போன்ற ஒரு மண்டபம் இடப்புறத்தில் உள்ளது. கோயிலின் இரண்டாம் வாயிலின் கருவறைக்கு எதிரில் 3.55 மீட்டர் நீளமும் 2.55 மீட்டர் அகலமுள்ள வாகன மண்டபமுள்ளது.

இக்கோயிலில் கல்வெட்டுகள் பொறிக்கப்படவில்லை இக்கோயில் ஏழாம் நூற்றாண்டிலே அமைந்திருந்தது என்பதற்கு முதல் சான்று கி.பி ஏழாம் நூற்றாண்டில் திகழ்ந்த திருஞானசம்பந்தர் இக்கோயிலில் எழுந்தருளிய பெருமானைத் துதித்து பாடிய பாடல் பதிகமாகும். தாம் இத்தலத்திற்கு எழுந்தருளிய காலத்தில் இத்தலத்தில் நீர்வழிந்தோடும் மலர்ப் பொய்கைகள் இருந்தன எனத் திருஞானசப்பந்தர் பாடியருளிய் பதிகத்தின் முதல் இரண்டு பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். இன்றும் இத்தலத்தில் நீர்வளமுள்ள குளங்கள் ஆங்காங்குள்ளன.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வந்தபோது இங்கு அவர் தங்கியிருந்ததாகச் சொல்லப்படும் ஒருவீடு இடிந்த நிலையில் இக்கோயிலுக்குச் சற்று அடுத்துத்தெற்கில் காணப்படுகிறது,

கச்சி திருநெறிப்காட்டைப்போன்றே காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கில், பாடல் பெற்ற தலங்களாக ஏகாம்பரநாதர் கோயில், அனேகதங்காவதம், கச்சி மேற்றளி ஆகிய கோயில்கள் அமைந்துள்ளன. ஏகாம்பரநாதர் கோயிலில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் பொறித்த கல்வெட்டு ஒன்றிருந்தது. சோழர் காலத்துக் கல்வெட்டுகள் இக்கோயில்களில் இருக்கின்றன. இவ்வாறு கச்சி திருநெடுக்காரைக் காட்டிலும் இக்காலத்திய மன்னர்கள் கல்வெட்டுகள் இருந்திருக்க வேண்டும். ஆனால் இக் கோயிலின் கருவறைப் பகுதி தவிர மற்றப்பகுதிகள் அண்மைகாலத்தில் கட்டப்பட்டவை என்பது தெளிவாகத் தெரிகிறது. அவ்வாறு சட்டப்பட்டபோது முற்காலத்தில் கட்டப்பட்ட இக்கோயிலின் பகுதிகள் தகர்க்கப்பட்டிருக்கக் கூடும். இதை இக் கோயிலுக்கருகில இன்றும் கிடக்கும் அரிய சிற்பங்களைக் கொண்ட தூண்கள் மெய்ப்பிக்கின்றன.

இக்கோயிலின் காலை,மாலை ஆகிய இவ்விரு வேலைகளில் நடைபெறும் பூசைகள் தவிர மற்ற வகைகளில் பூசைகள் எவையும் நடைபெறுவதில்லை. ஆண்டுதோறும் திருவாதிரை நாளில் மட்டும் சிறப்புப் பூசை நடத்தப்படுகிறது. திருவிழாக்கள் எவையும் நடத்தப்பெறுவதில்லை.

இக்கோயில் பாடல் பெற்றது என்பதற்காகவெளியூர்கள் பலவற்றிலிருந்து மக்கள் அவ்வப்போது இங்கு வருகிறார்கள். இக்கோயிலைச் சுற்றியுள்ள நிலங்கள் பரவலாக இக்கோவிலுக்குரியனவாக இருந்தன என்பதும் நாளடைவில் அவை பலர் கைவசமாயின என்பதும் மரபு வழிச் செய்தியாகும். இறுதியில் இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் வெள்ளாளச் செட்டியார்கள் பொறுப்பில் வந்துசேர்ந்ததுள்ளது. இப்போதுஇவ்வினத்தவரைச் சேர்ந்த ஒருவரே இக்கோயிலை நிருவாகம் செய்கிறார். இக் கோயிலில் விழாக்கள் நடத்தப்படுமெனில் இங்குள்ள மக்கள் அவற்றில கலந்து கொள்ள இயலும். இங்குள்ள மக்கள் கோயில் மனை இடங்களுக்கு ஓரளவுமனை வாடகையை இக்கோயிலுக்குச் செலுத்தி அங்கு வீடுகள் கட்டிக்கொண்டுள்ளார்கள்.

இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் செட்டித்தெரு வெள்ளாளச் செட்டிமார்களுக்கு உரியது என்பது இக்கோயிலின் அச்சிட்ட வரவு செலவுக்கணக்கு தெரிவிக்கிறது. இந்த வரவு செலவுக் கணக்கு 1-7-84 முதல் 30-6-85 வரையிலுள்ள 138 -ஆம் பசலி ஆண்டுக்குரியதாகும். இக்கோயிலை இந்த இனத்தினர் மூவர் அண்மைக்காலம்வரை நிருவகித்து வந்தார்கள். தற்போது ஒருவரே இக்கோயிலின் பொறுப்பை ஏற்றுள்ளார். இக்கோயில் நிருவாகம் சரிவர இயங்குகிறதா என்பதை மட்டும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினர் கவனித்து வருகிறார்கள். இக்கோயிலார் வெளியிட்டுள்ள வரவு செலவுக் கணக்கு கீழ்க்காணும் சொத்துகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானங்களைக் குறிக்கிறது.

| | |
|---|---|
| கோயிலுக்குரிய தோட்டத்தின் குத்தகை ரூபாய் | 450-00 |
| கோயிலுக்குரிய நிலத்தின் குத்தகை ரூபாய் | 600-00 |
| கிடைக்கப் பெற்ற குத்தகை நெல் மதிப்பு ரூபாய் | 332-00 |
| | 1382-00 |

இக்கோயிலுக்குரிய ஆறு கடைகளிலிருந்து 6,600 ரூபாய் வாடகை கிடைத்துள்ளது. மேலும் ஒரு கடையைப் பொறுத்த வரையில் பழைய வாடகையாக 11,433-65 ரூபாய் கிடைத்துள்ளது. மனை இடங்களிலிருந்து 5,686-50 ரூபாய் வரவுபண்டைக் காலத்திலிருந்து மானியமாக "நஸ்திக்" என்னும் பெயரில் அரசு அளித்துவரும் தொகை ரூபாய் 1,370/- ரூபாய் இவ்வரவுகள் தவிர, வங்கிகளில் செலுத்தப்பட்ட தொகைக்கு வட்டித் தொகைகளும் இக்கோயிலுக்கு 1384-ஆம் ஆண்டுக்கு கிடைத்த மொத்த வருமானம் 29,398.25 உ ரூபாயாகும்.

இக்கோயிலுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடை வாடகைகள், மனை வாடகைகள் முதலியவற்றை வசூலிப்பதற்காகப் பணியாளர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். இப்பணியாளருக்கும், பூசை செய்வோர்களுக்குமான இந்த ஆண்டில் 4,895/- உ ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. பூசைகளுக்காக 2,760/- உ ரூபாயும் திருவிழாக்களுக்காக 2,996/- உ ரூபாயும் செலவு செய்யப்பட்டது என்பதாகவும் வரவு செலவுக் கணக்கு காட்டுகிறது மற்றச் செலவு இனங்கள் பழுதுபார்த்தல், நகராட்சி வரிகள் முதலிவையாகும்.

இந்த ஊரில் வாழும் மக்களின் குறை இக்கோயிலில் திருவிழாக்கள் நடத்தப் படுவதில்லை என்பதாகும். திருவாதிரை நாளில் சிறப்பு வழிபாடு தவிர வேறு திரு விழாக்கள் நடத்தப்படுவதில்லை என இக்கோயிலில் பூசை செய்யும் சிவாச்சாரியார் கூறுகிறார்.

கோயில் குடமுழுக்குத்திருப்பணி 1903-ஆம் ஆண்டில் தேவக்கோட்டை இராம மெய்யப்ப செட்டியாரால் செய்து முடிக்கப்பட்டது எனவும், இவர் பரம்பரையினர் பற்றி விவரம் தெரியவில்லை எனவும் இக்கோயில் சிவாச்சாரியார் கூறுகிறார்.

தற்போது இக்கோயிலுக்குப் பழுதுபார்த்தல் உடனடியாகத் தேவைப்படுகிறது, எனவும், எங்குமே மழை நீர் ஒழுக்கு ஏற்படுகிறது எனவும், கோயிலின் சுற்றுப் புறங்களில வீடுகள் உயர்ந்த நிலமட்டத்தில் அண்மையில் கட்டப்பட்டுள்ளதால் மழை நீர் தங்குதடையின்றிக் கோயிலினுள் நுழைகிறதென்றும், மழை காலத்தில் கோயிலினுள் சந்நிதியிலே ஒரு மீட்டர் உயரம் வரையில் தண்ணீர் தேங்குகிறது எனவும் சொல்லப்படுகிறது. இக்கோயிலின் மனையிடங்கள், அவற்றில் வீடுகள் கட்டியிருப்பவர்களுக்கே விற்பனை செய்துவிடுவதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட் டுள்ளது. இதன் வழியாகக் கனிசமான ஒரு தொகை இக்கோயிலுக்குக் கிடைக்கும் எனத் தோன்றுகிறது.

ஆதிதிராவிடர் மக்கள் குடியிருப்புக்காக இக்கோயிலின் பத்து ஏக்கர் நிலம் அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. நில எடுப்பு அதிகாரிகள் சென்ட் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் கொடுக்க முடிவு செய்துள்ளதை எதிர்த்துக் கோயிலார் சென்ட் ஒன்றுக்கு 259 ரூபாய் கோரி நீதிமன்றத்திடம் வழக்குத் தொடர்ந்துள்ளனர். இவ்வகையில் வரப்பெறும் தொகையைக் கொண்டு கோயிலுக்குத் தேவைப்படும் திருப்பணி செய்யக் கோயிலார் எண்ணியுள்ளார்கள்.

இக்கோயிலைப் போற்றும் இலக்கியங்கள்:

1. திருஞான சம்பந்தர் — இரண்டாம் திருமுறை — பதிகம்.
2. பெரிய்புராணம் — திருஞான சம்பந்தர் புராணம்.
3. காஞ்சிப்புராணம் — கச்சி திருநெறிக்காரைக்காட்டுப் படலம்.

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம். ரு 14,948.

காஞ்சிபுரம்

# திருமேற்றளீசர் கோயில்

காஞ்சிமாநகரில் இருப்புப்பாதைநிலையத்திலிருந்துசற்றேறக்குறைய 2 கிலோ மீட்டர்த் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரம் நகராட்சியின் 3-ஆவது பகுதி, 1633/3 எண் நகர நிலஅளவைப் புலத்தில் 14,387 சதுர அடிப்பரப்பிலுள்ள இம்முழுக் கோயிலைப் பொறுத்தவரையில் 6,430 சதுர அடிப்பரப்பில் ஓத உருகீசர் கோயிலும், எஞ்சியுள்ள 1,050 சதுர அடிப் பரப்பில் மேற்றளீசர் கோயிலும் அமைந்துள்ளன.

அண்மைக் காலத்திய திருப்பணியின்போது இத்திருக்கோயிலுக்கென வகுக்கப் பட்டிருந்த திருக்குளமும்நந்தவனமும் இக்கோயிலின் சுற்றுப்புறச்சுவருக்கு அப்பால் ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதைக் கண்டு கொள்ளலாம்.

தளி என்னும் சொல் கோயிலைக் குறிக்கிறது. இவ்வகையில் காஞ்சிமாநகருக்கு மேற்கே இத்தலம் இருந்தலின் மேற்றளி என்னும் பெயர் இதற்கு வழங்குவதாயிற்று. மேலும் மேன்மை பொருந்திய கோயில் இது எனவும் பொருள் கொள்ளலாம்.

முன்பொரு காலத்தில் திருமால், சிவசொரூபம் பெற விரும்பிச் செய்தற்கரிய தவம் இங்கு இயற்றினார். இவர் தவத்திற்கிரங்கிய சிவபெருமான் இடப ஊர்தியின்

மீது எழுந்தருளி, ''எம்மடியவர் தமியிற் சிறந்தொனே தவஞ்செய்து மெலிந்தனை விரும்பிய வரங்களைச்சொல்லுதி'' என்றருளிச்செய்து, தமக்குச் சிவசாரூபம் எய்திட அருள்புரியுமாறு திருமால் வேண்டினார். இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளும் முறையில் ''இருபத்தெட்டாம் கலியுகத்தில் சீர்காழிப்பதிக் கவுணியர், கோத்திரத் திருஞானசம்பந்தர் இத்தலத்துக்கெழுந்தருளியும் காலத்தில் எமது சாரூப வடிவினை உமக்கு வழங்குபவர். ஆதலால். அவர் வருமளவும் இத்தலத்தில் அமர்ந்து தவம் இயற்றுக'' என்று சிவபெருமான் அருளினார்.

இவ்வாறே திருமாலும் தம் பெயரில் ஒருதீர்த்தம் ஏற்படுத்தி அதில் நீராடி சிவபெருமான் வழிபட்டுக்கொண்டு வரும் நாளில் ஒருநாள் திருஞானசம்பந்தர் இத்தலத்தினை எய்தி இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது ஒரு பதிகம் பாடினார் இதற்குச் செவி சாய்த்த திருமால் தமமுடைய உடலும், உள்ளமும் உருகி விடும் முறையில் சிவசொரூபம் பெற்றார், இவ்வாறு இவர் சிவசொரூபம் பெற்ற சிவலிங்க வடிவமே ''ஓத உருகீசர்'' சந்நிதியாகும். திருமால் உடலும், உள்ளமும் உருகிவிட்ட நிலையில் இறுதியில் எஞ்சி நின்றவை அவருடைய திருவடிகளே ஆகும். அவை இன்றும் இச்சந்நிதியில் திகழ்வதை யாம் கண்ணாரக் காணலாம். இவ்வளவில் ஒத உருகீசர் சந்நிதியே முதன்மை பெற்றுள்ளது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்நாட்டில். திகழ்ந்த திருஞானசம்பந்தர் இத்தலத்திற்குத் தொண்டர்களுடன் எழுந்தருளிப் பேரன்போடு திருமேற்றளீசப் பெருமானை வழிபட்டார் எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.[1]

திருஞானசம்பந்தர் பாடியருளிய பதிகம் காரணமாகத் திருமால் சிவசொரூபம் அடைந்ததைச் சிவஞான முனிவர் தாமியற்றிய காஞ்சிப் புராணத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

திருக்கோயிலில் நுழைவாயிலுக்குத் தென்புறம் 10 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் கொண்டு தனிச்சந்நிதியாக விநாயகர் சந்நிதி ஒன்றுள்ளது. இதுபோன்றே நுழைவாயிலில் வடபுறத்திலுள்ள தனிச்சந்நிதியில் சுப்பிரமணிய சுவாமி வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருக்கிறார்.

நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் ஒதஉருகீசர் கோயிலில்வாயில் வரையிலும் நீண்டிருக்கும் திறந்தவெளி முற்றமும் இம்முற்றத்திற்கு வடக்கில், திருமேற்றளிநாதர் கோயிலும் இருப்பதைக் காணலாம் அம்மையார் திருப்பெயர்கள் திருமேற்றநாயகி காமாட்சியம்மை எம்பனவாம். கருவறையில் திருமேற்றளீசர் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். மேற்கு நோக்கிவாறு அமைந்திருக்கும் இச்சந்நிதியில் சுற்றுப்புறச் சுவர் கற்களால் கட்டப்பட்டுள்ளது. இச்சந்நிதியில் முன்பு நந்தி

1. பெரியபுராணம் — 1001.

தேவர் அமர்ந்த நிலையில் உள்ளார். இத்திருக்கோயிலில் முக மண்டபத்தில் வெளிப்புறச் சுவரில் தென்பகுதியில் பாலவிநாயகர் திருவுருவம் சுவருடன் இணைந்திருக்கிறது. கருவறையில் தெற்கு வெளிப்புறச் சுவருடன் இணைந்த நிலையில் தட்சிணாமூர்த்தியின் தனிச்சந்நிதியைக் காணலாம் மேற்றளீசர் சந்நிதியில்வடபுலத்தில் சண்டேசுவரர் சந்நிதி தெற்கு நோக்கிச் சிறிய அளவில் அமைந்திருக்கிறது. பழமையான ஒருதள விமானம் மேற்றளீசர் சந்நிதியில் மேல்பரப்பிற்கு அணிசெய்கிறது.

மேற்றளீசர் சந்நிதிக்குப்பின்புறம் வடகிழக்கு மூலையில் கோயிற் வெளிப்புற சுவருடன் இணைந்த நிலையில் நுழைவாயிலுடன் அமைந்திருக்கும்தனிசந்நிதியில் நவக்கிரகங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒதுஉருகீசர்கோயிலின் நுழைவாயிலுக்குப்தென் புறம் கிழக்கு நோககிய சந்நிதியாகப் பராசக்தி அம்மன்சந்நிதிஅமைக்கப்பட்டுள்ளது இதனுள்ளே பராசக்தியின் சிலை வடிவம் எழிலுடன்காட்சியளிப்பதைக் காணலாம். இதன் வடபுறச் சுவருடன இணைந்த சந்நிதியாக இருப்பது நால்வர் சந்நிதியாகும் இங்குச் சம்பந்தர்' அப்பர் சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோருடைய திருவுருவச் சிலைகள் வடக்கு நோக்கியுள்ளன.

ஓதஉருகீசர் கோயிலினுள் அமைந்திருக்கும் சந்நிதிகளும் சூரியமூர்த்தி சந்நிதியும் ஒன்றாகும். நால்வர் சந்நிதியைக் கடந்து வாயிலினுள் நுழைவோமெனில். வலப்புறம் மேற்கு நோக்கியவண்ணம் உள்ள சூரிய மூர்த்தி சந்நிதியைக் காணலாம். ஓதஉருகீசர் கோயிலின் தென்புறம் பிராகாரத்தில் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும தனிச்சந்நிதியில் செல்வி விநாயகர் எழுந்தருளியிருக்கிறார்

கிழக்குத் திசை நோக்கியவாறு ஓதஉருசீசர் கோயிலின் கருவறைக்கு வடமேற்கில் காசி விசுவநாதர் சந்நிதியின் தென்புறச் சுவருருக்கு சுற்றுசுவருடன் இணைந்தவாறு முருகன் சந்நிதி அமைந்துள்ளது, வள்ளி தெய்வயானையுடன் மயில் மீதமர்ந்தவாறு சுப்பிரம்ணியசுவாமி இங்கு வீற்றிருக்கிறார். சுப்பிரமணியர் சந்நிதியைவிட அளவில் சற்றுப் பெரிய சந்நிதியாகக் காசி விசுவநாதர் சந்நிதி ஓதஉருகீசர் கோயிலின் பிராகாரத்தின் வடமேற்குமூலையில் கிழக்கு நோக்கியவாறு அமைந்திருக்கும் சந்நிதியில் இலிங்கமூர்த்தியாகவுள்ள காசி விசுவநாதரைப் வழிபடலாம்.

வயிரவர் சந்நிதி, ஓதஉருகீசர் கோயிலுக்கு முன்னிலையில் திறந்தவெளி முற்றத்தில் வடகிழக்கு மூலையில், சுற்றி வலம் வருவோருக்கு உற்ற வகையில், தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

மூலவர் சந்நிதியில் இலிங்க மூர்த்தியாகக் காட்சி தருவது திருமாலின் சிவசொரூப வடிவமாகும், இக்கருவறை சதுர வடிவில் அமைந்துள்ளது. இக்கருவறையின் வெளிப்புறத்தில் தெற்கு, மேற்கு, வடகுப்புறச் சுவர்களில் தட்சிணாமூர்த்தி திருமால் பிரமதேவர் ஆகியோர்களின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. இவற்றில் தட்சிணாமூர்த்தி, தனிச் சந்நிதியாகவும், சிற்ப வேலை நுணக்கங்களுடன் சிலை

படிவலி நப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மூலவர் சந்நிதியின் முகமண்டபத்தின் வெளிப்புறத் தெற்குப்புறச் சுவரில் விநாயகர் திருவுருவமும், வடபுறச்சுவரில் சங்டேசர் சந்நிதி தவிர, துர்க்கையம்மன் சந்நிதியும் உள்ளது. கருவறைக்கு வெளிப்புரத்தில் முகமண்டபத்தினுள் கருவறை வாயிலின் வலப்புறச்சுவரில், துருவாசர், நாரதர் ஆகியோர்களின் உருவங்கள் மிகச் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

முகமண்டபத்துக்கு முன்புற நீண்டதொரு மண்டபத்தின் வடக்குப்புறம் உற்சவ மூர்த்திகள் உள்ளன. விழாக்காலங்களில் இம்மூர்த்திகள் திருவீதி உலா வருவார்கள்.

திருமேற்றளீசர் கோயிலிலிருந்து நேர் கிழக்கில் திருஞானசம்பந்தர் நின்ற கோலத்தில் வசீகர வனப்புடன் தோற்றமளிக்கிறார்.

திருமேற்றளீசர் கோயிலுக்கு வடபுறத்தில் 28 மீட்டர் நீளமும் 22 மீட்டர் அகலமும் கொண்டு 17 தீர்த்தபடிகட்டுகளுடன் காணப்படுவது விஷ்ணு தீர்த்தமாகும்.

இக்கோயிலைப்பொறுத்தவரையில் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள இராசகோபுரம் ஒன்றுதான் உள்ளது. இக்கோபுரத்தின் அடிப்பரப்பு 63 மீட்டராகும். இக்கோபுரம் 3 தளங்கள் கொண்டு ஏறத்தாழ 9 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சிகரத்தில் அமைந்திருக்கும் ஐந்து கலசங்களில் பெரும்பான்மையான பகுதிகளும் இன்னும் சீரான நிலமையில் உள்ளன. இக்கோபுரம் தவிர, திருமேற்றளி மூலவர் சந்நிதியின்மீது ஒருதளவிமானமும், ஓருஉருகீசர் சந்நிதிமீது இருதள விமானமும், பழைமையைப் பறைசாற்றுவனவாக உள்ளன.

இத்தலத்தின் பிராகாரம் திருமேற்றளீசர் கோயிலைச் சுற்றி சுமார் 15 மீட்டர் அகலத்திலும் ஓதஉருகீசர் கோயிலைச் சுற்றி தென்புறத்தில் 5 மீட்டர் அகலத்திலும், வடபுறத்தில் 7 மீட்டர் கலத்திலும் உள்ளது. மேலும் இக்கோயிலுக்கு வெளியே வெளிப்பிராகாரம் ஒன்று இருந்திருக்க வேண்டும். ஆனால் தற்போது அது காணப்படாததற்குக்காரணம் அண்மைக்காலத்தில் இக்கோயிலைச் சுற்றிலும் தோன்றியுள்ள மனைகளாகும். திருமேற்றளீசர் கோயிலைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் மூலவர் சந்நிதிக்குத்தென்புறத்தில் 1 மீட்டர் நீளம் விட்டமுள்ள கோயில்கிணறு ஒன்றுள்ளது தவிர, கோயிலின் சந்நிதிக்கு முன்பு நந்தி அமர்ந்த நிலையில் உள்ளார் ஓதஉருகீசர் சந்நிதியில் சுற்றுப்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், காசி விசுவநாதர்' சண்டிசுவரர், வயிரவர், சூரியமூர்த்தி ஆகியோர்களின் சந்நிதிகளும் அமைந்துள்ளன இவ்விரு தனித்தனிப் பிராகாரங்களும் திறந்த வெளிப்பிராகாரங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருக்கோயிலைச் சுற்றியும் விஷ்ணு தீர்த்தத்தைச் சுற்றிலும் நந்தவனம் ஒன்று இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஆனால் தற்போது இவை நல்ல

பராமரிக்கப்பில்லாத காரணமாகக் சீர்கெட்டுள்ளது. நந்தவனம் அமைந்திருந்த இடங்களில் புதிதாகமனைகள் கட்டப்பட்டுள்ளன என்றும்திருக்குளத்துக்குவடக்கே உள்ள பரந்த நிலப்பகுதி நந்தவனம் போன்றுள்ளது. இங்குச் சில மலர்ச்செடிகள் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. ஓதஉருகீசர் கோயிலின் பிராகாரத்தின் தென்கிழக்கு மூலையில், 15 மீட்டர் நீளமும 3 மீட்டர் அகலமும் கொண்ட மடைப்பள்ளி ஒன்று காணப்படுகிறது.

திருமேற்றளீசர் கோயிலுக்குத் தென்புறந்தில் பராசக்தியம்மன் சந்நிதிக்கு முன்புறத்தில் 15 மீட்டர் நீளமும 6 மீட்டர் அகலமும் கொண்டுள்ளசிமென்டுக்கூரை வேய்ப்பட்ட நிலையில் உள்ள மண்டபம் திருவிழாக் காலங்களின் சொற்பொழிவு நிகழ்த்தப் பயன்படுத்தப்படுகிறது.

இது தவிர, ஓதஉருகீசர் சந்நிதியில் முகமண்டபத்துக்கு முன்புறமுள்ள மண்டபம் உற்சவ மண்டபம் என வழங்குகிறது. 6 தூண்கள் கொண்டிருக்கும் இம்மண்டபத்தின் வடபுறம் இரும்பு வார்ப்பு வேலியினால் தடுக்கப் பெற்றுள்ளது. அதனுள்ளே உற்சவ மூர்த்திகள் இருக்கின்றார்கள். இம்மண்டபத்தின் நீளம்10மீட்டர், அகலம் 7 மீட்டர் ஆகும். இம்மண்டபத்தின் தென்புறச் சுவரில் 2 மீட்டர் நீளத்தில் வாயில் அமைக்கப்பட்டுள்ளது. அதுவே ஓதஉருகீசர் கோயிலினுள் புகுவதற்கான நுழை வாயிலாகப் பயன்படுகிறது.

இங்குள்ள சிற்பங்களில் மிகச் சிறப்பானவை உருகீசர் சிவலிங்கமும், அதன் முன் உள்ள திருமால் திருவடிகளாகும். திருமாலின் திருவடிகளைக் கொண்டு அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், அவர் சிவசொரூபமடைந்ததை இச்சிவ லிங்கத்தைக் கொண்டு உணர்ந்து கொள்வதற்கும் வடிக்கப்பட்ட இவ்வமைப்பு அருமையானதாகும். ''மும்மதிலும் கொண்ட திருமேற்றளியாக இக்கோயில் இருப்பினும்'' சூரியன் ஒளி இக்கோயிலினுள் திருத்தமாகப் பாயும் நிலையைச் சுந்தரர் ''எல்லினை விளங்க நின்றார் இலங்கு மேல் தளியனாரே'' எனக்குறிப்பிடுகிறார்.

திருமேற்றளிக் கோயிலின் உருகீசர் வெளிச்சுற்றுச் சுவரிலும்முகப்புச்சுவரிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நந்தி விக்கிரம வர்மன் (கி.பி. 775-826) காலத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்றில், திருமேற்றளிக் கோயிலுக்கு முத்தரையன் என்பவர் அறச்செயல்கள் புரிந்ததையும், கோயிலைச் சார்ந்த திருமடம் ஒன்று இருந்ததையும் குறிப்பிடுகின்றது.

சோழ மன்னர்களின் கீழ்ச்சேனைத் தலைவர்களாகப் பணியாற்றியப் பின்னர் தனித் தலைமையெய்தியவர்களுள ஒருவரான சகலபுவனச் சக்கரவர்த்தி இராஜ நாராயண மல்லிநாத சம்புவராயரின் (கி.பி. 1337) 16 ஆம் ஆட்சி ஆண்டில் ஒரு கல்வெட்டு இங்குப் பொறிக்கப்பட்டுள்ளது. இது எயிற் கோட்டத்துத் தேவதானம நந்தவன சுதர்விளாகம் என்னும் ஊரில் இருவேலி நிலத்தைத்திருமேற்றளி உடைய நாயனாருக்குக் கொடுந்ததைத் திருமேற்றளி உடைய நாயனாருக்குக் கொடுத்ததை

கூறுகிறது கி. பி. 1542 முதல் கி. பி. 1576 வரையிலும் அரசாண்ட விசயநகர மன்னர் சதாசிவராயர் ஆட்சியில் கி. பி. 1554 ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இறைவனின் திருப்பெயர் திருமேற்றளி உடைய நாயனார் என்பது குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டு தறி ஒன்றுக்கு ஐந்தரை பணத்தைச் செங்குந்தர்களிடமிருந்து வசூலிந்து இறைவனுக்கு மேலும் இக்கல்வெட்டு தறி ஒன்றுக்கு ஐந்தரை பணத்தைச் செங்குந்தர்களிடமிருந்து வசூலித்து இறைவனுக்கு நாள் வழிபாட்டுக்கும், விளக்கு எரிப்பதற்கும் பயன்படுத்திக் கொள்ள கொண்ட மலியராசையா என்பவர் கட்டளையிட்டதையும் குறிப்பிடுகிறது

திருமேற்றளி நிலை பெற்றுள்ள ஊராகிய பிள்ளையார்பாளையத்தில் தெருவிலுள்ள துண்டு கல்வெட்டுகள், திருவேகம்பன் தெரு என்னும் பெயர் காஞ்சிபுரத்துத் தெருக்களில் ஒன்றுக்குப் பெயர் வைக்கப்பட்டிருந்ததையும் எடுத்துக் கூறுவதன்றிச் சந்திரகிரியில் அப்பராச உடையார் என்னும் கவிஞர் ஒருவர் இருந்ததையும் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு பழுதுபார்த்தலுக்காக இரண்டு ஊர்களில் வரிகளை கொடுக்கப்பட்டதையும் கூறுகின்றது

குமரகோட்டத்தை சார்ந்த சிவாச்சாரியர்களுள் ஒருவர் இக்கோயிலில் நாள்தோறும் பூசை செய்து வருகிறார். காலை, மாலை என்னும் இருவேலைகளில் இப்பூசை நடந்து வருகிறது. ஆண்டுதோறும் அண்மைக்காலம் வரை நடைபெற்று வந்த பிரம்மோற்சவம் தற்போது நிதி பற்றாக்குறை காரணமாக நடத்தப்படுவதில்லை. என்றும் மாதக்கிருத்திகை விழா, ஆண்டுக் கந்தர் சட்டி விழா விநாயகர் சதுர்த்தி ஆகியவை ஒழுங்காக நடைபெறுகின்றன. திருக்கலியாண விழாவும் சூரசம்மார விழாவும் திருவாதிரைப் பெருவிழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

செங்குந்த மரபினர் பலர் இக்கோயிலில் தனிப்பட்ட முறையில் ஆராதனைகள் செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருஞானசம்பந்தர் திருநாள் பூசையில் திரளானமக்கள் பங்கேற்கிறார்கள். அந்நாளில் ஏழைஎளியவர்களுக்கு விருந்து அளிக்கப்படுவது சிறந்ததொரு நிகழ்ச்சியாகும். இக்கோயிலில் வழிபாடு ஆற்றிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி, ஆகிய மூவரும் திருநாவுக்கரசு நாயனார், சுந்தரர் ஆகியோர் அருளிய திருப்பதிகங்கள் கிடைந்தில இக்கோயிலில் அவர் வழிபட்டதாகச் சேக்கிழார் பெரிய புராணத்தில் குறித்துள்ளார் 3,

இந்நாட்டில் திருஞானசம்பந்தர் நினைவாக கட்டப்பட்ட கோயில்கள் அவர் அவதரித்த சீர்காழிப் பதியிலும், அதற்கு அடுத்ததாகவுள்ளது திருமேற்றளியிலு

---

3. தென்னிந்தியக் கல்வெட்டு 89/1921
4. ,, ,, —86, 87, 83, 89. 90, 91.
5. ,, [பிள்ளையார் பாளையம்] — 101-104
3. பெரியபுராணம்-திருநாவுக்கரசு நாயனார் புராணம் — 1001.

மாகும். திருஞானசம்பந்தருக்கு பிள்ளையார் என்னும் பெயர் உண்டு. அவர் இங்கு வந்து தங்கி வழிபாடு இயற்றித் திருமாலுக்குச் சிவபெருமான் சொரூபம் அளித்தது காரணமாக இவ்வூர் பிள்ளையார்பாளையம் என்னும் பெயர் பெற்றது, திருஞான சம்பந்தர் சைவ சமய ஆசிரியர்களுள் முதல்வர், இவர் தமிழ் மொழியில்கொண்டிருந்த பற்று காரணமாக இவருக்கு முத்தமிழ் விரகர் என்னும் பெயரும் வழங்குவதாயிற்று.

இத்திருக்கோயிலும், அங்குள்ள திருஞானசம்பந்தர் திருக்கோயிலும் இங்கு அமைந்துள்ள அரிய சூழ்நிலையில் சைவ சமயம் கற்றுணர்ந்த ஆன்றோர்கள் தமிழ் கற்றுணர்ந்த புலவர்கள் பலர் இங்கு இன்றும் உள்ளனர்.

இக்கோயில் செங்குந்த மரபினர் உரிமையின் கீழ் நிலை பெற்று வருகிறது. இவர்களால் வகுத்துக் கொடுக்கப்பட்ட திட்டத்தைஇந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஏற்றுக் கொண்டுள்ளார். அத்திட்டத்தை அனுசரித்து இக்கோயில் நிர்வாகம் செய்யப்படுகிறதா என்பதை அத்துறையினர் கவனித்து வருகிறார்கள். தற்போது அறங்காவலர் மூவர் அடங்கிய குழு இக்கோயிலின் பொறுப்பை ஏற்றுள்ளது.

இக்கோயில் 17 ஏக்கர் சாகுபடி நிலங்களில் உரிமை பெற்றுள்ளது. சில வீடுகளும், மனை இடங்களும் இக்கோயிலில் பிற சொத்துக்களாகும். இக்கோயிலில் ஆண்டு வருமானம் 7,500 ரூபாயாகும்.

இக்கோயிலுக்குரிய வாகனங்களின் மதிப்புடையது ஆறடி உயரத்தில் மரத்தால் செய்யப்பட்ட சூர வாகனமாகும்.

சின்ன காஞ்சிபுரம்

# திரௌபதையம்மன் கோயில்

இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலுக்குத் தெற்கே கோகுலம் தெருவில் கீழ்ச் சிறகில் வடக்கு நோக்கியவாறு 50 சென்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இக்கோயிலின் மேற்கு வாயில் வழியாக உட்சென்று பெரிய முற்றத்தையும் அதன் தெற்கில் கருவறையை நோக்கியவாறுள்ள பலிபீடம் கொடிமரம், போத்தராசர் சந்நிதி ஆகியவற்றைக் காண்கிறோம். வலமாகவந்து முகமண்டபத்தையும் அதனையடுத்து உள்மண்டபம் கருவறையைக் காண்கிறோம். கருவறையில் திரௌபதை தருமராச அருச்சுனன் மூலவத்திருமேனிகள் உள்ளன. கருவறை உள் சுவரில் பெரியவனை விற்டள் தருமர் கண்ணன் வியாசர் ஆகிய பெரியசுதைச்சிற்பங்கள் வண்ணம் தீட்டப்பட்டதால் இக்கோயில் பொலிவுடன் விளங்குகின்றது.

மரத்தாலான போத்தராசர் காத்தராசர் திரௌபதை பஞ்சபாண்டவர்கள் கருட வாகனத்தில் கிருஷ்ணன் சங்கு பட்டர் ஆகியோருடைய வண்ணம்தீட்டியஉருவங்கள் அழகுடன் அமைந்துள்ளன.

இக்கோயில் கருவறைமீது விமானம் 5 கலசங்களுடன் அமைந்துள்ளது. திறந்த வெளிப்பிராகாரம் அகன்ற பரப்புடன் அமைந்துள்ளது. இங்குப் பூசாரி ஒருவர் ஒருகாலப் பூசை செய்கின்றார். சில ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரிய அளவில் அக்கினி வசந்தவிழா 20 நாள் கொண்டாடப்படுகின்றது.

இக்கோயில் தனியார் நிர்வாகத்தில் சிறப்பாகச் செயல்படுகின்றது. நன்முறையில் திருப்பணி செய்யப்பட்டுப் பொலிவுடன் விளங்குகிறது.

காஞ்சிபுரம்

# தும்பை வனத்தம்மன் என்கிற பொன்னியம்மன் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரத்தில் வெங்கு மருத்துவமனை என்னும் பேருந்து நிறுத்தத்திற்குத் தெற்கேயுள்ள பச்சையப்பன் மகளிர் கல்லூரி வழியாகத் தும்பைவனம் அரிசன காலனியை அடுத்து வேசவதி ஆற்றின் தென்கரையில் கிழக்கு நோக்கியவாறு 30 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கோயிலைச் சுற்றியும் புளியந்தோப்புகள் உள்ளன. ஒருகாலத்தில் பெரிய தும்பைச் செடிகள் அடர்ந்து வளர்ந்திருந்ததால், இப்பகுதி தும்பைவனமாக இருந்தது என்றும், அதன் நடுவில் காஞ்சியில் தென்புறக் காவல் தெய்வமாக இவ்வம்பிகை அமர்ந்திருந்தாள் என்றும், அதனால் தும்பை வனத்தம்மன் என்னும் பெயர் இவ்வம்மனுக்கு வழங்கி வந்தது என்றும் கூறுகின்றனர்.

இக்கோயிலின் முன்புறம் அகன்ற சீமை ஓடு வேயப்பெற்ற மண்டபம் உள்ளது. முன்னாளில் அம்மை நோய் கண்டவர்களை இங்குச் கொண்டுவந்து விட்டுவிடுவார்கள் என்றும், அம்மை நோய் தீர்ந்த பிறகு அவர்களை அழைத்துச் செல்வர் என்றும் கூறுகின்றனர்.

அடுத்து வாயில் வழியாக திறந்த வெளிப் பிரகாரத்தில் வலம் வரலாம். கிழக்குப் பிரகார மையத்தில் அழகிய நாற்கால் மண்டபத்துள் எதிரிடையான் கம்பம் நாட்டப்பட்டுள்ளது. உள்வாயிலின் இடப்புறம் விநாயகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். வாயிலின் இருபுறங்களிலும் சுதையாலான நெடிய துவார பாலகியர் திருவுருவங்கள் உள்ளன.

இனி, உள் மண்டபத்தை அடையலாம். இதன் உள்வாயில் இருபுறமும் சுதை யாலான மகிஷாசுரமர்த்தனி, காளி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

கருவறையில் இரண்டு (தலை மட்டும்) திருவுருவங்கள் உள்ளன. பெரியதும் பை வனத்தம்மன் திருவுருவம் எனவும், சிறியது துளசிவனத்தம்மன் திருவுருவம் எனவும் கொள்கிறார்கள்.

ஆனால், பதிவேடுகளில் இக்கோயில் தும்பை வனத்துப் பொன்னியம்மன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயிலில் சிங்க வாகனம், படிச்சட்டம், பிரபை, விமானம் முதலியன குலதெய்வமாகக் கொண்டவர்கள் அடிக்கடி வந்து வழிபாடு ஆற்றுகின்றனர்.

இங்குப் பூசாரி நாயுடு இனத்தைச் சேர்ந்தவர் ஒருகாலப் பூசை செய்து வருகி றார். அனைத்துச் சக்தி சமய விழாக்களும் எளிய முறையில் கொண்டாடப்பெறு கின்றன. ஆடி, தை ஆகிய மாதங்களில் இவ்வட்டாரத்து மக்கள் இங்கு ஊரணப் பொங்கலிடுகின்றனர். தும்பைவனத்தெரு, நாராயணபாளையத் தெரு ஆகிய தெரு மக்களின் உரிமைக் கோயிலாக இது திகழ்கிறது.

இக்கோயிலின் ஒரு வரலாறு கூறப்படுகிறது. அது பின்வருமாறு

இக்கோயில் வயது முதிர்ந்த பாம்பொன்று வாழ்ந்து வந்ததாகவும்' 50 ஆண்டு களுக்கு முன்பு வரை அப்பாம்பு வாழ்ந்தபோது இக்கோயில் மிகவும் சிறப்புடன் விளங்கியதாகவும், இவ்வூரில் பெரியவர் ஒருவர் வீட்டில் குழந்தைகளுக்கு அம்மை நோய் ஏற்படவே, அவர் தம் குடும்பத்தினரை அழைத்துவந்து இங்குத் தங்க தங்கவைத்து, இரவில் ஒளி விளக்குக்ளை ஏற்றிவைத்ததாகவும், ஒருநாள் இரவு அப் பாம்பு இரைதேடச் சசன்று திரும்பி வந்தபோது ஒளி விளக்குகளால் மயங்கி வெளி யில் புரண்டதாகவும்' அப்போது அங்குக் குழந்தைகளுக்குக் காவலாக இருந்தவர்கள் விவரம் புரியாது அப்பாம்பை அடித்துவிட்டதாகவும், அதன்பின் அக்குடும்பமும் நலிந்தத காவும், கோயிலின் சக்தியும் குறைந்ததாகவும் கூறுகின்றனர் இப்போது புதிய பாம்பு இங்குத் தோன்றியுள்ளது. அதன் பின்னர்க் கோயிலுக்கு முன்போன்று சிறப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது.

இக்கோயிலின் ஆண்டு வருமானம் 500 ரூபாயாகும்.

### காஞ்சிபுரம்

# நகரேசுவரர் கோயில்

இது காஞ்சிபுரம் ஆலடிப் பிள்ளையார் கோயில் தெருவில் வடக்கு முனையில் மேற்குச் சிறகில் கிழக்கு நோக்கியவாறு40 சென்ட் நிலப்பரப்பில் 400 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணி செய்யப்பட்டு விளங்கும் கோயிலாகும்.

இக்கோயிலின் நுழைவாயில் வழியாக உட்சென்றதும் நாம் காண்பதுபலிபீடம் பம் சிறுமண்டபத்துள் நந்தியருள் திருவுருவமாகும். திறந்தவெளிச் சுற்றுப்பிர காரத்தினை வலமாக வரும்போது பிரகாரத்தில் தென்கிழக்கில் மேற்கு நோக்கிய வாறு எழுந்தருளியுள்ள சூரியனையும் தென் மேற்கில் விநாயகப் பெருமான் எழுந்த ருளியுள்ள சிறுசந்நிதியையும் வடமேற்கில் தேவியருடன் முருகப்பெருமான் சந்நிதி யையும் வடகிழக்கில் நவக்கோல் சந்நிதியையும் அதனையடுத்து திருமால் எழுந்த ருளியுள்ள சந்நிதியையும் அதனையடுத்து சற்று வடக்கில் வயிரவர் எழுந்தருளும் சந்நிதியையும் எய்தி வணங்குகின்றோம்.

கருவறை புறக் கோட்டங்களில் முறையே விநாயகர், தட்சணாமூர்த்தி திரு மால் பிரமன் துர்க்கை கோமுகிக்கருகில் சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகள் எழுந்தருளி யுள்ளனர். இக்கோயிலில் விநாயருக்கு முன்புறம் பெரிய இடபமும் தட்சணாமூர்த்தி முன்புறம் பீடத்தில் முனிக் கூட்டமும் இருப்பது கண்டு மகிழத்தக்கதாகும்.

இனி கிழக்கிலுள்ள உள்வாயில் வழியாக 'மகாமண்டபத்தை அடையலாம்' இதனுள் நடுவில் பலிபீடமும் நந்திதேவர் திருவுருவமும் உள்ளன. இம்மண்டபத்தில் காசி விசுவநாத சிவலிங்கமும் அதனருகில் போக சக்தியான உலாத்திருமேனியாக விசாலாட்சி அம்பிகையும் அடுத்து நாகப் பிணைவுகளும் காண்கிறோம், இங்கு விநா யகர் சந்திரசேகரர் அம்பிகை முருகன் வள்ளித் தெய்வானை ஆகியோர் உலாத்திரு மேனிகள் எழுந்தருள வைக்கப்பட்டுள்ளன. அடுத்து உள்மண்டபம் கடந்து கரு வறையில் எழுந்தருளியுள்ள நகரேசுவரப் பெருமானைச் சிவலிங்க வடிவில் வழி படலாம்.

இக்கோயில் பூமி மட்டத்திற்குச் சற்றுத் தாழ்வாக உள்ளது. கிழக்கு வாயிலின் மீது ஒரு நிலையுள்ள சிறு கோபுரம் அணி செய்கிறது. கருவறை மீது இரண்டு தள விமானம் ஒற்றைக் கலசத்துடன் விளங்குகின்றது. உள் மண்டபம் மகாமண்டபம் நவக்கிரக மண்டபம் ஆகியவை அழகிய முறையில் அமைந்துள்ளன. இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார், மாலையில் விளக்கீடு செய்கின்றார், இக்கோயில் திருவாதிரை சிவராத்திரி விநாயக சதுர்த்தி முதலிய அனைத்து சைவ விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இக்கோயிலில் திருமஞ்சனத் தீர்த்தம் உள்ளது. விழாக்காலங்களில் உலாவர மங்களகிரி சப்பரம் உள்ளது. இக்கோயில் ஆர்ய வைசிய இனத்தவரின் உரிமைக் கோயிலாகும் அவர்களால் அமைக்கப்பட்டுள்ள ஆரிய வைசிய சமாசம் எனும் அமைப்பால் செயல்படுத்தப்படுகிறது.

# நிலாத்திங்கள் துண்டப் பெருமாள்

ஏகாம்பரநாதர் சந்நிதிக்கு வலப்பக்கத்தில் மேற்கு நோக்கியவாறு அமைந் திருப்பது நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதியாகும். இச்சந்நிதியில் திருமால் நின்ற

கோலத்தில் மேற்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறார்.

இங்கே வைணவக் கோட்பாடு "இங்கே ஒரு மாமரத்தின் கீழ்ப்பார்வதி தவம் செய்ததாகவும், பார்வதி தமக்கு உதவ வாமனரைவேண்டிக் கொள்ள, வாமனர் சங்கு சக்கர கதாபாணியாக அமிர்த கிரணங்கள் கொண்டு தோன்றிப் பார்வதியின் குறையைத்துண்டித்தப்படியால் பெருமாளுக்கு நிலாத்துண்டத்தான் என்னும் பெயர் அமைந்தது.

இக்கோயிலில் ஏகாம்பரநாதர் கோயில் குருக்களே இங்குப் பூசை செய்து வருகிறார்.

இக்கோயில் திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பெற்றதாகும்.

### காஞ்சிபுரம்

## நீரகம்

ஆழ்வார்கள் மங்களாசாசனம் பெற்ற பதினான்குதிருக்கோயில்கள் காஞ்சிபுரத்தில் உள்ளன. அவற்றுள் நான்கு ஒரே இடத்தில் அமைந்திருப்பது உளகளந்தப் பெருமாள் கோயிலாகும். இந்நான்கினில் ஒன்று நீரகமாகும். இக்கோயில் உளகளந்த பெருமாள் கோயிலினுள் அதன் வலப்புறத்தில் கட்டப்பட்டுள்ளது.

(1) நீர் தாழ்ந்துள்ள இடத்தை நோக்கித் தானே செல்லும். எம்பெருமானாகிய திருமாலும் தாழ்ந்த நிலையில் இருப்போரை நோக்கி எளிதில் சென்று அவர்களுக்கு அருள்புரிகிறார்.

(2) நீருக்கு இயல்பாகவே தன்மை உள்ளது. இதுபோன்று எம்பெருமானுக்கும் இயல்பாகவே தண்ணளி அமைந்துள்ளது.

(3) நீர் சுட்டாலும் அதனை ஆற்றுவதற்கு தேவைஎம்பெருமான் சீறினாலும்அப்பெருமான் கருணையால் தான் அவரது சீற்றம் தனிய வேண்டும்.

(4) நீரின்றி இவ்வுலகம் நிலை பெறாது. அவ்வாறே எம்பெருமான் திருக்கருனை இல்லாத இடத்து யாதொரு செயலும் நடைபெறாது. எல்லோரும் நீரை விரும்பியே அதனைப் பயன்படுத்த வேண்டும். இதுபோன்று இவ்வுலகில் வாழ்வதற்கு யாவரும் எம்பெருமானிடம் பற்றுக் கொள்ள வேண்டும்.

(5) எவ்வாறாயினும் யாதொரு துவாரம் இருப்பில் நீர் அதனுள் புகுந்துவிடும். இதுபோன்று எம்பெருமானும் ஏதாவது சிறு காரணமாக மக்களை ஆட்கொள்வார் "திருமாலிருஞ்சோலை" மலை என்றேன், என்னத் திருமால் வந்து என் நெஞ்சு றையப் புகுந்தாள் 1,

(6) யாதொரு வேற்றுமையும் இன்றி எல்லாரும் ஒரு துறையிலே படிந்து குடைந்து நீராடலாம். இதுபோன்று பெரியார், சிறியார் என்னும் வேற்றுமையின்றி எம்பெருமான் அடையத்தக்க பரம்பொருளாக இருக்கின்றார். ஆதலால் எம்பெரு மான் நீரகத்தாய் எனத் திருமங்கையாழ்வாரால் போற்றப்பெறுகிறார். இப்பெருமான் நீரின் மீதுள்ள ஆல இலையின்மீது பள்ளி கொண்டிருப்பதை நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி சுட்டிக் காட்டுகிறது.2

இவ்வாறு போற்றப் பெறும் பெருமாளை உலகளந்த பெருமாள் கோயில் கலியாண மண்டபத்தின் இடப்புறத்திலுள்ள நீரக்த்தில் கண்டு சேவிக்கலாம். இவர் "ஜகதீசப் பெருமாள்" தெற்கு முக மண்டலத்துதின் "ஜகதீசப் பெருமாள்" என்னும் திருப்பெயரில் நின்ற கோலத்தில் கோயிலில் காட்சியளிக்கிறார். உலகளந்த பெரு மாள் கோயிலில் பிராகாரத்தினைப் பின்பற்றி இத்திருக்கோயிலை வலம் வரும்போது நாம் முதன்முதலில் சேவிக்கப் பெறுவதற்கு உரியவராக இவர் தமக்கு விளங்குகிறார். இவரை "நீரகத்தாய்" எனப் போற்றுகிறார் திருமங்கையாழ்வார்.3

இக்கோயில் 3.56 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதற்கு நித்திய பூசையைத் தவிர விழாக்கள் எவையும் நடை பெறுவதில்லை.

---

1. திருவாய்மொழி - 10:8:1
2. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி - 79.
3. திருமங்கையாழ்வார் - திருநெடுந்தாண்டகம் 8.

காஞ்சிபுரம்

(ஒரிக்கை தும்பவனம்)

## பச்சையம்மன் கோயில்

காஞ்சிபுரத்தின் தென்பகுதியான ஒரிக்கையில்புதியகுடியேற்றமான அன்னை நத்யாநகரின் கிழக்கில் புன்செய் நிலங்களுக்கு இடையில் 30 சென்ட் நிலப்பரப்பில் இக்கோயில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

காஞ்சிபுரத்தின் நான்கு எல்லைகளிலும் காவல் தெய்வமாக விளங்குச் பச்சை யம்மனின் தெற்குத்திசையில் அமைந்த திருக்கோயில் இதுவாகும். தும்பை வனத்தை ஒட்டி அமைந்திருப்பதால் இக்கோயிலில் அம்மன் தும்பைவனப் பச்சையம்மன் என அழைக்கப்படுகின்றாள். இக்கோயிலுக்கு மிலிட்டரி பெல்ட் ரோடு வழியாக வரவேண்டும்.

புன்செய் நிலத்தில் ஒற்றையடிப்பாதை வழியாக இக்கோயிலை அடைய லாம். கோயிலின் முன்புறம் புதுப்பித்து வண்ணம் தீட்டிப் பொலிவாக அமைக்கப்பட் டுள்ள வாழ் முனீசுவரனைக் காணலாம். இது தவிர கோயில் மதில் இடிந்தும் பிரகா ரங்களிலும் தளங்களிலும் மரம் செடி கொடிகள் முளைத்தால் கோயில் பாழ்பட்டு கிடக்கிறது

அடுத்து இருநிலைகளை ஐந்து கலசங்களையும் கொண்ட சிறுகோபுரத்தைக் கடந்து வலம் வரலாம். உள்வாயில் வழியாக மகாமண்டபத்தை அடையலாம். இதில் தென் மேற்கு முனையில் 2 அடி உயரமுள்ள அழகிய திருமால் கல் திருமேனியும் உள்மண் டபம் கடந்து கருவறையில் அழகிய இரண்டு கரங்களுடன் அமர்ந்த வடிவிலான பச்சையம்மன் திருவுருவத்தையும் காண்கிறோம். மூலவர் பின்புறம் பெரிய வளை விற்கு— சுதையாலான பச்சையம்மனையும் காணலாம். இவ்வடிவம் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்குகின்றது.

இக்கோயில் கருங்கல்லால் அகன்ற அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. இத ற்குத் திருப்பணி தேவைப்படுகின்றது.

இங்குப் பூசாரி ஒருவர் ஒருகாலப் பூசை செய்கின்றனர். குலதெய்வமாகக் கொண்டவர்கள் விரும்பும் போது இங்கு வந்து பொங்கலிட்டுப் பூசையிட்டு வழிபாடு செய்கின்றனர்.

ஆடிமாதம் தைமாதம் வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் திரளான மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர்.

தனியார் நிர்வாகத்தின் கீழ்ச் செயல்படுகின்றது.

### காஞ்சிபுரம்

# பணாமுடீசுவரர் கோயில்

இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் ஐயங்கார் சாலைத் தெருவின் மையத்தில் வடக்கில் தெற்கு நோக்கிய தலைவாயிலும் கிழக்கு நோக்கிய கருவறையும் கொண்ட தாக 25 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

ஐயங்கார்கள் என்னும் வைணவப் பிராமன்னர்கள் மிகுதியான எண்ணிக்கையும் இத்தெருவிற்கு இப்பெயர் வந்தது.

இக்கோயிலின் தெற்கு தலைவாயில் வழியாக உட்சென்றால் வலம்வரும்போது இத்தலவிநாயகர் தென்மேற்கு முனையில் ஆலம்காத்த விநாயகர் என்னும் பெயரில் எழுந்தருளியுள்ளனர். இதனுள் முருகப்பெருமான் தம் தேவியருடன் எழுந்தருளியுள்ளனர். இச்சந்நிதி, உள்மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டதாகும். இங்கு முன்புறம் மயில், பலிபீடம் உள்ளன.

அடுத்து வடகிழக்குமுனையில் கிழக்குநோக்கியவாறு விசுவிசுவரர் எழுந்தருளியுள்ளார். கருவறை முன்மண்டபம் உள்ளது முன்புறம் நந்திதேவர் திருவுருவம் உள்ளது. இதனை அடுத்து வில்வமரம் செழித்து வளர்ந்துள்ளது. அடுத்து வடகிழக்கில் தவிர தங்கள் அடுத்து சூரியனும் அடுத்து திருமாலும் வளைவுக்குள் எழுந்தருளியுள்ளனர். தென்கிழக்கு முனையில் நால்வர் சேக்கிழார் ஆகிய மூர்த்திகள் வடக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார்.

இனித் தெற்கு உள்வாயிலின் முன்புறமுள்ள முகமண்டபத்தை அடையலாம். இது அகன்றது இது கருங்கல்லால் கட்டப்பட்ட இமமண்டபத் தூண்களில் விநாயகர் முருகன் திரிபுராந்தகர் அம்பிகை சிவலிங்கத்தை வழிபடுதல் ஆகிய சிற்பங்கள் காண்கிறோம். இனி மகாமண்டபத்தை அடையலாம். இதில் துவாரபாலகர் மூலவரும் உலாந்திருமேனிகளும் எழுந்தருளியுள்ளனர். சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர், முருகன் வள்ளி தெய்வயானை சண்டிகேசுவரர், வீரவாகுதேவர் ஆகிய உலாந்திருமேனிகளும் எழுந்தருளியுள்ளன. மகாமண்டபத்தில் மேற்கில் உள்மண்டமும் அதனையடுத்துக் கருவறையும் உள்ளன கருவயையில் பனாமுடீசர் பெயரில் சிவலிங்கத் திருமேனியாக இறைவன் எழுந்தருளியுள்ளார். அருகில் செப்புந்திருமேனியாகப் போகசத்தியம்மன் எழுந்தருளியுள்ளார்.

இக்கோயில் கருவறை உள்மண்டபம், மகாமண்டபம் திறந்தவெளிச் சுற்றுப் பிரகாரம் ஆகியவற்றைக் கொண்டதாகும். வாயிலின் மீது நெடிய ஆசாரவாயில் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. கருவறை மீது இரண்டு தள விமானம் ஒற்றைக் கலசத்துடனும் விளங்குகின்றன,

இங்கு குருக்கள் ஒருகாலப் பூஜை செய்து வருகின்றார். இத்தெருவில் கட்டுப்பாட்டின்கீழ் இக்கோயில் இயங்கி வருகின்றது அனைத்து சைவ விழாக்களும் எளிய முறையில் கொண்டாடப்படுகின்றன. கந்தர் சட்டி விழாவும் மிகவும் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. அன்று முருகன் வீதி உலாவும் மிகவும் சூரசங்கார நாடக நிகழ்ச்சியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் இக் கோயிலின் ஆண்டு வருமானம் இத்துறையின் பதிவேடுகளின் படி – ரூபாய் 300 ஆகும்.

காஞ்சிபுரம்

# பத்திரகாளியம்மன் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் பத்திரகாளியம்மன் கோயில் தெருவில் (பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு எதிரில் வட்டாட்சியர் அலுவலகத்தை ஒட்டி வடக்கில்)தென் சிறகில் வடக்கு நோக்கியவாறு 10 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

காஞ்சிபுரத்தில் மிகத் தொன்மையான காவல் தெய்வங்களில் இஃது ஒன்றாகும்.

வடக்குவாயிலின் வழியாக உட்சென்று மகாமண்டபத்தின் வடக்கு நோக்கிய வாறு சிறுசந்நிதியுள் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானை வணங்கலாம். அடுத்துச் சிறு வளைவிற்குள் சிவலிங்கமும் ஓர் ஆண் வடிவம் அமர்ந்துள்ள நிலைச் சிற்பத்தையும் காண்கிறோம். அம்பிகையை வலம்வந்து மேற்குப்புறத்தில் மேற்கு நோக்கியவாறு ஒரு தூணில் புடைப்புச் சிற்பமாகப் ஆஞ்சநேயர் எழுந்தருளி யுள்ளதைக் காணலாம்: அவருக்கு அருகில் சிறுமேடையில் நாகர் திருவுருவங்கள் உள்ளன,

இனி உள் மண்டபத்தை அடையலாம். இதன் மேற்குப்பகுதியில் ஒரு பெண் ணும் ஆணும் ஆடும் உன்மத்த நடனம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ளவர்கள் இதனைக் காத்தவராயன், ஆரியமாலா என்று குறிப்பிடுகின்றனர் அடுத்துக் கருவறையை அடையலாம். இதில் விரிந்த சடையும் ஓங்கிய சூலமும் நாகமும் தாழ்ந்த கையில் கபாலமும் ஏந்தியவளாகக் கபாலிகர்கள் வழிபட்ட காளி யம்மன் எழுந்தருளியுள்ளார் இத்திருவுருவம் மிகவும் தொன்மையான சிலை வடிவமா கும். இந்நாளில் இதற்கு வெள்ளியாலான தொங்கிய நாக்கு, கோரைப்பற்கள் முதலி யவை வைத்துக் கொடுந்தோற்றம் உடையவளாக இத்தெய்வத்தை அலங்கரித்துள் ளனர். இச்சிலையில் அருகில் பழைய காளியின் வடிவமுள்ளது. அருகில் சிறு வடி வடிவங்களில் வயிரவர், சூலபாணி, தலைவரையிலான அம்பிகை முதலியோர் கற் சிற்பங்கள் உள்ளன.

இக்கோயில் வாயிலின் இருபுறமும் சுதையாலான வாயில் காவல் பூதவடிவங்கள் உள் ளன, கோயிலின் உள்புறம் கருவறையில். மேல் விமானம் தகட்டு வேலைப்பாட் டுடன் பொருந்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்' வாயில் மேற்புரம் முகப்பு ஆகி யவற்றில் அழகிய அம்பிகை, பூதகணங்கள், சிங்கங்களின் உருவங்கள் ஆகியன சுதையால் அமைக்கப்பட்டுள்ளன. நிலத்தில் வண்ணத்திரையும் சுவர்களில் பளிங் குக் கற்களும் பொருத்தப்பட்டுள்ளன. கோயில் வனப்புடன் திகழ்கிறது.

இக்கோயில் கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் திறந்த வெளிப் பிராகாரம் ஆகிய அமைப்புகளைக் கொண்டதாகும்.

இங்கு முதலியார் இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர் பூசாரியாக இருந்து இரு காலங்களில் பூசையை நடத்திவருகின்றனர். அனைத்துச் சக்தி விழாக்களும், பௌர்ணமி நவராத்திரி ஆகிய நாள்களில் தலிப்பட்டவர்கள் விழாக்களும் கொண்டாடப் பெறுகின்றன.

அம்பிகைக்கு அபிடேகம் செய்யும்போது மடியிலிருந்து வழியும் நீரைப்பிடித்து பிரசாதமாக வழங்குகின்றனர். இது மடித்தீர்த்தம் என்னும் பெயரில் வழங்கப் பெறுகிறது.

தெருவர் நிருவாகத்தின் இக்கோயில் செயல்பட்டு வருகின்றது. கோயில் சிறப்புடன் பராமரிக்கப்பட்டுவருகின்றது.

காஞ்சிபுரம்

# பராசுரேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் காந்தி சாலையின் தென்சிறகில் வடக்கு நோக்கிய வாறு அமைந்துள்ள வழக்கறுத்தீசுவரர் கோயில் தென்பிராகாரத்தினுள் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

வழக்கறுத்தீசுவார் கோயில் சிறப்புப்பெற்ற பின் புராணப் புகழ்பெற்ற இக் கோயில் அதனுள் ஒரு சந்நிதியாக எளிய நிலையில் அமைந்துள்ளது.

பராசரர், வசிட்டர், முதல் புதல்வராகிய சத்தியின் மைந்தன், தாம் பிறக்குமுன் னே தம்தந்தையைச் சுதரசன் என்னும் அரக்கான் அழித்தான் தாம்பிறந்து வளர்ந்த பின்னர்த் தம் தந்தை அரக்கனால் அழிக்கப்பட்டதைத் தாய் சொல்லக்கேட்டு அரக் கர்களை அழிக்க முற்பட்டார்.

சிவ பூஜை காஞ்சியில் செய்தலினால் சிறந்த பயன்விளையும் என்பதை வசிட் டரிடம் தெரிந்துக்கொண்டார். பராசரர் காஞ்சியை நண்ணிக் கம்பா நதியில் மூழ்கித் திருவேகம்பரை வணங்கி மஞ்சள் நதிக்கரையில் மணிகண்டேசுரத்திற்கு வடமேற்கில் 'பராசரேசர்'' என்னும் சிவலிங்கம் நிறுவிப் போற்றி வழிபட்டார். சிவபெருமான் அவருக்குக் காட்சி அளித்து அருள்புரிந்தார். பராசரர் ஒரு வேள்வி செய்து அரக்கர் களை அழித்தார். அவர் வழிபட்ட கோயில் என்னும் பெயர் பெற்றுக் காந்தி சாலை யில் இது இருக்கிறது.

இக்கோயிலில் வழக்கறுத்தீசுவரர் கோயில் குருக்களே பூஜைசெய்துவருகிறார். அக்கோயில் நிர்வாகத்துடன் இணைந்துள்ளது. இதற்கெனத் தனியாக விழாக்கள் நடத்தப் பெறுவதில்லை.

காஞ்சிபுரம்

# பவளவண்ணர், பச்சைவண்ணர் கோயில்கள்

இக்கோயில் பெரிய காஞ்சிபுரம் பெரிய கம்மாளத் தெருவிற்கு எதிரிலுள்ள காலண்டர் தெருவில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

பவளம் போல் விரும்பத்தக்க வடிவு கொண்டவர் என்னும் பொருள் கொண்டுள்ளது பவளவண்ணர் என்னும் பெயர்.

பண்டொருகால் முனிவர்கள் பலர்கூடி அறம் தழைக்கவும் மாநிலம் உய்யவும் வேண்டும் என்பதற்காகப் பெருவேள்வி ஒன்றை இயற்ற விழைந்தனர். அவ்வாறு விழைந்த முனிவர்கள், அயன், மால், அரன் ஆகிய மூத்தேவரில் எத்தேவரைப் பரம் பொருள் என விளித்து யாகத்தின் தலைவராகக் கொள்வது எனத் தம்முள் கருத்து வேற்றுமை கொண்டார்கள். அம்முனிவர்கள் பிருகு முனிவரிடம் செய்து முக்கடவுளரையும் கண்டு பரம்பொருள் யாவரெனத் தேர்ந்து தெரிவிக்குமாறு வேண்டினர். அவ்வண்ணமே, பிருகுமுனிவரும் சத்தியலோகமும் கயிலாயமும் சென்று பிரமாவையும் சிவனையும் கண்டார். ஆனால், தூய சத்துவ குணங்கள் நிரம்பப் பெற்றவராக இருவரில் எவரையும் அவரால் கருதமுடியவில்லை. பின்னர், பிருகுமுனிவர் திருமாலைக் காணத் திருப்பாற்கடல் சென்றடைந்தார். அங்கே பாம்பணை மீது பள்ளி கொண்டிருந்த பரந்தாமன் பிருகுமுனிவரைக் கண்கொண்டு பார்க்கவில்லை. இதனால் முனிவர் சீற்றம் கொண்டார். துணுக்குற்று எழுவது போல் எழுந்த திருமாலே முனிவரை முகமன் கூறி வரவேற்று, அவரது சீற்றத்தைத் தணித்து உபசரிக்கலானார். ஆனால் திருமகளோ முனிவர் இழைத்த கொடுமையைப் பொறுக்கமாட்டாதவளாய்ச் சினந்து சபித்தாள். முனிவர் தம பெரும்பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினார். மனமிரங்கிய திருமகள், அம்முனிவரைக் காஞ்சியம் பதியடைந்து அங்குள்ள சக்கரத் தீர்த்தத்தில் நீராடித் தவம்புரிந்து பரம்பொருளின் திருவருளை வேண்டுமாறு பணித்தார். பிருகுமுனிவரும் பூவுலகு திரும்பி, புனித சக்கரத்தீர்த்தத்தில் நீராடி அருந்தவமியற்றி வந்தார்.

பலகாலம் அவர் புரிந்த கடுந்தவத்தை ஏற்று மகிழ்ந்த திருமால் சோதிவடிவினராய் முனிவர் முன் தோன்றினார். கோடிசூரியப் பிரகாசமுள்ள அவ்வொளி வெள்

ளத்தைக் காணக் கசிய முனிவர் திருமாலின் பெருமைகளைப் பலவாறும் போற்றித் துதித்து, திகைக்கவைக்கும் அவ்வொளி வடிவத்தை அகற்று, நான்கு யுகங்களிலும் தாம் எழுந்த திரு அவதாரங்களின் சுந்தர வடிவங்களைத் தமக்குக் காட்டியருளுமாறு பிரார்த்து இறைஞ்சினார். திருமாலும் அவ்வண்ணமே கிருத யுகத்தில் சுவேத வர்ணனாகவும் (வெண்ணிறமுடையோன்), திரேதாயுகத்தில் பிரவாள வர்ணராகவும் (பவள நிறமுடையவராகவும்), கலியுகத்தில் சியாமள வண்ணராகவும் (கருநீலநிறமுடையவராகவும்), தாம் எடுத்த திருவவதார வடிவங்களை முனிவருக்குக் காட்டினார்.

மாயவனின் இவ்வதாரங்களுள் பவள வண்ணரையும் மரகதவண்ணரையும் பெரிய காஞ்சிபுரத்திலுள்ள பவளவண்ணர் கோயிலிலும் பூசிக்கப்படும் வடிவில் காண்கிறோம்.

**பவளவண்ணர்**

இப்பவளவண்ணர் திருமங்கையாழவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றவர் கோபுரவாயிலைக் கடந்து நாம் உள்ளே செல்வோமெனில், முதலில் பலிபீடமும் கொடிமரமும் இருப்பதைக் காணலாம்.

பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றின் இடப்புறத்தில் வடக்குச்சுவரைச் சார்ந்துள்ள பகுதியில் இராமாநுசர், சேனை முதல்வர், இராமர், இலக்குவன், சீதை, ஆஞ்சநேயர், ஆண்டாள் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன. நம்மாழ்வார் சந்நிதி மேற்கில் உள்ளது. கருடர் சந்நிதியை அடுத்து அமைவது பெருமாள் சந்நிதியாகும். உள்மண்டபத்தில் நுழைவாயில் இருமருங்கிலும் துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. கருவறையில் ஐந்து தலை ஆதிசேடத்தின் மீது அமர்ந்த நிலையில் பவள வண்ணர் அருள்பாலிக்கிறார். தாயார் கருவறை முகமண்டபத்தில் பக்கத்தில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் மிகவும் பழமையான உறுதியாக உற்சவ மூர்த்திகள் காணப்படுகின்றனர், பன்னிரு ஆழ்வார்களும், ஆளவந்தார், பிள்ளைலோகாச்சாரியார், உடையவர், மணவாளமாமுனிகள், பவளவண்ணர், பவளவல்லி தாயார், சயனபேரர் செல்வர், கண்ணன், சக்கரத்தாழ்வார் ஆகியோரும் உற்சவர்களாக உள்ளன.

பவளவண்ணர் கோயில் கோபும் 7 கலசங்களையும் நான்கு தளங்களையும் பெற்றுள்ளது, கோபுரத்தில் நடுவில் அமையும் ஒவ்வொரு தளத்தில் சால அமைப்பு மிகவும். பெரியது, பவளவண்ணர் கோயில் கருவறை மீது அமையும் விமானம் இரண்டு அடுக்குகளையுடையது.

கொடிமரம், பலிபீடம் ஆகிவற்றிற்கு இடப்புறத்தில் பவித்திரோற்சவ மண்டபமும் இம்மண்டபத்திற்கு மேற்கில் அபிடேக மண்டபமும் உள்ளன. அபிடேக மண்ட

பம் 15 மீட்டர் நீளமும் 6 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. நான்கு மீட்டர் உயர முடைய 25 முழுத்தூண்களும் ஆறு அரைத் தூண்களும் அம்மண்டபத்தில் காணப் படுகின்றன. இம்மண்டபத்தின் மேற்கில் யாகசாலையும் கண்ணாடி அறையும் உள் ளன. பெருமாள் சந்நிதி முகமண்டபத்தில் நான்கு தூண்கள் நடுவில் காணப்படு கின்றது. முகமண்டபத்தை அடுத்து நான்கு தூண்களைக் கொண்ட உள்மண்டபம் காணப்படுகிறது.

தாயார் சந்நிதியின் கருவறையையடுத்து நான்கு தூண்களையுடைய உள் மண்டபம் அமைகிறது. உள்மண்டபத்திற்கு முன்பாக 13 தூண்களையுடைய முக மண்டபம் அமைந்துள்ளது. இது 7 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் கொண்டது தூண்களின் கீழ்ப்பகுதி சதுரமாகவும் மேற்பாதி எட்டுப் பட்டைகள் கொண்டதாக வும் அமைந்துள்ளன. தாயார் கோயிலின் மேற்கில் மடைப்பள்ளி உள்ளது.

அபிடேக மண்டபத் தூண்களில் திருமாலின் அவதாரப்படைப்புச்சிற்பங்களும் பூவேலைப்பாடுகளும், ஆழ்வார் ஆச்சரியார்கள் ஆகியோர் படைப்புச் சிற்பங்களும் மிகவும் நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. கோபுரத்தின் கோட்டங் களில் திருமாலின் அவதாரச் சிற்பங்களும், நான்கு தள வாயிலும் துவாரபாலகர்களும் துவாரபாலகிகளும் உள்ளனர்.

கருவறை விமானத்தில் சாலக் கோட்டங்களில் சிற்பங்கள் அழகுடன் அமைக் கப்பட்டுள்ளன. கருவறை விமான முதல் தளக்கோட்டங்களில் வடக்கு முதல்மேற்கு வரை முறையே திருமால், வராகர், சிம்மவிஷ்ணு, திருமால், ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. இரண்டாவது தள மேற்பகுதியில் முதல் தளத்தைப் போன்று சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், தேவியாரும் ஒவ்வொரு சிற்பத்துள் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தளத்தில் மேற்குபகுதியில் நான்கு பெரிய நாசிகளும் அவற்றிடையே சிறிய நாசிகளும்' உள்ளன. சுபோதங்களின் கூடுகளில் முனிவர்கள், மனிதர்கள், பெண்கள் உருவங்கள்கள் ஆகிய சிற்பங்கள் காணப்படு கின்றன.

பவளவண்ணர் கோயிலில் இருபது ஆண்டுகளுக்குப் பின்பு பிரமோற்சவம் நடைபெற்றது. தற்போது பிரமோற்சவம் நடைபெறுவதில்லை. வைகாசி மாத அனுஷ நட்சத்திரத்தில் முன்பு பிரமோற்சவம் நடைபெற்றது. கிருட்டிண செயந்தி, வைகுண்ட ஏகாதசி, தமிழ் ஆண்டுப் பிறப்பு, தெலுங்கு ஆண்டுப் பிறப்பு, நவராத் திரி. சித்திரை மாதம் உடையவர் சாத்துமுறை, சக்கரத்தாழ்வார் பூசை போன்ற காலங்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன.

கோயிலில் காலை மாலை ஆகிய இருவேளைகளில் பூசைகள் நடைபெறு கின்றன. ஆழ்வார்களின் புறப்பாடு ஆண்டுத் திருநட்சத்திரத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசியில் முன்னிரவு பத்து நாள்களும் (இராப்பத்து) பின்பகல் பத்து

நாள்களும் (பகல் பத்து) சிறப்புப் பூசைகள் நிகழ்த்தப்பெறும். கிருட்டிண செயந்தி நாளில் உறியடி விழா சிறப்பாக நடைபெறுகின்றது. காஞ்சிபுரத்திலுள்ள வரதராசப் பெருமாள் கோயில் பிரமோற்சவத்தின் ஐந்தாம் நாள் பெருமாள் மோகினி அவதாரத்தில் இக்கோயிலுக்கு வருகை தந்து சிறப்பளிப்பார். அப்போது அவருக்குதகுந்தமரியாதைகள் அளிக்கப்படுகின்றன. அன்று அன்பர்களுக்கு அன்னதானம் செய்யப்படுகிறது, இக்கோயிலில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் நாள்தோறும் ஓதப்பெறுகிறது.

இக்கோயிலில் கருடர், அனுமர், சிங்கம், யானை குதிரை, அன்னம், நாகம் முதலிய வாகனங்கள் உள்ளன. சூரிய பிரபையும், சந்திரப்பிரபையும் புண்ணிய கோடி விமானமும் சப்பரம், பல்லக்கு முதலியவையும் உள்ளன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 52,217

## பச்சைவண்ணர்

பெரிய காஞ்சிபுரத்தில் கம்மாளர் தெருவில் கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் இருக்கின்றது.

இக்கோயிலை மங்களாசாசனம் செய்யப்பெற்ற பவளவண்ணர் கோயிலோடு சேர்த்தே சேவிப்பது வழக்கமாக உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள பெருமாள் பச்சை நிறமாகும். ஆதலால், இவர் பச்சை வண்ணர் என்னும் பெயரில் விளங்குகிறார்.

பச்சைவண்ணர் கோயிலில் நுழைந்ததும் நாம் காண்பது பலிபீடமும் கொடிமரமும் ஆகும். கொடி மரத்தையடுத்துக் காணப்படும் கருடன் சந்நிதி பெருமாளை நோக்கி அமைந்துள்ளது முக மண்டபத்தின் மேற்கு நோக்கியவாறு ஆண்டாள் சந்நிதி காணப்படுகிறது. ஆழ்வார் ஆச்சாரியார்கள் சந்நிதியில் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், சேனை முதல்வர், உடையவர் மணவாளமாமுனிகள் ஆகியோர் திருவுருவங்களும் உற்சவத் திருமேனிகளும் உள்ளன பெருமாள் சந்நிதியில் வலப்புறத்தில் அதனருகே தாயார் சந்நிதி உள்ளது. தாயார் சந்நிதியில் வலப்புறத்தில் பிராகாரத்தில் நாகராசர் திருவுருவம் மக்களால் வழிபடப்படுகிறது.

இக்கோயிலில் மூன்று விமானங்கள் காணப்படுகின்றன. ஆண்டாள் சந்நிதி மீது ஒரு தள விமானமும், பெருமாள் சந்நிதி மீது மூன்று தளங்களைக் கொண்ட விமானமும், தாயார் சந்நிதி மீது இரண்டு தளங்களுடைய விமானமும், உள்ளன விமானங்களில் சிகரத்தில் நான்கு பெரிய நாசிகளும் அவற்றிடையே நான்கு சிறிய நாசிகளும் உள்ளன ஒரு கலசமே விமானங்களில் உள்ளது.

கொடிமரத்திற்கு இடப்புறம் நான்கு தூண்களைக் கொண்ட மண்டபம் ஒன்று இடைக்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபம் பெருமாள், தாயார் ஆகியோர் உற்சவக் காலங்களில் ஊஞ்சல் ஆடுவதற்காகப் பயன்படுகிறது.

தாயார் விமானத்தில் சால கோட்டங்களில் தாயாரின் சிற்பங்கள் மட்டுமே உள்ளன. மேற்பகுதியில் நான்கு மூலைகளிலும் சிங்கத்தின் சிற்பங்கள் அமைந்துள்ளன இச்சிற்பங்கள் யாவும் பொலிவிழந்த நிலையில் காணப்படுகின்றன.

இக்கோயில் வைகானச ஆகம விதிப்படி பூசைகள் நடைபெறுகின்றன. மாசி மாதம் பிரமோற்சவம் நடைபெறுகிறது. உரோகிணி நட்சத்திரத்தில் தீர்த்தவாரி நடைபெறும். நாட்பூசை காலையும் மாலையும் நடைபெறும். கிருட்டிண செயந்தி, தமிழாண்டுப் பிறப்பு, வைகுண்ட ஏகாதசி, நவரத்திரி ஆகிய நாட்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறும்.

கருடர், அனுமர், சிங்கம், யாளி, குதிரை, அன்னம், நாகம் முதலின இக்கோயிலின் வாகனங்களாகும். சூரியப் பிரபை, சந்திரப் பிரபை, சப்பரம், பல்லக்கு ஆகியவையும் இக்கோயிலிலுள்ளன. பச்சை வண்ணப் பெருமாள், சீதேவி, பூதேவி, கண்ணன், செல்வர், சயனபேரர், சக்கரத்தாழ்வார் மரகதவல்லிதாயர், ஆண்டாள், உடையவர், மணவாள மாமுனிகள், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், சேனை முதலியார் ஆகியோருக்கு உற்சவமூர்த்திகள் இக்கோயிலில் உள்ளன.

இக்கோயில்கள் சென்னை ''ஸ்ரீ கராகபாத ஆள்வாரய்ய சாரிடிகள்'' எனப்படும் அறக்கட்டளையினால் நிருவகிக்கப்படுகின்றது. நூறுவருடங்களுக்கு முன்னர் வைணவவாணிக குலத்து தித்த கராலபாத ஆள்வாரய்யா என்னும் அன்பர்ஒருவரின் கனவில் ஸ்ரீ பவளவண்ணப் பெருமாள் தோன்றிப் பழுதுற்ற தம் கோயில்களைச்செப்பனிடுமாறு பணிந்தாராம். அதைத் தலைமேற்கொண்டு அப்பேரன்பர், தம் குலத்தோன்றல் ஒருவரின் கொடையாலும் பிறர் பொருளுதவியைக் கொண்டும், இவ்விரு கோயில்களையும் புதுப்பித்துக் கோபுரம, மண்டபம் முதலியான திருப்பணிகளைச் செய்வித்தார்.

இக்கோயில் நிருவ்ாகம் பரம்பரை அறங்காவலர் இருவர் அடங்கிய குழுவினரால் நடைபெற்று வருகின்றது. தற்காலம் திரு. கராலபாடி சுதர்சனம் அவர்கள் பரம்பரை மதிப்புறு செயலாளராகவும் நிருவாக அறங்காவலராகவும் செயலாற்றி வருகின்றனர். தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினர் வினிவான ஆய்வுசெய்து இக்கோயில்கள் பழுதுபார்த்துப் புதுப்பிப்பதற்கு அனுமதி வழங்கவும் உரிமைபெற்றுள்ளது. மேலும், இவற்றிற்கான செலவுத் தொகையில் ஒரு பகுதியை அறநிலையத் துறையினர் ஏற்றுக் கொள்வதாகவும், மீதித் தொகையைப் பொது மக்களிடமிருந்து பெறுமாறும் கூறப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம்

# பாண்டவர் தூதப் பெருமாள் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் இருப்புப்பாதை நிலையத்திற்கு வடக்கில் கிழக்கு நோக்கியவாறுள்ளது.

இக்கோயிலுக்குப் பாடகம் என்னும் பெயரும் உள்ளது. பெருமை தோன்றப் பெருமாள் இங்கு எழுந்தருளியுள்ளார் என்பதை இப்பெயர் காட்டுகிறது. பாண்டவர் தூதனாய்த் துரியோதனிடம் சென்றபோது அக்கோமகன் ரகசியமாகத் தன் சபா மண்டபத்தில் மிகப்பெரிய நிலவறையொன்றை நிறுவி, அதனுள்ளே அநேக மல் லர்களை நிறுத்தினான், அப்படுகுழியைப் பிறர் அறியாதவண்ணம் மூங்கிற் பிளப்பு களால் மேலே மூடச் செய்தான். அதன் மீது நவரத்தினங்கள் வழங்கப்பெற்ற சிறந்த இருக்கை ஒன்றை அமைந்து அதன்மீது கண்ணனை வீற்றிருக்கச் செய்தான் கண்ணனைச் கொள்வதற்காகத் துரியோதனன் செய்த சதித் திட்டம் இதுவாகும். கண்ணன் அதன் மீது ஏறியதும் மூங்கிற் பிளப்புகள் முறியிப்டு இருக்கை உள்ளி றங்கிப் பிளவறையில் செல்லுங்கால். அப்பெருமான் மிகப் பெரிதான உருவம் எடுத் துத் தம் கைகள் கால்கள் பலவற்றைக் கொண்டு மன்னர்களை எதிர்த்து அவர்க ளைக் கொன்றொழிந்தார். இந்தப் பெரிய திருமேனியை

"அரள நீள் கொடியோன் அவையுண்டு சனத்தை
அஞ்சிடாதே அதற்கு
பெரியமா மேனி அண்டம்ஊ டுருவ
பெருந்திசை அடங்கி நிமிர்ந்தோள்"

என்று திருமங்கையாழ்வார் எடுத்துக் காட்டுகிறார். அப்போது கொண்ட விசுவரூபத் திருக்கோலத்தில் நினைவுச் சின்னமாகப் பெரிய திருமேனியுடக் காட்சியளிக்கும் இடம் பாடகம் ஆகும்.

இக்கோயிலின் நுழைவாயிலைக் கடந்து உள்செல்வோமெனில், முதலில் கொடி மரமும் அதனையடுத்துப் பலிபீடமும் இருப்பதைக் காண்கிறோம். இவ்விரண் டையும் அடுத்து கருடன் சந்நிதி கருவறையை நோக்கியவாறுள்ளது. கருவறையில் பாண்டவர் தூதப் பெருமாள் சுவதத் திருவுருவம் 7 மீட்டர் உயரத்தில் வீற்றிருக்கும் கோலத்தில் காட்சியளிக்கிறது. இப்பெருமான் சந்நிதியில் வடபுறத்தில் உற்சவர் சந்நிதி உள்ளது. இங்கு ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், இராமா

நுசர், மணவாளமாமுனிகள், அருளாளப் பெருமாள், சேனை முதலியார் ஆகியோர் மூலவர் திருமேனிகளும், உற்சவத்திருமேனிகளும் உள்ளன. இக்கோயிலின் தென் மேற்குப் பகுதியில் உருக்குமேனி தாயார் சந்நிதி கிழக்கு முகமாகவுள்ளது. கருடன் சந்நிதிக்கு வடகிழக்கில் மத்திய தீர்த்தக்குளம் உள்ளது. இதனுட்புறம் ஒரு கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இராஜகோபுரம் நான்கு தளங்களையும் ஐந்து கலசங்களையும் கொண்டது. மூலவர் விமானம் சக்கரவிமானம் என்றழைக்கப்படுகிறது.

கருவறையில் அடிப்பகுதியில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. குலோத்துங்கன் (1. கி. பி. 0075) கோயிலுக்கு நிலங்கள் அளித்ததையும், இரண்டாம் இராஜராஜ சோழன் கி பி. 1167 ஆம் ஆண்டில் நிலங்கள் அளித்ததையும் கூறும் கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயிலின் பிரமோற்சவம் ஆவணியில் கிருஷ்ண ஜெயந்தியில் தொடக்கத்தோடு பத்து நாள்கள் நடைபெறுகின்றது. நாள் பூசை காலையிலும் மாலையிலும் நடைபெறுகின்றது. உரோகினி பெருமாள் நட்சத்திரம், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள் திருநட்சந்திரங்கள், தீபாவளி, கருடசேவை, கார்த்திகை, பரணி வைகுண்ட ஏகாதேசி பங்குனி உற்சவம் முதலியநாள்களில்சிறப்புப்பூசைகள் நடைபெறுகின்றன உற்சவ மூர்த்திகளின் புறப்பாடு சிறப்பு நாள்களில் நடைபெறும். சிறப்புக் காலங்களில் பிரபந்தம், வேதம் முதலியவை ஒதப்படுகின்றன. சென்னை கோள்கண்டா எத்திராஜ் அம்மாள் அறகட்டளையிலிருந்து ஆண்டுதோறும் 2,500 ரூபாய் இக்கோயிலுக்கு வருமானம் கிடைக்கிறது. அதைக்கொண்டு பூசைகள் நிகழ்த்தப் பெறுகின்றன. அருளாளப்பெருமாள், எம்பெருமசனார், ஆச்சாரியார், வம்சாமனியைச்சார்ந்த பரம்பரை அரங்காவலர்கள் இக்கோயிலை நிருவகித்து வருகின்றனர். இக்கோயிலின் கருடன், நாகம் சப்பரம், பல்லக்கு மக்களகிரி முதலிய வாகனங்கள் உள்ளன.

திருமங்கையாழ்வார் — திருச்சந்த விருத்தம் 63, 64.
திருமங்கையாழ்வார் — பெரிய திருமொழி 6-10-4, பெரிய திருமடல் 127
பூதத்தாழ்வார் — இயற்பா இரண்டாம் திருவந்தாதி 94,
பேயாழ்வார் — இயற்பா இரண்டாம் மூன்றாம் திருவந்தாதி 30

காஞ்சிபுரம்

சிவாத்தானம்

# பிரம்மபுரீசுவரர் கோயில்

இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலுக்கு தெற்கே செல்லும் சாலையில் 2 கிலோமீட்டர் சென்று வேகவதி ஆற்றின் தென்கரையில் கிழக்கு நோக்கியவாறு 50 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஆணையின்வண்ணம்ஸ்ரீமகாசுவாமிவித்தியா பீடம் என்னும் பெயரில் ஒரு வேதபாடசாலை அமைக்கப்பட்டுள்ளது. அதில் வேதங்கள் போதிக்கப்படுகின்றன. இங்கு அந்த வித்தியாபீடம் இக்கோயில் வளாகத்துள்ளேயே செய்ல்பட்டு வருகின்றது. இது ஆதிசங்கர பகவத்பாதர் வழிபட்ட தலமாகும். காஞ்சிபராமாச்சாரியார் சந்திரசேகரேந்திர சுவாமிகள் இங்குச் சமயப் பணிகள் செய்து வந்துள்ளார்கள். சிவனிடமிருந்து மகா விஷ்ணு தோன்றினார். அவர் தம் நாபி கமலத்திலிருந்து பிரமனைத் தோற்றுவித்தார். பின்னர் பிரமன் உலகங்களைப் படைக்கும் ஆற்றல் பெறவேண்டிக் காஞ்சிக்கு வந்து சிவலிங்கம் நிறுவிப் பூசை செய்தார். பரமனிடம் சோமயாகம் செய்யுமாறு திருமால் கூற அவரும் அந்த யாகத்தைத் இங்குத் தொடங்கினார், அவன் மனைவி மரங்களில் ஒளிந்துக்கொண்டிருந்து பிரமன் தன்னைத் தேடி வந்து யாகத்திற்கு அழைக்கவேண்டும் என்று சரசுவதி விரும்பினாள்.

அவளை அங்குப் பிரமதேவன் தேடியும் காண இயலவில்லை. தன் வேறு மனைவிகளாக காயத்திரி சாவித்திரி ஆகிய இருவரையும் கொண்டு யாகத்தைத் தொடங்கினான். இதை அறிந்த சரசுவதி வேகவதி என்னும் ஆறாகப் பெருகி வந்தாள். அந்த யாகம் அழியாமல் காக்கத் திருமால் அந்நதியின் குறுக்கே படுத்து அந்நதியை வேறுபக்கம் செலுத்தினார். இதனால் பிரமதேவர் சிறப்பாக யாகத்தைச் செய்து முடித்து சிவபெருமானிடம் வேண்டிய வரங்களைப் பெற்றார். பின்னர் சிவன் சிவலிங்க வடிவில் இடமாக இங்குக்கோயில் கொண்டதால் இதற்கு சிவாத்தானம் என்பது பெயராயிற்று. இப்பகுதி தின்னா காஞ்சிபுரத்திற்குத் தெற்கில் அமைந்திருப்பதால் இது தென்னம் பாக்கம் என வழங்கி இப்போது தேனம்பாக்கம் என அழைக்கப்படுகின்றது.

மகாமண்டபத்தில் தெற்கில் தலைவாயில் உள்ளது வலமாக வரும்போது தென் மேற்கு முனையில் விநாயகர் சந்நிதியையும் வடமேற்கு முனையில் வள்ளி-தெய்வானையுடன் முருகப்பெருமானையும் காண்கிறோம். கருவறைப் புறக்கோட்டங்களில் தெற்கில் விநாயகர் தட்சிணாமூர்த்தி மேற்கில் திருமால் வடக்கில் பிரமன் துர்க்கை ஆகியரோடு கோமுகிக்கருகில் சண்டேசுவரர் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். தெற்கு நோக்கிய வாயிலின் வழியாக மகாமண்டபத்தினை அடையலாம் இதில் கிழக்குப் பகுதியில் சூரியன் வயிரவர், நடுவில் நந்திதேவர் பலிபீடம், மேற்குப் பகுதியில் உள்வாயிலையொட்டி விநாயகர் அவருக்கு அருகில் புடைப்புச் சிற்பமாக சாஸ்தா ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். இனி உள்மண்டபத்தைக் கடந்து கருவறையில் சுயம்பு வடிவில் சிவலிங்க வடிவில் எழுந்தருளியுள்ள பிரம்மபுரீசுவரரை வணங்கலாம் பின்புறமுள்ள சுவரில் ஆதிசங்கரர் சிவபெருமான் உமையம்மை விநாயகர் ஆகியோர் திருவுருவங்கள் காண்கிறோம், காஞ்சிபுரத்தில் மற்றைய எல்லா சிவன் கோயில்களிலும் சிவன் பார்வதியுடன் முருகன் இருக்க இங்கு மட்டும் விநாயகர் இருப்பது தனிச்சிறப்பாக போற்றப்படுகின்றது.

இக்கோயில் கருங்கல்லால் அழகாக புறச்சுவர் வேலைப்பாடுடன் கட்டப்பட்டுள்ளது. கருவறை அரைவட்ட வடிவம் கொண்டதாகும். கருவறை மீது மூன்று தளங்கள் கொண்ட தூங்கானை வடிவில் மூன்று கலசங்களுடன் விளங்குகிறது.

இக்கோயில் சுவர்களில் வடமொழி தமிழ் கல்வெட்டுகள் சில உள்ளன, இக்கோயிலில் குருக்கள் இரண்டு காலப் பூசை செய்து வருகின்றார். இக்கோயில் மிகவும் பாழ்பட்டுக் கிடந்ததால், ஸ்ரீ காமகோடி பீடம் ஸ்ரீ சந்திரசேகரந்திர சரசுவதி சுவாமிகள் இங்குத்தங்கி திருப்பணிகள் செயது இது கல்விக் கூடமாக விளஙக வேண்டுமென்று வித்யாபீடத்தையம தொடங்கியுள்ளார்கள். அது இக்கோயிலின் வளாகத்திலேயே சிறப்பாக இயங்கி வருகின்றது.

கிருத்திகை பிரதோடம் நவராத்திரி சங்கர ஜெயந்தி சிவராத்திரி ஆகியவை பல்வேறு சிறப்புகளுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம்

# பிறவாதீசுவரர் கோயில்

இக்கோயில் இறவாதீசுவரர் கோயிலுக்கு எதிரில் அரை கிலோ மீட்டர்த் தொலைவில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

ஆனால் இதன் வழி அப்பாராவ் தெருவில் உள்ளது. 20 சென்ட்பரப்பில் 5 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் ஒன்றரை மீட்டர் உயரமுள்ள மேடை மீது கட்டப்பட்டுள்ளது.

நிலையாமை நிறைகின்ற இவ்வுலகில் பிறந்து அறிவு மயங்கி வருந்துகின்ற பிறப்பில்லாதவாறு வாழ அருள்புரிய வேண்டுமென்று வாமதேவர் எனும் பெருமுனிவர் சிவபெருமானை நோக்கி வேண்டினார், அவருக்குச் 'சிவபெருமான் வழங்கிய அறிவுரை, அவர் காஞ்சி நகரை நண்ணி அங்குச் சிவபூசை செய்ய வேண்டுமென்பதாகும். அவ்வாறே காஞ்சியில் சிவலிங்கம் நிறுவி ஆகம விதிப்படி பூசனை செய்து பிறவித்துன்பத்தின்று விடுதலை பெற்றார் அவர் வழிபாடாற்றிய இடமே பிறாவதீசுரம் எனும் தலமாகும்.

உள்மண்டபத்தில் இருபுறமும் துவார பாலகர் திருவுருவங்கள் உள்ளன இதில் சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் ஆடும் காட்சி சுதைச் சிற்பத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. கருவறையில் பின் சுவரில் சோமாஸ்கந்த மூர்த்தியும தென் புறச்சுவ

ரில் பிரமதேவர் உள்ளிட்ட அறுவரும் வடபுறச்சுவரில் இந்திரன் உட்பட அறுவர் இறைவனின் வணங்கும் நிலையில் அவர்களின் உருவங்கள் உள்ளன.

கருவறை மீது 2 நிலைகளையுடைய சதுர விமானம் அமைந்துள்ளது. இவ் விமான மிகவும் சிதைந்துள்ளது. முறையாகப் பூசை நடைபெறவில்லை. பாது காப்பு இந்தியத் தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளது.

## சின்ன காஞ்சிபுரம்

# புண்ணியக் கோடீசுவரர் கோயில்

காஞ்சிமாநகரில் சின்னகாஞ்சியில் அமுதுபடிந் தெருவில் இக்கோயில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

பேராற்றலைச் சிவபெருமானிடமிருந்து பெற்ற திருமால் இத்தலந்தில் சிவலிங் கம் நிறுவி வழிபட்டார். இங்குள்ள புண்ணியத் தீர்த்ததில் நீரபடி, இங்குவழிபாடாற்று வோர். எய்தும் புண்ணியம் கோடி மடங்காகப் பெருகுதல் வேண்டும் என இறைஞ்ச சிவபெருமானும் அவ்வாறே அருள்பாலித்தார், இதன்காரணமாய் இத்தலத்திற்குப் புண்ணியக்கோடீசம் என்னும் பெயரும் இங்குள்ள மூலவருக்குப் புண்ணியக் கோடீசு வரர் என்னும் பெயரும் வழங்குவனவாயின.

முன்பொரு காலத்தில் பேராற்றல் பெறுவதற்காகத் திருமால் வேண்டினார். சிவ பிரான் திருவுளமிரங்கி, திருமாலுக்கு அவர் விரும்பிய ஆற்றலைத் தந்தருளுமுன், காஞ்சி நகரில் தமது பெயரில் சிவலிங்கம் நிறுவித் தாமரை மலர்களால் பூசை செய் யுமாறு பணித்தார். இவ்வாறு சிவபெருமான் பணிந்தற்கேற்பத் திருமாலும் காஞ்சி வந்தடைந்து தென்திசையில் சிவலிங்கம் நிறுவி வழிபாடாற்றினர், பூசைக்குரிய தாமரை மலர்களைத் திருமாலுக்குப் பறிந்துத் தரும் தொண்டு புரிந்து வந்தனன் கசேந்திரன் என்னும் யானை. அவ்வாறு மலர் பறித்து வரும் ஒரு நாளில் அது முதலையின் பிடியிற் சிக்கவே, திருமால் தமது சக்கரப்படை வீசி அதனைக் காத்த துடன் கசேந்திரனுடன் புண்ணியக் கோடித்தலத்தை அடைந்து கசேந்திரன் அளித்த பூக்களைக் கொண்டு வழிபட்டுச் சிவபிரானைப் பலவாறுபுகழ்ந்து, வாழ்த்தி துதிக்கும் போது சிவபிரான் அவர் தம்காட்சியளிந்துத் திருமால் விரும்பிய ஆற்றலை நல்கினார். சிவபிரானைத் திருமால் பலமுறை அன்புததும்ப 'வரதா' என்றழைத்த காரணத்தால் "வரதராஜன்" என்று அருள் புரிந்ததுடன் திருமாலில் சந்நிதியாகிய மலை அந்திகிரி என அன்றுமுதல் வழங்கப்பெறு என்றும் அருள்புரிந்து புண்ணியக் நாத சிவலிங்கத்துட் புக்கொன்றாயினர்.

கோயிலின் நுழைவாயிலின் அருகில் வடக்கு நோக்கியவாறு விநாயகர் சந்நிதி ஒன்றுள்ளது. கோயிலின் வெளிப்பிராகாரத்தில் தென்மேற்குக் கோடியில் விநாயகர் சந்நிதியும் வடமேற்குக் கோடியில் சுப்பிரமணியர் சந்நிதியும் உள்ளன.

மூலவர் சந்நிதியைச் சுற்றி அமைந்திருக்கும் பிராகாரத்தில் வரிசையாக மூர்த்தங்கள் உள்ளன. இங்கு இடமிருந்து வலமாகச் செல்லுங்கால், தென்கிழக்குக் கோடியில் வடக்கு நோக்கியவாறு இருக்கும் நால்வர் சந்நிதியிலேமுதற்சந்நிதியாகும் இச்சந்நிதிக்கு மேற்குக் கோடியில் இருப்பது சப்தமாதர்களின் வடக்கு நோக்கியும் விநாயகர் சந்நிதி கிழக்கு முகமாகவும் உள்ளது.

இந்த பிராகாரத்திலேலே வடமேற்குக் கோடியில் பாணலிங்க சந்நிதியும், ஈசுவரர் பாதமும் உள்ளன. இவ்விரண்டும் கிழக்கு நோக்கியுள்ளன. இதையடுத்துச் சற்றுக் கிழக்கே அமைந்திருப்பது சண்டேசுவரர் சந்நிதியாகும். இது வழக்கம்போல் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

ஈசுவரர் பாதத்திற்குக் கிழக்கே 17 மீட்டர்த் தொலைவில் தெற்கு நோக்கிய புவனேசுவரியம்மன் சந்நிதி இக்கோயிலில் அமைந்துள்ள மற்றொருகுறிப்பிடத்தக்க சந்நிதியாகும்.

முதற்பிராகாரமாகிய உட்பிராகாரத்தில் அமைந்துள்ள முன்சொன்ன சந்நிதிகள் அனைத்தும் அளவில் மிகச் சிறியனவாகும்.

மூலவர் சந்நிதி உள்மண்டபம், முகமண்டபத்துடன் கூடியதாகும். இதன் வாயில் முகமண்டபத்தின் தென்புறத்திலுள்ளது. இவ்வாயிலுக்கு நேரே எதிரே உற்சவ மூர்த்திகளின் சந்நிதி உள்ளது. எண்ணிக்கையில் உற்சவ மூர்த்திகள் எழுவர் இக்கோயிலில் உள்ளனர். அவை சோமசுகந்தர், அம்பாளுடன் வீற்றிருக்கும் சந்திரசேகரர், வள்ளி தெய்வயானையுடன் இருக்கும் சுப்பிரமணியர், கணபதி, சண்டேசுவரர், சுக்கிரவார அம்மன், அம்பாள் ஆகியோர்களின் திருவுருவங்களாகும். உள்மண்டபத்தில் மூலவரை நோக்கியவாறு மூலவருக்கு எதிரே சற்று வலப்புறத்தில் அமைந்திருப்பது சூரியமூர்த்தியின் திருவுருவமாகும்.

இக்கோயிலுக்கு முன்புறம் கிழக்குபுற வெளிமதிலுடன் இணைந்தவாறு 30 மீட்டர் நீளமும் 25 மீட்டர் அகலமும் கொண்டு அமைந்திருப்பது சக்கரத்தீர்த்தம் ஆகும்.

இக்கோயிலில் இரண்டு பிராகாரங்கள் உள்ளன. ஒன்று வெளிப்பிராகாரம் மற்றொன்று உள்பிராகாரம், வெளிப்பிராகாரம் புதர்களால் அடைபட்டு அன்பர்கள் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளது. உள்பிராகாரமாகிய முதற்பிராகாரம் நல்ல நிலையிலுள்ளது. இது முற்றிலும் மேற்கூரையிடப்பட்டுள்ளது. இது மூலவர்

சந்நிதியைச் சுற்றிலுமுள்ள அனைத்துச் சந்நிதிகளையும் உள்ளடக்கியதாகும். இப்பிராகாரமும் மூலவர் சந்நிதியுமே கோயில் கட்டப்பட்ட காலமுதல் இருந்து வருவனவாகும். இப்பிராகாரந்தின் ஓரங்களில் நான்குபுறங்களிலும் வரிசையாகத் தூண்கள் உள்ளன. அந்தூண்களும் சுற்றுப்புறச் சுவரும் பிராகாரத்தின் மேற்கரையைத் தாங்குவனபோல் உள்ளன.

கோயிலுக்கு முன்புறத்தில் வெளிப்பிராகாரத்தில் கொடிமரத்திற்குத் தெற்குக் கோடியில் மடைப்பள்ளி அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்கோயிலில் நாள்தோறும் காலையில் ஒருவேளை மட்டுமே பூசை நடத்தப் படுகிறது. இந்தப் பூசை தவிர, வேறு சிறப்பான பூசை எதுவும் நடப்பதில்லை. எப்பொழுதாவது யாராயினும் ஒருவர் நிதியுதவி செய்யும்போது அவர்களின் விருப்பத் திற்கணங்கச் சிறப்புப் பூசைகள் நடத்தப்பெறுகின்றன. சஷ்டி, கார்த்திகை, திங்கள் கிழமை ஆகிய நாள்களில் இக்கோயிலில் சிறப்பு ஆராதனைகள் நடத்தப்பெறுகின்றன. நிதிவசதியின்மை காரணமாகப் பெருவிழாக்கள் நடத்தப்பெறுவதில்லை.

பரம்பரை பரம்பரையாகத் தனியாரால் நிருவாகம் செய்யப்பட்டுவரும் கோயில்களுள் இதுவும் ஒன்று. காசிபகோத்திரத்தில் வந்த சிவாச்சாரியார் ஒருவர் இக்கோயிலைத் தற்போது நிருவகித்து வருகிறார். இவரே இக்கோயிலின் குருக்களும் ஆவார்.

இக்கோயிலில் கிடைக்கும் சிறு வருமானத்தைக் கொண்டு, கோயில் பராமரிப்பு, மற்றும் அறநிலையத் துறையினருககுச் செலுத்தப்படும் கட்டணம், மின்சார துறையினருக்குக் கட்டணம் ஆகியவை போன்ற செலவுகளைச் செய்துகொண்டு வருகின்றனர்.

இக்கோயிலுக்கு முன்புறம் அமைந்திருக்கும் சக்கரதீர்த்தத்தையடுத்து இருபக்கமும், தெற்கிலும் வடக்கிலும் முறையே 100 சென்ட், 95 சென்ட் நிலங்கள் இக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ளன. இது தவிர, கோயிலுக்கு அருகில் அங்கொன்றும் இங்கொன்றுமாக 12 மனைகள் உள்ளன. மாதம் ஒன்றுக்கு ஒரு வீட்டுக்கு 50 ரூபாய் வாடகையாக வருகிறது. ஆக 7200 ரூபாய் ஆண்டுவருமானமாக இக்கோயில் பெறுகிறது.

சிவஞான முனிவர் தாம் இயற்றிய காஞ்சிபுராணத்தில் இக்கோயில் இறைவரைப் பற்றி ஒரு படலத்தில் குறுப்பிட்டுள்ளார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 1,700

காஞ்சிபுரம்

# பொய்த்தேர் விநாயகர் கோயில்

இது காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் கிருஷ்ணன் தெருவின் தெற்குப்பகுதியில் கிழக்கு நோக்கியவாறு 50 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இக்கோயிலுக்கு இரண்டு விதமான காரணப்பெயர்களைக் கூறுகின்றனர். இக்கோயில் தேர்போல நான்கு சக்கரங்களுடன் விமானம் போன்ற அமைப்பையும் கொண்டுள்ளது. இஃது உண்மையான தேராக இல்லாது தேர்வடிவத்தில் விளங்குவதால் இதனைப் பொய்த்தேர் எனவும் அதில் எழுந்தருளியுள்ள விநாயகர் பொய்த்தேர் விநாயகர் எனவும் குறிப்பிடுகின்றனர்.

இப்பகுதி மணல் நிறைந்து விளங்கும் பூமியாதலால் நண்பகலில் அதில் விநாயகர் போன்ற கானல் நீர்த் தோற்றம் உண்டாகும் என்றும் கூறுவர். கானல் நீரைப் பொய்த்தேர் என அழைப்பர். இதனால் பேய்த்தேர் விநாயகர் என்று இவர் அழைக்கப்பட்டார் என்பர். காலப்போக்கில் இப்பகுதிகள் நகரமாகி விட்டபோதிலும் பழைய பெயர் அப்படியே நிலைத்துவிட்டது. பின்னாளில் வந்தவர்கள் பெயருக்கேற்ப விநாயகர் கருவறையைத் தேர்வடிவில் அமைந்தனர். பின்னர்ப் பொய்த்தேர் விநாயகர் கோயில் என்னும் பெயரும் நிலைத்துவிட்டது.

இக்கோயில் நெடிய மேடைமீது அகன்ற நெடிய் மண்டபத்தின் முன்புறம் கொண்டுள்ளது. முன்புறம் இம்மண்டபம் அகன்றுள்ளதால் வெளிப்பார்வைக்குத் தேர் வடிவம் தெரிவதில்லை. கருவறையில் விநாயகர் எழுந்தருளியுள்ளார். முன் மண்டபத்தின் வடபகுதியில் முருகப்பெருமானும் வட கிழக்குப் பகுதியில் நவக்கோள்களும் எழுந்தருளியுள்ளனர்.

கருவறையும் மண்டபங்களும் வண்ணம் தீட்டப்பட்டுப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. கருவறை மீது ஒற்றைக் கலச விமானமும் திறந்தவெளிச் சுற்றுப் பிரகாரமும் உள்ளன. இங்குத் திரளான மக்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

ஆண்டுதோறும் இலட்சார்ச்சனையும் விநாயகர் சதுர்த்தியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

தெருவார் நிருவாகத்தின் கீழ் மிகவும் சிறப்புடன் செயல்படுத்தப்படுகின்றது. இது மண்டபத்துடன் கூடிய விநயாகர் கோயில்களுள் இதுவும் ஒன்றாகும்.

காஞ்சிபுரம்

# மகா ஆனந்த உருத்திரேசர் திருக்கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்திலுள்ள அக்கணம்பாளையத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

உருத்திரல் இறைவனை இங்கு வழிபட்டால் இது மகா ஆனந்த உருத்திரேசர் கோயில் என வழங்கலாயிற்று.

இக்கோயிலின் தெற்கு வாயில் வழியாக நுழைந்ததும் தென்மேற்குக் கோடியில் ஆனந்த விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறுள்ளதைக் காணலாம். அதையடுத்து அதற்கு நேரொந்தவாறு சுப்பிரமணியர் சந்நிதியில் வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் கிழக்கு முகமாகக் காட்சியளிக்கிறார். வடகிழக்குக் கோடியில் வயிரவர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது, இதனையடுத்துச் சூரியன் திருவுருவம் மேற்குநோக்கியுள்ளது. சனீசுவரரை அடுந்துச் சூரியன் திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளது.

கருவறையை நோக்கியவாறு நந்திதேவர் சந்நிதியும் பலிபீடமும் உள்ளன. கருவறையில் ஆனந்த உருத்திரேசர் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கியுள்ளார். கருவறைக்கு வெளியே தட்சணாமூர்த்தி தெற்கு நோக்கியும், கருவறைக்கு வடக்கில் சண்டேசுவரரும் உள்ளார்கள்.

கோயிலில் தீர்த்தமான ஆனந்த உருத்திரேசர் தீர்த்தம் பிராகாரத்தின் வெளியேயுள்ளது.

இக்கோயிலின் மூலத்தானத்தின் மீது அமையும் விமானம் ஒருதளத்தையுடையது. வட்டமான சிகரத்தில் ஒரு கலசமுள்ளது, நான்கு பெரிய நாசிகளும் நான்கு சிறிய நாசிகளும் உள்ளன. மேற்பகுதியில் தெற்கு முதல் கிழக்கு வரை முறையே தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், இலிங்கோற்பவர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. கருவறையில் வெளிச்சுவரில் தெற்கு முதல் கிழக்கு வரை முறையே விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

இக்கோயிலில் நாள் பூசை காலையில் நடைபெறுகிறது. சிவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, கார்த்திகை தீபம், தீபாவளி, சனிப் பெயர்ச்சி, திருவாதிரை ஆகிய நாள்

களில் சிறப்புப்பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் நடராசர், சிவகாமி உலாத் திருமேனிகள் உள்ளன. மார்கழித் திருவாதிரையில் உற்சவர் புறப்பாடு நடைபெறும். அதற்கான சப்பரம் இக்கோயிலிலுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறையினரால் நியமிக்கப்பட்ட தக்கார் ஒருவரின் மேற்பார்வையில் இக்கோயில் நிருவாகம் செயற்படுகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 5,281

காஞ்சிபுரம்

# மகா ருத்ரேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் மாதானம்பாளையம் தெருவில் கிழக்கு நோக்கிய கருவறையும் தெற்கு நோக்கிய தலைவாயிலையும் 30 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

மகாருத்திரர்களான ஏகாதசி ருத்திரர்கள் காஞ்சிபுரத்திற்கு வந்து சிவலிங்கம் வைத்து வழிபட்டு பேறு பெற்ற தலமாகும். இக்கோயில் கருவறை உள்மண்டபம் முக மண்டபம் திறந்த வெளிச்சுற்றுப்பிரகாரம் ஆகியன அமைந்துள்ளன. இக்கோயிலை வலம் வருகையில் விநாயகர் தேவியருடன் கூடிய முருகன் மேற்கில் நாகப் பிளைவுகளுடன் கூடிய நாகேசுவரர் கிழக்கில் சூரியன் வடகிழக்கில் நவக்கிரகம் பைரவர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். கருவறையுள் மகாருத்ரேசுவரர் பெரிய லிங்கமாக எழுந்தருளியுள்ளார். முருகன் சந்நிதி முன்பு வீரவாகு தேவர் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் பின்புறம் தலவிருட்சமான வில்வமரம் உள்ளது. இக்கோயிலில் ஒரு காலப்பூசை மட்டும் குருக்களால் செய்யப்பட்டு வருகின்றது, சிவராத்திரி கந்தர்சட்டி முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சூரன் இடபம் மயில் முதலிய வாகனங்களும் சப்பரங்களும் உள்ளன. இக்கோயிலில் நாகலிங்கப் பூவினால் அர்ச்சனை செய்தால் மிகவும் சிறப்பு என்று கருதப்படுகின்றது.

இத்தெருவார் நிர்வாகத்தின் கீழ் இது செயலாற்றப்படுகிறது.

### காஞ்சிபுரம்

# மகாலிங்கதானம் கோயில்

இது கோனேரிக்குப்பம் அன்பாராவ் முதலி தெருவில் வடசிறகில் உள்ள சிறு சந்நிதி மேற்கு நோக்கியவாறு ஆறு மீட்டர் நீளம் ஆறு மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் இச்சந்நிதி அமைந்துள்ளது.

மிகப்பெரிய திருவுருவில் விளங்கும் இம்மூர்த்தியை அண்டக நாயனார் எனவும் வழங்குபவர். இதனுள் பெரிய வடிவமாக 2 மீட்டர் உயரத்திற்கான சிவலிங்கம் உள்ளது. வேறு மூர்த்தங்கள் இல்லை. விமான அமைப்பின்றித்தளம் சமமாக அமைந்துள்ளது. ஓர் ஊழி முடிவில் துயிலெழுந்த பிரமதேவர் உலகைப் படைக்க எண்ணுகையில் வெள்ளத்தில் பாம்பாணை மேல் துயிலும் தன் தந்தையாகிய திருமாலை மயக்க உயர்வினால் "நீயாரென" வினவினான். திருமால் உலகிற்கு முதல்வன்யான் எனக் கூறக்கேட்ட பிரமன் நகைத்து உலகிற்கு முதல்வன் நீயிமில்லை பிறரும் அல்லர். யானே முதல்வன் என்றவன் இவ்வாறு இருவரும்சொற்போர் புரிந்து முதிர்ந்து விற்போராக தேவப்படைகள் பதினாயிரம் ஆண்டு போர் செய்தனர். பிரமன் விடுத்த உருத்திரக்களையும் நிகழ்த்திய போரிடையே சிவபிரானார் தீப்பொறி சிதறச் சோதிலிங்க வடிவமாய்த் தோன்ற அவ்விருபடைகளும்இவ்விலங்கத்துள் மறைந்தன.

திருமால் பன்றியாய் அச்சோதிலிங்கத்தின் அடியையும், பிரமன் அன்னமாய் அதன் முடியையும் காண்பான் முறையே பூமியை இடந்தும், விசும்பிற் பறந்தும் ஆயிரம் ஆண்டும் தேடியும் வெற்றி காணாமையால் மயங்கினர். அப்பொழுது நாதம் ஒளி வடிவமாய் ம் உஓம் என இருபகுப்பாகி இக்கலந்து இருக்கு, யசுர், சாமம், என்னும் மூன்று வேதமாய் விரிந்து இறைவன் இயல்பை விளக்க அவனது அருட்குறியாகும் 'இது' எனக் கூறின. மயக்கம் நீங்கி உண்மையை உணர்ந்த இருவரும் இறைவனைப் போற்றி வழிப்பட்டனர். இத்தகைய மயக்கம் அனுகாமையையும் பெருமான்பால் அன்புடைமையும் திருமாலும் பிரமர் இருவரும் சிவபிராளாரிடம் வேண்டிப் பெற்றனர். பின்புறசிருட்டித் தொழில் தனக்கு நிலைபெறத் தன்னிடத்துப் பெருமான் தோன்ற வேண்டுமெனப் பிரமன் வேண்டினன். அதனை அவனுக்கு வழங்கி இறைவன் மேலும் சில அருளுரை வழங்கினார்.

" நீவிர் இருவரும் காஞ்சியை அனுகி ஒரு சிவலிங்கம் நிறுவிப் பூசித்துப் படைத்தல் சாத்தலுக்குரிய உரிமையைப் பெறுவீர்களாக, மானிடர் தேவர் யாவரும்

சிவலிங்க பூசனையை மேற்கொள்வார்களாக. அவ்வாறு பூசனை புரிவார்க்கு மயக்கம், வறுமை பயம், மனக்கவலை, பசி, நோய் முதலிய தோன்றி வருந்தும் பிறவி ஒழிவதாக, ஒருகாள் பிறப்பிலும் வருத்தமின்றி மகிழ்ச்சி எய்தி வாழ்வாராக. இயமன் ஒருகாலமும் அவர் தம்மை அணுகாதொழிக, பூசை புரியாதார் தமக்கென கலைகள் இல்லாதவராவர். அவர்களுடன் வார்த்தையாடுதலும் இழிஞானம் இழிஞர் அதற்கு ஏதுவாகும். வேள்வி, தானம், விரதம், முதலானவை தரும்பயன் பூசனையால் வரும் பயனுக்குக் கோடியில் ஒரு பங்கிற்கும் நிகராகா. உலகம் உய்யுமாறு இதற்கு ஆணைகளை விதித்தோம், என்றருளி மறைந்தனர். திருமாலும் பிரம்மனும் காஞ்சியை அடுந்துச் சிவலிங்கம் நிறுவிப் பூசித்துப் பயன்பெற்றனர் சிவலிங்கப் பூசனையின் பயனை வரையறுத்துக்கூற வல்லவர் ஒருவர் உளரோ" என அருளினர்.

இங்கு முறையான பூசை செய்யப்படுவதில்லை. மகா சிவராத்திரி போன்ற சிறப்பு நான்கில் மட்டும் பூசனை நடைபெறுகின்றது.

காஞ்சிபுரம்

# மணிகண்டீசுவரர் கோயில்

இக் கோயில் விஷ்ணு காஞ்சி எனப்படும் சின்னகாஞ்கிபுரம் திருக்கச்சி நம்பித் தெருவில் மேற்கு நோக்கிய கருவறையும் தெற்கு நோக்கி அமைந்த வாயிலையும் கொண்டுள்ளது.

பாற்கடல் கடைந்து தேவர் அமுதுண்டபின்னர்த் தங்களுக்காகப் பரமேசுவரன் நஞ்சுண்டதற்காக மனம் வருந்தி இவ்விடத்தில் ஓர் இலிங்கம் நிறுவிவழிப்பட்டுப் பேறு பெற்ற தலம் இதுவாகும் எனக் காஞ்சிப்புராணம் கூறுகிறது.

பாற்கடலில் தோன்றிய நஞ்சைக்கண்டத்தில் சிவபெருமான் அடக்க அதனால் நீலமணிபோலும் கண்டத்தை அவர் அடையப்பெற்றதனால் அவருக்கு நீலகண்டன் நீலமணிமிடற்றன் என்னும்பெயர்கள் வழங்கின. இவ்வகையில்மணிகண்டன் என்ற பெயர் அமைய இவர் இங்கு வீற்றிருப்பதால் இக்கோயில் மணிகண்டீச்சுரம் என வழங்குவதாயிற்று.

இங்குத் தலவிருட்சம் இல்லை தெற்கு வாயிலில் வலப்புறந்தில் விநாயகப்பெருமான் சந்நிதி உள்ளன. இதனை அடுத்து வலமாகச் சென்றால் மணிகண்டீசர் திரு

வுருவம் இரண்டு சிவலிங்களில் காணப்படுகிறது. உட்சென்றால் மேற்குப் பிராகாரத்தில் கிழக்கு நோக்கியவண்ணம் நந்தியம்பெருமாள் சுவாமியைப் பார்த்தவண்ணம் நான்குகால் மண்டமத்தில் வீற்றிருக்கிறார். அவருக்குப் பின்புறம் மரத்திற்கான பீடமும் அதனையடுத்துப் பலிபீடமும் உள்ளன.

கிழக்கு நோக்கிய தனிக்சந்நிதியில் ஆறுமுகப் பெருமான் நம் தேவியரோடு வீற்றிருக்கின்றார். தனிச்சந்நிதியில் சிவலிங்கம் ஒன்றுள்ளது. அதனையடுத்து வடக்குப் பிராகாரத்தில் வேப்பமரமுள்ளது. வடகிழக்கு மூனையில் சுந்தராம்பிகை சந்நிதி உள்ளது. இங்கு மூலவராகிய சுந்தராம்பிகை நான்குகரங்களுடன் தலையில் சோதி முடியுடன் கத்தி, மருகம், கபாலம், பாசம் ஆகியவற்றை ஏந்திச்சுகாசனத்தில் வீற்றிருக்கின்றார். கோயிலின் தென்கிழக்கு முனையிலுள்ள மண்டபத்தில் நவக்கிரகங்கள் சந்நிதி உள்ளது. இங்குள்ள அம்பிகையின் திருவுருவம் அம்பிகையின் திருவுருவமன்று. முன்பு தனியாக இருந்த பிடாரியின் திருவுருவத்திற்கு ஒரு சந்நிதி கட்டப்பட்டது என்றும் கூறுகின்றனர்.

இக்கோயிலுக்குரிய தீர்த்தம் வாசுகி தீர்த்தம் என்னும் பெயரில் விளங்கி வருகிறது. பாற்கடல் கடைவதற்கு மத்தில் கயிறாகப் பயன்பட்ட பாம்பு வாசுகி நஞ்சு கொடுத்துவிட்டதற்கு வருந்தித் தன்பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி இங்கு இறைவனை தன் படத்திலுள்ள இரத்தின மணிகளால் பூசித்து இறைவன் திருமேனியில் அணிகலனாகும் பேறுபெற்றது. அதனால் இதற்கு வாசுகி தீர்த்தம் என்னும் பெயர் ஏற்பட்டது. இத்தீர்த்தத்திற்கு அழகிய படிக்கட்டுகள் உள்ளன.

நுழைவாயிலின் மீது கோபுரம் இல்லை. சுவாமி கருவறையின் மீது விமானம் விளங்குகிறது. நந்திதேவர் மண்டபத்தின் மீதும் ஒரு தளவிமானம் உள்ளது.

காமிக ஆகமமுறையில் இரண்டு காலப் பூசை நடைபெறுகிறது. கார்த்திகை சோமவாரம், திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம் போன்ற அனைத்து விழாக்களும் நடைபெறுகின்றன. தனிப்பட்ட குருக்கள் ஒருவர் பரம்பரை அருச்சகராகவும் அறங்காவலராகவும் இருந்து பணிபுரிந்து வருகிறார்.

சிவஞானமுனிவர் இயற்றிய காஞ்சிபுரம் புராணத்திரல் மணிகண்டேசப் படலத்தில் இக்கோயிலைச் பற்றி செய்திகள் உள்ளன. சனீசுவரர் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றதால் சனிக்கிழமைகளிலும் இறைவன் மாலையில் திருநடனம்புரிந்து காட்டிய இடமாதலின், பிரதோட காலங்களிலும் இப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு வழிபடுதலால், நோய்கள் நீங்குகின்றன என்பதும் அல்லல்களிலிருந்து விடுதலை பெறலாம் என்பதும் நம்பிக்கையாகும்.

காஞ்சிபுரம்

# மதங்கேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் மிஷன் மருத்துவமானைச் சாலையின் வடசிறகில் 10 சென்ட் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

மதங்க மாமுனிவர் ஐம்புலன்களை வெல்வதற்கு இங்குச் சிவலிங்கம் நிறுவி வழிபட்டதாகக் கூறுவர். இவருக்கு அருள்புரிய எண்ணிய பார்வதி இவருக்கு மகளாகப் பிறந்தாள். இதனால் பார்வதிக்கு மாதங்கி என்னும் பெயர் வாய்த்தது என்பர்.

தெற்கு வாயிலின் வழியாக உட்சென்றால் பெரிய முற்றத்தில் கிணறு ஒன்றையும் நந்தி, அம்பிகை உருவத்தையும் காணலாம். இதற்குக் கிழக்கில் 2 மீட்டர் உயர மேடையின்மீது கருவறையும் மகாமண்டபமும் உள்ளன.

மகாமண்டபத்தின் தென்புறச்சுவரில் தொகுதிச் சிற்பங்கள் இரு தொகுதிகளாகவும், வாயிலையொட்டித் துவாரபாலகர், நடனமாடும் சிவன் ஆகியோர் திருவுருவங்களும் உள்ளன. தொகுதிச் சிற்பங்களாக இராவணன் கயிலையைப் பெயர்த்தெடுக்கும் காட்சி, ஊர்த்துவாதண்டவர், கசசம்மாரர், கங்காதரர் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. மற்றும் இரண்டாவது தொகுதியில் இராவணன் கயிலை மலையைப் பெயர்க்தெடுத்தல், முனிவரும் மற்றவரும் அஞ்சுதல், இறைவரைப் பார்வதி அணைத்துக் கொள்ளுதல், வானத்து அமரர் நின்றிருத்தர் ஆகியோர் திருவுருவங்களுடன் கூடிய காட்சிகளும் கசசம்மாரர் சிற்பத்தில் யானையை உரித்துப் போர்த்தும் இறைவன், பூதங்கள் ஆகியோர் சிற்பங்களும் ஊர்த்துவதாண்டவர்சிற்பங்கள் எட்டுக்கரங்களுடன் வலக்காலைவானுற நிமிர்த்திய நிலையும் இசைக்கருவிகளை இயக்கும் பூதகணங்கள் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. கங்கையை ஏற்கும் இறைவன் சடையை விரித்துக், கங்கையை ஏற்றுக் கொள்ளுதல், உமாதேவி, பகீரதன், நந்திதேவர், கணங்கள் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன.

கோயிலை வலம்போது வடபுறச்சுவரில் துர்க்கையின் வடிவம் எட்டுக்கரங்களுடன் விளங்குவதைக் காண்கிறோம். நடுவில் சலந்தரனை அழிக்கும் சிவன், சிவனை இருபுறமும் வணங்கும் திருமால், பிரமதேவர் முதலியோர், லதா விருச்சிக தாண்டவக் கோலம் ஆகியவற்றையும் காணலாம். பின்புறம் துவாரபாலகர்கள், அண்ணாமலையார், வராகர், பிரமதேவர் ஆகியோர் உள்ளனர். தென்புறச்சுவரில்

சிற்பங்கள் சிதைந்துவிட்டன. எனினும், தென்முகக்கடவுள், விநாயகர், கசலட்சுமி ஆகியோர் உருவங்கள் இருந்திருக்கலாம் என்பது சிதைவுகளிலிருந்து புலனாகிறது.

(மதங்கம்) யானையின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட பல்லவர் கோயில்களுள் இது பெரியதும் அழகியதாகும். இக்கோயிலில் முறையாகப் பூசைகள் நடைபெறுவதில்லை. இந்தியத் தொல்பொருள் துறையின் பாதுகாப்பிலுள்ளது.

காஞ்சிபுரம்

# மல்லிகார்ச்சுனேசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் சர்வ தீர்த்தக் கரையின் தெற்குப் பாகத்தில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. தற்காலத்தில் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளதால் இக்கோயில் அழகாகக் காட்சியளிக்கிறது.

அருச்சுனன் இத்தலத்தில் சிவலிங்க நிறுவிப் பூசித்தமையால் இக்கோயில் இப்பெயர் பெற்றது.

இக்கோயிலின் கருவறையில்மல்லிகார்ச்சுனன் காட்சியளிக்கிறார். உள்மண்டபத்தில் விநாயகர், அதிகார நந்திதேவர், ஆகியோரும் காணப்படுகின்றனர். உள் மண்டபத்தின் முன்புறம் நான்கு சதுர, எண்பட்டை அமைப்புகளுடைய தூண்களைக் கொண்ட முன்மண்டபம் அமைந்துள்ளது.

இக்கோயிலின் ஐந்து கோட்டங்களில் தெற்கு முதல் வடக்கு வரை முறையே விநாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமதேவர், துர்க்கை ஆகியோர் எழுந்தருளியுள்ளார்கள். பிராகாரத்தின் தென்மேற்கு முனையில் விநாயகர் சந்நிதியும் பிராகாரத்தின் வடமேற்கு முனையில் வள்ளி தெய்வயானையுடன் முருகர் சந்நிதியும் உள்ளன. சண்டேசுவரர் சந்நிதி துர்க்கை திருவுருவத்திற்கே எதிரிலே தெற்கு நோக்கிவவாறு அமைந்துள்ளது. வயிரவர் சந்நிதி வடக்கு வாயிலின் அருகே தெற்கு நோக்கியவாறு காண்கிறோம். அருகே காணப்படும் சூரியன் சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது நந்தி தேவர் திருவுருவம், பலிபீடம் ஆகியவை வடக்கு வாயிலின் நேரே பிராகாரத்தின் மையத்தில் மல்லிகார்ச்சுனரை நோக்கியவாறுள்ளன. நவக்கிரகங்களின் சந்நிதி பிராகாரத்தின் பலிபீடத்தின் தெற்கே அமைந்துள்ளது.

இக்கோயிலின் விமானம் மூன்று அடுக்குகளையுடையது. இதன் சதுரமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. நான்கு நாசிகள் சிகரத்தில் திசைக்கு ஒன்றாக அமைந்துள்ளது.

இக்கோயில் நித்திய பூசை காலையில் நடைபெறுகிறது. சோமவாரங்களிலும் கார்த்திகை, சிவராத்திரியிலும் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. அட்டிபட்டி கோகிலாம்பாள் அறக்கட்டளை என்னும் நிறுவனம் இக்கோயிலை நிருவகித்து வருகிறது

காஞ்சிபுரம்

# மாண்டுகன்னீச்சுவரர் கோயில்

இக்கோயில் பெரிய காஞ்சிபுரம் ஒக்கப்பிறந்தான் குளத்தில் அருகில் கிழக்கு நோக்கியவாறு 10 செண்ட் நிலப்பிரப்பில் அமைந்துள்ளது.

மாண்டு, கன்னி என்னும் முனிவர் இந்திரன் வெட்கம் அடையுமாறு போக உலகமாகிய சொர்க்கத்தைப் படைத்து ஐந்து அரம்பையர்களைப் படைத்து அவர்களுடன் இன்பமுடன் வாழ்த்து இங்குக் காஞ்சிபுரம் வந்து சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தலமாகும். அவருடன் ஐந்து அரம்பையரும் உடன் வந்து வழிபட்ட தலம் இஃதாகும்.

இங்குள்ள குளத்தை அரம்பையர் ஐவர் அமைத்ததால், அத்தீர்த்தம் என்னும் பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. இப்போது ஒதுக்கப்பிறந்தால் குளம் என அழைக்கப்படுகின்றது.

இக்கோயில் கருவறையிலுள்ள 16 பட்டைச் சிவலிங்கம் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது. மாண்டு கன்னீச்சுவரர் என்னும் பெயரில் சிவபெருமான் அழைக்கப்பெறுகிறார்.

இங்குப் பல்லவர், சாளுக்கியர் சிற்பங்கள் கலந்து காணப்படுகின்றன. வெளிப்புறச் சுவரிலும் வாயிலிலும் பன்றி, கத்தி, சூரியன் ஆகிய சாளுக்கிய முத்திரைகள் காணப்படுகின்றன.

நுழைவாயிலின் மீது 5 கலசங்கள் கொண்ட கோபுரம் உள்ளது. நந்திமண்டபத்தில் மீது ஒரு தல விமானமும் உள்ளன.

இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசைசெய்துவருகின்றார். இக்கோயில் நிருவாகம் இந்து சமய அறநிலையத் துறையில் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது.

## காஞ்சிபுரம்

(தர்ம மகா தேவீச்சரம்)

# முக்தேசுவரம் கோயில்

இக்கோயில் இராஜ வீதியின் மேற்கு நோக்கியவாறு 5செண்ட் பரப்பில் அமைந்துள்ளது. இக்கோயில் பல்லவன் இரண்டாம் இராஜவர்மன் தர்மமகாதேவியால் தர்ம மகாதேவீச்சரம் என்னும் பெயரில் சிவபெருமானுக்காக அமைக்கப்பட்ட கோயிலாகும்.

இக்கோயில் 2மீட்டர் உயரமுள்ள மேடையின் மீது கருவறை, மகாமண்டபம் எனும் இணைந்த இருபகுதிகளாகக் கட்டப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் பகக்துக்கு இரண்டாக பெரும்தொகுதிச் சிற்பங்கள் காணப்படுகின்றன. வடக்குச்சுவரில் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்கும் காட்சி அமைந்துள்ளது, பிரமன் தேவி முனிவர் கூட்டம் ஆகியோர் கயிலையிலிருக்க அதனைத் தனது இருபது தோல்களாலும் அசைத்து எடுக்கும் இராவணச் சிலை அழகுற அமைந்துள்ளது. இதனையடுத்துக் கஜசம்மாரர், யானையை உரித்துப் போர்த்துக் கொள்ளும் நிலையில் பல பூத கணங்கள்சூழ உள்ளார். இச்சிற்பத்தில் அச்ச நிலையில் காணப்படும் பார்வதி உள்ளார்.

மேற்கு வாயிலின் இருமருங்கும் நெடிய துவாரபாலர்கள் உள்ளனர். தெற்குச் சுவரில் கங்காதரர் உள்ளார். பார்வதியை அணைத்த நிலையில் இடக்கையால் சடையை விரித்து வானிலிருந்து விழும் கங்கையை ஏற்கும் வகையில் இவர் உள்ளார். காலடியில் பகீதரன் உள்ளார் இதனையடுத்து, எட்டுக் கரங்கள் கொண்டு வானுறக் காலை உயர்த்திச் சிவபெருமான் ஊர்த்துவதாண்டவர் ஆடுகிறார், நந்தி மீது சாய்ந்த வகையில் பார்வதி மகிழ்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். இங்குள்ள வாயிலைக் கடந்து கருவறைக்குள் சென்றால், தென்புறம் எழுவர் கொண்ட தொகுதியும் இறைவனை வணங்கும் நிலையில் உள்ளனர். நடுவில் சிவலிங்கம் அமைந்துள்ளது. பின்புறச் சுவரில் பெரிய சிங்காதனத்தில் சிவபெருமான், கந்தர், உமாதேவியர் ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

கோயிலின்மேற்கு முற்றத்தில் நந்திதேவர் திருவுருவமும் பலிபீடமும் உள்ளன முறையாகப் பூசை நிகழ்வதில்லை. இக்கோயிலை இந்தியத் தொல் பொருள் துறையினர் பாதுகாத்து வருகின்றனர்.

கருவறை மீது மூன்று நிலைகளையுடைய விமானம் அமைந்துள்ளது. இது சதுரமாக அடிப்படையில் ஆரம்பத்து எண்பட்டைச் சிகரமுடையதாக உள்ளது. உச்சியில் சுதையிலான கலசம் அமைந்துள்ளது. பல்லவர்களின் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின் படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 400

சின்ன காஞ்சிபுரம்

## முத்தாலம்மன் கோயில்

இக்கோயில் வரதராசப் பெருமாள் கோயிலிலிருந்து தேனாம்பாக்கம் செல்லும் வழியிலுள்ள வேகவதி ஆற்றுப் பாலத்திற்கு மேற்கே ஆற்றின் தென்கரையில் கிழக்கு நோக்கியவாறு 10 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

திறந்த வெளியில் அமைந்த கோயிலின் முன்புறம் பலிபீடமும் எதிரிடையான் திருவுருவமும் அமைந்துள்ளன. முக மண்டபத்தில் பெரிய விநாயகர் நவக்கிரகங்கள் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன அடுத்து உள்மண்டபத்தையும் காண்கிறோம். இவை இரண்டும் அகன்ற பரப்புடையவை அடுத்துக் கருவறையை அடைகிறோம் கழுத்து வரையலான முத்தாலம்மன் வடிவங்கள் மூன்று உள்ளன. சுவரையொட்டி பெரிய வளைவிம் அதில் சுதையால் அமைந்த நாற்கரங்களும் அமர்ந்த வடிவில் பெரிய முத்தாலம்மன் சிலை அமைந்துள்ளது.

உள்மண்டபத்தில் தபன விநாயகர் மரத்தாலான அம்பிகை உலாத்திருமேனி கள் ஆகியன இருக்கின்றன. கோயில் நன்கு திருத்திச் கட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றது. முகப்பின் மீது அம்பிகை சுதை வடிவம் உள்ளது,

தைமாதம் ஆடிமாதம் வெள்ளிக்கிழமைகளிலும் செவ்வாய் கிழமைகளிலும் ஊர் மக்கள்கூடிச் சிறப்பான வழிபாடுகள் செய்து வருகின்றனர். இதனையொட்டி விழாவும் நடைபெறுகிறது.

பூசாரி ஒருவர் ஒருகாலப் பூசை செய்கிறார். செவ்வாய்க்கிழமைகள் ஞாயிற்றுக் கிழமைகள் ஆகிய நாள்கள் சிறப்பு வழிபாடு நடைபெறகின்றது.
இக்கோயில் தனிப்பட்டவர் நிர்வாகத்தில் இயங்கி வருகின்றது.

காஞ்சிபுரம்

## முக்தீசுவரர் கோயில்

இக்கோயில் காஞ்புரம் பிள்ளையார் பாளையம் கிருஷ்ணன் தெருவின் கிழக்கு சிறகில் மிகவும் உள்ளடங்கியவாறு இருபது சென்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கிய கருவறையும் வடமேற்கில் அமைந்த திட்டிவாயிலையும் கொண்டு விளங்குகின்றது.

தெருவின் தொடக்கத்தில் சிறு கோபுரமும் அதனையொட்டி அறுபது நீள மீட்டர் நீளத்திற்கு கோயிலின் இருபுறமும் கருங்கல் பலகைகளைக் கொண்ட குறுகிய பாதையும் பாதையின் இருபுறமும் முள்வேலம் மரங்கள் வளர்ந்து தூய்மையற்று நிலை பெற்றுள்ளன. கோயிலின் பின்வாயில் வழியாக உட்சென்று முதலில் வடக்கு பிராகாரத்தில் சண்டேசுவரப் பெருமானையும் வடகிழக்கு முனையில் தெற்கு நோக்கிய நிலையில் துர்க்கையம்மன் சந்நிதியும் தென்மேற்கு முனையில் விநாயகப் பெருமானையும் வணங்குகின்றோம். கிழக்கிலுள்ள முற்றத்தில் நந்திதேவர் சந்நிதியும், பலிபீடம் உள்ளன.

உள்மண்டபத்திலுள்ள துவார விநாயகர் முருகன் நாகர்கள் ஆகியோர்களையும் வணங்கிக் கருவறையில் மிகப்பெரிய சிவலிங்கம் வடிவில் எழுந்தருளியிருக்கும் முக்தீசுவரரை வணங்கலாம்.

இக்கோயில் கருவறை, உள்மண்டபம், திறந்தவெளி சுற்றுப்பிராகாரம் ஆகிய அமைப்புகளைக் கொண்டதாகும். இக்கோயிலில் குருக்கள் ஒருகாலப் பூசை நடத்துகிறார். விநாயக சதுர்த்தி, திருவாதிரை, தமிழ் வருடப்பிறப்பு, சிவராத்திரி முதலிய நாள்களில் சிறப்பாக அபிசேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இது இந்துசமய அறநிலையத் துறை மேற்பார்வையில் தெருவார் செயற்பட்டால் செயற்பட்டு வருகின்றது.

காஞ்சிபுரம்

# முக்தீசர் கோயில்

காஞ்சி மாநகரின் இருப்புப்பாதை நிலையத்தினின்று சற்றேரக்குறைய ஒரு கிலோமீட்டர்த் தொலைவில் ஆடிசன்பேட்டைப்பகுதியில் கிழக்கு நோக்கியவாறு இக் கோயில் அமைந்துள்ளது.

முத்தீசர் என்பதற்கு வீடுபேற்றினை அருளும் ஈசன் எனப் பொருள் விளக்கம் காணலாம். இப்பெருமானுக்குத் தருமமகாதேவ ஈசுவரர் என்னும் பெயருமுண்டு.

முன்பொரு காலத்தில் காசிபமுனிவர் மனைவியர்களாகிய சந்துரு, சுபருணை ஆகிய இருவருள் அழகில் எவர் என்பது பற்றி வாதம் மூண்டது. அதில் தோற்றவர் வெஞ்சிறை புகவேண்டும் என்ற நிபந்தனைக்கேற்ப வகுக்கப்பட்ட போட்டில் சந்துரு வென்றதால் சுபருணை வெஞ்சிறையிலிடப்பட்டாள். பின்னர் கருடனை மகனாகப் பெற்றாள். விசும்பிலுள்ள குளர்மதி அமிழ்தமகொண்டுவரப்படின், அவருக்கு

றையிலிருப்பது மீட்புக் கிடைக்கும் என்னும் உண்மையை இறைவன் அருளால் உணர்ந்தாள். தம் தாயின் வேண்டுகோளுக்கேற்பக் கருடன் முத்தீசரை வழிபட்டு அமிழ்தம் இருக்கும் இடம் எய்தி, அங்கு ஐராவதத்திற்குத் தலைவனான இந்திரன் எதிர்ந்தால் அவனை வென்று தன்பு தன்னை எதிர்த்தத் திருமாலுடன் போரிட்டு இறுதியில் திருமாலின் பாராட்டுதல்களுடன் அமிழ்தம் பெற்றுத் திரும்பினான். பின் அதனையே தந்து தம் தாய் சுபருணையை வெஞ்சிறையிலிருந்து விடுவித்தார். அப்பொழுது சீற்றங்கொண்டு எழுந்த பாம்புக் கூட்டங்களை முத்தீசப் பெருமானைக் கருடன் நயந்தேத்திப் பெருவரங்கள் பெற்று அவர் அருளால் அப்பாம்புகள் கூட்டங் களை அடக்கினார். இத்தகைய கருடன் துதித்த பெருமையுடைத்து இத்திருத்தலம் என்பர். கருடண் வழிபட்ட கருடேசர் முத்தீசரருக்குப் பின்புறம் கோயில் கொண்டுள்ளார்.

இக்கோயிலின் மூலவர் சந்நிதி பல்லவர் காலத்தில் கட்டப்பட்டதாகும் பல்லவ மன்னனான நந்திவர்மன் துணைவியார் தருமமகாதேவி இக்கோயிலைக் கட்டியதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். கி. பி. 650–ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 800–ஆம் ஆண்டுக்குள் இக்கோயில் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பது கருத்தாகும்.

இக்கோயில் சந்நிதி மிகப் பழமையானதென்றும் பிற்காலத்தில் செய்து முடிக் கப்பட்ட கோயிற் திருப்பணிகளாலும், இக்கோயிலின் தோற்றத்தில் மிகுதியான மாற் றம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல் மூலவர் சந்நிதியைச் சுற்றிச் சிறு சந்நிதி கள் பல கட்டப்பட்டுள்ளன. சூரியமூர்த்தியின் சந்நிதி, வயிரவர் சந்நிதி, திருக் குறிப்புத் தொண்டர் சந்நிதி நால்வர் சந்நிதி ஆகிய சந்நிதிகள் பிற்காலத்தில் தோன்றியவையாகும்.

கடந்த 5-7-71 ஆம் நாளில் நடைபெற்ற குடமுழுக்குப் பெருவிழாவுக்கென மேற்கொள்ளப்பட்ட பல திருப்பணிகளுள் கோயில் மூலவர் சந்நிதியின் முன்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள 16 தூண்கள் கொண்ட பெரிய மண்டபமும் வெளிக்கோபுரமும் ஆகும். இது தவிரக் கோயிலின் பிராகாரம் முழுவதும் காரையிடப்பட்டுள்ளது. மூலவர் சந்நிதிக்குப் பின்புறமுள்ள விநாயகர் சந்நிதியும், சுப்பிரமணியர் சந்நிதியும் இந்நூற்றாண்டில் இடைப்பகுதியில் எழுந்தவையாகும். முழுமையாக நோக்கு மிடத்து, மூலவர் சந்நிதியும் அதைச் சார்ந்திருக்கும் 4 வட்டவடிவத் தூண்களைப் பெற்றிருக்கும் சிறிய மண்டபமும் மட்டுமே பழமையுடன் காட்சியளிக்கின்றன. மற்ற பகுதிகள் அனைத்தும் மாற்றம் பெற்றவாறுள்ளன எனலாம்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புண்ணிய மெய்த்தொண்டர் திருக்குறிப்பறிந்து அவர்களுக்குப் பணிபுரிந்து வந்ததால் இவருக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று சிவனடியார்களின் அழுக்காடை களை வெளுத்துக் கொடுக்கும் தொண்டை இவர் புரிந்துவந்தார். இவரது இறை யன்பை வெளிப்படுத்தும் பொருட்டுச் சிவபிரானே ஒருநாள் சிவனடியாராகத் தோன் றினார். அழுக்குப் படிந்த ஆடைகள் சிலவற்றைக் கொடுத்து மாலையிலேயே அவற்

றைத் வெளுத்துத் தரவேண்டும் என்ற நிபந்தனையுடன் திருக்குறிப்புத் தொண்ட நாயனாரிடம் அவற்றைக் கொடுக்க, அவரும் அவ்வாறு செய்வதாக இசைந்தார். அவ்வாடைகளைப் பெற்றுக் கொண்டபின், அவற்றை அவர் வெளுக்கத் தொடங்கிய போது இடைவிடாது மழை பெல்தகாரணமாக, மாலை நேரந்திற்குள் அவ்வாடைக ளை வெளுந்துத் தர அவரால் இயலவில்லை. சிவனடியாரின் நிபந்தனையை நிறை வேற்ற முடியாமை காரணமாகத் திருக்குறிப்புத் தொண்டநாயனார் மனம் நொந்து, துளிவெளுக்கும கல்லில் மீது தமது தலையினை மோதி உயிர்விடத் துணிந்தார். அவ் வாறு மோதக்கொள்ள முனையும் போது இறைவரது திருக்கரம் அக்கல்லிலிருந்து வெளிப்பட்டு அவரை அச்செயலினின்றும் தடுத்து நிறுத்திற்று. பின்னர் இறைவனார் தம் தேவியுடன் இடபவாகனத்தில் தோன்றி நாயனாருக்குக் காட்சி தந்து திரு குறிப்புத் தொண்டரின் இறையன்பைப் பாராட்டி அவருக்கு முத்தி அருளினார் இவ்வரலாறு சேக்கிழார் தாம் அருளிய பெரிய புராணத்தில் காணலாம். இத்திருத்தலந் தலத்திற்கு மற்றொரு புரானச் சிறப்பும் கூறப்படுகிறது.

இக்கோயிலில் கோபுர வாயிலைக் கடந்து செல்வோமாயின், முத்தீசர்கோயிலுல் பிராகாரத்தில் முதற் சந்நிதியாக விளங்குவது கிழக்கு நோக்கிய விநாயகப் பெருமான் சந்நிதியாகும். இச்சந்நிதி மூலவர் சந்நிதிக்குப் பின்புறம் வரிசையாக அமைந்திருக் கும் சந்நிதிகளுள் ஒன்றாகும். அடுத்ததாக, தம் தாயாகிய சுபருனைக்குச் சிறையி லிருந்து விடுதலை பெற்றுத்தர முத்தீசம் பெருமானைத் துதித்துச் சிறப்பெய்திய கரு டேசுவரர் சந்நிதியைக் காண்கிறோம். இங்குச் கருடேசுவரர் இலிங்க மூர்த்தியாகக் காட்சியளிக்கிறார். அடுத்து கிழக்கு முகமாய் அமைந்திருப்பது முருகப் பெருமான் சந்நிதியாகும். சந்நிதியினுள் வள்ளி தெய்வயானையுடன் முருகப் பெருமான் விளங் குகிறார்.

முருகப்பெருமான் சந்நிதியைக் கடந்து செல்வோமாயின், மூலவர் சந்நிதியின் வலப்புறம் மேற்கு நோக்கியிருக்கும் சண்டேசுவரர் சந்நிதியைக் காண்கிறோம். இச் சந்நிதிக்கு சற்றுக் கிழக்கே, திருக்கோயிலின் சுற்றுப்புறச் சுவருடன் இணைந்த நிலையில் மேற்கு நோக்கியவாறு வயிரவர் காட்சியளிக்கிறார் அடுத்து நவக்கிரகங் கள் சந்நிதி முழுவதும் கற்களால் அமைக்கப்பட்டிருப்பது இக்கோயிலின் பழமை யைச் காட்டுகிறது.

நவக்கிரக சந்நிதிக்குச் சற்றுக் கிழக்கே தெற்கு நோக்கியவாறு சிறு சந்நிதி யினுள் சனிசுவரர் எழுந்தருளியுள்ளார். இச்சந்நிதிக்கு முன்புறம் சிறிய கிணறு ஒன்றுள்ளது, இச்சந்நிதிக்குச் சற்றுக் தெற்கே கோயில் சுற்றுப்புறச் சுவருடன் இணைந்தவாறு சூரியன் சந்நிதி அமைந்துள்ளது. மூலவரை நோக்கிய அமைந் துள்ள சந்நிதிகளில் சூரிய மூர்த்தி சந்நிதிக்குச் சற்று வலப்புறம் கிழக்குப்புறவா யிலுக்கி அருகில் சுவருடன் இணைந்த நிலையில் திருக்குறிப்புத்தொண்டர் சந்நிதி உள்ளது. இச்சந்நிதியில் இத்தலத்திலேயே முத்திபெற்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனாரின் திருவுருவம் காணப்படுகிறது.

கோபுரவாயிலுக்கு வலப்புறம் பிராகாரத்திலே மூலவர் சந்நிதிக்கு இடப்புறம் தென்புறச் சுவருடன் இணைந்த நிலையில் மிகச் சிறிய சந்நிதியில் நால்வர் எழுந்தருளியுள்ளனர்.

இக்கோவிலின் பெருமண்டபத்தின் வலப்புலம் மாணிக்கவாசகர், திருகுறிப்புத் தொண்டர், முத்தீசர் அம்மையார், விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர் ஆகியோருடைய திருவுலத் திருமேனிகள் வரிசையாகக் காட்சியளிக்கின்றன

கருவறையில் முத்தீசர் சிவலிங்க வடிவில் அன்பர்களின் உள்ளம் கவரும் வண்ணம் காட்சியளிக்கிறார்.

இத்திருக்கோயிலுகென அமைந்திருப்பது மேற்கு நோக்கியவாறுள்ள நுழைவாயிற் கோபுரம் ஒன்றேயாகும். இக்கோபுரம் 1917–ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப் பெற்றது. இது மூன்று தளங்களையும் 5 கல்சங்களையும் கொண்டுள்ளது.

இக்கோயிலிக்கென அமைந்திருக்கும் ஒரே பிராகாரம் அண்மையில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும். மூலவர் சந்நிதியைச்சுற்றி அமைந்திருக்கும் பிராகாரம் ஒழுங்கற்ற நீள அளவை அமைப்பில் உள்ளது.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சந்நிதிக்கு வலப்புறம் மூன்று மீட்டர் தொலைவில் 3 80 மீட்டர் சதுரப்பரப்பில் மடைப்பள்ளி ஒன்றுள்ளது.

ஆதிசைவர் மரபில் வந்த குருக்களால் இக்கோயிலின் பூசைகள் நடத்தப்பட்டு வருகின்றன. காலை, மாலை ஆகிய இருவேளைகளில் மட்டுமே இக்கோயில் பூசைகள் நடத்தப்பெறுகின்றன. இக்கோயிலில் பூசைகள் நடத்தப்படுவதற்குக் காமிக ஆகமமே அடிப்படையாக ஆகமமாக இருந்து வருகிறது.

இக்கோயிலில் பெருவிழா எவையும் நடப்பதில்லையாயினும் ஆடிக்கிருத்திகை, கார்த்திகை தீபம், மார்கழி திருவாதிரை, மாணிக்கவாசகர் திருவிழா ஐப்பசி கந்தர் சஷ்டி, மற்றும் சித்திரை மாதச் சுவாதி நட்சத்திரத்தில் திருக்குறிப்புந் தொண்ட நாயனார் திருவிழா ஆகியவை நடைபெறும். இத்திருவிழாக்களுள் திருவாதிரைத் திருவிழா 10 நாள்கள் நடைபெறும். கார்த்திகை தீபத்தின்போது சந்திரசேகரர், மனோன்மணி அண்மையில் திருக்கலியாண விழா மிகுந்த சிறப்புடையது.

இங்குள்ள கல்வெட்டுகள் 49 ஆடற்கணிகையர் நாட்டியக் கலையை வளர்த்தனர் எனக் கூறுகின்றன. பிம்பங்களின் ஒவ்வொரு நெளிவிலும் நடன முத்திரை தெளிவாகத் தெரிகிறது. இங்குள்ள எல்லாப் பிம்பங்களையும் விடச் சோமசுகந்தர் வண்ணப்பூச்சு முற்றிலும் அழிந்துவிடாதவாறுள்ளது. பாம்புகளை அணிந்து கொண்டு எண்தோள்களையும் வீசித் தாண்டமாடியபோது சிவம் பொங்கும் காட்சி

ஊழிக்கூத்தோ என நடுங்குமாறு உள்ளது. உத்தரியம் சுழன்று பறக்கும் வகையில் நாட்டிய வேகம் காணப்படுகிறது. கேச பந்தயத்தில் விரிசடை சடாமகுடம் ஆகிய வற்றோடு ஆடை அணிகலன்களும் அவ்வாறே காணப்படுகின்றன. சற்றுத் தள்ளி நிற்கும் உமையின் அச்சப்பார்வை சிற்பத்தின் நுட்பத்தைக் காட்டுகிறது.

ஏகாலியர் மரபில் உதித்த திருக்குறிப்புத் தொண்ட நாயனார் முத்தி பெற்ற தலமாக இருப்பதாலும் கருடர் பூசித்த தலமாக இருப்பதாலும் இத்தலம் புகழ்பெற்று விளங்குகிறது. இத்தலத்திற்குப் பொதுமக்கள் பெருமளவு வந்து வழிபடுவதன் காரணமாக அவர்களிடையே சமய உணர்வு வளர்வதற்கு உறுதுணையாக இக் கோயில் இருந்து வருகிறது.

இக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினர் வகுத்துள்ள சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத் தனியாரால் நிருவகிக்கப்பட்டு வரும் கோயிலாகும்.

இக்கோயிலைப் பற்றிச் சிவஞான முனிவர் தாம் இயற்றிய முத்தீசப் படலத்தில் தெரிவித்துள்ளார்.


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 2,53,700

காஞ்சிபுரம்

# வரதராஜ சுவாமி கோயில்

காஞ்சிபுரத்தின் கிழக்குப் பகுதியாகிய சின்ன காஞ்சிபுரத்தில், காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து 3 மைல் தொலைவில் வரதராஜ சுவாமி கோயில் 378 மீட்டர் நீளமும், 212 மீட்டர் அகலமும் கொண்ட 80136 சதுர மீட்டர் ஏறத்தாழ 20 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது.

இக்கோயிலின் காட்சியளிக்கும் வரதராஜ சுவாமியின் பெயர் வரம் தரும் பெருமாள் எனச் சில கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டது. 1. வரங்களைத் தருபவர் வரதர் மேலும் வரங்களைத் தருவோர்களின் மன்னராகத் திகழ்பவர் வரதராஜர். தற்போது சுவாமி என்னும் பெயரே பரவலாக வழங்கி வருகிறது. இவரது மற்றொரு பெயராகிய "அருளாளர்" என்னும் பெயரால் அடிப்படையில் இக்கோயிலின் வடக்கிலுள்ள ஏரிக்கு அருளாளப்புத்தேரி என்னும் பெயர் அமைந்தது. அப்பெயர் வழக்கில் ஆறப்புத்தெரி என மாறிற்று.



வரதராஜ சுவாமி கோயிலின் மேற்கு கோபுரம்

முற்காலத்தில் இங்கு அத்தி மரங்கள் செழிப்போங்கி நின்றன என்பது காரணமாகவும், இக்கோயின் மூலவரின் திருவுருவம் அத்தி மரத்திலிருந்து செதுக்கப்பட்டது காரணமாகவும், இப்பெருமானுக்கு " அத்தி வரதர் " என்னும் பெயரும், இதன் காரணமாக அவர் எழுந்தருளிய ஊர் " அத்தியூர் " என்னும் பெயரும் அமைந்தன என இந்த அத்தியூர் வடமொழியில் உறஸ்தகிரி என மருவிற்றென்பதும், இப்போதுள்ள இக்கோயில் ஓர் உயர்மேடையில் கட்டப்பட்டது என்பதும் ஒரு சாரார் கருத்தாகும். உறஸ்தகிரி என்றும் தொடரிலுள்ள அத்தி என்பது தமிழ்ச் சொல். கிரி என்பது மலையைக் குறிக்கிறது. இம்முறையில் கஜேந்திர யானையின் புராணவரலாறும் இக்கோயிலுடன் இணைக்கப்பட்டது. என்பது இவ்வகையில் அளிக்கப்பெறும் விளக்கமாகும், 3. ஆனால் இவ்விளக்கத்தை ஒப்புக்கொள்ளாத நிலையில் மற்றொரு சாரார். இக்கோயில் அமைந்த இடம் செயற்கை மேடையாக இருந்திருப்பின் இம்மேடை இம்மாபெருங் கோயிலைத் தாங்கியிருக்க முடியாது. ஆதலால் அமைந்துள்ள இடம் இயற்கையாக இருந்து வந்த ஒரு மலையே எனவும், அம்மலையே உறஸ்தகிரி மகாத்மியத்தின் அடிப்படையில் உறஸ்தகிரி என்றும் பெயர் பெற்றது எனவும் கூறுகிறார்.

ஏனைய திருத்தளங்களைப் போன்றே இத்தலத்தில் வழங்கப்பெறும் தலபுராணம் இக்கோயிலின் பழமையையும், பெருமையையும் எடுத்து இயம்புகிறது. " உறஸ்தகிரி மகாத்மியம் " என்பதே இத்திருக்கோயின் தலபுராணமாகும், இது நாரதருக்கும் பிருகு முனிவருக்கும் இடையே நடைபெற்ற உரையாடலாக அமைந்துள்ளது, இப்புராணம் கூறுகிறவாறு பிரமதேவன் தன் மனத்தைத் தூய்மைபடுத்திக் கொள்ள முற்பட்டான். அப்போது ஒரு வாக்கு வானிலிருந்து எழுந்தது. அவ்வாக்கு பிரமன் ஒரு வேள்வி இயற்ற வேண்டுமென்பதும், இவ்வேள்வி சத்திய விரதச்சேத்திரம் எனச்சொல்லப்படும் இக்காஞ்சிப்பகுதியில் இயற்றப்படுமானால் மிகுதியான நன்மையை அளிக்கும் என்பதாகும். இந்நோக்கில் காஞ்சியில் பிரமன் வேள்வி தொடங்க முற்பட்டபோது, தனக்கு மதிப்பு அளிக்கப்படவில்லை என்பது காரணமாகப் பிரமதேவன் தேவியாகிய சரசுவதி அவ்வேள்வியை அழிக்கும் வகையில் ஆங்கிருந்த வேகவதி ஆறு பெருக்கெடுக்குமாறு செய்தனள். அவ்வெள்ளப் பெருக்கைத் தடுத்து நிறுத்துமாறு தேவர்களும், முனிவர்களும், திருமாலிடம் வேண்டிக்கொண்டார்கள்.

இவர்களது வேண்டுகோளை நிறைவேற்றும் முறையில் திருமால் பாய்ந்தோடி வந்த வேகவதி ஆற்றின் படுக்கை கொண்டார். அவரே ஓர் அணையாக அமைந்தார் அவ்வெள்ளப் பெருக்கு வேறு திசையில் சென்றது. அவர் படுக்கை கொண்ட இடமே திருவெக்கா என்பதாகும். இது யதோத்காரி எனவும் விளங்குகிறது. இச்சொற்றொடருக்கு " சொன்ன வண்ணம் செய்தவர் " என்னும் பொருள் அமைந்தது. அப்பெயரையே அவர் தாங்கி வருவாராயினர். பின்னர் சரசுவதி தன் கணவாரகிய பிரமதேவ

---

1, 598/1919. 2. 406, 348. 622, 431, 375/1919. 3. வரதராச பெருமாள் கோயில் — டாக்டர் கே. வி. ராமன். பக்கம் 6- 1875.

னோடு இனங்கி அவர் புரிந்து வந்த அவ்வேள்வி நிறைவேறுமாறு மனமார உதவி னாள். அவ்வேள்விக்கு உகந்த திருமால் அவ்வேள்வியிலிருந்து புண்ணியகோடி விமானத்தில் பிரமன் முன் காட்சியளித்தார். அவர் காஞ்சியிலேயே நிலைபெற்று எக்காலத்தும் அன்பர்களை காத்து அருளாட்சி புரியவேண்டும் என்று பிரமன் வேண் டிக் கொண்டார். அவ்வேண்டுகோளை நிறைவேற்றுமாக திருமால் வரதராஜ பெரு மாள் இத்தலத்தில் விளங்கி வருகிறார்.

மற்றும் முதலை வாயில் சிக்குண்ட கஜேந்திரன் ஓலமிட வரதராஜப் பெருமாள் விரைந்து வந்து கஜேந்திரனை முதலையில் பிடியிலிருந்து மீட்பித்த செய்தியையும் உறஸ்தகிரி மகாத்மியம் கூறுகிறது. இப்புராணத்தை தமக்கே உரித்தான நடையில் கி. பி. 1369ஆம் ஆண்டு வரையில் திகழ்ந்தவராகக் கருதப்பெறும் வேதாந்ததேசிகர் தாம் இயற்றிய சத்திய விரத மகாத்மியத்தில் விளக்கியுள்ளார். தாயார் பிருகு முனிவர் இயற்றிய வேள்வியிலிருந்து தோன்றினார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இக்கோயிலுக்கு கிழக்கில் ஒரு கோபுரமும், மேற்கில் ஒரு கோபுரமும் இருப்பி னும் கிழக்குக் கோபுரம் அடைக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் மேற்குக் கோபுர வாயிலே பயன்படுத்தப்படுகிறது. மேற்குக் கோபுரத்தின் வழியாக இக்கோயிலினுள் நுழைந்து வலம் வரும்போது முதலில் நமக்குத் தென்படுவது வேணுகோபாலர் கோயி லாகும். இது 11 மீட்டர் நீளமும், 6 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இதற்கு ஒரு முன் மண்டமும் விமானமும் உள்ளன. இக்கோயிலுக்கு அண்மையில் திருப்பணி நடைபெற்றது. இங்குப் பூசைகள் ஒழுங்கான முறையில் நடைபெற்று வருகின்றன.

வேணுகோபாலர் கோயிலுக் குவடக்கில் அனந்தசரகத் தீர்த்தக் குளத்திற்குக் மேற்கில் 10 மீட்டர் நீளமும், 8 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கிழக்கு நோக்கிய வண்ணம் இக்கோயில் உள்ளது. இங்கு வரதராசப்பெருமாள் நின்ற கோலத்தில் காட் சியளிக்கிறார். இக்கோயிலுக்கு விமானம் உள்ளது. இங்கு அண்மையில் திருப்பணி செய்யப்பட்டது. வரதராசப்பெருமாள் சந்நிதிக்குச் சற்று வடக்கில், 7. 67 மீட்டர் நீள மும் 6. 10 மீட்டர் அகமுடைய மேடையில் நாகதேவதைகளின் சந்நிதி உள்ளது. அனந்தசரகத் தீர்த்தக் குளத்திற்கு வடக்கில் முன்மண்டபத்துடன் 11 50 மீட்டர் நீளமும, 9. 30 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அரங்கநாதர் கோயில் அமைந் துள்ளது.

அனந்தசரக தீர்த்தக் குளத்துக்கு கிழக்கில் 10 மீட்டர் நீளமும், 8. 65 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் சுதர்சனம் என்னும் சக்கர வடிவமைப்பில் திருமால் இங்கு கோயில் கொண்டுள்ளார். ஓரத்தில் தீப்பிழம்புகள் பொலிவும் சக்கர வடிவமைப் பில் இரு சமபக்க முக்கோணங்கள் ஒன்றில் குறுக்கீட்டில் மற்றொன்று அமையுமாறு இணைக்கப்பட்ட ஆறு கோணங்களில் இடையே சக்கரத்தாழ்வார் வீற்றிருக்கிறார். இம் மூர்த்திக்கு மேற்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும், இரு முகங்கள் இருப்பதால்

இக்கோயிலை வலம் வரும் அன்பர்களுக்கு இரு திசைகளிலும் இவர் சேவை சாதிக் கின்றார். இம்மூர்த்திக்கு இரு கருவறைகள் உள்ளன.

இக்கோயில் அனந்தசரசுத் தீர்த்தக் குளத்து அத்திவரதர் மண்டபத்தை நேராக நோக்கி அமைந்திருப்பது காவத்தில் கொள்ளத்தக்கது. சக்கரத்தாழ்வார் கோயிலுக்கு கிழக்கில் தொரைதோட்டம் எனப்படும் பரந்த தோட்ட வெளியில் பெரியாழ்வார் கோயில் இருந்து வந்தது. அக்கோயில் இப்போது இடிந்த நிலையில் உள்ளதால் இதி லிருந்து வந்த பெரியாழ்வார் திருவுருவம் நான்காம் பிராகாரத்தின் வடக்குப் பகுதியி லுள்ள இராமாநுசர் கோயிலில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

தொரைத் தோட்டத்தில் கிழக்குப் பகுதியில் இருந்து வந்த தொண்டரடிப்பொடி யாழ்வார், திருப்பானாழ்வார் கோயில் தற்போது இடிந்த நிலையில் உள்ளது.

தொரைதோட்டத்தின் தெற்கெல்லையில் கிழக்கு நோக்கிச் செல்லும் வழியில் நம்மாழ்வார் கோயிலை அடையலாம். நம்மாழ்வார் அமர்ந்த நிலையில் இருக்க அவருடைய கொள்கையை முழு அளவில் பரப்பினவர்களாகிய நாதமுனியும், மதுர கவியும் அவரது இரு புறங்களிலும் நின்ற நிலையில் உள்ளார்கள். நம்மாழ்வார் தமது வலக்கையை தமது மார்பு வரை வளைத்து சின்முத்திரையை சுட்டிக் காட்டுகிறார் இக்காட்சி எங்கும் காணப்படாத ஒன்றாகும். இக்கோயிலுக்கு 8 மீட்டர் நீளமும், 4 மீட்டர் அகலமும் ககாண்ட முன்மண்டபம் இருக்கின்றது. நம்மாழ்வார் கோயிலுக்குத் தென்கோடியில் திருமங்கையாழ்வார் கோயில் இருக்கிறது. இக்கோயிலுக்குத் திருப் பணி நடைபெற்றுள்ளது. இங்கிருந்து திருமங்கையாழ்வார் திருவுருவம் வடக்குப் பிராகாரத்திலுள்ள இராமநுசர் கோயிலில் வைத்துப் பூசிக்கப்பெறுகிறது.

திருமங்கையாழ்வார் கோயிலை அடுத்து வடக்கு நோக்கியவண்ணம் மணவாள மாமுனிவர் கோயில் 10 மீட்டர் நீளத்திலும் 6 மீட்டர் அகலத்திலும் உள்ளது. மண வாளமாமுனிவருக்கு இடப்பக்கத்தில் பூதேவி, சீதேவி ஆகியோர்களுடன் அரங்கநாதர் உற்சவமூர்த்தியை காணலாம். இக்கோயில் தற்போது இடிந்து விட்டது. இதிலுள்ள திருமழிசையாழ்வார் திருவுருவம் இதே பிராகாரத்திலுள்ள இராமாநுசர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

மணவாளமாமுனிவர் கோயிலுக்கு 20 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் கொண்ட இராமாநுசர் கோயிலாகும். இங்கு இராமாநுசர் வியாக்கியான நிலைவில் வீற்றிருக்கிறார். இராமநுசர் உற்சவ மூர்த்தியும் அமர்ந்த நிலையில் இருக்கின்றார். இம்மூர்த்திக்கு அருகில் கூரத்தாழ்வார் உற்சவ மூர்த்தி திருவுருவம் உள்ளது. இக் கோயிலின் முன்மண்டபம் 7 மீட்டர் நீளத்திலும் 5 மீட்டர் அகலத்திலும் உள்ளது. இதனை அடுத்து 10 தூண்களுடன் 35 மீட்டர் நீளமும், 8 மீட்டர் அகலமும் கொண்ட உள்மண்டபம் இருக்கின்றது. இம்மண்டபத்தின் கிழக்கு வரிசையில் வடக்கிலிருந்து பொய்கையாழ்வார், பூதத்தாழவார், பேயாழ்வார், திருப்பாணழ்வார், தொண்டரடிப். பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர்களின் சிலை உருவங்கள் உள்ளன

திருப்பாணாழ்வார் ஒருவரே நின்ற நிலையில் இருக்க மற்ற ஆழ்வார்கள் அமர்ந்திருக்கும் நிலையில் உள்ளார்கள்.

இவர்களில் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார், ஆளவந்தார் ஆகியோர்களின் திருவுருவச் சிலைகளுக்கு முன்னிலையில் அவரவர் உலோக உலாத் திருமேனிகள் உள்ளன. குமுதவல்லி நாச்சியார் பெரியாழ்வாரின் பத்தினியாவார். திருமங்கையாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் மன்னர் உடையில் காட்சியளிக்கிறார். இவர்களுக்குக் கிரீடங்கள் உண்டு. திருமங்கையாழ்வாரின் உற்சவ மூர்த்தி கையில் வேல் இருக்கிறது.

முதல் ஆழ்வார் கோயில் இடிந்து விட்டது. இதிலிருந்து ஆழ்வார் சிலைகள் இராமநுசர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. நான்காம் பிராகாரத்தின் முகப்பில் வேதாந்த தேசிகர் தாத்தாச்சாரியர் கோயில் வடக்கு நோக்கியுள்ளது. வேதாந்த தேசிகர், தாடதேசகர், தாட தேசிகரின், தேவயர், அம்மங்கர் ஆகியோர்களின் திருவுருவச் சிலைகள் இங்கு உள்ளன. பலிபீடத்தையும், கொடிமரத்தையும் கடந்து கோயில் நுழைவாயிலுக்குள் வடக்கு நோக்கிச் செல்லும் போது அதன் கோடியில் இராமர் கோயில் 5 மீட்டர் சதுரப்பரப்பில் இருக்கின்றது. இங்கு இராமர் சிலைக்கு வலப்புறத்தில் சீதையின் திருவுருவமும்இடப்புறத்தில்இலக்குவனின் திருவுருவம் அழகிய வடிவில் இருப்பதைக் காணலாம்

இராமர் கோயிலுக்கும், பவித்ர உற்சவ மண்டபத்திற்கும் கிழக்கில் 5 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அனந்தாழ்வார் கோயில் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றது. இதற்குச் சதுர வடிவில் ஒரு கருவறையும், ஓர் உள்மண்டபமும், அதனை அடுத்து ஒரு முகமண்டபமும் உள்ளன. இதற்கு விமானம் உள்ளது அனந்தாழ்வார் கோயிலுக்குக்கிழக்கில் 6மீட்டர் நீளமும், 2மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கரியமாணிக்கப்பெருமாள் கோயில் மேற்கு நோக்கிய இருக்கின்றது. இதற்கு ஒரு சதுரக்கருவறையும், உள்மண்டபமும், முகமண்டபமும் உள்ளன. கரியமாணிக்க பெருமாள் கோயிலைக் கடந்து கோயிலை வலம் வரும்போது 16 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் கொண்ட கண்ணன் கோயில் வடக்குப் பிராகாரத்தின் தென்மேற்குப் பகுதியில் காணலாம்.

மூன்றாம் பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் வலம்புரி விநாயகர் கோயில் 3.50 சதுரப்பரப்பில் வடக்கு நோக்கியவாறு உள்ளது. கண்ணன் கோயிலுக்கு வடமேற்கில் 7 மீட்டர் நீளமும், 4 மீட்டர் அகலமும் உடைய தாயார் சந்நிதியை காணலாம். இது தரைமட்டத்திலிருந்து 15 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இக்கோயிலை வலம்வர இயலுமாறு இதற்கு ஒரு உள்பிராகாரம் உள்ளது. தாயார் நின்ற நிலையில் நான்கு கைகளோடு விளங்குகிறார்.

கருடாழ்வார் சந்நிதிக்கு எதிரில் கோயிலின் நுழைவாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் இருவர் திருவுருவங்கள் உள்ளன.

இரண்டாம் பிராகாரத்தின் வடமேற்குக் கோடியில் பெரியாழ்வாரின் புதல்வியாகிய ஆண்டாள் திருக்கோயில் உள்ளது. இது 4 மீட்டர் சதுரப்பரப்பில் அமைந்துள்ளது. ஆண்டாள் இடக்கையில் ஒரு மலர் ஏந்தி நிற்கின்றார் இதற்கு 12 கால் மண்டபம் உள்ளது. இக்கோயிலுக்கு விமானம் உள்ளது இக்கோயில் 4 மீட்டர் சதுரப்பரப்பில் உள்ளது. சேனை முதலியார் திருமாலின் சேனைத்தலைவர் பெருமாளின் உடைன்மகளைப் பாதுகாப்பில் வைத்திருப்பவர். முக்கியமான விழாக்களில் இவருக்கு முதலில் வழிபாடு நடத்தப்படுகிறது. இவர் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் உள்ளார். மேலே உள்ள கைகள் சங்கு சக்கரங்களை ஏந்தி நிற்கின்றன. கீழே உள்ள வலக்கை எச்சரிக்கையைத் தெரிவிக்கிறது. இடக்கை தண்டத்தை ஏந்திக் கொண்டு இருக்கிறது.

இரண்டாம் பிராகாரத்தின் தென்கிழக்குக்கோடியில் இந்திய மருத்துவத்திற்குத் தந்தையான திருமாலின் திரு அவதாரமாகிய தன்வந்தரி உருவம் 3 மீட்டர் சதுரப் பரப்பில் உள்ளது. தன்வத்திரியின் மூலவர், உற்சவர் ஆகியோர்களின் திருவுருவங்கள் இரண்டுமே சிறியவை. இவரது இரு கையில் ஒன்று அமுத கலசத்தை ஏந்திக் கொண்டு இருக்கிறது, சேரமன்னன் இரவிவர்மன் குலசேகரன் கி.பி. 1316 ஆம் ஆண்டில் காஞ்சியில் இரண்டாம் தடவையாக முடிசூட்டிக் கொண்டான். அப்போது இக்கோயிலை அவன் கட்டித் தந்தான். வரதராஜ பெருமாள் சுவாமியுடன் பேரன்பு கொண்ட அவரது புதல்வியின் திருவுருவம் இதுவாகும். இக்கோயிலுக்கு 9 கால் மண்டபம் உள்ளது. இக்கோயிலுக்கு நரசிம்மர் எனவும், அழகிய சிங்கர் எனவும் போற்றப்பெறும் பெருமானுடைய குகைக்கோயில் அத்திகிரியில் அடிப்பகுதியில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. 2 மீட்டர் உயரமுள்ள இவரது திருவுருவம் யோக நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் அத்தகிரி கருவறை நுழைவாயிலின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் செப்புத் திருமேனிகள் நின்ற நிலையில் உள்ளன. துவார பாலகர்களைத் கடந்து உள்ளே செல்லுமிடத்து மேற்கு நோக்கிய வரதராஜப்பெருமாள் சந்நிதியை அடையலாம். இக்கருவறை 3 மீட்டர் சதுரப் பரப்பில் உள்ளது இதன் பின்பாதிப் பகுதியில் நின்ற கோலத்தில் வசீகரத்தோடு வரதராஜப்பெருமாள் காட்சியளிக்கிறார். இச்சந்நிதிக்கு முன்புறம் 3.50 மீட்டர் நீளமும் 1.60 மீட்டர் அகலமும்சென்ட் பரப்பில் மண்டபம் உள்ளது. இக்கருவறையின்மீது புண்ணியகோடி விமானம் திகழ்கிறது. இதனைத் தரிசிப்போரும், வழிபடுவோரும் எண்ணற்ற நன்மைகளை அடைகிறார்கள் என்பது நம்பிக்கையாகும். இங்கு கண்ணன், மணவாளர், செல்வர் ஆகியோர்கள் திருவுருவங்கள் உள்ளன. மூலவருக்கு வெள்ளிகிழமைதோறும் அபிடேகம் நடைபெறுகிறது. வெள்ளியினால் செய்யப்பட்டுள்ள பிரணதார்த்தி உறரன் அவரதருக்கு அபிடேகங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்திருக்கோயிலின் மையத்தில் அமைந்திருப்பது அனத்தசரசு என்னும் பெயரில் விளங்கும் புனிதத் திருக்குளமாகும் இது 79.6 மீட்டர் நீளமும் 60 மீட்டர் அகல

மும் கொண்டுள்ளது. இதன் நாற்புறங்களிலும் நன்கமைந்த படிகட்டுகள் உள்ளன இதன் மையத்தில் 16 தூண்களைக் கொண்ட நீராழி மண்டபம் உள்ளது. இதற்குத் தெற்கில் நான்கு தூண்களையும், சிறு விமானத்தையும் கொண்டுள்ள மண்டபம் சக்கரத்தாழ்வார் கோயிலை நேர் நோக்கியவாறுள்ளது. வரதராஜரின் ஆதி அத்தி வரதரின் மூலவர் திருவுருவம் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு இம்மண்டபத்தின் கீழ் நீருக்குள் வைக்கப்பட்டு நாற்பது ஆண்டுக்கொருமுறை எடுக்கப்பெற்ற பூசைகள் நெறி முறையாக ஆற்றப்பெற்ற பின்னர் மீண்டும் முந்திய நிலையில் வைக்கப் படுகிறது.

வைணவ சமய மரபு, இவ்வனத்தசரசுத் திருக்குளந்திலே, சக்கரத்தாழ்வார் கோயிலுக்கு எதிரில் உள்ள இக்குளத்தின் ஒரு பகுதி சக்கரத்தாழ்வார் தீர்த்தம் எனவும், வராகர் கோயிலுக்கு எதிரிலுள்ள குளத்தின் ஒரு பகுதி வராக தீர்த்தம் எனவும் பெயர் பெறுகின்றன நம்மாழ்வார் கோயிலுக்குப் பின்புறத்தில் இக்கோயிலில் கிழக்கு கோபுரத்திற்கு வடமேற்கில் நாற்புறங்களிலும் 21 படி கட்டுகளுடன் 30 மீட்டர் சதுரப்பரப்பில் உள்ள குளம் பொற்றாமரைக் குளம் என்னும் பெயரில் விளங்கி வருகிறது. இக்குளம் கி பி. 15.0 ஆம் ஆண்டிலேயே கட்டப்பட்டிருந்தது என்பதற்குச் சான்றுள்ளது. 5. திருக்கச்சி வழங்கி அறிவுரைக்கேற்ப இராமாநுசர் இக்கோயிலுக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு கிணற்றிலிருந்து இக்கோயில், பூசைக்குக் நாள் தோறும் சில காலம் தண்ணீர் கொண்டு வந்துள்ளனர், என வரலாறு கூறுகிறது. இக்கிணறு சாலைக்கிணறு என்னும் பெயரில் விளக்கம் பெற்றுள்ளது. இன்றும் அக் கிணற்றிலிருந்து இக்கோயிலுக்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.

இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்கிலுள்ள தீர்த்தக் கிணற்றுக்குப் பிரம்ப தீர்த்தம் என்னும் பெயர் அமைந்துள்ளது, இதன் மீதே அபிடேகத்திற்குப் பயன் படுத்தப் பெறுகிறது. கிழக்குக் கோபுரம் 29 மீட்டர் நீளமும் 18. 50 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் வாயில் 21 மீட்டர் நீளமும் 4 45 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இதன் உயரம் 55 மீட்டராகும் இதற்கு ஒன்பது அடுக்குகளும், பதினொரு கலசங்களும் உள்ளன. இதில் 2 மீட்டர் சதுரபரப்பிலுள்ள கதவு வழி மட்டும் உள்ளது. மற்ற வகையில் கோபுரம் அடைக்கப்பட்டுள்ளது. கருடர், கொடிமரம் பலிபீடமும், ஆகியவை மேற்கு கோபுர நுழைவாயிலுக்கு எதிரில் உள்ளன. ஆதலால் மேற்கு நுழைவாயிலே பயன்படுத்தப் பெற்று வருகிறது. இது 25 மீட்டர் நீளமும் 17 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் ஏழு அடுக்குகளுடன் உள்ளது. இதன் உயரம் 48. 50 மீட்டர் ஆகும். இதற்கு ஒன்பது கலசங்கள் உள்ளன. இதன் இதன் செங்குத்து அமைப்பு இதன் குறுக்கமைப்புக்கு மிகப் பொருத்தமாக உள்ளது.

மேற்குக் கோபுர நுழைவாயிலிருந்து கோயிலின் கருவறை வரையிலும் வலம் வரும் முறையில் காணத்தக்க கோயில்களின் விவரங்களை கி.பி. 1445 ஆம் ஆண்டு வரையிலும் வாழ்ந்த மனவாளமாமுனிவர் தாம் இயற்றிய காஞ்சி சங்கரக சுலோக மாளிகையில் எடுத்துக் காட்டியிள்ளார். வைணவர் மரபு முறையில் இக்கோயிலைச்

சுற்றியுள்ள மாடவீதிகள் ஐந்தாம் பிராகாரமாகக் கருதப்படுகிறது. இறுதியாகயுள்ள உண்மைப்பொருளை மறைப்பனவாகிய அம்மையகோசம், பிராமையகோசம், மலையகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் ஐந்து கோசங்கள் போன்றுள்ள ஐந்து பிராகாரங்களையும் கடந்து உட்சென்று வரதராஜப்பெருமானை அடைய வேண்டும் என்னும் விளக்கம் தருகிறார் அப்பய்ய திட்சிதர். 6. இப்பிராகாரத்தின் பெரும்பான்மை ஆழ்வார்கள் கோயில்கள் உள்ளன. ஆதலால் இப்பிராகாரம் ஆழ்வார் பிரகாரம் அல்லது ஆழ்வார் திருவீதி எனப்படும். இது கோயிலின் கோபுரத்தின் நுழைவாயிலிலிருந்து தொடங்கி வடக்கு நோக்கிச்செல்கிறது. இந்த நுழைவாயிலின் தொண்டரடிப்பொடி வாயில் என வழங்கி வருகிறது. இங்கு இராஜ தொடர்பால் திருவுருவம் வைக்கப்பட்டுள்ளது.

முன்றாம் பிராகாரத்திலிருந்துகோயிலினுள் செல்வோம்எனில் இப்பிராகாரத்தின் தென்கோடியிலும் தெற்கிலும்நீண்டபரப்பில்கோயில்மடைப்பள்ளிகாண்கிறோம். இது காரணமாக மடைப்பள்ளிப் பிராகாரம் என்னும் பெயர் இதற்கு வழங்குவதாயிற்று. மற்றும் புகழ் மிக்க வைணவ ஆசிரியராகிய யமுனைதுறைவர் என அழைக்கப்பெற்று ஆளவந்தார், முதல்முதலில் இராமாநுசரை இந்தப் பிராகாரத்தில் சந்தித்தார்என்பதற்காக இப்பிரகாரம் யமுனை துறைவர் சுற்றுமுற்றம் என்னும் பெயரையும் கொண்டுள்ளது.

அத்திகிரி மலையின் தென்கிழக்குக் கோடியில் 24 படிகள் உள்ளன. இவற்றின் மீதேறி இரண்டாம் பிராகாரத்தை அடைய முடியும், முதல் பிரகாரம் அத்திகிரிமலையின் பேரில் உள்ளது. முதல் பிரகாரம் 12 மீட்டர்நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இப்பிராகாரம் வரதராஜப்பெருமாள் சந்நிதியை வலம்வரப்பயன்படுகிறது. அவரது இருப்பிடம் வையமாளிகை என்னும் பெயர் பெற்றுள்ளது. திருமாலுக்கு இரண்டு மாளிகைகள் உள்ளன, அவர் விண்ணுலகின் தன் முதன்மை மாளிகையில் இருக்கின்றார். மண்ணுலக மாந்தர்களுக்கு அருள்புரிவதற்காக அவர் இவ்வைய மாளிகையில் திருவுருவம் கொண்டு விளங்குகிறார். முதல் பிராகாரத்தின் தென்பகுதியில் படிகளின் மீது எதிர்செல்வோம் எனில் கூரையின் அடிப்பகுதியில் பள்ளி படுக்கை கொண்டுள்ள இடத்தைக் காணலாம்.

மேற்குக் கோபுரத்தின் வழியாகக் கோயிலினுள் நுழைந்ததும் நேராக முதலில் தென்படுவது நான்கு தூண்களுடனும், சிறிய விமானத்தோடும் உள்ள நான்கு கால் மண்டபம் ஆகும் இந்நான்கு கால் மண்டபத்திற்கு கிழக்கில் நான்கு கால்களுடன், விமானத்தோடும் உள்ள திருக்கச்சி நம்பி மண்டபமாகும். இது இரண்டு மீட்டர் சதுரப்பரப்பில் உள்ளது. அடுத்து கொடிமரமும் அதன் அருகில் ஒரே கல்லில் விளக்கத் தக்க வகையில் செதுக்கப்பட்ட தீபஸ்தம்பம் இருக்கின்றது. இவற்றிற்கு அடுத்துப்பலிபீடம் உள்ளது. நான்காம் பிராகாரத்தில் அனந்த சரசுத் திருக்குளத்தின் தென்கரையில் வசீகரத்தோற்றத்தையுடைய கட்டம் திருக்கல்யான மண்டபம்

5. 484- 1919.
6. வரதராஜசலம் பாடல் 5

என்று சொல்லப் பெறும் நூறுக்கால் மண்டபமாகும். இதன் மையத்தில் பீடத்துடன் உயரமான நான்கு கால்களைக் கொண்ட அழகிய கருங்கள் மேடை ஒன்று உள்ளது. இங்கு திருவிழாக்காலங்களில் வரதராஜப்பெருமாள் திருவுருவமும், தேவியர்களின் திருவுருவங்களும் இங்கு அமர்த்தப்பெறுகின்றன. இம்மண்டபத்தில் ஒரு வரிசையில் 12 தூண்களும்,மற்ற வரிசையில் 8தூண்களுமாக 96 தூண்களே உள்ளன. வரதராஜப்பெருமாள் வீற்றிருக்கும் அமர்க்கையின் நான்கு கால்களும் சேர்ந்து நூறு கால்கள் எனக் கணக்கிடப் பெறுகின்றன. இங்குத் திருவிழாக் காலங்களில் சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடத்தப் பெறுகின்றன

திருக்கல்யாண மண்டபத்துக்கு கிழக்கில் எட்டுக்கால் மண்டபம் மூன்று மீட்டர் சதுரப்பரப்பில் உள்ளது.

சக்கரத்தாழ்வார் கோயிலுக்கு நேர் கிழக்கில் பரந்த தோட்டம் உள்ளது. இக் கோயிலுக்குத் தேவைப்படும் மல்லிகை நந்தியாவட்டை போன்ற மலர்களுக்காகவும் பழங்களுக்காகவும் தோட்டம் நன்முறையில் பராமரிக்கப்படுகின்றன. இந்த தோட்டத்தில் இருந்து வந்த பெரியாழ்வார் தொண்டரப்பொடி ஆழ்வார். ஆகியோர் கோயில்கள் சிதைவடைந்த காரணமாக இக்கோயில்கள் இருந்து திருவுருவங்கள் நான்காம் வடக்குப் பிரகாரத்திலுள்ள இராமாநுஜர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. இத் தோட்டத்தின் 4 மீட்டர் சதுரப்பரப்பில் வெள்ளிக்கிழமை மண்டபம் மேற்கு நோக்கியுள்ளது. இதில் வரதராஜப்பெருமாளுக்கு மாசி மாதத்தில் ஆண்டு தோறும் தேவனோற்சவம் நடைபெறுகிறது. தாயாரின் திருவுலாத் திருமேனி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை நாளிலும் வழிபாட்டுக்காக இங்கு கொண்டுவரப்படுகிறது.

நான்காம் பிராகாரத்தின் தென்மேற்குப் பகுதியில் கொடிமரத்திற்குத் தெற்கில் 9 மீட்டர் நீளமும் 5மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் வாகன மண்டபம் உள்ளது விசாகத் திருவிழாக்களில் வாகனங்களின் வரும் உலாத்திருவுருவங்கள் இங்குக் கொண்டு வரப்படும். வேதபாராயணமும்,பிரபந்தம் ஓதுதலும் இங்கு இறுதியாக நடைபெறும். வாகனமண்டபத்திற்குத் தெற்கில் மிகச்சிறிய மண்டபங்கள் துலாபார மண்டபங்கள் என்னும் பெயரில் இருந்து வருகின்றன. இவ்விரு மண்டபங்களும் ஒன்றோடு ஒன்று நேரொத்து 4மீட்டர் உயரம் கொண்டுள்ளன. இவை கி.பி 1532 ஆம் ஆண்டு அச்சுதராயரால் கட்டப்பட்டன. தன் எடையுள்ள முத்துக்களை இம் மன்னன் கோயிலுக்கு அளித்ததாகச் சொல்லப்படுகிறது.

தாயார் சந்நிதிக்கு எதிரில் 4 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் கொண்ட முக மண்டபம் உள்ளது. முகமண்டபத்திற்குக் கிழக்கில் 10 மீட்டர் சதுரப்பரப்பில் மகா மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தில் ஒரே பீடத்தில் பெருந்தேவியாரும், வரதராஜப்பெருமாளும் அமரும் நிலையில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும மகா நவமித்திருவிழா நடைபெறுகிறது. தாயார் சந்நிதிக்கு வடக்கில் 2 மீட்டர் சதுரப்பரப்பில் உயர்ந்த நிலையில் நான்கு கால்களுடன் ஊஞ்சல் மண்டபம் உள்ளது.

இக்கோயிலின் இரண்டடுக்குப் புண்ணியகோடி விமானத்தில் சிகரம் நீண்ட சதுர அடிப்பகுதியைக் கொண்டுள்ளது. இச்சதுரக்கருவறையின்மீது பொருத்தப் பட்டிருப்பதே கட்டக்கலையின் திறமையை எடுத்துக் காட்டுகிறது. இப்புண்ணிய கோடி விமானத்தில் பெருமையை எடுத்துக் காட்டுகிறது. இப்புண்ணியக்கோடி விமானத்தில் பெருமையை எடுத்துக் கூறுவதுபோன்ற இக்கோயிலுக்கு தென்மேற் கிலுள்ள சைவப் புண்ணிய கோடீசுவரர் கோயில் அமைந்துள்ளது.

தெய்வத்திருமேனிகளுள், வரதராசப் பெருமாளின் நின்ற நிலையில் அவருடைய கீழ் இடக்கை தண்டத்தையும், மேல் இடக்கை அபயமுத்திரையையும் கொண்டிருப்பதும், 'தலையில்கிரீட மகுடமும்' காதுகளில் மகர குண்டலங்களும், கழுத்தில் அழகிய மாலைகளும், கைகளில் கேடயமும் கங்கனங்களும், இடுப்பைசுற்றி நல்லாடையும், மார்பில் புனிதப் பூணுலும் அவரது உன்னத தோற்றத்தில் பெருமை யை எடுத்துக் காட்டுகின்றன. வலப்புறத்தில் ஸ்ரீதேவியும்' கொண்ட அவருடைய உற்சவ வெண்கலத் திருமேனிகள் மிக அழகிய வடிவமைப்பைப் பெற்றுள்ளன.

அபயம், வரதம் ஆகிய இரு முத்திரைகளைக் காட்டும் இருகைகளையும், தாமரை மொட்டுகளை ஏந்திய மற்றிரு கைகளையும் பெருந்தேவி பெரியபிராட் டியார் கொண்டுள்ளார். கரண்ட மகுடமும், ஒளிரும் நகைகளும் அமந்துள்ளவாறு அவரது உருவம் வடிக்கப்பட்டிருப்பது சிற்பக்கலையில் சிறப்பைக் காட்டுகிறது.

முன்புறம் யோகநிலையில் மேற்கு நோக்கியவாறு ஆறுகோணங்களைக் கொண்ட இருக்கையில் நரசிம்மர் திருவுருவம் முன்புறத்திலும், வலப்புற எட்டுக் கை களிலும், இடப்புற எட்டுக்கைகளிலும் பல்வேறு ஆயுதங்களை ஏந்திய வண்ணம் கிழக்கு நோக்கியவாறு சக்கரத்தாழ்வார் திருவுருவம் பின்புறத்திலும், விளக்கம் பெற்றி ருப்பது சிற்பக் கலையில் பெருந்திறனை முறைப்படுத்திக் காட்டுகிறது.

இக்கோயிலின் மூன்றாம் பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் வழக்கமாக இடப்புறத்திலன்றி, வலப்புறம் திரும்பும் துதிக்கைகளையுடைய சந்தனத் திலகக் கணேசர் திருவுருவம் போற்றத்தக்க வகையில் நிலைப்படுத்தப் பெற்றுள்ளது.

இக்கோயிலின் நூற்றுக்கால் மண்டபம் என்னும் மண்டபம் திருக்கச்சிமண்டபம் அபிடேக மண்டபம் ஆகியவற்றில் இராமாயணம், பாகவதம் ஆகியவற்றின் பலகாட்சி கள் சிற்ப வடிவில் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் உயர்நிலையில் மரஞ்செடிகள், விலங்குகள் ஆகியவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

அடிப்பகுதிகளில் இராமயண வரலாற்றுக் காட்சிகள் வரிசை முறையில் முறை படுத்திக் காட்டப்பட்டுள்ளன. சீதையை மணக்கும் இராமர், இராமர் வாழ்த்துப் பெறும் சுக்கிரீவன், இராமரைச் சந்திக்கும் விபீடணன், ஆஞ்சநேயரை அன்புடன் அணைத்துக் கொள்ளும் இராமர் என்பன போன்ற நிலைகளில் இராமரின் வடிவம் சிற்பங்களில் திறம்படக் காட்டப்பட்டுள்ளன.

கண்ணனின் இளமைப்பருவல் பல்வகை விளையாடல்கள் திருமாலின் நரசிம்ம அவதாரம், திருவிக்கிரம அவதாரம் ஆகியவற்றை விளக்கும் சிற்பங்கள் பல உள்ளன பிரமன் வேள்வி, அவ்வேள்வியை அழிக்கப் பாய்ந்து வரும் வேகவதி ஆறு புண்ணிய கோடி விமானத்திலிருந்து காணப்படும் திருமால் தோற்றம் ஆகியவை போன்ற தல புராணக் காட்சிகள் சிற்பவடிவங்களில் தெளிவாகக் காணலாம்.

ஆழ்வார்கள், வைணவ ஆசிரியர்கள், ஆகியோர்கள் திருவுருவங்கள் ஆங்காங்கு அவர்களின் அடக்கத் தோற்றத்துடன் வடிக்கப்பட்டுள்ளன. திருமால் வைகுந்த பெருமாளாகிய ஆதி மூர்த்தியாகவும், அட்டபுயங்களையுடையவராகவும் காட்டப் பெறுகிறார்.

மையக்கோயிலாகிய வரதராசப் பெருமாளின் கோயில் முற்றங்களில் சுவர்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன.

கசேந்திரனை முதலையின் பிடியிலிருந்து காப்பாற்றத் திருமால் கருடவாகனத்தில் வருதல், வேள்வீயிலிருந்து வரதராசர் புண்ணியக்கோடி விமானத்தில் தோன்றுதல் ஆகிய காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. சில இடங்களில் நம்மாழ்வார், நம்மாழ்வார் அவரது பிறப்பிடமாகிய ஆழ்வார் திருநகரில் யோக நிலையில் அமர்ந்திருக்க மற்ற ஆழ்வார்களும், இராமாநுசரும் அவரைச் சூழ்ந்திருக்கும் காட்சியும் இங்கு ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.

மற்றோர் ஓவியத்தில், ஆழ்வார்கள் மூவரும் ஒன்று சேர்ந்திருப்பதும், அவர்களுக்குத் திருவிக்கிரம தரிசனமும் காட்டப்பெறுகின்றன. தமிழ் நாட்டிலுமின்றி ஆந்திர நாடு, வடஇந்தியா போன்ற இடங்களிலுமுள்ள பல வைணவத் தலங்களில் திருமால் எழுந்தருளியுள்ள காட்சிகளை ஓவியங்களில் காணலாம்.

மரவேலைச் சிற்பங்கள் பலவற்றை இக்கோயிலில் காணலாம் பல வாகனங்கள் மரத்தால் செய்யப்பட்டவை சிலவற்றிற்குச் செப்புத் தகடுகள் இடம் பெற்றுள்ளன 20 மீட்டர் உயரமுள்ள இக்கோயில் தேரின் பல தெய்வங்களின் திருவுருவங்களும், புராணக் காட்சிகளும் மரத்தில் வடிக்கப்பெற்றுள்ளன. தேரின் அடிப்பகுதியில் தேரைத் தாங்கிச் செல்லும் பூதகணங்கள் திருவுருவங்களும், மேல்நிலைப் பகுதியில் நரசிம்மர், கணேசர், கருட வாகனத்தில் திருமால், இரதி மன்மதன் ஆகியோர் திருவுருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. தேரின் மூலைகளில் வேகமாக ஓடும் குதிரைகளின் மீது போர்வீரர்கள் அமர்ந்துள்ளார்கள். தென்னிந்தியாவில் மிக அழகிய தேர்களில் இக்கோயில் தேரும் ஒன்றாகும். கிருட்டிண தேவராயர் இக்கோயில ஒரு தேர் அளித்ததாக கி.பி. 1517-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது.

தென்னாட்டில் உள்ள பல பெரிய கோயில்களைப் போலவே இக்கோயிலும் ஒரே காலத்தில் கட்டப்பட்டதன்று தற்போது காணும் அமைப்பானது பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு மன்னர்களாலும், அரசுகளாலும் படிப்படியாகக் கட்டப்படும்

சீரமைக்கப்பட்டும் இன்றைக்கு முழுமை பெற்ற வடிவமாகக்காட்சி அளிக்கிறது. இக் கோயிலில் பல பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகள் அவை கட்டப்பட்ட காலங் களைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. மற்றப் பகுதிகளில் கட்டட அமைப்புகள் அவற்றின் காலத்தை நிர்ணயிப்பதற்கு ஏதுவாக உள்ளன. எடுத்துக் காட்டாக இரண் டாவது பிராகாரத்தின் நரசிம்ம சுவாமி சந்நிதிக்கு எதிரில் அமைந்திருக்கும் கோபுர வாயிலில் மிகுதியாகக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் மிகப்பழமையா னது கி. பி. 1073-ஆம் ஆண்டிற்க்குறியது எனக் குறிப்பிடுகிறது. இதிலிருந்து இக் கோபுர வாயில் கி. பி. 1073-ஆம் ஆண்டுக்குப் பின்னர்க் கட்டப்பட்டிருக்க முடியாது என்பது தெரியவருகிறது. கட்டட அமைப்புகளைக் கொண்டும், இக்கோயில் பல பகுதி கள் கட்டப்பட்ட காலத்தினை ஓரளவு நிர்ணயம் செய்து கொள்ளலாம். எடுத்துக்காட் டாகக் கிழக்கு கோபுரம், அதில் காணப்படும் கட்டடக்கலை நுணுக்கங்களின் அடிப் படையில், விசயநகர மன்னர்களின் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது நிபுணர்கள் கருத்து.

இதன் அடிப்படையில் இக்கோயிலை ஆராயும் போது, கருவறையில் காணப் படும் சதுரத்தூண்களும், இருமுக மண்டபங்களில் காணப்படும் சதுரத் தூண்களும் சோழர் காலத்திய அமைப்பாகும். அவைபதினோரம்நூற்றாண்டில்இடைக்காலத்தைச் சார்ந்தவைகளாக இருக்க வேண்டும் என்பது ஆராட்சியாளர்கள் கருத்தாகும். இரண் டாவது பிராகாரத்தின் காலம் பதினொராம் நூற்றாண்டாகும் என்பது வல்லுநர் கருத்து. இப்பிராகாரத்தில் குகைக்கோயில் வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ள நரசிம்மர் ஆலயம்பலகல்வெட்டுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் மிகப்பழமையானது கி. பி. 1053-ஆம் ஆண்டைச் சார்ந்தது.[7] ஆகையால் அச்சந்நிதி அக்காலத்திலோ அல்லது அதற்கு முன்போ கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.

வரதராசசுவாமி கோயில் பல்லவர் காலத்திலே இருந்தது என்பதற்கு வரதராஜ சுவாமியைத் துதிக்கும் பூதத்தாழ்வார் பாடல் ஆதாரமாகவுள்ளது. பல்லவர்களை வென்று தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிய சோழர்கள் ஆட்சி அந்து 350ஆண்டு கள், கி. பி. 850 முதல் கி.பி. 1200 ஆம் ஆண்டுவரையில்இருந்துவந்தது இக்கோயிலி லுள்ள 350கல்வெட்டுகளில் பல சோழர் காலத்தியவை. முதலாம் இராசேந்திரனுக்குப் பின்னர் அரசேற்ற முதலாம் இராசாதிராசன் (கி. பி. 1018-1054) கல்வெட்டு நரசிம்மர் கோயிலினுள் வலப்புறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.[8] முதலாம் குலோத்துங்கச் சோழன் (கி. பி. 1070-1120) மூன்றாம் ஆட்சியிலிருந்து 45-ஆம் ஆண்டு வரையி லுள்ள காலஅளவுக்குரிய ஐந்து கல்வெட்டுகள் இங்குள்ளன[9] இம்மூன்றாம் ஆட்சி கல்வெட்டு நரசிம்மர் கோயிலின் கோபுர இடப்புறச் சுவரில் காணப்படுகிறது. விக்கி ரமச்சோழன் (கி. பி. 1118) 8-ஆம்ஆட்சியாண்டு முதல்17-ஆம் ஆட்சியாண்டு வரை யிலுள்ள காலஅளவுக்கு உரிய ஏழுகல்வெட்டுகள் நரசிம்மர் கோயிலுள்ள பாறையில்

7. 519 / 1919 தென்னிந்தியக் கல்வெட்டுகள்,
8. 519/1919.
9. 12/1893, 631, 632, 635/1919.

வடக்குச் சுவர்களிலும் கரியமாணிக்க வரதர் கோயிலிலும் காணப்படுகின்றன.[10] இரண்டாம் குலோத்துங்கள் (1133–1150) கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் பாறையின் மீதுள்ள தெற்கு சுவரில்காணப்படுகிறது.[11] இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பின் அரசேற்ற இரண்டாம் இராசராசன் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், நான்காம் ஆட்சிஆண்டுக்கல்வெட்டும் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.[12] இரண்டாம் இராசராசனுக்குப் பின் ஆட்சிபுரிந்த (கி.பி. 1165–1179) 14–ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மூன்றாம் பிராகாரத்தின் வடக்குச்சுவரிலுள்ளன.[13] மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1176–1216) 3–ஆம் ஆட்சியாண்டிலிருந்து 37–ஆம் ஆட்சி ஆண்டு வரையிலுமுள்ள கால அளவுக்குரிய பல கல்வெட்டுகள் உள்ளன.[14] இவற்றில் ஒரு கல்வெட்டு தமிழ் இலக்கண நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவரை ஆதரித்த சங்க நாட்டுச் சிற்றரசன் சீயகங்கள் இக்கோயிலில் ஒரு சிறு சந்நிதி அமைந்ததைக் குறிப்பிடுகிறது. ஒய்சால மன்னரின் அமைச்சராகிய கோப்பையதண்ட தாயக்கர் இக்கோயிலுக்கு நன் கொடை அளித்ததைக் கூறும் கல்வெட்டுகள் உள்ளன.[15]

தெலுங்குச் சோழராகிய கந்தகோபாலன் என்னும் பொத்தப்பிச்சோழன் திருக்காளத்தி தேவன் காலத்து 25 கல்வெட்டுகள் இக்கோயிலுள்ளன. இம்மன்னன் தமது 10– ஆம் ஆட்சி ஆண்டாகிய கி. பி. 1230–ஆம் ஆண்டில் இக்கோயில் வழிபாட்டுக்காகக் கந்தகோபால சந்நிதியை நிறுவினாள்.[16]

கி. பி. 1250–1291வரை அரசாண்ட விசயகண்டகோபால சேரமன்னன். காலத்திய 20 கல்வெட்டுகள் கி. பி. 1253–1291 வரையுள்ள காலத்திற்கு உரியவை. பாண்டியர் ஆட்சியை நிலைநாட்டிய சடவர்மசுந்தரபாண்டியன் கி. பி. 1956–66 வரை அவரது ஐந்தாவது ஆட்சியாண்டிலும் பதினைந்தாவது ஆட்சி ஆண்டிலும் இக்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இவற்றில் ஒரு கல்வெட்டுபாண்டி நாட்டு உத்தமபாண்டி நல்லூர் சோழியதாரையர் கோயிலுக்கு அளித்த கொடையைக் குறிக்கிறது.[17]

பாண்டிய நாட்டுச் சேரன்மகாதேவி இராமச்சந்திரதேவர் என்கிற மதுசூதனன் ஆபத்சகாயன் அளித்த நன்கொடையை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது.[18]

10. 330/893, 436, 440, 471, 516, 520, 510/1919
11. 406/1919.
12. 465, 389/1919.
13. 48/1893
13அ 589/1919.
14. 3g7, 404, 615/1919.
15. 434/1919.
16. 52/1893, 485, 486, 438/1919.
17. 488/1919.
18. 485/1919.

சடவீரபாண்டியன் தமது 8-ஆவது ஆட்சியின் ஆண்டாகிய கி. பி. 1261-ஆம் ஆண்டில் அளித்தநன்கொடையாகத் தெரிவிக்கும்கல்வெட்டு இக்கோயிலில் உள்ளது

கி. பி. 1247-ஆம் ஆண்டில் இராசராச சம்புவராயன் எனப்படும் வீரப்பெருமான் எதிரில் சோழ சம்புவராயர் என்னும் படைத்தலைவன் பல இடங்களை இக்கோயில் வழிபாட்டுக்காக அளித்தான். இவர் ஆளப்பிறந்தான் சந்தி என்னும் வழிபாட்டை நிறுவினான்.[19]

விசய நகர மன்னர்களுள் கிருட்டிண தேவராயர் (கி.பி. 1510-1528) ஆம் ஆண்டு வரையில் அரசாண்ட இவர் கல்வெட்டுகள் 16 இக்கோயிலில் உள்ளன. இக்கோயிலுக்குப் பல நன்கொடைகளைத் தம் தந்தை நரசநாயக்கர் பெயரிலும், தாயார் நாகதேவி பெயரிலும் வழங்கினான். இந்நன்கொடைகள் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மும்மொழிகளிலும் இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.[20]

கிருட்டிணதேவராயருக்குப் பின் கி பி. 1529-1542-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி புரிந்த அவரது உடன் பிறந்தவராகிய அச்சுதராயான் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. இவர் 17 கிராமங்களையும் 1000 பசுக்கள் உட்படப் பல நன்கொடைகளை அளித்தார். தமது எடையளவு முத்துகளை துலாபார முறையில் அளித்தார். இவ்விவரம் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆகிய மும்மொழிகளில் ஒரு கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.[21]

திருமலை நாயக்கருக்குப் பின்னர் கி. பி. 1572-ஆம் ஆண்டு முதல் 1585-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி புரிந்த முதலாம் சீரங்கநாயக்கர் வைகாசி மாதத்தில் திருவிழாக்களை நடத்த 5 கிராமங்கள் அளிக்கப்பட்டதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் தென்னாட்டில் ஒரு பாதுகாப்பு இல்லாத காரணமாகக் குழப்பம் ஏற்பட்டது. காஞ்சிமீது படையெடுப்பு நேரிடக்கூடும், என்னும் அச்சம் காரணமாகக் காஞ்சிபுரம் வரதராசர் திருவுருவமும் தேவியர் திருவுருவங்களும் திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் வனத்திடையே மறைத்து வைக்கப்பட்டன கி. பி. 1810-ஆம் ஆண்டில் அவ்வச்சம் நீங்கவே அத்திருமேனி சின்னக் காஞ்சிக்குக் கொண்டுவரும்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த அத்தன்ஜியன் தம் சீடரான லாலாதோடர்மால் உதவியை நாடினார். அத்திருவுருவங்கள் கொண்டு வரப்பட்டு கி. பி. 1810-ஆம் ஆண்டில் கோயிலில் சேர்க்கப்பட்டன. இவ்விரத்தைத் தாயார் சந்நிதியில் பொறிக்கப்பட்ட நீண்ட கல்வெட்டு தெரிவிக்கின்றது. இந்நிகழ்ச்சி தற்காலத்திலும் உடையார் பாளையம் திருவிழா என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது.

---

19. 526/1919.
20. 478, 513' 569/1919.
21. 546, 543, 513/1919.

இக்கோயிலைப் பொறுத்த மட்டில் பஞ்சராத்திர ஆகமமே இங்கு நடைபெறும் அனைத்துப் பூசைகளுக்கும், திருவிழா சடங்குகளுக்கும் அடிப்படையாகவுள்ளது. இந்த ஆகமத்திலுள்ள ''ஜெயாக்கிய சம்உறிதை'' யில் சிலபகுதிகளைக் காட்டும் வீதி முறைகளை அனுசரித்து அனைத்துப் பூசைகளும், சடங்குகளும் நடத்தப்பெறுகின் றன. நாள் தோறும் காலைப் பூசை உச்சிக்காலைப் பூசை, மாலைப்பூசை, மாலைப் சந்திப் பூசை, இரவுப் பூசை ஆகிய ஐந்து பூசைகள் ஐந்து வேளைகளில் நடத்தப் பெறுகின்றன ''சேவா காலம்'' என வழங்கப்பெறும் இவ்வகை நித்தியப் பூசையின் போது நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திலிருந்து சிலபாசுரங்களைப் பாடுவது வழக்கம் நாள் தோறும் 50 பாடல் வரிகள் என்ற முறையில் ஆண்டிற்கு மூன்று அல்லது நான்கு தடவைகளாயினும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முழுவதும் பாடப்படும். இது தவிர நாள்தோறும் காலையில் திருப்பாவையும், மாலையில் ''நித்தியானா சந் தானம்'' என்ற புனித நூலிருந்து சில பகுதிகளும் ஓதப்பெறுகின்றன. நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி கருவறையில் மட்டுமே பாடப்படுகிறது. என்பதும் திரு விழாக் காலங்களில் வீதிகளில் பாடப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மே லும், வடமொழித் தோத்திரங்களைத் தாத்தாச்சாரியார் மரபினர்மட்டுமே இக்கோயி லில் பாடும் உரிமைபெற்றுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. கூரத்தாழ்வாரின் '' வரதராஜன் தவமும் '' வேதாந்த தேசிகரின் '' வரதராஜபஞ்சாசத்தும் '' இக்கோயி லின் முழுங்கப்படுவதைக் காணலாம். பெரும்பாலும் அர்ச்சனைக்கு வடமொழியே கையாளப்படுகிறது. அன்பர்கள் விரும்புமிடத்துத் தமிழில் அர்ச்சனை நடத்தப்பெறு வதாகக் கூறுகின்றனர்.

திருமஞ்சனம் எனப்படுவது அபிடேகப் புனித நீராட்டாகும். நாள்தோறும் போகமூர்த்தியாகி வெள்ளித் திருவுருவத்திற்குத் திருமஞ்சனம் நடைபெறுகிறது. மூல வருக்கும், பெருந்தேவி தாயாருக்கும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை நாளிலும் திருமஞ் சனம் நடைபெறுகிறது. திருவுலாத் திருமேனிகளுக்குப் புனித நீராட்டு மாதப்பிறப்பு அஸ்தம், திருவோண நட்சத்திர நாள்களிலும் நடைபெறுகின்றது. இந்நாள்களில் உலாத்திருமேனிகள் அபிடேக மண்டபத்திற்கு நீராட்டுக்குக் கொண்டு வரப்படுகின் றன. அப்போது வட.மொழி வேதசுலோகங்களும், தமிழ்ப் பாடல்களும் ஓதப்பெறு கின்றன. அப்போது பேரிகையும், மத்தளமும் இயக்கப்படுகின்லன. பற்றும் தீபாவளி போன்ற பண்டிகை நாள்கள் எல்லாவற்றிலும் சிறப்புத் திருமஞ்சனங்கள் நடைபெறு கின்றன. ஒவ்வொரு நாளிலும் பல்வேறு நேரங்களில் தெய்வத் திருவுருவங்களுக்குத் தீர்த்தமும், பிரசாதமும் அளிக்கப்படுகின்றன. அப்பிரசாதம் கோயில் பணியாளர்களும் அங்கு வழிபாடு புரிய வருபவர்களுக்கும் அளிக்கப்படுகிறது.

நாள்தோறும் நடைபெறும் வழிபாட்டுகளைத் தவிர மன்னர்களின் பெயரிலும், உயர் பதவியாளர்கள் பெயரிலும் முற்காலத்தில் வழிபாடுகள் நடத்தப்பட்டன. தற் போது பேராளர்கள் விருப்பத்திற்கேற்பச் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பெறுகின்றன.

பெரும்பாலும் இக்கோயிலில் எல்லா மாதங்களிலும் திருவிழாக்கள் கொண்டாட பெறுகின்றன. எனினும் வைகாசி மாதத்தில் நடத்தப்பெறும் ''பிரமோற்சவம்'' மிக முக்கியமான திருவிழாவாகும்.

சித்திரை மாதத்தில் அஸ்த நட்சத்திரத்தில் "திருவட்டார உற்சவம்" என வழங்கப்பெறும் திருவிழா நடைபெறுகிறது. பிரமதேவர் வளர்த்த வேள்வித் தீயினின்று திருமால் வரதராசராகத் தோன்றியதாகக் கூறுவர். நிறைமதி நன்னாளில் சுவாமி புறப்பாடு தொடங்கப்பெற்றுக் காஞ்சிக்கு அருகில் அமைந்திருக்கும் பாலாற்றுக்கு உலா முறையில் சென்று அடையும். அங்கே பிரமதேவர் வரதராசரைப்பூசனை செய்வதாகப் பாவனை செய்து விழாக கொண்டாடுவது வழக்கம்.

வைகாசியில் பிரமோற்சவம் சிறப்பு மிக்கதோர் விழாவாகும். இத்திருவிழாவிற்கு முந்திய நாளில் சேனை முதலியார் திருவிழா நடை பெறுகின்றது. அந்நாள் மாலையில் வேள்விக்குத் தேவைப்படும் புனித திருமண் கொண்டுவருவதற்காகத் திருவுலாவில் அவர் வெளிவருவார். பத்து நாள்கள் நடக்கும் இவ்விழா முதல் நாள் வரதராசப் பெருமாள் சீதேவி, பூதேவி, ஆகிய தேவியர் சூழ நான்காம் பிரகாரத்திலுள்ள வாகன மண்டபத்திற்கு எழுந்தருளியதுடன் கொடியேற்றம் சிறப்புடன் தொடங்கப் பெறுகிறது. இரண்டாம் நாளில் காலையில் அன்ன வாகனமும். மாலையில் சூரியப் பிரபையும், மூன்றாம் நாள் காலையில் கருடோற்சவமும் நடைபெறுகின்றன. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாத்தாச்சாரியார் இக்கருட சேவையைப் புகழ்ந்திருக்கிறார். 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாடகர்களாகிய தியாகராயரும், முத்துசாமி தீட்சிதரும் இத்திருவிழாவை மிகச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அன்று மாலையில் ஆஞ்சநேயர் வாகனமும், நான்காம் நாள் காலையில் நாக வாகனமும், மாலையில் சந்திரப்பிரபையும் ஆகும். ஐந்தாம் நாள் காலையில் மோகினி தங்கப் பல்லக்கிலும், மாலையில் யாளி வாகனத்தில் வருவார். ஆறாம் நாள் பெருமாள் வேணுகோபாலரின் உடையில் சப்பரத்தில் உலா வருவார். ஆறாம் நாள் மாலையில் யானை வாகனத்தில் ஏகாம்பரநாதர் கோயிலில் ஏசல் நடைபெறும். ஏழாம் நாள் தேர்த்திருவிழாவில் தேர் காந்தி சாலையிலிருந்து புறப்பட்டுக் காமராசர் தெரு, நெல்லுக்காரத் தெரு, இராசவீதி செங்கழுநீரோடை வீதி (கங்கைகொண்டான் மண்டபம்), கீழண்ட இராச வீதி ஆகிய வீதிகளின் வழியாக மறுபடியும் காமராசர் தெரு, காந்தி சாலை வழியாகத் தேரடி வந்து சேரும். எட்டாம் நாள் காலையில் வரதராசரின் திருவடிகளுக்குத் தொட்டியில் புனித நீராட்டு நடைபெறுகிறது. தேவியர்களுக்குப் பெரிய வெள்ளித் தொட்டியிலுள்ள புனித மஞ்சள் நீரில் நீராட்டு நடைபெறுகிறது. மாலையில் ஏகாம்பரநாதர் கோயில் சந்நிதியில் குதிரை வாகனத்தில் ஏசல் நடைபெறும். ஒன்பதாம் நாள் காலையில் ஆடும் பல்லக்கும், மாலையில் புண்ணியகோடி விமானத்தில் திருவுலாவும் நடைபெறும். பத்தாம் நாள் கொடியிறக்கமும், மாலையில் பெருமாள் வேட்டி வேர்ச் சப்பரத்தில் வலம் வருவதுலும் வழக்கமாகும். அன்று இரவில் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் திருவுலாக் காட்சிகள் நடைபெறுகின்றன. பிரமோற்சவ நாள்களில் தெய்வத் திருமேனிகளைத் தொடர்ந்து வேதம்ஓதுவோர் காலையிலும் மாலையிலும் செல்லுகின்றனர். இத்திருவிழாவைப்பொறுத்த அளவில் இன்றைக்கு இருக்கும் நடைமுறைதான் பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.[22]

---

22. 604/1919.

இவ்விழா தவிர ஆனி மாதத்தில் ஏழு நாள்கள் கோடை உற்சவமும், ஆடியில் ஆடிப்பூரத் திருவிழாவும் நடைபெறுகின்றன. ஆடிப்பூரத்தின்போது சூடிக்கொடுத்த நாச்சியாருக்கும், வரதராசப் பெருமாளுக்கும் திருக்கலியாணம் நடத்தப் பெறுகிறது. மற்றும் பவித்திரோற்சவம் எனவழங்கப்பெறும் விழா ஆவணியில் நடத்தப்பெறுகிறது. நாள்தோறும் நடத்தப்பெறும் சடங்குகளிலும் நம்மை அறியாமல் ஏற்படும் குற்றங்களையும், குறைகளையும் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நடத்தப்பெறும் பவித்திரோற்சவ வேள்வி அனைத்துக் கோயில்களிலும் நடைபெறும் வழக்கமான திருவிழா எனலாம். இவ்விழா தவிர ஆவணியில் உரோகினி நட்சத்திரத்தில நடைபெறும் கிருட்டிண செயந்தி மற்றுமொரு குறிப்பிடத்தகுந்த விழாவாகும். புரட்டாசியில் பத்து நாள்கள் தொடர்ந்து நடைபெறும் நவராத்திரி விழாவின்போது நூற்றுக்கால் மண்டபம் கொலு அலங்காரச் சிறப்பால் பன்மடங்கு கவர்ச்சி பெற்றுத் திகழும். அப்போது அங்கே சுவாமி எழுந்தருள்வது வழக்கம். புரட்டாசித் திருவோண நட்சத்திரத்தன்று வேதாந்த தேசிகர், திருக்கச்சி நம்பிகள் ஆகிய இருவரும் மட்டுமே வெளியிலிருந்து இக்கோயிலுக்கு வருவார்கள். ஆண்டு முழுவதும் நடைபெறும் திருவிழாக்கள் அனைத்தும் சிறப்புடன் நடந்தேறுவதற்காக நடத்தப்பெறும்விழா "அங்குரார்ப்பணம்" ஆகும். இஃது ஐப்பசியில் வருகிறது. மேலும் தென்கலை ஆச்சாரியார் மணவாள மாமுனிகள் திருவிழாவும் நடைபெறும்.

கார்த்திகை மாதத்தில் நடக்கும் கார்த்திகைத் தீபத்திருவிழாவும் குறிப்பிடத்தக்க விழாக்களுள் ஒன்றாகும். கார்த்திகை அனுசத்திருநாளில் வடகலை தாததேசிகர் திருவிழா.10 நாள்கள் நடைபெறும். மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசியின் போது நடைபெறும். ஆண்டாள், வரதராசப் பெருமாள் ஆகியோர் திருக்கலியாணம் மற்றுமோர் சிறப்பான வைபவமாகும். தை மாதத்தில் பரிவேட்டைத் திருவிழாவின் போது காஞ்சிக்கு அருகிலுள்ள பாலாற்றங்கரைக்குப்பெருமாள் எழுந்தருள, எண்ணிக்கையிற் மிகுந்த மக்கள் அங்கே கூடி விழாக் காண்பர். இதே மாதத்தில் பௌர்ணமி தினத்தில் அனந்தசரகத் தீர்த்ததில் நடத்தப்பெறும் தெப்பத் திருவிழா இன்றைக்கும் சிறப்புற நடைபெறுகிறது.

மாசி மாதத்தில், காஞ்சிக்கு அருகில் ஆறு மைல் தொலைவில் அமைந்திருக்கும் இராசகுளத்தின் "தெப்போற்சவம்" என்று வழங்கும் விழா நடைபெறுகிறது. இவ்விழா சமீபத்தில் நின்று போய்விட்டது எனவும் கூறுகின்றனர் இவை தவிர பங்குனி மாதத்தில் ஏழு நாள்கள் தொடர்ந்தாற்போல் "பல்லவ உற்சவம்" என வழங்கும விழாவும் இக் கோயில் நடத்தப்பெறுகிறது.

பெருந்தேவி தாயார் வெளியில் புறப்பாடு எப்போதும் நடைபெறுவது இல்லை. துரைத் தோட்டத்துக்குத் தாயார் வெள்ளிக்கிழமை மட்டுமே எழுந்தருள்வார். வெள்ளிக்கிழமை ஏகாதசியன்று தாயார், பெருமாள் இருவரும் எழுந்தருள்வர். இஃதே இரட்டைப் புறப்பாடாகும். ஆச்சாரியர் அனைவரின் பிறந்த நாள்களில் பெருமான் இராமாநுசர் சந்நிதிக்கு எழுந்தருள்வார்.

பண்டைக்காலத்திலே பூதத்தாழ்வாரால் பாடப்பெற்ற வரதராச சுவாமி கோயில் திருப்பதி, திருவரங்கம் ஆகிய வைணவப் பெருங்கோயில்களோடு சேர்ந்தது எண்ணப் படத்தக்க முக்கியத்துவம் பெற்றது. விசிட்டாத்துவை தத்துவத்தை நிறுவிய இராமனுசர் காஞ்சியில் மேற்கொண்ட செயல்திறத்தின் காரணமாக வரதராசர் கோயில் உன்னத நிலையை அடைந்தது. அவர் காலத்தில் வாழ்ந்த திருக்கச்சி நம்பி, கூரத் தாழ்வார் ஆகியோர்களைப் போன்று அடக்கத்திலும், அறிவாற்றலிலும் மிக்க வைணவ ஆசிரியர்களும காஞ்சி வரதராச சுவாமி கோயில் வளர்ச்சிக்குத் துணை நின்றனர். இராமானுசரின் விசிட்டாத்துவை உபதேசங்களை முதலில் ஏற்றுக் கொண்ட முதல் கோயில் வரதராச சுவாமி கோயிலாகும்.

தாதக தேசிகர் மேற்கொண்ட திருப்பணிகளும் ஜீயர் புரிந்த அரிய சேவைகளும் இக்கோயில் பெருமைமிக்க நிலையை அடைய உதவின. ஆழ்வார்கள் அனைவரின் திருவுருவங்களும் இக்கோயிலின் நிலைப்படுத்தப்பட்டு வழிபாடு ஆற்றப் பட்டதன் காரணமாக வைணவ சமயம் வளர்ச்சி அடைந்தது.

இக்கோயில் சமய வாழ்வின் மையமாக இருந்துவந்தது. வேறு அலுவலில் மற்ற ஊர்களுக்குச் சென்று இப்பகுதி மக்கள் ஆண்டுதோறும் திருவிழாக் காலங்களி லாயினும் இங்கு வந்து தெய்வப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆதலால் நாட்டுப்பற்றும், உள்ளூர்ப்பற்றும் அவர்களுக்கு ஏற்பட்டது. அன்றாட வாழ்க்கையின் மையமாக இக்கோயில் திகழ்ந்ததால் இக்கோயிலின் புனித வழிபாட் டின்போதும், திருவிழாக்காலங்களின் போதும் அருகிலிருந்தும், சற்றுத் தொலைவிலி ருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக இக்கோயிலுக்கு வருகிறார்கள். நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அயல்நாட்டிலிருந்தும் கூட உல்லாசப் பயணிகள் இக் கோயிலுக்கு வருகிறார்கள். அத்தகைய சிறந்த பயனை இக்கோயில் அளித்து வருகிறது.

கோயிலும் அதனைச் சார்ந்த பல கட்டடங்கள் கட்டப்பட்டதில் கட்டடக் கலையும், சிற்பக்கலையும் சென்ற காலத்தில் அமைந்த சிறப்பைச் சுருக்கமாகக் காட்டுகின்றன. கோயில்களைக் கட்டுவதிலும், அதன் சிறப்புகளைக் வெளிப்படுத் துவதிலும் கல், மரம் உலோகம் ஆகியவற்றைக்கொண்ட தங்கள் கலைகளில் பயிற்சி களை எடுத்துக்காட்டத் தொழிலாளர்களுக்கு நல்வாய்ப்பை இக்கோயில் தந்து உதவியது. புனித இலக்கியங்களைப் பரப்புவதில் இங்குள்ள அரியகேசவன் மடம், வேதமடம், அழகிய மணவாளர் மடம் ஆகியவை போன்ற மடங்கள் புரிந்த பணி சிறப்பானதொன்றாகும். இங்குப் பல மடங்கள் திறம்படப் பணியாற்றியுள்ளன.

அந்தணர்கள் அல்லாதவர்கள் வைணவ சமயத்தைச் சாருமிடத்து அவர்கள் சாத்தாத வைணவர்கள் என்னும் பெயரில் விளங்கினர். இத்தகையவர்களுக்குத் தனிமதிப்பு அளிக்கும் வகையில் சாதி வேற்றுமையின் கடுமை தளர்த்தப்பட்டது. கோயில் வழிபாடுகளிலும், தமிழ்ப் பிரபந்தங்கள் ஓதுவதிலும் பெண்கள் பெரும் பங்கு கொண்டார்கள்.

ஏழைகளுக்கு உணவளித்தலில் இக்கோயில் பெரும்பங்கு ஏற்றது. ஏழைகள் தங்குவதற்கும், உணவு பெறுவதற்கும் அன்பு இல்லங்களாகப் பயன்படும் வகையில் இராமாநுசர் கூடம் என்னும் பெயரில் நிறுவனங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டன. கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சாளுவநரசிம்மன் கண்டடை, இராமாநுச ஐயன் ஆகியோர் நன்முயற்சியால் இங்கு இராமாநுசர் கூடம் சிறப்புறப் பணியாற்றியது. ஆனால், தற்போது இப்பணி நடைபெறுவதில்லை.

இக்கோயிலில் பரந்த விளை நிலங்கள் பயிரிடப்படுமாறு பிறருக்குத் கொடுத்து உதவிற்று. இக்கோயிலுக்குப் பலர் பசுக்களைத் தானமாகக் கொடுத்தார்கள். இப்பசுக்கள் இன்னலின்றிப் பல இடங்களில் மேய்ந்து வரக் கருணையாளர்கள் பலர் அனுமதித்தார்கள். இதன் காரணமாகப் பசு வளர்த்தல் இங்கு மேம்பாடு அடைந்தது. இவ்வாறு வரதராசர் கோயில் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் மக்களுக்குப் பெரிதும் உதவி வந்துள்ளது

சோழர் காலம் முதற்கொண்டே இக்கோயிலில் நிருவாக ஊழியர்கள் இருந்து வந்துள்ளனர் என்பதைப் பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அவர்கள் ''வாரியப் பெருமக்கள்'' என்றும், ''கரணத்தார்'' என்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டனர். [23]

''ஸ்ரீபண்டாரத்தார்'' என்றழைக்கப்பட்ட குழு கோயிற்கருவூலத்தைக்கவனித்து வந்ததாகவும்[24]''தான த்தார்'' அல்லது ''தலத்தார்'' என வழங்கப்பெற்ற குழு கோயில நிருவாகத்தை மேற்கொண்டு வந்ததாகவும்[25] கல்வெட்டுகளின் மூலம் தெரிய வருகிறது.

தமிழக வரலாற்றின் இடைக்காலம் வரை அரசின் தலையீடு எதுவுமின்றித் தன்னிச்சையாகச் செயல்பட்ட இந்து சமயக் கோயில்கள் விசய நகர மன்னர்கள் காலத்தில் குறிப்பாக வேங்கடன் மன்னன் காலத்தில் அரசின் அதிகாரத்திற்குள் வந்தன. இம்மன்னன் காலத்தில் ஸ்ரீகாரியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு அனைத்து வைணவ கோயில்களையும் நிருவகிக்கும் நிலை ஏற்பட்டது. இதில் வரதராசப் பெருமாள் கோயிலும் இதனுள் அடங்கியது ஸ்ரீகந்தாடை இராமநுச ஐயங்கார், அழகிய மணவாள ஜீயர், எட்டூர் குமார தாத்தாச்சாரியார் போன்ற பெருமக்கள் ஸ்ரீகாரியத்தில் முக்கியமான அங்கம் வகித்து இக்கோயிலை திருவகித்து வந்துள்ளனர் விசயநகர மன்னர்களின் ஆட்சிக்குப் பின் கோயில் நிருவாக அதிகாரம் தாத்தாச்சாரி. யார் மரபினரிடமிருந்து மாறித் ''தலத்தாரின்'' வசமாயிற்று. கி. பி. 1792-ஆம் ஆண்டு வரை தலத்தார்களே இக்கோயில் நிருவாகத்தைக் கவனித்து வந்தனர். கி.பி. 1796- ஆம் ஆண்டில் நிருவாகப் பொறுப்பை கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்றுக்

23. தென்னிந்தியக் கல்வெட்டுகள் 389/1919
24, ,, '' எண் 376
15, ,, '' ,, 345.

கொண்டு கி. பி. 1842- ஆம் ஆண்டுவரை செயலாற்றி வந்தது. பின்னர் அரசின் புதிய கொள்கையால் மறுபடியும் கோயில் நிருவாகம் அறங்காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. குமார தாத்தாச்சாரியார் என்பவர், கி. பி. 1842- ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தருமகர்த்தவாக நியமிக்கப் பெற்றார். கி. பி. 1941 ஆம் ஆண்டு வரையில் அவர் மரபினரே இக்கோயிலை நிருவாகம் செய்துவந்தார்கள். பின்னர்த் தென்கலைச் சம்பிரதாயத்தினருக்கும். வடகலை சம்பிரதாயத்தினருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால். நிருவாக அதிகாரம் பற்றிய வழக்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றன. அதன் விளைவாகதென்கலை மரபினர் ஒருவரும் வடகலை மரபினர் ஒருவர், தமார்த்தர் மரபிலோ வந்தவர் ஒருவராக மூவர் கொண்ட நிருவாகக் குழு அமைக்கப்பட்டது. கி. பி 1909-ஆம் ஆண்டில் மீண்டும் சிக்கல் எழவே உயர் நீதிமன்றத்தினர் பரம்பரை அறங்காவலர் உரிமையை நீக்கிவிட்டனர். இதன் பின்னர் கி. பி 1941-ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையை ஆட்சித்துறையினரே இக்கோயில் திருவாகத்தை மேற்கொண்டு வைணவர் அல்லாத ஒருவரைச் செயல் அலுவலராக நியமித்தனர். தற்போது செயல் அலுவலரே பணியாற்றி வருகிறார்.

இக்கோயிலுக்கு 275 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் 12 கிராமங்களில் உள்ளன அவற்றைக் இக்கோயிலார் குந்தகைக்கு விட்டுள்ளனர். வழிபாடு செய்வதற்கு கட்டளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலினுள் வடபகுதியில் தொரைத் தோட்டம் என்னும் பரந்த வெளித்தோட்டம், தென்பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் தொரைத்தோட்டத்துக் நேரொத்த பரப்புள்ள தோட்டங்களும் உள்ளன. இவற்றின் மொத்தப் பரப்பு 12 ஏக்கராகும். இவற்றிற்குப் பராமரிப்புத் தேவை.

இந்து சமய அறநிலைய் ஆட்சித்துறைப் பதிவேட்டின்படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 14,60,000

காஞ்சிபுரம்

# வன்னீசுவரர் கோயில்

பெரிய காஞ்சிபுரம் ஒக்கப்புறத்தான் குளத்தில் தென்புறத்தில் சகோதர தீர்த்தத்தன் தென்கரையில் அமைந்துள்ளது.

இப்பகுதியில் வன்னிமரம் மிகுதியாக இருந்த காரணமாக இக்கோயில் வன்னீசுவரர் கோயில் என்னும் பெயர் அமைந்தது என்பது இங்குக் கூறப்படுகிறது. இக் கோயிலை ஜலகண்டீசுவரர் கோயில் என மக்கள் குறிப்பிடுகிறார்கள். சகோத தீர்த்த

நீர் சிலகாலங்களில் இலிங்கத்தின் கழுத்து வரையிலும் நீர்மட்டம் உயர்வதால், ஜலகண்டீசுவரர் என்னும் பெயரில் இவர் வழிபடப்பெறுகிறார்.

கோயிலின் கிழக்குப்பகுதியில் நந்தியுருவமும் பலிபீடமும் அமைந்துள்ளன. கருவறைக்கு வெளியே வலப்புறத்தில் நயன விநாயகர் திருவுருவம் இருக்கின்றன. கருவறைக்கு வெளியே இடப்புறத்தில் சண்டேசுவரர் திருவுருவம் அடுத்து நாகேசுவரர் திருவுருவமும் உள்ளன. கருவறையில் சிவலிங்க வடிவில் வண்ணீசுவரர் உள்ளார்.

பிராகாரத்தையொட்டிச் சுகோதர தீர்த்தமுள்ளது. நந்திதேவர் விமானம் ஒரே தளத்தையுடையது. இவ்விமானத்தில் இடபதேவர் உருவங்கள் நான்கு உள்ளன

இக்கோயிலில் உள்மண்டபத்தில் நடன விநாயகர் சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. உள்மண்டப நுழைவாயிலின் இருமருங்கிலும் சுவரில் முருகர், விநாயகர் ஆகியோர் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. வாயிலின் மேற்பகுதியில் கஜலட்சுமியின் புடைப்புச் சிற்பமுள்ளது. ஊர்மக்களால் இக்கோயில் நிருவாகம் நடைபெறுகிறது.

**வாணேசம் :**

வாணம் தவத்தினுக்கு எளிவந்து சிவபிரானார் திருநடனம் செய்தனர். திருநந்திதேவரோடு வாணனும் குடமுழா முழக்கினன், பெருமானார். ஆயிரங்கைகளை அவ்வசுரனுக்கு அளித்து மேலும், அவன் விரும்பிய நெருப்புவடிவமான கோட்டையையும் மூவுலகையும் ஆளும் வல்லமையையும் அழியாத இயல்பையும் பிறவற்றையும் வழங்கினர்.

யாவரையும் அடிப்படுத்து அவ்வசுரன் ஆளும் நாளில் கயிலைக்குச் சென்று பெருமானை வணங்க 'நினக்கு வேண்டும் வரம் யாதென' வினவிய கயிலை நாயகர்பால் நாளும் திருக்காட்சி தர அம்மையொடும் குமரர்களோடும் என் இல்லத்தில் நாளும் திருக்காட்சி தர அம்மையொடும் குமரர்களோடும் என் இல்லத்தில் எழுந்தருளி இருத்தல் வேண்டும் என்றனன்,

மனக்கருத்தை முற்றுவிக்க வாயிலில் வீற்றிருக்கும் பெருமானாரைத் தேன் நிலவு தீரப்போருக்கு அழைத்தனன் வாணன். பெருமான் புன்முறுவலுடன் முப்பது முறை உன்னிடத்துத் தோற்ற கண்ணன் உபமன்னியர்பால் சிவதீக்கை பெற்று நின்னை வெல்லும் வலியினனாய் நின்மகள் பூசித்துப் பெருவலி பெற்று நின்னை வெல்லும் வலியினனாய் நின்மகள் உஷைக்கோர் டழி வருங்கால் மதிற் கொடியும் அற்றுவிழும் துன்னிமித்தத்தில் போர்க்கு வருவன் என்றனர்.

அங்ஙனே, உஷை கனாக் நனவில் வருந்தும்போது சித்திரவேகை என்னும் தோழி தீட்டிய அரசிளங்குமரர்களுள் தன்னைக் கனவிற் கலந்தவனைக் காட்டக் கண்டு கண்டு கண்ணபிரான் பெயரனும் பிரத்தியும் நன்மகனுமான அநிருத்தனைத் துயிலும் அணையொடும் கொண்ட கொணர்ந்தனன் தோழி.

அந்தப் புரத்தில் அவனொடும் இருந்த உஷை கருவுற்றமை அறிந்த வாணன் அநிருத்தனை அரிதிற் சிறைப்படுத்தினன்.

அநிருத்தன் சிறைப்பட்டமை நாரதரால் அறிந்த கண்ணன் சோணிதபுரத்தின் மேற் படையெடுப்புத்துழி வாயிலில் காவல்கொண்டிருந்த சிவபிரானார் பல்வகை யாகத் தேற்றி என்னையும் வெல்லும் ஆற்றலை முன்னொருகால் மந்தமலையில் வழங்கியுள்ளோம் அதனை மறந்தனை எனத் துவாரகை மன்னனைத் தெருட்ட வேறு வழியின்மையால் எதிர்நின்று போர்செய்கையில் கண்ணனுக்கு வெற்றியை வழங்கினர்.

இவ்வாறே உமையம்மையார், விநாயகர், முருகப்பெருமானார்இருந்தஏனைய மூன்று வாயில்களையும் கடந்தபோது வாணன் கண்ணனுடன் போர்செய்து முடிவில் தொளாயிரத்து தொண்ணூற்று கரங்களை அறுபட்டிழந்துச் சிவபெருமான் எதிரெ ழுந்தருக் கண்ணனே நின்போல் என்பால் அன்பனாகிய வாணன் நம்மை வழிபட இரு கரங்களை விடுக என அருளினார். கேட்ட கண்ணன் நும் அன்பர் எனக்கும் அன்பரேயாவர் என நாற்கரம் விடுத்தனர்.

சிவபெருமான் புன்முறுவல் பூத்து வாணனை நோக்கி தோள் தினவு தீர்ந்தது போலும் என வினவி உஷையை அநிருத்தனுக்கு மணம் புரிவித்துக் துவாரகைத் கனுப்பினர், வாணனுக்குத் குட்முழா முழக்கும் பேறு அளித்துக் கைலைக்கேகினர் பெருமானார்.

சின்ன காஞ்சிபுரம்

# வரதப் பிள்ளையார் கோயில்

இக்கோயில் வரதராசப் பெருமாள் கோயிலிலிருந்து தேனம்பாக்கம் செல்லும் வழியில் வேகவதியின் வடகரையில் கிழக்கு நோக்கியவாறு இரண்டு செண்ட் நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

முற்காலத்தில் நோய் நீக்கும் நெடுங்கல்லும் அதன்எதிரில் விநாயகர் கோயிலும் அமைவது வழக்கம். இந்த நெடுங்கல் பெண்களுக்காக வாதநோய்களைத் தீர்க்கும்

குணமுடையது. நள்ளிரவில் இதனை ஆடையற்ற நிலையில் நோயுற்ற பெண்கள் தழுவிக் கொண்டு நின்றால் அவர்களுடைய நோய் நீங்கும் என்பது நம்பிக்கையாகும் பின்னாளில் கம்பங்கள் அழிந்து போயின, பிள்ளையார் கோயில் மட்டும் பழைய பெயரில் வரதப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகின்றார்

இதே போன்று வாதப்பிள்ளையார் கோயிலொன்று கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் ஊரிலும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். உள்ளூர் செவிவழிப் புராணங்களின்படி புத்தர் சமணர்களும் சைவர்களும் இங்கு வாதம் நிகழ்ந்தபோது சாட்சி ஏற்பவராக நிறைதால் இப்பிள்ளையார் வாதப்பிள்ளையார் என்று அழைக்கப் பட்டதாகக் கூறுகின்றனர்.

இக்கோயில் கிழக்கு வாயிலின் வழியாக உட்சென்றதும் சிறு மண்டபத்தில் பலி பீடம் ஆகியவற்றைக் காண்கிறோம். பின்னர் உள்மண்டபம் சென்று கருவறையின் வீற்றிருக்கும் கணபதியை வழிபடுகிறோம். பலிபீடம், பெருச்சாலி அடியவர் முதலியோர் திருவுருவங்கள் சில இன்னும் நிறுவப்படாமல் உள்ளன. இக்கோயில் சிறு கருவறை உள்மண்டபம் மகாமண்டபம் திறந்தவெளிச் சுற்றுப் பிராகாரம் கருவறைமீது சதுர வடிவான விமானம் ஆகியவை அமைந்துள்ளது. இங்குப் பூசகர் ஒருவர் ஒரு காலப் பூசை செய்து வருகின்றார். அன்பர்கள் நாள்தோறும் இங்கு வருவதில்லை. வேண்டும்போது மட்டுமே வந்து வழிபாடு செய்கின்றனர். தனியார் நிர்வாகத்தின் கீழ் இக்கோயில் இயங்கி வருகின்றது.

### காஞ்சிபுரம்

# வியாச சாந்தலீசுவரர் கோயில்

இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் வேகவதியாற்றிற்குச் செல்லும் சாலையில் (காஞ்சிபுரம் வெங்குடி மருத்துவமனை பேருந்து நிலையத்திலிருந்து பச்சையப்பன் மகளிர் கல்லூரி வழியாகச்செல்லும் வழியில்) கிழக்கு நோக்கியவாறு 20 சென்ட் நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

இந்த இடம் வியாசபகவானால் பூசைசெய்யப்பட்ட இடங்களுள் ஒன்றாதலின் இது சப்தரிஷிமண்டலம் என்றழைக்கப்பெறுகின்றது.

ஒருமுறை வியாசர் கயிலாயத்திற்கு எழுந்தருளினார். அவரிடம் பார்வதிதேவி, சிவன் பரம்பொருளா? திருமால் பரம்பொருளா? என வினவினாள். அப்போது அங்கு வந்த திருமால் தாமே பரம்பொருள் என்று கூறினார். இதைக்கேட்ட நந்திதேவர் கோபம் கொண்டார். திருமாலை நோக்கிக் காஞ்சிக்கு வந்து இச்சொற்களைக் கூறிச்

சத்தியம் செய்யுமாறு கோரினார். 'அப்படியே செய்வேன்' என்று காசிக்குவந்து சத்தியம் செய்யக் கையை ஓங்கியபோது அவரது கை அப்படியே நின்றுவிட்டது. நந்திதேவர் திருமாலைக் கோபித்து இனி நீ காசியில் இருக்கக்கூடாது என்று விரட்டினார். பிறகு காஞ்சிக்கு வந்து திருமால், நந்தியின் அநுக்கிரகம் பெற்றுத் தன் கை குணமடையப் பெற்றார். அவர் அருகில் நின்ற வியாசர் ஏதும் பேசாதிருந்ததால் அவரும் பாவத்திற்கு ஆளானார். அவர் காஞ்சிபுரம் வந்து ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்த இடம் இஃதாகும். அவர் பூசை செய்த சிவலிங்கம் வியாச சாந்தாலீசுவரர் என்னும் பெயர் பெற்றுள்ளது.

இஃது ஆதி சங்கர பகவத்பாதர் வழிபட்ட இடமாகும். கோயிலின் கிழக்கில் அழகிய குளமுள்ளது. இது வியாச தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

முன்பு இக்கோயிலின் தலமரம் மகிழமரமாகும். அது காய்ந்துவிட்டதால், அதை வெட்டிவிட்டு அங்கு ஒரு விநாயகர் சந்நிதியை அமைத்துள்ளனர்.

கோபுரமற்ற நுழைவாயிலின் வழியாக உட்சென்றதும் முன்புறம் கருவறையை நோக்கியவாறு அமைந்த நந்திதேவர் திருவுருவத்தையும் பலிபீடத்தையும் காண்கிறோம். இதற்குச் சற்று வடக்கில் சிறு விநாயகர் சந்நிதி உள்ளது. இனி வலமாக வரும்போது விநாயகர் எழுந்தருளியுள்ள சந்நிதியையும் சண்முகர் தேவியருடன் எழுந்தருளியுள்ள சந்நிதியையும் காண்கிறோம். வடகிழக்கு முனையில் நவக்கிரகங்களும் அடுத்து வயிரவர் சந்நிதியும் தெற்கு நோக்கியுள்ளன.

கருவறையின் புறக்கோட்டங்களில் விநாயகர், தட்சினாமூர்த்தி, திருமால் பிரமதேவர், துர்க்கை ஆகியோரும் கோமுகிக்கருகில் சண்டேசுவரரும் எழுந்தருளியுள்ளார்.

கருவறையுள் 16 பட்டை சிவலிங்கமாக வியாச சாந்தாலீசுவரர் எழுந்தருளியுள்ளார். சோழர் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பெறும் இக்கோயிலில் கல்வெட்டுகள் இல்லை. நவாப்காலத்தில் இக்கோயில் சிறிது சேதமடைந்தது என்பர்.

குருக்கள் இக்கோயிலில் இரண்டு காலங்களில் பூசை செய்து வருகின்றார். சங்கர ஜெயந்தி, திருவாதிரை, சஷ்டி, சிவராத்திரி, ஆகிய நாள்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன பரம்பரை அறங்காவலர் அருச்சகராகவும் இருந்து பூசை செய்து வருகின்றார். பிரபை, சப்பரம் முதலியவை உள்ளன.

இக்கோயிலில் அருகில் வியாசர் அமைத்த மற்றொரு சிவலிங்கமும் உள்ளது.

காஞ்சிபுரம்

# வீரட்டானேசுவரர் கோயில்

காஞ்சியில் கோனேரிக்குப்பத்தில் மேற்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது. சங்கார காலத்தில், எல்லாம் காலாக்கின் உருத்திரர் நெற்றிக்கண், தீயினால் அழிக்கப்பட்ட போது இறைவன் ஆனந்த மிகுதியால் மேல் மேலும் வீரத்தை புரிந்தார். ஆதலால், இவ்விடம் வீரட்டாகாசம் என்றாயிற்று. (பல தெய்வீக வடிவங்கள் சித்திர வடிவில் வைத்துப் பூசிக்கப்பெறுவதால் சித்திரப்பிரதிட்டை வீரட்காசம்எனவும் வழங்கப்பெறும்.

பின்பு, இறைவன் இங்கு இலிங்க உருவங்கொண்டு அமர்ந்திருந்தார். அச்சிவலிங்கத்தை சித்தர் சிலர் வழிபட்டு அற்புத அரிய சித்திகளை எய்தினர். கொங்கண முனிவர் இங்குவந்து இச்சிவலிங்கத்தின் பெருமையைத்தெரிந்து கொள்ள எண்ணினர் எந்தப் பொருளின் மேல் வைத்தாலும் அதனை நீராக்குகின்றதாகிய தமது குளிகையை அதன் முடியில் வைத்தார். அக்குளிகையை அச்சிவலிங்கம் உள்ளே இழுத்துக் கொண்டது. கொங்கண முனிவர் வியப்புற்று அவ்விடத்திலேயே தங்கித் தவம் செய்து பயன் பெற்றார். இக்கோயில் உட்சென்றதும் முதலில நந்தி, பலிபீடம், ஆகியவற்றைக் காணலாம். அவற்றை அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் இடபக்கக் கோடியில் இலிங்கங்கள் காணப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து வரிசையாக நடராசர், சிவகாமி, சூரியன், வயிரவர். ஆகியோரின் பாதங்கள் உள்ளன. அவற்றையடுத்து இலிங்கங்கள் உள்ளன. அவற்றின் எதிரே விநாயகர் திருவுருவம் இருக்கிறது. விநாயகர் திருவுருவத்திற்கு அருகில் நந்தி, பலிபீடம் ஆகியவற்றிற்கு எதிரில் சாக்கிய நாயனார் திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளது. கருவறையில் திருவீரட்டானேசுவர திருவுருவம் மேற்கு நோக்கியுள்ளது. கருவறைக்கு வெளியே வலப்புறம் சண்டேசுவரர் திருவுருவம் உள்ளது.

இக்கோயிலின் எதிரே சக்கரத்தீர்த்தம் காணப்படுகிறது. கோயிலில் முகமண்டபம், உள்மண்டபம் ஆகிய இரு மண்டபங்கள் உள்ளன. இக்கோயிலில் நாள் பூசை தற்காலத்தில் நடைபெறுவதில்லை. சில சிறப்பு நாள்களில் பூசைகள் நடைபெறும்.

காஞ்சிபுரம்

# வீரபத்திரசாமி கோயில்

இக்கோயில் பிள்ளையார்பாளையம் காசி விநாயகர் கோயிலுக்குப் பின் புறமுள் மைதானத்தின் மேற்கில் கிழக்கு நோக்கியவாறு ஒரு செண்ட் நிலப்பரப்பில் அமைந் துள்ளது.

இது ஒரு காலத்தில் சிவலிங்காயகர்களான கவரை இனத்தவர்களுக்கு உரிய கோயிலாக விளங்கியது. அப்போது மடமும் இங்கிருந்தது. இப்போது கோயில் மட்டு மே எஞ்சியுள்ளது. சுற்றுப் பக்கங்கள் யாவும் வீட்டு மனைகளாக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் கருவறை முன்மண்டபம்மட்டுமே கொண்டதாகும். கருவறை மீது வட்ட வடிவ விமானம் ஒற்றைக் கலசத்துடன் விளங்குகிறது.

இங்கு மூலவராக வீரபத்திரர் விளங்குகின்றார். லிங்காயதர் தெய்வம் என்ப தைக் குறிக்கத் தலையுச்சியில் சிவலிங்கம் அமைந்துள்ளது. பக்கத்தில் தன் ஆட்டுத் தலையுடன் நிற்கின்றான். அருகில் காளிதேவியின் சிலைஇருந்திருக்க வேண்டும் இப் போது பீடம் மட்டுமே உள்ளது. வெளியில் திறந்தவெளியில்சிவலிங்கம்சிறுமண்டபத் துள் நந்தி தேவர் திருவுருவம் மிகவும் கலையெழில் மிக்கதாகும். இச்சிவலிங்கத்தை வீரபத்திரன், தங்களது யாகத்தை அழித்தபாவம் நீங்கும் பொருட்டுஅமைத்து வழி பட்டதாகப் புராணம் கூறும்.

இக்கோயிலின் இப்போது முறையான பூசனை இல்லை அன்பர்கள் விரும்பும் போது வந்து வழிபாடு செய்கின்றனர்.

**வீரராகவேசம் :**

இராமன், தன் மனைவியாகிய சீதையை இராவணன் கவர்ந்துசென்றமையால் வருந்தி அம்மனைவியைப் பெறுமாறும் இராவணனை வெல்லுமாறும் உபாயமும் உபதேசமும் புரிந்த அகத்தியர் சொல்வழி "வீரராகவேசன்" என்னும் பெயரால் சிவலிங்கம் நிறுவிப் போற்றினன்.

பிரானார், வெளிநின்று வீரம் வேண்டினை ஆகலின் வீரராகவன் என்னும் பெயரோடும் விளங்குக எனவும் பாசுபதப்படையை வழங்கித் தேவர் பிறரைக்

கொண்டு அவரவர்படைகளை வழங்குவித்து இலக்குவனொடும் சுக்கிரீவன் முதலாம் படைத்தலைவனோடும் இலங்கை புகுந்து இராவணனை அவன் சுற்றத்தோடும் அழித்துச் சீதையை மீட்டுக் கொண்டுபோய் அயோத்தியை அடைந்து அரசு செய்க' எனவும் அருள் புரிந்தனர்,

அகத்தியர் உணர்த்திய தத்துவங்களின் ஐயங்களை இராமனுக்குப் போக்கிய சிவபிரானார், இங்கு வணங்கினோர் பகைவரை வென்று வாழ்ந்து திருவருளை எய்துவர் என அருளி மறைந்தனர்.

இத்தலம் புத்தேரி தெருவிற்குத் தெற்கிலுள்ள வயலில் அமைந்துள்ளது.

**பணாதரேசம் :**

கருடன் சிவபிரானை வணங்கிப் பெற்ற பேற்றினால் தம் குலத்தை அழிக்கக் கண்ட பாம்புகள் வேகவதியின் வடகரையில் ஆதீபி தேசத்திற்குத் தெற்கில் பணாதரேசப் பெருமானைத் தாபித்துப் பூசித்துத் தம் குறைதீர வேண்டப், பெருமானார் தமது திருமேனியில் அவற்றை அணிகலமாக ஏற்றுக் கொண்டனர். திருமாலுடன் வந்த கருடனை இறைவன் திருமேனியிலுள்ள பாம்புகள்'' ஏன் கருடா சுகமோ'' என வினவின. இஃது உலகிற் பழமொழியாகவும் விளங்கும், இத்தலம் ஆலடிப்பிள்ளையார் கோயிலுக்கு அணித்தாக வடக்கில் உள்ளது.

துப்புல்

# வேதாந்த தேசிகர் கோயில்

இக்கோயில் காஞ்சிபுரம் இருப்புபாதை நிலையத்திற்குத் தெற்கில் ஒரு கிலோ மீட்டர்த் தொலைவில் விளக்கொளிப் பெருமாள் கோயிலையடுத்து வடக்கில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் தெற்கு நோக்கியவாறு இருக்கிறது.

இக்கோயில் அமைந்துள்ள இடம் முன்பு துப்புல் என்னும் பெயரில் விளங்கி வந்தது. வேதாந்த தேசிகர் பெற்றோர்கள் வரதராசப் பெருமானை வழிபட்டுத் திருமலைக்குச் சென்றனர். இவர் தாயார் அங்கு அயர்ந்து துயின்றபோது திருப்பதி கோயில்மணி இப்பெண்மணியின் வயிற்றில் சென்று குழந்தையாக மாறுவதாகக் கனவில் கண்டார். அதே சமயத்தில் திருப்பதிக் கோயிலிலும் மணி காணப்படவில்லை. ஆகவே அம்மணியே தாயின் கருவில் உருப்பெற்று வேதாந்ததேசிகராகப்பிறந்ததென்பது மரபுவழிச் செய்தியாகும். அதனால் இன்றும் திருப்பதி கோயிலில் கைமணியை ஒலிப்பதில்லை என்று கூறுகின்றனர்.

இவர் காஞ்சிபுரத்திற்கு அருகில் துப்புல் என்னும் கி. பி. 1268–ஆம் ஆண்டில் தோன்றினார் கி. பி. 1268 முதல் 1369–ஆம் ஆண்டு வரையில் நூறாண்டுக்காலம் வாழ்ந்து வைணவத்திற்காக அரும்பணிகள் ஆற்றிய வடகலை ஆச்சாரியார்வேதாந்த தேசிகராவார். இளமை முதல் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி, புகழ்வாய்ந்த நூல்களாகிய சததூஷினி, சங்கல்பசூர்யோதய, யாதவ்யுதய, யதிராஜ சப்ததி, ஸ்ரீதுதி முதலியவற்றை இயற்றினார். இவர் வேதாந்தாச்சாரியர், கவிதர்க்க சிம்மம், சர்வ தந்தரதவந்தார் என்னும் பட்டங்களைப் பெற்றவர். காஞ்சி வரதராசர் மீது அடைக் கலப்பத்து என்னும் தமிழ்நூலைக் கவிதை வடிவில் இயற்றினார். ஆழ்வார்கள் இயற்றிய திவ்வியப் பிரபந்தங்களுக்கு இவர் தனிமதிப்பு அளித்து வந்தார். இவர் காஞ்சி வரதராசரைப் போற்றி ஐம்பது சுலோகங்கள் இவர் அருள்ய வரதராச பாஞ்ச சத்தில் உள்ளன. இவர் அத்திகிரி மகாத்மியம் முதலான நூல்களை அருளிச் செய் தார். வரதராசர் மீது இவருக்கிருந்த அளவுகடந்த பேரன்பைத் தமிழில் இவர் இயற்றிய அடைக்கலப்பத்து காட்டுகிறது. இவரது நினைவாக இக்கோயிலை இவர் புதல்வர் நயின வரதாச்சாரியார் கட்டிமுடித்தார்.

இக்கோயில் அகன்ற முகமண்டபத்தையும் அதனையடுத்துத் தென்வடலான மகாமண்டபத்தையும், உயர்ந்த பிராகார மண்டபத்தையும் கொண்டுள்ளது. கரு வறையுள் மூலவராக வேதாந்த தேசிகர் ஞான முத்திரையுடன் எழுந்தருளியுள்ளார். முன்புறமுள்ள மேடையில் அவரது உலாத்திருமேனியும் அவர் வழிபட்டு வந்த ஸ்ரீஇலட்சுமி அய்க்கிரீவரும் (சிறுசெப்புத் திருமேனி) உள்ளன.

இக்கோயிலின் உட்பிராகாரத்தில் வலம் வரும் வழியில் சுவர்களில் வேதாந்த தேசிகரின் வாழ்க்கை வரலாறு முழுதும் சித்திரங்களில் சுமார் 80 ஓவியங்களில் தீட்டப் பட்டுள்ளன. இதில் இவரது குழந்தைப் பருவம் முதல் இவர் அறிவாற்றலால் புரிந்த அற்புத நிகழ்ச்சிகள் வரை இவர் ஞான முத்திரையுடன் முத்தியடைந்த நிலை வரை காண் ஓவியங்கள் காணப்படுகின்றன.

இக்கோயில் அருகிலுள்ள தீபப்பிரகாசர் திருக்கோயிலுடன் குமரக்கோட்டம் அறநிலையத் துறை நிருவாக அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைப் பதிவேட்டின் படி இக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 1,100.

# திருவேளுக்கை

காஞ்சிபுரம் வரதராசர் கோயிலுக்குத் தென்மேற்கே 2 கிலோமீட்டர்த் தொலை விலுள்ள இச்சிறிய கோயிலிலே மூலவர் அழகிய சிங்கர் நரசிம்மர் முகந்த நாயகர் என்னும் பெயர்களுடன் கிழக்கே திருமுக மண்டபம் கொண்டுள்ளார், வேள் என்னும் சொல் "ஆசை, விரும்பம" ஆகிய பொருள்களைக் கொண்டது. நரசிம்மர் ஆசை

யுடன் உறையும் இடமாதலால் இதற்கு வேளுக்கை என்னும் பெயர் அமைந்தது. திரு என்பது அடைமொழி. வடமொழியில் வேதாந்த தேசிகர் இங்கு இப்பெருமாளைத் துதிக்கும் வகையில் ''காமாசிக'' எனப் போற்றுகிறார். இதில் காம ஆசிகா என்னும் ''காமாசிக'' என்னும் தொடராகின்றன. விருப்பம் காரணமாகத் திருமால் நிற்கும் இடது இஃதாகும் என்பதை வேதாந்த தேசிகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நரசிம்மர் குகையில் இருந்தவாறே வேறு ஒரு நரசிம்மர் வடிவங்கொண்டு மேற்குத்திக்கில் அசுரர்களைத் துரத்திச்சென்று அவ்வசுரர்கள் மீண்டும் வாராதவாறு செய்ய இங்கே யோக நரசிம்மராக இருக்கிறார் என்பது நம்பிக்கையாகும்

இங்குள்ள தாயார் வேளுக்கை வல்லியாகிய அமிர்தவல்லி ஆவார். கருடனுக்குத் தனிச்சந்நிதி உள்ளது. பெருமாளை நோக்கியவாறு இவருள்ளார்.

இக்கோயிலுக்கு இருவேளைப் பூசைகள் பட்டர் ஒருவரால் நிகழ்த்தப் பெறுகிறது இக்கோயிலுக்குப் போதுமான வருமானம் இல்லை.

இப்பெருமாள் மீது பேயாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியஇருவரும்மங்களாசாசனம் செய்துள்ளனர்.


### கஞ்சிபுரம்

# வைகுண்ட பெருமாள் கோயில்


### (பரமேசுவர விண்ணகரம்)

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திரு வடகிழக்கில் அரை கிலோ மீட்டர்த் தொலைவில் மேற்கு நோக்கியவாறு 1 ஏக்கர்ப்பரப்பளவில் அமைந்துள்ளது.

இராசசிம்மனின் புதல்வன் இரண்டாம்பரமேசுவர்மன் (705-710) இக்கோயிலை அமைத்தான். அவன் சிறிது காலமே ஆண்டு மறைந்தான். இவன் திருமாலின் மீது பேரன்பு கொண்டிருந்தவன். பரமபநாதன். தேனாதி தேவனாகிய வைகுந்தவாசனுக்குப் பரமேசுவரவர்மன் எடுத்த கோயில் இது வாதலால் இது பரமேச்சுர வின்னகரம் என விளங்கி வருகிறது. திருமால் இங்குப் பரமேசுவரவர்மனுக்கு அருள் புரிந்தார் விதர்ப்ப தேவத்தை அரசாண்ட விரோசனுக்குப் புத்திர சந்நிதி இல்லாமை காரணமாக அவன் காஞ்சிபுரத்திலுள்ள கயிலாச நாதரைப் பூசை செய்து, அவருடைய அருளால், திருமாலின்துவாரபாலர்கள் இரண்டு புத்திரர்களாகப் பல்லவன், வில்லவன் என்பவர்கள் விஷ்ணு பக்தர்களாகப் பிறக்க புத்திரர்கள் புண்ணியகோடி விமானத்துக்கு வாயு மூலையில் அசுவமேத யாகம் செய்ய, ஸ்ரீமந்நாராயணன் அவர்களுக்கு வைகுண்ட நாதனாக சாதித்தபடி வீற்றிருந்த திருக்கோலத்துடன் இன்றும் பக்தர்களுக்குச் சேவை சாதிப்பதாக கூறப்படுகிறது. விரஜையும் அங்கே புஷ்கரிணியாக அமைந்திருக்கிறது.



மேற்கு நோக்கிய வாயிலின் வழியாக உட்செல்வோமெனில், அகன்ற பரப்பு காணப்படுகிறது. இதன் மையத்தில் பலிபீடம் செப்புத்தகடு போர்த்தப்பட்ட கொடிமரம் கருடர் சந்நிதி ஆகியவை உள்ளன. இதனைக் கடந்து மகாமண்டபத்தைக் கடந்து உட்சென்று தென்வடலாக 25 மீட்டர் அளவும் கீழ்மேலாக 35 மீட்டர் அளவும் கொண்டு அமைந்துள்ள சந்நிதியைக்காண்கிறோம். இதுதரைமட்டத்தின்று 1.50 மீட்டர் உயரமுள்ள மேடையாகும். இம்மண்டபத்தில் உட்பக்கத் தூண்கள் சிங்கங்களால் தாங்கப்பட்டுள்ளன. வெளிப்பகுதிச் சுவர்கள் சூழ்ந்துள்ளன. இச்சுவரில் உள்நோக்கும் வகையில் 50 சிற்பங்களில் பரமேசுவர பல்லவர் வரலாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகள் முழுதும் அவருக்குப் பின் அரசே நந்திவர்மனால் படைக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. இதனைத் தாங்குவது வெளிப்புறம் பாய்ந்து நிற்கும் தோற்றம் கொடை சிங்கங்கள், இச்சுற்றாலை மண்டபத்துடன் கூடிய நடுப்பகுதியில் 1.50 மீட்டர் உயரமுள்ள மேடைமீது பரமேசுவர விண்ணகரம் அமைக்கப்பட்டுள்ளன. இது மூன்று அடுக்குகளாக உள்ளது. முதல் தளத்தில் (உ) பெரிய சிங்காதனத்தின் மீது திருமால் அமர்ந்த (இருந்த) நிலையில் உள்ளார். இவர் அமர்ந்துள்ள நிலை ''தர்பார்'' ஆசனம் எனப்படுகிறது. நான்கு கரங்களில் சங்கு, சக்கரம் அபயம், ஏந்தி இடக்கையைத் தொடை மீதுவைத்துளளார். உற்சவர் சீதேவி பூதேவியுடன் நின்றவாறு சேவை சாதிக்கிறார். கண்ணன், கௌதுகர், பலிபேரம் சக்கரத்தாழ்வாழ்வார், ஆகிய உற்சவர்களும் உள்ளனர்.



இக்கருவறையை சுற்றித் திருமாலின் பல்வேறு அவதாரங்களாகிய நரசிம்மர், இரணியன், உலகளத்தில் முதலியவற்றில் பெரும்பாலான சிற்பங்கள் காணப்படுகின்றன. பின்புறம் அமைந்துள்ள சிறு வாயிலின் வழியே உட்சென்றால் மேல் மாடிக்கு செல்ல வேண்டும். இங்கு இடப்புறம் படிகள் காணப்படுகின்றன. இதன் வழியே செல்வோமெனில், இரண்டாம் தளத்தில் நின்ற வண்ணம் பெருமான் சேவை சாதிக்கிறார். இங்குள்ளபடிகள் பழுதுபட்டதால், மூன்றாம் தளத்திற்கு செல்ல இரும்புஏணி பயன்படுத்தப்படுகிறது. இதன்மீதுஏறி மூன்றாம் தளத்தில் திருமால் அனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டிருக்கும் கோலத்தைக் காண்கிறோம். அவரது வலக்கை மார்கண்டேயருக்கு அருளும் வண்ணம் உள்ளது. இவை பகைவரால் அழிக்கப் பெற்ற நிலையில் புதியதாக நிர்வாணிக்கப்பட்டுள்ளது.

இருந்த திருக்கோலத்தில் அவர் சேவை சாதிப்பது பரந்த நிலையையும் நடுத் தளத்திலுள்ளவர் அவரது வியூக நிலையையும் காட்டுகின்றனர். இம்மூன்று தலைகளையும் உள்ளடக்கி கட்டத்தின் மீது மூன்று தள விமானம் சதுர வடிவில் எழுந்துள்ளது இதன் மீது ஒற்றைக் கலசம் உள்ளது. இவ்விமானம் முகுந்த விமானம் எனப்பெறும். கருவறை 0.50 மீட்டர் உயரத்திலும் சாற்றாலை மண்டபம் மீ.20 மீட்டர் உயரத்திலும் இருப்பினும், இதற்கிடையிலுள்ள 2 மீட்டர் அகலமுள்ள பிரகாரப்பகுதி தரை மட்டத்திலும் திறந்தவெளியாகவும் உள்ளது. திருமால் மிகவும் குளிர்ச்சியை விரும்புவதால், இவ்விடை வெளியில் வெயிற்காலத்தில் நீர் நிரப்பி வைப்பது அந்நாளில் வழக்கமாகும். இச் சுற்றாலைச் சுவர்களில் புதிய பல்லவ மரபில் தோற்றத்தையும் அந்நாளைய வழக்கமாகும். இச் சுற்றாலைச் சுவர்களின் புதிய பல்லவ மரபில் தோற்றத்தையும் அந்நாயை பல்லவர் காலவாழ்க்கை சூழ் நிலையையும் விளக்குவதாக உள்ளது. அச்சரித்தரச் சுருக்கத்தை இங்குக் காண் போம்.

கோயிலைச் சுற்றியுள்ள உட்பிரகார மண்டபத்தில் தொடர் சிற்பமாகப் பல்ல வர் வரலாறும் அதன் கீழ்ச் சில செய்திகளும் செதுக்கப்பட்டுள்ளன, முதற் சிற்பம் இரண்டாம் பரமேசுவரனின் இறப்பைக் குறிக்கிறது. அங்கு அமைச்சர், கடிகையார், மூலப்பிரகிருதி, இரண்யவர்மன் ஆகியோர் உருவங்கள் உள்ளன. நான்காம் சிற்பத் தில் ஸ்ரீ மன்னன் ரணமல்லன், சங்கிராமமல்லன், பல்லவமன்னன் ஆகிய நால்வரும் இரண்யவர்மனின் மக்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர். அங்குப் பரமேசுவரன் நான் போவேன் என்று தொழுது நின்ற இடம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. பிறகு இரணிய வர்ம ராசனும், தரணி இளம் நந்திவர்மன் எனும்பெயரில் பல்லவன் அபிடேகம் செய்து கொண்டது செதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பரமேசுவரவர்மன் இறந்த பிறகு கடிகையாரும் மூலப்பிரகிருதியாரும் இரண்யவர்ம மகாராசனைக் கண்டு தமக்கு மன்னன் ஒருவனைத்தரவேண்டுமென்று அவன் வேண்டினர். மன்னராக யார் விரும்புகிறார்கள் என்று இரண்யவர்மன் தம் புதல்வர்களிடம் வினவினார். முதல் மூவரும் மறுத்தனர் பன்னிரண்டு வயதுடைய பல்லவ மன்னன் தாம் மன்னனாக விழைவதை வணக்கத்தோடு அவன் கூறினான். தரணி கொண்ட போசர் தனது இசைவைத் தெரிவிக்குமாறு இரண்யவர்மனை வற் புறுத்தினார். தந்தையும் தரணி கொண்ட போசரும் தமக்கு அளித்த கைப்படைகளை ஏந்திப் பல்லவமன்னன் பலமலைகளையும் ஆறுகளையும் கடந்து கடந்து காஞ்சிக்கு வந்தான். அவன் வருதலையறிந்த பல்லவ அறையன் பெருஞ்சேனையுடன் எதிர்க் கொண்டு அவனை யானை மீது அமர்த்தி அழைத்து வந்தான். பல்லவ மன்னனை நகரச் செல்வரும், சிற்றரசர்களும் நந்திவர்மன் என்னும் பெயரை அபிடேகப் பெய ராகச் சூட்டி விடேல் விடுகு, சத்வாங்கதரன், ரிஷபலாஞ்சினன், எனும் பட்டப் பெயர் களைச் சூட்டினர். இவன் சிறந்த வைணவ பக்தன், இவன் வைகுண்டப் பெருமாள் கோயிலுக்கு பல திருப்பணிகள் செய்தனன். வைகுண்டப் பெருமாள் சுற்றாலையில் காணப்படும் வரலாற்றுச் செய்திகள் இவன் காலத்தவையாகவே இருக்க வேண்டும்.

இப்பனைச் காசாக்குடி பட்டையம் அரிசரண பரன் என்றும், தோட்டப்பட்டையம் முகுந்தன் திருவடிகளைத் தவிர வேறொன்றிற்கும் தலைவணங்காதவன் என்றும் கூறுகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள முத்தீசுவரர் கோயிலுந்தப் பல திருப்பணிகள் செய்துள்ளான்.

அரசன் அரியணையில்வீற்றிருக்க ஒருத்தி கவரி வீசுகிறாள், எதிரில் துறவியர் இருவர் கழுவேற்றப் படுகின்றனர். இதன் அருகில் ஆழ்வார் சிலை கொண்ட கோயிலும் அதன் வலப்புறத்தில் வைகுண்டப் பெருமாள் போன்ற கோயிலைக் காண்கிறோம். இது அந்நாளில் வைணவம் மலர மற்றச் சமயத்தினரை அழித்ததைக் காட்டும் நடன அரங்கச் சிற்பங்கள் பலவுள்ளன. இவற்றுள் மகளிர் பலரும், ஆடவரும், நடனமாடுதல் குறிக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் அசுவமேதயாகம் செய்தவன் அச்சிற்பமும் உள்ளது. வெளியில் உள்ள மகாமண்டபத்தின்தென்கிழக்கில் கிழக்கு நோக்கிய சிறு சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இதனுள் வைகுந்த வல்லித்தாயார் 4 திருக்கரங்களுடன் அமர்ந்தவாறு அருள்புரிகின்றார். வடக்குச் சிறகில் ஆழ்வார்கள் சந்நிதிகள் அமைந்துள்ளன. இக்கோயிலில் அமைந்துள்ள விமானம்பிற்காலத்தில் பந்த அஷ்டாங்க, விமானங்களுக்கு முன்னோடியாகும். இதன் அடிப்படையில் பிற்காலத்தில் உத்திரமேரூர், மதுரை போன்ற ஊர்களில் அஷ்டாங்க விமானங்களுக்கு அடிப்படையாகும் வாயிலின் மீது கோபுரமும் இல்லை. இவ்வாயிலின் இரு பகுதிகளில் விநாயகரும், முருகக் கடவுளும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உள்வாயிலை யொட்டி 12 மீட்டர் அகலமும் 20 மீட்டர் நீளமும் கொண்ட மண்டபம் 5 மீட்டர் உயரமுடையதாக விளங்குகிறது. இது தவிர உள்ளுக்குள் அமைந்த சுற்றாலை மண்டபம், கொடியேற்ற மண்டபம், முகமண்டபம், வடகிழக்கு முனையில் அமைந்துள்ள வாகன மண்டபம், வடகிழக்கு முனையில் அமைந்துள்ள வாகன மண்டபம் ஆகிய இக்கோயில் மண்டபங்களாகும். இக்கோயிலின் தென்மேற்கில் ஐரம்மத தீர்த்தம் அமைந்துள்ளது.

இங்கு நாள்தோறும் நான்கு வேளைப் பூசைநிகழ்த்தப் பெறுகிறது. தென்கலை மரபில் வந்த பட்டாச்சாரியார் பூசை செய்கிறார். பட்டாச்சாரியார் மரபினரே அறங்காவலராகவும் உள்ளனர். நிர்வாகம் கச்சபேசுவரர் கோயில் நிர்வாக அதிகாரியினால் நிர்வாகிக்கப்படுகிறது. இக்கோயிலுக்கு 5 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. கோயிலின் ஆண்டு வருமானம் 15,000 ரூபாயாகும்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைப் பதிவேட்டின் படி இக்கோயிலின் ஆண்டு வருமானம். ரூ 1,31,500.